949

949
4.21

முஸ்லீம் தலைவர்

# முகம்மத் அலி ஷவுகத் அலி

# Life, Speeches & Trial

OF

# Mahamud Ali & Shaukat Ali


BY

KRISHNASWAMI SARMA

Congress Publicity Bureau
Sowcarpet, Madras

M21
77405.





'பிஸ்மில்லா ஹிர் ரஹ்மான் ஹிர் ரஹீம்.'

# பாயிரம்

உலக சரித்திரத்தில் தோன்றிய மகா மதங்களில் இஸ்லாம் மதம் ஒன்றென்பது யாவரும் அறிந்தவிஷயம். இஸ்லாம் மதமானது சரித்திராராய்ச்சியின்படி இற்றைக்கு 1300 வருடங்களுக்கு முன்னர் அரேபியாவில் மகம்மத் நபி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதெனக் கொண்டபோதிலும், இஸ்லாமியர்கள் மட்டும் பொதுவாக இஸ்லாம் மதமானது அநாதியானதென்று ஸ்தாபிக்கின்றனர். இஸ்லாம் மதமானது சநாதனமானதென்பதும் அல்லா குத்த ஆலாவான கடவுளால் அளிக்கப்பட்டதென்பதும் இஸ்லாமியர்களின் சித்தாந்தம். நிற்க, இஸ்லாம் என்ற மதத்திற்கு, சமாதானம் அல்லது சாந்தி என்பது பொருள். அதாவது இஸ்லாம் மதமானது பிராணிவர்க்கங்களுக்கு சாந்தியையும் சமாதானத்தையும் கொடுப்பதற்கே யுண்டான மதமென்பது நன்கு விளங்கும். இஸ்லாம் மதமானது துராக்ரகத்தால் ஸ்தாபிக்க பட்டதென்றும், கையில் வாளையேந்தும் உணர்ச்சியையூட்டும் மதமென்றும் பல மேனாட்டார்கள் பொதுவாக அபிப்பிராயப்படுகின்றனர். அவ்வபிப்பிராயத்தை நீக்கவே பல இஸ்லாமிய தத்துவ சாஸ்திரிகள் பல நூல்களை சமீபத்தில் இயற்றி யுள்ளார்கள். இஸ்லாமிய தத்

துவ ஞானத்தை நன்கறிந்த ஜலாலுடீன் ரூமி போன்ற மேதாவிகளின் நூல்கள் இங்கிலாந்து, பிரான்சு முதலிய மேனாடுகளிலுள்ள ஐரோப்பியர்களைக் கண்திறக்க வைத்தன. இது காரணம் பொருட்டே, இங்கிலாந்தில் சில ஆங்கிலேயர்கள் இஸ்லாம் மதத்தையுந் தழுவினர். இஸ்லாம் மதத்தில் ஐக்கியபாவம், சகோதரத்துவம், ஈகை, சமத்துவ உணர்ச்சி, இந்திரிய நிக்ரஹம் முதலியவைகள் அம்மத உணர்ச்சிக்கு அடிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றன. இஸ்லாம் மதத்திற்குத் தியாகமும் வைராக்கியமும் இன்றியமையாதனவாகும். இஸ்லாம் மதத்தில் கடவுள் ஒருவரே என்பது முதல் சித்தாந்தம். கடவுள் ஒருவர் என்பது பொதுவாக எல்லாமதங்களின் சித்தாந்தமாயிருந்த போதிலும், இஸ்லாம் மதத்தில் சிறப்பாக லா இலாஹ இல்லல்லாஹ-கடவுள் ஒருவர் தான் என்பது ஆதாரம். அக்கடவுளான அல்லாகுத்த ஆலா பரமகாருண்யமுள்ளவராயும் பரம சுத்தராயும் எங்கும் நிறைந்தவராயும் சத்திய வடிவாயும் இருக்கக்கூடியவர். அவரை பிஸ்மில்லா ஹிர் ரஹ்மான் இர்ரஹீம் என்பர். இந்துக்கள் விக்கிரக ரூபமாக பரமாத்மாவைத் தொழுவது போல இஸ்லாமியர்கள் வடிவத்தால் தொழுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் அல்லாவின் வடிவம் என்பது இஸ்லாமியர்களின் கருத்து. அதுபற்றியே, ஒவ்வொரு இஸ்லாமியும் சகோதரத்துவத்தைச் சிறந்த பூஷணமாகக் கொள்கின்றான். இஸ்லாம் மதமானது மூர்த்திபூசையைக் கண்டிக்கிறது. மூர்த்தி பூசைசெய்பவர்கள் மூடர்களென்பதும்



கடவுளுடைய சின்மய ஸ்வரூபத்தையறியச் சக்தியில்லாதவர்களென்பதும் ஒவ்வொரு இஸ்லாமியனின் கருத்து. இஸ்லாம் மதத்தைப் பூவுலகின் கண்ணே யறிவிப்பதற்காக வேண்டியும், இஸ்லாம் மதஉணர்ச்சி முக்கியமாக ஒவ்வொரு மானிடனுக்கும் உண்டாவதற்கு வேண்டியும், அல்லாகுத்த ஆலாவான கடவுள் தீர்க்கதரிசிகளான நபிமார்களை அடிக்கடி சிருஷ்டித்து வந்தார். இதுவரை ஒன்றேகால் லட்சம் நபிமார்கள் தோன்றினார்களென்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கை. ஆருன், இப்ராஹீம், இஸ்மயில், ஈசா, யூஸுப், மூஸா முதலானோர் ஆதிநபிமார்களெனப் படுவார்கள். அந்நபிமார்களுக்குள்ளே சிறந்தவரும் கடைசியாக வந்தவரும் அல்லாவின் அருளை மிக்க பெற்றவருமான மகம்மத் நபியை நபிகள் நாயகம் என்றும் மகம்மத் ரஸூல் என்றும் ஹஸ்ரத் மகம்மத் ஸல்லல்லா ஹைஹவ ஸல்லம் என்றும் இஸ்லாமியர்கள் அழைக்கின்றனர். இவரைத் தேவதூதர் என்பர். அல்லாவின் நாமத்தை இஸ்லாமியர்கள் உச்சரிக்கையில் இவருடைய நாமத்தையும் கூடவே உச்சரிக்கவேண்டும். மகம்மத் நபியின் திவ்ய திருநாமத்தை உச்சரிக்காமற் போனால் இஸ்லாமி யொருவன் உண்மை இஸ்லாமியாக மாட்டான். இஸ்லாமியர்களின் முதல் இலட்சணம் அல்லாவையும் அவரது தூதரான மகம்மத் நபியையும் வணங்குவதேயாம். இஸ்லாமியர்களுக் குத்தொழுகை பிரதானம். பிரதிதினமும் ஐந்துவேளை கட்டாயம் தொழவேண்டும். சூரியோதயத்திற்கு முன்னர் செய்யப்படும் தொழுகைக்கு

ஸலத் அல் பஜ்ஜர் என்றும், சூரியன் உச்சியிலிருந்து மேற்றிசைக்குச்சாயும் இடைவேளையில் செய்யப்படும் தொழுகைக்கு ஸலத்-அஸ்-ஜுஹர் என்றும், மாலை 4 மணிக்குச் செய்யப்படும் தொழுகைக்கு ஸலத்-அல்-அஸர் என்றும், சூரியாஸ்தமன காலத்தில் செய்யப்படும் தொழுகைக்கு ஸலத்-அல்-மக்ரிப் என்றும் நடு ராத்திரியில் செய்யப்படும் தொழுகைக்கு ஸலத்-அல் இஷா என்றும் கூறப்படும். ஒவ்வொரு தொழுகையிலும் இஸ்லாமியர் மக்கமா நகரத்தின் காபாவை நோக்கித் தொழவேண்டும். இஸ்லாமியர்களுக்கு உபவாஸம் மிகவும் பிரதான மானது. ரம்ஜான் காலத்தில் இஸ்லாமியர்கள் ஒவ்வொருவரும் பகலில் அன்ன பானமின்றி 29 அல்லது 30 நாள்வரை உபவாஸம் இருப்பது இஸ்லாம் மதத்தின் கட்டளையாகும். உபவாஸத்தால் தீக்குணங்கள் நீங்கி மனச்சுத்தம் உண்டாகின்ற தென்பதாம். உண்ணும் வகையிலும் செய்யுங்காரியங்களிலும் விலக்கக்கூடிய தென்றும் கொள்ளக்கூடிய தென்றும் இஸ்லாமியர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குத்தான் ஹராம் என்றும் ஹலால் என்றும் கூறுவதுண்டு. தானம் வழங்கல் இஸ்லாமியர்களுக்கு முக்கியமானது. பொதுவாக எல்லாமதத்தினர்களுக்கும் தானம் வழங்கல் என்பது உண்டென்றாலும் இஸ்லாமியர்களுக்குள்ளே அது நிர்ப்பந்தமாக விதிக்கப்பட்டிருக்கின்றது. இஸ்லாமியொருவன் தான் சம்பாதித்துச் சேகரிக்குந் திரவியத்தில் ஜகாத் நிதிக்குக் கட்டாயம் கொடுத்துத் தீரவேண்டும். இது திருக்குர்ஹானின் கட்டளை. இங்ங



னம் தலைக்கட்டு வீதம் சேகரிக்கும் நிதியானது ஏழைகளுக்கும், அங்க ஹீனர்களுக்கும், கடன்பட்டுக் கஷ்டப்படுபவர்களுக்கும் யுத்தத்தில் சிறைபட்டவர்களுக்கும் மதகாரியங்களுக்கும் செலவழிக்கப்படும். மற்றும் இஸ்லாமியர்களுக்கு ஹஜ்யாத்திரை செய்வதும் பிரதானம். திருமக்கமா நகர க்ஷேத்திரத்துக்குத் தேசாடனஞ் செய்வதே ஹஜ் யாத்திரையாகும். ஆங்கு செல்பவர்கள் காபாவை ஏழுதரம் சுற்றவேண்டும். ஸாபா, மார்வா என்னுஞ்சிறிய மலையின் நடுவே ஏழுதரம் முன்னும் பின்னுமாகப் போகவேண்டும். அரபாத் மைதானத்தில் தங்கவேண்டும். இத்தகைய வழிபாடுகளை ஹஜ் யாத்திரை செய்யும் ஒவ்வொரு இஸ்லாமியும் செய்யக் கடமைப் பட்டிருக்கிறான். இங்ஙனம் இஸ்லாமியர்கள் மேற்கூறிய தர்மங்களை செய்வதுடன் கவனிக்கவேண்டிய சில கடமைகளும் உண்டு (1) இஸ்லாமியர்களுக்குள்ளே சண்டை சச்சரவின்றி சகோதர பாவத்துடன் இருத்தல் (2) மதஉணர்ச்சியைப் பரவச்செய்தல் (3) மதகுருவாகிய கலீபாவுக்குக் கீழ்ப்படிந்து போற்றல் (4) இஸ்லாமிய புண்ய க்ஷேத்திரங்களைப் பாதுகாத்தல் (5) இஸ்லாமியர்கள் அல்லாத வேறுமதத்தினர்கள் இஸ்லாம் புண்ணிய க்ஷேத்திரங்களில் ஆதிக்கஞ் செலுத்தாமற்படி தடுத்தல் ஆகிய இவைகளேயாம். இஸ்லாம் மதஉணர்ச்சிக்கும் க்ஷேத்திரங்களுக்கும் ஏதாவது ஹானி ஏற்படுமானால் அந்த ஹானியை நிவர்த்தி பண்ண ஒவ்வொரு இஸ்லாமியும் ஜீஹாத் என்கிற தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஜீஹாத் என்

பதி தற்காப்பு. மதத்திற்கும் புண்ணிய ஸ்தலங்களுக்கும் ஆபத்துவருங் காலத்தில் ஒவ்வொரு இஸ்லாமியும் கையில் ஆயுதந்தரித்துக் காக்கவேண்டுமென்பதே இஸ்லாமியர்களுக்கு உடன் பிறந்த கடமையாகும். ஷரியத்தில் கூறப்பட்டிருக்கும் கடமையைச் செய்வதில் ஒவ்வொரு இஸ்லாமியும் திரவியத்தை யாகிலும், மனைவிமக்களை யாகிலும் தன்னுயிரையாகிலும் ஒருபொருட்டாகக் கருதக்கூடாது. ஷரியத்தின் கட்டளையைச் செய்வதில் ஆண்டவனுக்குப் பயப்படவேண்டுமே தவிர, எந்த இஸ்லாமியும் ஒருவனுக்கோ அல்லது ஒருசமூகத்தினருக்கோ அல்லது ஒரு அரசாங்கத்திற்கோ பயப்படுதல் கூடாது. ஷரியத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக இஸ்லாமி ஒவ்வொருவனும் தன்னுடைய அன்புக்குரிய வஸ்துக்களை இழக்கநேரிடும். படாத பாடெல்லாம் படநேரிடும்; சகல தியாகத்திற்கும் தயாராக இருக்கவேண்டும். ஒவ்வொரு இஸ்லாமியும் தன்னுடைய தீனுக்காக ஈமானுக்காகக் கட்டாயம் குர்பானி செய்யவேண்டும். அதாவது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்யவேண்டும். ஷரியத்தின்படி நடக்கும் இஸ்லாமியர்களே சிறந்தவர்கள். ஏனெனில், அவர்கள் தனக்கென வாழாமல் மதத்திற்காகவும் ஆண்டவனுக் காகவும் வாழ்வது கொண்டே அவர்களை உலகம் போற்றும். பண்டையில் இஸ்லாம் மத சித்தாந்தத்திற்காக நபிகள் நாயகம் பட்ட தொல்லைக்கு எல்லையுமுண்டோ? அம்மகானுடைய உயிரை வாங்கப்பல துராத்மாக்கள் இரவும் பகலும்



ஓயாது சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். சூழ்ச்சி செய்தவர்கள் அனைவரும் மாண்டனர். நபிகள் நாயகத்தின் நாமம் எண்டிசையும் விளங்கிற்று. அவருக்குப்பிறகு ஹஸ்ரத் அபூபகர் சித்தீக், ஹஸ்ரத் உமர் பரூக், ஹஸ்ரத் உஸ்மான் கனி, ஹஸ்ரத் அலி மர்த்தூஸா, ஹஸ்ரத் இமாம் ஹஸ்ஸேன், ஹஸ்ரத் இமாம் ஹுஸ்ஸேன் முதலிய கலீபாமார்கள் இஸ்லாம் மதத்திற்காக அரும் பாடுபட்டுப் பல கஷ்டங்கள் கொண்டனர். ஷரியத்துக்காக எவ்வாற்றாலும் இஸ்லாமியர்கள் தியாகஞ் செய்யக்கடமைப் பட்டிருக்கிறார்கள். ஒரேகாலத்தில் இஸ்லாமியர்கள் இரண்டு எஜமானர்களுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. அல்லாகுத்த ஆலாவுக்கு ஊழியஞ் செய்வதானால், அரசாங்கத்திற்கு ஊழியஞ் செய்யமுடியாது. அரசாங்கத்திற்கு ஊழியஞ் செய்வதானால், அல்லாகுத்த ஆலாவுக்கு ஊழியஞ் செய்யமுடியாது. ஆகவே, இந்தியாவில் தற்பொழுது இஸ்லாம் மதத்தின் ஷரியத்துக் காக அலி சகோதரர்கள், மௌலானா அபுல் கலாம் ஆஸாத், அப்துல் பாரி, டாக்டர் ஸைவுடீன் கிச்சுலு முதலானோர் பெருந்துயர் பட்டனர். இவர்களில் வெகு தீரரும் அஞ்சா நெஞ்சங்கொண்டவரும் சிறந்த தியாகியுமான அலி சகோதரரின் சரிதையைப் பற்றித் தமிழ் நாட்டு இந்து மகம்மதீயர்கள் அறிய வேண்டுவது கடமையே யெனப்பற்றி இந்நூலை யான் எழுதப் புகுந்தேன். இந்நூலில் குற்றங் குறைகளிருந்தாலும் அவைகளைப் பொருட் படுத்தாது இந்நூலைப் போற்றுவார்களென்ற தைரியத்தினாலேயே, தமிழகத்

தே முன்னம் என்போல் இப்பொழுது சிறைபுகுந்த நண்பர் பலருக்கு இந்நூலை அர்ப்பணஞ் செய்கின்றேன். அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!! லா இலாஹ இல்லல்லா!!

கிருஷ்ண ஸ்வாமி சர்மா.

# அலி சகோதரர்கள்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று—திருக்குறள்.

அலி சகோதரர்களை இந்நாட்டில் அறியாதார் ஒருவருமிலர். அவர்கள் மிக்க தெய்வபக்தி வாய்ந்தவர்களென்றும் மத வைராக்கியங் கொண்டவர்களென்றும் ஆழ்ந்த தேசாபிமானம் ததும்பினவர்களென்றும் நாம் அறிந்ததே. அலி சகோதரர்கள் ஒருவருக்கொருவர் மிக்க அன்புவாய்ந்தவர்கள். இணைபிரியாச் சகோதரர்கள். திக்கு கஜங்களை யொத்தவர்கள். புஜபல பராக்கிரமும் சொல்வன்மையும் ஒருங்கே பெற்ற வீர பிரதாபசாலிகள். சொன்ன சொற்றவறாத சத்ய சந்தர்கள். தாய் வார்த்தை தள்ளாத் தனயர்கள். மதமுறைகள் முறணுமாண்பினர்கள். உண்மை இஸ்லாமியர்கள். தங்களுக்குச்சரியென்றேற்படுங் காரியங்களைத் தீவிரமாகச் செய்யும் இயல்புடையவர்கள். கஷ்டங்கள் பல அடுத்தடுத்து வரினும், சலியாத நெஞ்சத்தினர்கள். மகாத்மா காந்திக்கு இரு புஜங்களை யொத்தவர்கள். இப்பாரத நாட்டிற்கு மகாத்மா காந்தி அறிவு போன்றவர். முகம்மத் அலி பாரத தேவியின் இரத்தாசயம். ஷவுகத் அலி பாரத தேவியின் ஜீர்ண கருவிகள். அலி சகோதரர்கள் சிறைபட்டிருப்பதினாலேயே பாரத தேவி சிறைப்பட்டாள் என்பது வெள்ளிடைமலை. அலி சகோதரர்களின் சிறை காப்பு இஸ்லாம் மதத்தை

கட்டுப் படுத்துந் தன்மையைக் குறிக்கின்றது. இஸ்லாம் மதத்திற்கு ஒரு துன்பத்தை நேராகச்செய்யத் தயங்கியே அலிசகோதரர்களை அதிகாரிகள் சிறைபடுத்தினார் போலும். உடலை ஒருவர் சிறைபடுத்தலாமே தவிர, உயிரையும் உயிரின் சைதன்ய ஸ்வரூபத்தையும், ஆன்ம உணர்ச்சியையும் சிறைபடுத்தப் பொன்முடி தரித்த பூபாலர்களினாகிலும் மற்ற எத்தகைய செல்வாக்கு கொண்டவர்களினாகிலும் முடியாது. ஆகவே, அலி சகோதரர்கள் பார்வைக்கு சிறைபட்டார்களே தவிர, அவர்களின் உணர்ச்சிமட்டும் பூர்ண சுதந்தரங்கொண்ட தன்மையதாகும். இத்தீர சகோதரர்கள் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள். இவர்களின் மூதாதைகள் வட இந்தியாவில் மோரதாபாத் நகரில் வசித்துவந்தார்கள். இவர்கள் நல்ல உயர்குடியிற் பிறந்தவர்கள். வட இந்தியாவில் ராம்பூர் சமஸ்தானத்திற்குத் தற்பொழுது நவாபாயிருப்பவரின்முப்பாட்டனாரான யூஸப் அலிகான் பகதூர், யுவராஜாவாயிருக்கையில் அன்னவரிடம் அலி சகோதரர்களின் பாட்டனார் கான்-இ-சமன் அலிபக்ஷ்கான் அவர்கள் உயர்ந்த உத்தியோகத்திலிருந்தார். யூஸப் அலிகான் பகதூரின் அரண்மனை காரியஸ்தராக இருந்து அலி சகோதரர்களின் பாட்டனார் வெகு செல்வாக்கையடைந்தார். யூஸப் அலிகான் பகதூர் நவாபாக வந்ததும் இராஜ்ய பாரத்துறையில் அலி சகோதரர்களின் பாட்டனார் உத்தியோக பதவிபெற்றார். 1857-ம் வருடத்தில் வட இந்தியாவில் உண்டான சிப்பாய்க் கலகத்தில் பிரிட்டிஷாருக்குச் சகாயமாக அலி சகோத



ரர்களின் பாட்டனார் பெரும்பாடு பட்டுக் கலகத்தையடக்க முயன்றார். அதுகாலை, அவர் செய்த ஊழியத்திற்காகவும் உதவிக்காகவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ராம்பூர் நவாபுக்கும் சிறந்த மரியாதை செய்தார்கள். சிப்பாய்க் கலக காலத்தில் நவாபுக்கு அவர் வலக்கைபோல் இருந்து வந்தார். தவிர, கலககாலத்தில் ரோஹில் கண்டத்திலும் குமாயூன் நகரிலும் ஆங்கிலேயர்களை அலி சகோதரர்களின் பாட்டனார் உயிர் தப்பவைத்துக் காப்பாற்றினார். இக்காரணத்திற்காக பிரிட்டிஷ்கவர்ன்மெண்டார் நவாபுக்குச் சில ஊர்களையும் கான்-இ-சமன் பட்டத்தையும் இனாமாகக்கொடுத்தார்கள். நவாபும் அலி சகோதரர்களின் பாட்டனாருக்குப் பலவிதத்திலும் கௌரவப்படுத்தி இனாம்செய்தார். இந்த நவாபுக்குப் பிறகு நவாப் கல்ப் ஹி-அலிகான் பகதூர் அவர்களும் அலி சகோதரர்களின் பாட்டனாருக்கும் அவர்சகோதரர்களுக்கும் மிக்க ஆதரவாயிருந்து பல உதவிபுரிந்தார். அலி சகோதரர்களின் சிற்றப்பன்மார்கள் ராம்பூர் நவாபின் இராணுவத்தில் உத்தியோகம் பெற்றிருந்தார்கள். அலி சகோதரர்களின் தகப்பனாரும் ராம்பூர் சமஸ்தானத்தில் உத்தியோகஞ் செய்துவந்தார். அவ்விடத்தில் அந்த சமஸ்தானத்திலுள்ள ஒவ்வொருவரும் அன்புபாராட்டி வந்தனர். ஸ்வபாவத்தில் அலி சகோதரரின் தகப்பனார் நல்ல காருண்யமும் இன்மொழியுங் கொண்டவர். அவர் அன்பே வடிவமாகக் கொண்டவர். அவர் ராம்பூர் சமஸ்தானத்திற்குச் சாலவும் உழைத்து வந்தார். ராம்பூர் சமஸ்தானத்தில் அலி சகோதரர்களின் பாட்

டன் பூட்டன்மார்கள் உழைத்துவந்ததின் பயனாக இன்னும் அந்நவாபு சந்ததியார்கள் அலீ சகோதரர்களுக்கு ஆதரவளித்து வருகின்றனர். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்றபடி அலி சகோதரர்கள் ராம்பூர் நவாபுக்கு அத்யந்த அன்புகாட்டியே வருகின்றனர். அலி சகோதரர்களின் தந்தை ராம்பூர் சமஸ்தானத்து உத்தியோக பதவியில் இருக்கையில், விஷபேதி கண்டு திடீரென்று தூர்மரண மடைந்தார். நல்ல வயதில் அனுபவிக்கவேண்டிய சகலவற்றையுமிழந்து மனைவியையும் மக்களையும் பரதவிக்கும்படி தன்னந் தனியே விட்டு அலி சகோதரர்களின் தந்தையார் விண்ணுலகேறினார். அவருக்கு வயது அப்பொழுது 33. அவர் 1880-ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில் ஆவி துறந்தார். அவர் மனைவிக்கு வயது 27. சின்னஞ்சிறு வயதில் கணவனை யிழந்த இம்மாது ஆறு மக்களைப் போற்றும் பெரும்பாரத்தை வகிக்கலானாள். வெளிவரக்கூடாமற்படி கோஷாவாக இருக்கும் ஒரு ஸ்திரி ஆறுமக்களைக் காப்பாற்றுவது கடினமல்லவா? அலி சகோதரர்களின் தந்தையார் இறக்கும் பொழுது முகம்மத் அலிக்கு இரண்டுபிராயம்கூட நிறையவில்லை. ஷவுகத் அலிக்கு அப்பொழுது வயது சற்றேறக் குறைய ஏழு. பால்மணம் மாறாச் சிறு பிராயத்திலுள்ள இப்பாலர்களை அம்மாது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார். ஷவுகத் அலிக்கு ஜுல்பிகர் அலி என்றொரு சகோதரர் உண்டு. தாயார் முதன் முதலில் இவ்விருவர்களையும் இராயபரலி நகரிலுள்ள ஒருகலாசாலைக்குக் கல்விகற்



கும் நிமித்தம் அனுப்பினர். 1889-ம் வருடத்தில் தான் ஆங்கில படிப்புக்காக இவர்கள் அனுப்பப்பட்டார்கள். 1890-ம் வருடத்தில் அலிகார் நகரிலுள்ள முகம்மதீய கலாசாலைக்குப் பிறகு அவ்விரு சகோதரர்களும் படிப்புக்கர்க அனுப்புப்பட்டார்கள். அப்பொழுது முகம்மதீய சமூகத்திற்பலர் அலி சகோதரர்களின் தாயாரைத் தூஷித்தார்கள். ஏனெனில், புராதன முகம்மதீய குடியிற் பிறந்தவர்களில் அநேகர் ஆங்கில பாஷையையும் அதன் வழியாக ஏற்படும் போதனா முறையையும் வெகு பலமாகக் கண்டித்து வந்தார்கள். ஆங்கில பாஷை கற்பது மத சம்பதத்திற்கு விரோதமென்றும் ஆங்கில பாஷை கற்பதினால் இஸ்லாம் மதத்தின் ஷரியத்துக்கு ஹானியேற்படுமென்றும் பல மௌல்விகளும் மற்றவர்களும் அக்காலத்தில் அபிப்பிராயப்பட்டனர். என்றாலும், அலி சகோதரர்களின் தாயார் தன் புதல்வர்களின் க்ஷேமத்தையே கருதினவளாதலால் அவர்களுடைய தூற்றுதலைச் செவிகொடாது தான் பிடித்த காரியத்தையே கோரி நின்றாள். அலி சகோதரர்களின் தாயார் சாமானிய பெண்டிரல்ல. அம்மாது நல்ல பூர்வீக மொகலாய வம்சத்தைச் சேர்ந்தவள், இம்மாதினுடைய பாட்டன் பூட்டன்மார்கள் பெரிய மொகலாய சக்கரவர்த்திகளின் இராணுவத்தில் ஐயாயிரம் குதிரைப் படைக்கு அதிபதியாகவும், வஸீராகவும் இருந்துவந்தனர். அம்மாதின் மூதாதைகள் அறிவிலும் ஒழுக்கத்திலும், சாமர்த்தியத்திலும் மிக்க பேர்போனவர்கள். அத்தகைய பரம்பரையில் தோன்றின அம்மாது மிக்க

தைரியத்துடன், யார் என்ன சொல்லிய போதிலும் செவிகொடாது 'கருமமே கண்ணாயினார்' என்ற பழமொழிக்கிணங்க தைரியத்துடனும், ஊக்கத்துடனும் பிள்ளைகளின படிப்பைக் கவனித்து வந்தார். முப்பது வருடங்களுக்குமுன்னிர் இந்தியா இருந்த இருப்பைப் பற்றி நினைத்தால் அலி சகோதரர்களின் தாயார் பெரிய அவதார மூர்த்தியெனக் கூறலாம். முகம்மதியர்களுக்குள் படிப்பு அதிகமாகப் பரவாத காலத்தில் இம்மாது சிறந்த வழிகாட்டியா யிருந்தது சாலவும் மெச்சத்தக்கது. அக்காலத்தில் எத்தனை தாய்மார்கள் இத்தகைய காரியத்தைத் தைரியத்துடன் நடத்த முடியும்? அலி சகோதரர்களின் தாயார் அவர்களைச் சிறு பிராயத்தில் எங்ஙனம் பக்கத்திலிருந்து போற்றி வந்தனளோ அம்மாதிரியே அவர்கள் பெரிய வயது வந்தபோதும், கஷ்டங்கள் கொண்டபோதும் பக்கத்திலேயே யிருந்து அவர்களுக்கு இன்மொழியும், தெய்வபக்தியும் தேசாபிமானமும் ஊட்டிவந்தாள். அலி சகோதரர்களின் அன்னை சிறந்த தெய்வபக்தி வாய்ந்தவர். திருக்குர்ரானின் ஷரியத்துப்படி அம்மாது நடப்பவர். ஹஜ்யாத்திரைக்கு அடிக்கடி சென்றிருக்கிறார். மௌல்விகளிடத்திலும் பெரிய இமாம்களிடத்திலும் குர்ரானின் தத்துவ அர்த்தங்களைக் கேட்டிருக்கிறார். இஸ்லாம் மதத்தைப்பற்றி அலி சகோதரர்களின் அன்னையார் நன்கு அறிந்திருக்கிறார். நம் பாரத நாட்டில் அலி சகோதரர்களின் தாய்போன்ற மாதரசிகள் வெகு சிலரே உண்டு. அலி சகோதரர்கள் விஷயமாக அப்போதைக்கப்போது அம்மையார்



விடுத்த கடிதங்களே அவர் தேசாபிமானத்திற்கும் மதாபிமானத்திற்கும் நிதர்சனம். அலி சகோதரர்களின் தாயார் அஞ்சா நெஞ்சம் படைத்த சிறந்த மாதரசியாகத் தானிருக்கவேண்டும். ஆகா! அலி சகோதரர்கள் சிறைபட்ட காலத்தில் அந்த அம்மாளின் மனம் எங்ஙனம் துயருற்றதோ வெனக் கேட்கலாம். ஆனால், நம் வாசிப்பவர்களின் ஆச்சரியத்திற்கேற்ப அலி சகோதரர்களின் தாயார் நல்ல முகவிலாசத்துடனும் தைரியத்துடனும் இருந்து வந்தாரென்பதைக் கேட்க ஆநந்தங் கொள்வாரென்பதற்கு ஐயமேயில்லை. ஆபத்து காலத்திலும் உற்சாக காலத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் பிள்ளைமார்களின் பக்கத்திலேயே யிருந்து திடமனதுடன் சகல கஷ்டங்களையுந் தாங்கின இம்மாது சிரோன்மணிக்கு அல்லா குத்த ஆலா பரம சாயுஜ்ஜிய பதவியான ஜன்னத்தை யளிக்கட்டும்! நிற்க, அலி சகோதரர்கள் அலிகார் நகரில் வெகு குதூகலத்துடன் கல்விபயின்று வந்தனர். கல்வி பயின்று வரும் நாளில் அலி சகோதரர்கள் அக்கலாசாலைக்கு இரண்டு நேத்திரங்கள் போலிருந்தனர். கல்விச்சாலையில் அலி சகோதரர்களுடன் உறவாடாத பள்ளிப் பிள்ளைகளில்லை. அவர்களுடன் அளவளாவாத உபாத்தியாயர்களில்லை. பிரதம ஆசிரியர் முதல் ஊழியக்காரன் வரையுள்ள ஒவ்வொருவரும் கலாசாலையில் அலி சகோதரர்களிடம் அன்பு பாராட்டி வந்தனர். ஷவுகத்அலி கலாசாலையில் பந்துவிளையாட்டம் முதலிய கேளிக்கைகளுக்குத் தலைவராகப் பல வருடம் இருந்து வந்தார். முகம்மத் அலியோ கலா

சாலையின் உருது பாஷாபிவிர்த்திக் கழகத்திற்கும் சரித்திர வாராய்ச்சி சங்கத்திற்கும் தலைவராகவும் நிர்வாக காரியதரிசியாகவும் பல வருடகாலம் விடாமல் இருந்துவந்தார். முகம்மத் அலி வியாசம் எழுதுவதில் மிக்க சாமர்த்தியங் கொண்டவர். இவருடைய வியாசத்தின் நடையும் மாதிரியும் கல்விச்சாலை போதகாசிரியர்களின் மனதைக் கவர்ந்தது. இவருடைய குணமோ நல்ல பரிசுத்தமான குணம். முகம்மத் அலியின் புத்திநுட்பத்தையும் சுறுசுறுப்பையு மறிந்த ராம்பூர் சமஸ்தானத்து மந்திரியான நவாப் முகம்மத் இஷக்கான் அறிந்து முகம்மத் அலியை கலெக்டர் பரீட்சைக்கு(I.C.S) இங்கிலாந்துக் கனுப்ப எண்ணங்கொண்டார். அவர் எண்ணம் பலித்தது. முகம்மத் அலியும் சீமைக்குப் புறப்பட்டார். முகம்மத் அலி சீமைக்குப்போய் ஆக்ஸ்பர்ட் நகரிலேயே தங்கினார். ஆக்ஸ்பர்ட் நகரிலுள்ள கலாசாலையானது உலகப் பிரசித்திபெற்றது. மேதாவிகள்பலர் பலகண்டங்களிலிருந்து இங்கு வருவர். சரிதவாராய்ச்சி செய்வோர்பலர் மாதக்கணக்காகவும் வருடக்கணக்காகவும் வந்து தங்குவதுண்டு. இக்கலாசாலையில் அற்புதமான புத்தகாலயம் உண்டு. அப்புத்தகாலயத்தில் உலகத்துப்புத்தகங்கள் பல உண்டு. இந்த கலாசாலையின் அற்புதங்களைக்காண முகம்மத் அலி அந்நகரிலேயே வசித்து வந்தார். பிறகு 1898-ம் வருடத்திலிருந்து 1902-ம் வருடம்வரை லிங்காலன் கலாசாலையில் முகம்மத் அலி கல்வி பயின்றுவந்தார். பரோடா மகாராஜாவின் புத்திரரும் இளங்கோவுமான படேசிங் அக்



கலாசாலையிலேயே முகம்மத் அலியுடன் கல்விபயின்றார். ஆனால், பரோடா மகாராஜாவின் புத்திரர் அகால மரணத்தை யடைந்தார். இளங்கோவான படேசிங் கல்விபயிலுங் காலத்தில் முகம்மத் அலியின் சூட்சும புத்தியை பரோடா மகாராஜாவே நேருக்கு நேராக நன்கறிந்தார். ஆக்ஸ்பர்ட் நகரின் அற்புதங்களில் அதிகமாக முகம்மத் அலி மனஞ்செலுத்தியதினால் பரீட்சையில் முதலில் தேறாமல் இரண்டாவது வரிசையில் தேறினார். கலெக்டர் பரீட்சை (I.C.S) யிலும் முகம்மத் அலி தேறவில்லை. 1902-ம் வருடம் ஜனவரிமாதத்தில் கடைசியாக இந்தியாவிற்கு முகம்மத் அலி திரும்பிவந்தார். ராம்பூர் சமஸ்தானத்தில் சில காலம் வித்யா இலாகாவில் தலைமை உத்தியோகஸ்தர்களில் ஒருவராகவும் இவர் வேலைபுரிந்துவந்தார். என்றாலும், இவர் பீ. ஏ. பரீட்சையை முடிக்க மீண்டும் எப்ரல் மாதத்தில் இங்கிலாந்துக்குச் சென்றார். உடனே அவ்வருடம் ஜூலை மாதத்திலேயே இந்தியாவிற்குத் திரும்பிவந்தார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவந்ததும் அலகாபாத் உயர்தர நீதிப்பரீட்சைக்குப் படித்தார். படித்தும் இவர் அதில் தேறவில்லை. கடைசியாக இதையெல்லாம் ஒரு வழியாக ஒழித்துவிட்டு பரோடா சமஸ்தானத்தில் அபின் இலாகாவில் உயர்தர உத்தியோகம் பெற்றார். இவர் உத்தியோகம் புரிந்துவந்தகாலத்தில் சமஸ்தானத்திற்கு நல்லவரும்படி உண்டாயிற்று. அபின் இலாகாவைச்சேர்ந்த கீழ்தர உத்தியோகஸ்தர்கள் சாமானிய ஜனங்களைப் பயமுறுத்தியும் ஏமாற்றியும்

துன்புறுத்தியும் பணம் சம்பாதிப்பதை யறிந்து பொது சனங்களுக்குச் சகாயமாக பற்பல திட்டங்களையும் ஏற்பாடுகளையும் இவர் சமஸ்தானத்தில் செய்யவைத்தார். முகம்மத் அலியை பரோடா மகாராஜா புத்திரன்போல் போற்றிவந்தார். முகம்மத் அலிக்கு இந்த இலாகாவில் இருப்பதற்கே மனம் பிடிக்கவில்லை. ஒருமனிதன் கீழிருந்து ஊழியம் புரிய இவர் சகிக்கவில்லை. சர்வ சுதந்தரத்தையுமிழந்தும், பிறப்புரிமையை நீக்கியும், மனச்சாட்சிக்குமாறாகவும் நடக்கத்தயாராயிருப்பவன் ஒருவன் ஒருமனிதன்கீழ் ஊழியஞ்செய்யலாமே யொழிய தன் மதிப்பும் ஜாதீய மரியாதையுங்கொண்ட ஒருவன் ஊழியஞ்செய்ய இயலாதெனத்தீர்மானித்து முகம்மத் அலி சமஸ்தானத்தில் இரண்டுவருடகாலம் ரஜா வாங்கிக்கொண்டு கல்கத்தா நகர்வந்து 'காம்ரேட்' (மித்திரன்) என்னும் மகுடமிட்ட ஒரு வாராந்தர ஆங்கிலப்பத்திரிகையை ஸ்தாபித்தார்.

## பத்திரிகையின் பான்மை.

முகம்மத் அலி பரோடா சமஸ்தானத்தில் அபின் இலாகாவிலிருந்து கொண்டே பல பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதி வந்தார். பம்பாயில் பிரசுரமாகும் ஆங்கிலோ இந்திய பத்திரிகையான 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்னும் பத்திரிகைக்குப் பல வியாசம் எழுதினார். அவ்வியாசங்கள் கடைசியாகப் புத்தக ரூபமாக வெளி வந்தது. அப்புத்தகத்திற்கு 'தற்கால அதிருப்தியைப் பற்றிய சின்னங்கள்' என்று மகுடமிடப்பட்டது. இவ்வியாசங்கள்



யாவும் ஒரே இராத்திரியில் எழுதப்பட்டன. பல ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் அப்புத்தகத்தைக் கொண்டாடினார்கள். இராஜப் பிரதிநிதியாயிருந்த லார்ட் மிண்டோ அப்புத்தகத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளார். 1905-ம் வருடத்தில் முஸ்லீம் யூனிவர்ஸிடி (சர்வ கலா சங்கம்) யின் நோக்கத்தையும் வழிபாடுகளைப் பற்றியும் சிறந்த வியாசமொன்றை முகம்மத் அலி எழுதினார். அவ்வியாசத்தை ஆமதாபாத் நகரில் கூடின பம்பாய் மாகாண முகம்மதீய கல்விச் சங்க மகா நாட்டில் முகம்மத் அலி படித்தார். மீண்டும் மறுமுறை அவ்வருடத்திலேயே லக்னௌ நகரில் கூடின அகில இந்திய முகம்மதீய கல்வி யபிவிருத்திச் சங்க மகாநாட்டிலும் அவ்வியாசம் படிக்கப்பட்டது. 'இப்பொழுதுள்ள அலிகார்' என்று மகுடமிட்ட வியாசங்கள் பல முகம்மத் அலி 1907-ம் வருடத்தில் எழுதி பத்திரிகையில் வெளியிட்டார். தவிர, அலிகாரில் உள்ள முகம்மதீய சர்வ கலாசாலை விஷயமாகவும் பல வியாசங்கள் எழுதி இவர் வெளியிட்டார். இவ்வியாசங்கள் பல 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் பத்திராசிரியராக இருந்த ஸர் லவட் பிரேஸரின் பார்வைக்கு வந்தன. ஸர் லவட் பிரேசர் தன் பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்யவேண்டுமாய் முகம்மத் அலியைக் கேட்டுக் கொண்டார். அவர் வார்த்தைக்கிணங்கி அப்பத்திரிகைக்கு உபதலையங்கம் பல எழுதினார். பத்திரிகைகளுக்கு வரும் புத்தகங்களுக்கு மதிப்புரையையும் இவர் எழுதிவந்தார். இந்தியன் ஸ்பெக்டேடர்,

‘ஹிந்துஸ்தான் ரிவ்யூ’ முதலிய பத்திரிகைகளுக்கும் அடிக்கடி இவர் விஷயதானஞ் செய்துவந்தார். ‘ஹிந்துஸ்தான் ரிவ்யூ’ என்னும் மாதாந்தர பத்திரிகைக்கு ‘இந்தியாவின் முற்கால தற்கால நிலைமை’ என்று மகுடமிட்டு எழுதிய வியாசம் மிகவும் சிறந்தது. நிற்க, அலகாபாத்தில் இவர் ‘கூப்’ என்ற பெயருடன் ஒரு பத்திரிகையை வெளியிட்டார். ஆனால் அது பல காரணங்களால் ஆரம்பித்து இரண்டு பிரசுரத்திற்கு மேல் வெளிவரவில்லை. மிண்டோ-மார்லி சீர்திருத்த விஷயமாக அரிய வியாசங்களை வெளியிட்டுவரவே இவருக்கும் காலஞ் சென்ற கோபால கிருஷ்ண கோகலேயவர்களுக்கும் சீர்திருத்த விஷயமாகப் பல வாதங்கள் நடந்தன. கோபால கிருஷ்ண கோகலேயும் முகம்மத் அலியும் இராஜீய விஷயமாகவும் கல்வி அபிவிர்த்தி விஷயமாகவும் அடிக்கடி தர்க்கித்து வந்தனர். முகம்மத் ஹைபத்கான் ‘அர்க்கஸ்’ என்னும் புனைப்பெயர் கொண்டு ஷவுகத் அலியைத் தாக்கி லாகூரில் பிரசுரமாகும் ‘அப்ஸர்வர்’ என்னும் பத்திரிகைக்கு எழுதினதற்குப் பதில் வியாசங்கள் முகம்மத் அலி வெகு அழகாகவும் கண்டோர் யாவரும் சிரிக்கும்படியாகவும் எழுதினார். பஞ்சாப் மாகாணத்திற்கு முகம்மத் அலி வந்திருந்து கல்கத்தாவுக்குத் திரும்புகையில் ஒரு விசேஷம் நடந்தது. ஐஹோரா சமஸ்தானத்து நவாபும் ஸர் மைக்கல் ஓட்வியரும் முகம்மத் அலியை வரவழைத்து அந்த ஸமஸ்தானத்திற்கு மந்திரியாக விருக்கும்படி அவர்கள் முகம்மத் அலியை வேண்டினார்கள். ஆனால்



முகம்மத் அலியோ ஒருவர்கீழும் ஊழியஞ் செய்வதில்லையென்று சங்கல்பஞ் செய்துகொண்டவராதலால் உடனே அவர்களின் வேண்டுகோளை மறுத்துப் பத்திரிகை ஸ்தாபிக்கப் போவதாகக் கூறித் திரும்பினார். ‘காம்ரேட்’ (மித்திரன்) என்னும் பத்திரிகையானது முதன் முதல் 1911-ம் வருடம் ஜனவரி மாதம் 14-ந் தேதி வெளிவந்தது. தேசத்திற்காகவும் முகம்மதீய சமூகத்திற்காகவும் உழைக்கவேண்டுமென்னும் உணர்ச்சி பெருகி தன் ஜீவியகாலத்தைப் பரோபகார வழியில்செலவிட முகம்மத் அலி முன்வந்தார். முகம்மத் அலிக்குச் சகாயமாக இராஜா குலாம் ஹுஸேன், பி.ஏ. அவர்கள் பத்திரிகைக்கு வந்தார். குலாம் ஹுஸேன் சமீபத்தில் குதிரை வண்டியிலிருந்து கீழேவிழுந்து மாண்டார். அவரும் முகம்மத் அலியுமே காம்ரேட் பத்திரிகையை நடத்தினார்கள். பத்திரிகை நடத்தும்பொழுது பத்திரிகையின் நோக்கத்தைப்பற்றிப் பின்வருமாறு முகம்மத் அலி எழுதினார்—

‘நாங்கள் ஒரு வகுப்பைத் தழுவுகிறவர்களல்ல. எல்லோருக்கும் மித்திரர்களாவோம். வகுப்புக்கு வகுப்பு வித்தியாசங்கள் ஏற்பட்டுப் பலமான சச்சரவுகளும் வாதங்களும் ஏற்படும் என்பதை நாங்கள் நன்குணர்வோம். இந்தியாவிலுள்ள பல சமூகத்தினர்களுக்குள் ஒருவிதமான அன்யோன்னியம் உண்டாவதற்கே நாங்கள் உழைக்க முன் வந்திருக்கிறோம். இராஜாங்க விஷயத்திலும் இராஜீய வழிகளிலும் எப்பொழுதும் ஜனங்களை ஆதரித்தும் நடுவு நிலைமையை நாடியும் நாங்கள் இருப்போம்!

கிற்க, காம்ரேட் பத்திரிகையானது இந்து முகம்மதீய ஒற்றுமையை வளர்க்க முன்வந்தது. தாய் நாட்டை அபிவிர்த்திக்குக் கொண்டுவர இருசமூகத்தினர்களும் ஒற்றுமையுடன் உழைக்கவேண்டுமென்று அடிக்கடி அப்பத்திரிகை வற்புறுத்திற்று. காம்ரேட் பத்திரிகையானது கல்கத்தாவினின்றுமே வெளிவந்தது. கல்கத்தா இந்திய கவர்ன்மெண்டுக்குப் பிரதான ஸ்தானமாயிருப்பதால் அங்கேயினின்றுமே பத்திரிகையை பிரசுரிக்க முகம்மத் அலீ முன்வந்தார். முதன்முதல் அப்பத்திரிகையின் வியாசங்களைப்பல சர்க்கார் உத்தியோகஸ்தர்களே கண்டு மகிழ்ந்தனர். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பலர் அப்பத்திரிகையை வாங்கினர். இராஜப்பிரதிநிதி ஹார்டிஞ்சு, லார்ட் மெஸ்டன், சர் சார்லஸ் கிளிவ்லாந்து, ஸர் லவட் பிரேஸர், ஸர்கைப்ளீட்வுட் உல்ஸன் முதலானோர் அப்பத்திரிகையைப் புகழ்ந்தார்கள். முஸ்லீம் சமூகத்தின் அபிவிர்த்தி விஷயமாக பாரதநாட்டின் இராஜீய உணர்ச்சியைப்பற்றித் தீவிரமாக அப்பத்திரிகையில் வியாசங்கள் வருவதைக் கண்ட பல உத்தியோகஸ்தர்கள் பத்திரிகையை நிறுத்திவிட்டனர். சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் தயவிற்கு காம்ரேட் பத்திரிகை பாத்திரமில்லாமற் போயிற்று. என்றாலும், அரசாங்க விஷயத்திலும் சர்க்கார் உத்தியோகஸ்தர் விஷயத்திலும் முகம்மத் அலி அவர்களுடன் ஒத்துழைத்தே வருவர். இந்துக்களின் உயர்தர உத்தியோகங்களிலும் அதிகமாக இருப்பது முஸ்லீம் சமூகத்தின் அபிவிர்த்திக்குத்



தடையாகுமென்றும், ஹிந்துக்கள் முஸ்லீம் சமூகத்தினருக்கும் அன்பும் ஆதரவும் அளித்தாலன்றி பாரதசமூகம் அபிவிர்த்திகொள்ளாதென்றும் அடிக்கடி காம்ரேட் பத்திரிகையில் தொடர்ச்சியாக முகம்மத் அலி எழுதிவந்தார். இந்தியா கவர்ன்மெண்டார் தங்கள் இராஜதானியைக் கல்கத்தா நகரிலிருந்து டில்லிமா நகருக்கு மாற்றினபடி, முகம்மத்அலியும் காம்ரேட் பத்திரிகாலயத்தைக் கல்கத்தாவினின்றும் டில்லிக்கு மாற்றினார். டில்லியில் வகுப்புச்சண்டை பலமாகவிருப்பதினால் அதிகநாள் அங்கு உழைக்க இவருக்கு முடியவில்லை. என்றாலும், ஒரே தூக்கத்திலிருந்த டில்லிமா நகரை விழித்துக் கொள்ளும்படி செய்தார்: பத்திரிகையின் பலத்தையும் சக்தியையும் உள்ளபடி அறிந்தவர்கள் இந்தியாவில் வெகுசிலரே. ஆனால் முகம்மத் அலியோ பத்திரிகையின் பலத்தை நன்கறிந்தார். ஆங்கிலம் அறியாத சாமானிய ஜனங்களையும் இராஜீய விஷயங்களிலும் சமூக அபிவிர்த்தியிலும் பக்குவஞானங்கொண்டு முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற அவாவிருந்தவராய் 1913-ம் வருடம் உருதுபாஷையில் ஒரு தினசரிப் பத்திரிகையை இவர் ஸ்தாபித்தார். அதற்கு ஹம்டர்ட் என்று பெயர். உருது பாஷாபிவிர்த்திக்கும், உருதுபாஷா ஞானமூலமாக இராஜீய விஷயங்களைப் போதிப்பதற்கும் சாதகமாக ஹம்டர்ட் பத்திரிகையை ஸ்தாபித்துப் பல மேதாவிகளைக்கொண்டு விஷயதானஞ் செய்யவும் இவர் ஏற்பாடு செய்தார். அஞ்சுமான்-ஹி-த்ரக் ஹி

உருது என்னும் சங்கத்தை ஸ்தாபித்துப் பல உருது பண்டிதர்களுக்கு மாதம் 75 ரூபாய் வீதம் சம்பளமுங் கொடுத்து வந்தார். பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்பவர்களுக்கு இந்தியாவில் தக்க சன்மானம் கிடையாது. அதிலும் தாய் பாஷையில் வெளிவரும் பத்திரிகை முதலாளிகள் விஷயதானஞ் செய்பவர்களுக்குத் தக்கபடி வெகுமதி செய்வதில்லை. ஆனால், முகம்மத் அலியோ பத்திரிகையின் பான்மையை நன்கு அறிந்தவராதலால், பண்டிதர்களுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்து வந்தார். இக்காரணம் பற்றியே ஹம்டர்ட் பத்திரிகைக்கு 9000 சந்தாதார்கள் இருந்தார்கள். ஹம்டர்ட் பத்திரிகை வட இந்தியாவிலுள்ள பத்திரிகைகளைக் காட்டிலும் சந்தா விகிதம் சற்று அதிகமே என்றாலும் அப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களைப்பற்றி பலர் வெகு ஆவலுடன் கேட்டு வாங்குவர். ஹம்டம் பத்திரிகைக்குப் பத்திரிகாசிரியராயிருக்கும் மியர் புஷரத் அலி ஜலிப் அவர்களும், குவாஜி அப்துல் கஹூர் அவர்களும் உதவிபத்திரிகாசியர்காளாக இருந்துவந்தனர். இவ்விருவர்களும் உருது பாஷையில் மிக்க பாண்டியத்தியம் பெற்றவர்கள். வட இந்தியாவில் மிகவும் கீர்த்திபெற்றவர்கள். உருது பாஷையிலும் நல்ல தேர்ச்சி முகம்மத் அலிக்கு இருந்தபோதிலும் அதிகமாகத் தான் உருது பத்திரிகைக்கு எழுதுவதில்லை. ஏனெனில் காம்ரேட் பத்திரிகையிலேயே இவர் அதிகமாக கவனஞ் செலுத்தி வந்ததேயாம். என்றாலும் உதவிபத்திரிகாசிரியர்களின் நன்முயற்சியால் காம்ரேட் பத்திரிகை



யை விட ஹம்டர்ட் பத்திரிகை நன்கு மதிப்பு பெற்றது. முகம்மத் அலிக்கும் உதவி பத்திரிகாசிரியர்களுக்கும் அடிக்கடி பலமான வாதங்கள் ஏற்படும். அவ்வாதங்களைக் கேட்கக் கேட்க வெகு ஆச்சரியமாகவேயிருக்கும். ஹம்டர்ட் பத்திரிகையின் பலத்தையும் அபிவிர்த்தியையுங்கண்டு அதிகார வர்க்கத்தினர் சகிக்கவில்லை. உடனே அச்சுக்கூடச் சட்டத்தின்படி ஹம்டர்ட் பத்திரிகையை நிறுத்த ஏற்பாடு செய்தார்கள். ஆனால் ஹம்டர்ட் பத்திரிகை நின்றுவிட்டதிலிருந்து ஷடகாட், டார்ஜமான், ஹம்டம், ஜம் ஹூர் என்னும் நான்கு உருது தினசரிப்பத்திரிகைகள் கிளம்பின. நிற்க ஐரோப்பியயுத்தத்தில் துருக்கி ஜெர்மெனியுடன் சேர்வதற்கு முன்னரே லண்டன் டைமஸ் பத்திரிகை துருக்கியின் இஷ்டம் என்று மகுடமிட்ட ஒருவியாசம் எழுதி தாஷித்தது. லண்டன் டைம்ஸ் பத்திரிகையானது துருக்கி விஷயமாக அபாண்டமான வார்த்தைகளால் எழுதியதைக்கண்ணுற்றபல முஸ்லீம்கள் இந்தியாவில் மனங்கசிந்தனர். உடனே முகம்மத் அலி டைம்ஸ் பத்திரிகைக்குப் பதிலளிக்க 1914-ம் வருடம் செப்டம்பர் மாதம் 25ந் தேதி காம்ரேட் பத்திரிகையில் அதி ஆச்சரியமான வியாசம் எழுதி வெளியிட்டார். அவ்வியாசம் வெளியிட்டதற்காக அச்சுச்சட்டத்தின் 4வது பிரிவின்படி சபையுடன் கூடி இராஜப்பிரதிநிதி காம்ரேட் பத்திரிகையின் மீது 2000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமென்றும் 1914-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26ந் தேதி வெளிவந்த அப்பத்திரிகையைப் பறிமுதல்

செய்யப் பட்டதென்றும் உத்திரவு பிறப்பித்தார். அந்த வியாசம் உண்மையில் வெகு அழகானது. ஸி. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள் அந்த வியாசத்தைப்படித்துப்பார்த்து அதில் சத்தியம் தவிர வேறொன்றுமில்லையெனக்கூறினார். அவ்வியாசத்தைப் பற்றிப்பல ஆங்கில நண்பர்களும் முகம்மத் அலி கூறினது உண்மையே யெனக் கொண்டனர். என்றாலும் இந்தியாவில் அதிகார வர்க்கத்தினரின் போக்கே தனிப்போக்காதலால் உண்மையறிய அவர்களுக்கு நிதானம் கிடையாது. ஐரோப்பிய யுத்தத்தில் துருக்கி இறங்கக்கூடாதென்று பலவாறு முகம்மத் அலி தெரிவித்துள்ளார். அதுவன்றியும், இந்தியாவிலுள்ள முஸ்லீம்களையும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் போதுமான வகையில் உதவிசெய்யவேண்டுமென்றும் இவர் கூறியுள்ளார். என்ன கூறியும் என்? அதிகாரவர்க்கத்தினர் இவருடைய இருபத்திரிகைக்கும் ஜாமீன் தொகை கேட்டும் பறிமுதல் செய்தும் வந்ததினால், அப்பத்திரிகைகள் தலைதூக்க முடியாமற்படி போயின. காம்ரேட் பத்திரிகையிலிருந்து 'நியூசரா' (புதியசிகாப்தம்) என்ற பத்திரிகை கிளம்பிற்று. அதுவும் அற்ப ஆயுளைக் கொண்டது. முசம்மத்அலி பத்திரிகை நடத்துவதிலும் எழுதுவதிலும் மிக்கதேர்ச்சி கொண்டவர். ஸர் அலி இமாம் முதலிய பல முஸ்லீம் பிரமுகர்கள் இவருடைய வியாசத்தைக்கண்டு ஆச்சரியப்படுவார்கள். முகம்மத்அலியின் ஐரோப்பிய நண்பர்களும் இவருக்குப் பலவிதத்தில் பத்திரிகை நடத்துவதற்கு உதவிபுரிந்தனர். பத்திரிகை நின்றதும் அந்நண்பர்



பலர் இவருக்குக்கடிதம் எழுதியுள்ளார்கள். இங்கிலாந்துக்கே இவரை வரும்படி சில ஐரோப்பிய நண்பர்கள் வற்புறுத்தினர். பத்திரிகையில் உண்மையும் நடுவுநிலைமையும், நல்வழியும் கொடுக்கக்கூடிய வியாசங்களே நிறைந்திருந்தன. இவருடைய பத்திரிகையின் விஷயதானங்களைப் படிப்பவர்களுக்குப் புதிய உணர்ச்சியைக் கொடுக்கும். சமூக உணர்ச்சியும் தேசாபிமானமும் ஒவ்வொருவருக்கும்உண்டாயிற்று. பத்திரிகையின் பான்மை இப்படியானால் இந்தியாவிலுள்ள அதிகாரவர்க்கத்தினர் இதைக்கண்டு எங்ஙனம் சகிக்கக்கூடும்?

## முஸ்லீம் உணர்ச்சி.

இப்பொழுது விளங்கிவரும் அகில பாரத முஸ்லீம் சங்கத்திற்குப் பிதா முகம்மத் அலியே யாவார். 1906-ம் வருடத்தில் முஸ்லீம் சங்கம் ஸ்தாபிப்பதற்கு இவர் முதற் காரணமாக இருந்தார். டாக்காவைச் சேர்ந்த நவாப் ஸர் ஸலிமுல்லா கானும் அம்ரோகாவைச் சேர்ந்த நவாப் விகருல் மல்க என்பவரும் முகம்மத் அலியும் ஆகிய இவர்களே முஸ்லீம் சங்கத்தை ஸ்தாபித்தவர்கள். 1906-ம் வருடத்தில் வங்கநாட்டில் வங்காளப் பிரிவினையால் உண்டான சுதேசியக் கிளர்ச்சியில் இந்து சமூகத்தினர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு விரோதமா யிருக்கிறார்களென்ற எண்ணம் பலமாக ஆங்கிலேயர்களுக்கு உண்டானது போலவே பல முஸ்லீம் களுக்கும் உண்டாயிற்று. இராஜீயத் துறையிலும் தேசீய வழியிலும் இறங்கிக் கிளர்ச்சி செய்வதற்கு முஸ்லீம் சமூகத்தில் அநேகருக்குப்

போதிய படிப்பு இல்லாமையைக்கண்டு முகம்மதிய சமுகம் அபிவிர்த்தி யடைவதற்கு அரசாங்கத்துடனும் அதிகாரிகளுடனும் ஒத்துழைப்பதே தக்க சாதனம் எனக்கண்டு 1906-ம் வருடத்தில் உண்டான சுதேசியக் கிளர்ச்சியில் இறங்காமல் தனியே மேற்கூறிய மூன்று முஸ்லீம் தலைவர்கள் முஸ்லீம் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். வங்காளப் பிரிவினையில் ஏற்பட்ட சுதேசியக்கிளர்ச்சியில்இறங்காமல் தனிப்படையாக ஒதுங்கி நின்றதின் பயனாக இராஜப் பிரதிநிதி லார்ட் மின்டோ முகம்மதிய சமுகத்தைச் சேர்ந்த பலருக்கு உத்தியோகங்களும் வேறுபல சௌகரியங்களையும் செய்து கொடுத்தார். முகம்மதியர்களுக்குள் கல்வி பரவச்செய்ய லார்ட் மிண்டோ பிரயாசப்பட்டார். முஸ்லீம் சங்கத்தின் நோக்கம் 15 வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்றிருந்த தென்பதைக்காணத் தற்பொழுதுள்ள முகம்மதியர் ஆச்சரியப் படாமலிருக்கமாட்டார்கள். முஸ்லீம சங்கம் 15 வருடகாலத்திற்குள் இவ்வளவு அபிவிர்த்தியைக் கொண்ட தென்பதைக் காணும் ஐரோப்பியர்களும் ஆச்சரியப்படுவார்கள். இராஜீய விஷயத்திலும் மற்ற பொது விஷயங்களிலும் தீவிர ஞானங்கொண்டிருந்த முகம்மத் அலி ஏன் குறுகின வழியைப்பற்றி அம் முஸ்லீம் சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமெனப் பலர்கேட்கலாம். 1906-ம் வருடத்தில் வடஇந்தியாவில் உண்டான சுதேசியக் குழப்பத்தில் முகம்மதியர்கள் இறங்கியிருந்தால் படிப்பு வாசனையில்லாத முகம்மதிய சமுகம் சின்



னப்பட்டிருக்கும். தவிர, இனிவரக்கூடிய பாரத உணர்ச்சியை யறிந்த முகம்மத் அலி முஸ்லீம்களைக் கூட்டுவதற்கு முதல் முதல் ஒரு சங்கம் வேண்டுமென்று கொண்டு சங்கத்தை ஸ்தாபித்தார். சங்கம் ஸ்தாபிக்கப்பட்டால் கொஞ்சங் கொஞ்சமாக இராஜீய விஷயத்தில் தீவிர உணர்ச்சியை முகம்மதியர்களுக்கு ஊட்டலாம் என்ற நம்பிக்கையைக் கொண்டே வெகு ஆழ்ந்தயோசனையுடனும் இராஜதந்திரத்துடனும் மகாபயங்காளிகளான ஸலிமுல்லா நவாபையும் நவாப் விகருல் மல்க்கையும் சேர்த்து இச்சங்கத்தை ஸ்தாபித்தார். பொதுச் சங்கங்களுக்கே முன்வராத முஸ்லீம் நண்பர்களை எப்படியாகிலும் சேர்ப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தையே கொண்டவராதலால் அத்தகைய யோசனையுடன் 1906-ம் வருடத்தில் சுதேசியக் கிளர்ச்சியில் இறங்காமல் முஸ்லீம் சங்கத்தைத் தனியே ஸ்தாபித்தார். ஸ்தாபித்த நாள் தொடங்கி அதன் அபிவிர்த்திக்குக் காரணமாயிருந்தவர் முகம்மத் அலியே யாவர். சங்கத்தை ஸ்தாபித்த அவ்விரு நவாபுகளும் முகம்மத் அலியுடன் முன்னேக்க முடியாமல் பின்தங்கி விட்டனர். முஸ்லீம் சங்கம் வரவர பலப்பட்டுவந்தது. 1912-ம் வருடத்தில் கூடின முஸ்லீம் சங்கத்தின் மகாநாட்டில் முஸ்லீம்களுக்கும் சுயஆட்சியே இலட்சியம் எனத்தீர்மானிக்கப்பட்டது. முஸ்லீம்களின் அபிவிர்த்தியை நன்குகுறிக்கின்றது. காங்கிரஸ் மகாசபை தீர்மானித்ததென்றாகிலும் அரசாங்கத்தின் மீதுள்ள அருவெறுப்பைக்காண்பிப்பதற்காகிலும் அல்லது அப்பொ

ழுது நடந்து வந்த துருக்கி இதாலி யுத்தத்தைப்பற்றியாகிலும் முஸ்லீம் சங்கத்தார் முஸ்லீம் களுக்கும் சுயஆட்சியே இலட்சியம் எனத்திடரென்று தீர்மானிக்கவில்லை. அலிகாரில் ஸ்தாபிக்கப்பட்ட முகம்மதிய கலாசாலையின் ஸ்தாபனமே முகம்மதியர்களின் உணர்ச்சிக்குக் காரணம். அலிகார் சர்வகலாசபையின் அஸ்திவாரமே முகம்மதீய சமூகத்தின் சுதந்தர உணர்ச்சிக்கு அஸ்திவாரமாகும். அலிகாரின் சர்வகலாசபைஸ்தாபனம் இந்தியாவிலுள்ள முஸ்லீம்களைச் சேர்த்தது. முஸ்லீம் சங்கம் இராஜீய உணர்ச்சியை முஸ்லீம் களுக்குப் பலமாக ஊட்டிற்று. இந்தியாவிலுள்ள இதர சமூகத்தினர்கள் சுயஆட்சி பெறுவது போல முஸ்லீம்களும் பெற்றால்தான் நன்மையெனக் கண்டு அவ்வுணர்ச்சியைப் பலமாக அவர்கள் கொண்டார்கள். 1913-ம் வருடத்தில் நடந்த முஸ்லீம் சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியாயிருந்த ஸர் இப்ராஹீம் ரஹ்மூத் உலா அவர்களும் மற்றுமுள்ள முஸ்லீம் தலைவர்களும் இராஜீய விஷயத்தில் அதிக ஊக்கங்காட்டி வரலானர்கள். பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த கனம் மியான் மகம்மத் ஷாபி அவர்களும் முஸ்லிம் சங்கத்தின் வழிக்குக்கட்டுப்பட்டு யிருக்க அக்காலத்தில் கேட்டது. 1916-ம் வருடத்தில் லக்னௌ நகரில் கூடின காங்கிரஸ் மகாஸபையிலும் முஸ்லிம் சங்கத்திலும் இந்துமுகம்மதிய தலைவர்களுக்குள் ஒருவித பரஸ்பர தெளிவு உண்டாகி பாரதநாட்டின் அபிவிருத்திக்கு ஒரு பொது யாதாஸ்தைத் தயார் செய்து அவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனு



ப்பினார்கள். அன்று முதல் முஸ்லீம் சங்கத்திற்குப் புதிய சகாப்தம் தோன்றிற்று. ஜனநாயக உணர்ச்சி முஸ்லீம்களுக்குள் பொங்கிற்று. முஸ்லீம்கள் தங்கள் சமூகத்தையே பெரிதாகக் கருதுவதைத் தவிர்த்து பாரத மகாசமூகத்தைப்பற்றியறியவும் உழைக்கவும் முன் வரலானார்கள். முஸ்லீம் சங்கத்தை ஸ்தாபித்த முகம்மத் அலி சிறைபட்ட காலத்தில் போதுமான கிளர்ச்சி செய்யாமல் இருந்தது விசனிக்கற்பாலது. என்றாலும் அதுமுதற் கொண்டு இந்துக்களும் முகம்மதியர்களும் வர வர சகோதர உணர்ச்சியைக் கொண்டு உழைக்க முன்வந்தனர். முஸ்லீம் சங்கமும் காங்கிரஸும் ஒன்றையொன்று பற்றித்தழுவி நிற்கின்றது. காங்கிரஸ் மகாசபைக்குப் பின்னடைந்திருந்த முஸ்லீம் சங்கம் இப்பொழுது காங்கிரஸுக்கு மேல் போய்விட்டது. முஸ்லீம் சங்கத்திற்குக் 'காங்கிரஸே பலமாக யிருந்தநாள் போய் இப்பொழுது காங்கிரஸ் மகா சபைக்கு முஸ்லீம் சங்கமே பலமாக யிருக்கின்றது. காங்கிரஸ் மகா சபையின் ஜனநாயக உணர்ச்சியை முஸ்லீம் சங்கம் இப்பொழுது காப்பாற்றுகிறது. காங்கிரஸ் மகா சபையின் தீவிர உணர்ச்சிக்குக் காரணம் முஸ்லீம் சங்கமேயாகும். முஸ்லீம் சங்கத்தின் பலம் காங்கிரஸுக்கு இப்பொழுது இல்லாமலிருந்தால் காங்கிரஸ் என்ற நாமமே இந்தியாவில் இராது. கிலாபத் கிளர்ச்சிக்கும் பஞ்சாப் படுவதையின் உணர்ச்சிக்கும் தக்கபடி முஸ்லீம் சங்கம் காங்கிரஸுடன் ஒத்துழைத்து வருவதினால்தான், 32 வருடகாலத்தில் ஜனநாயக உணர்ச்சியை

எழுப்பாத காங்கிரஸ் மகாசபை இரண்டு மூன்று வரு
ட காலங்களுக்குள் அகில பாரதமெங்கும் 31½கோடி
ஜனங்களுக்குள் ஒரு நவ சக்தியையுண்டு பண்ணிற்று.
இவ்வளவு ஜனநாயக உணர்ச்சிக்கும் காரணம் மௌ
லானா முகம்மத் அலியேயாவார். 1909-ம் வருடத்தில்
இவர் முஸ்லீம் சங்கம் ஸ்தாபிக்காமற் போனால்,
1912-ம் வருடத்தில் பத்திரிகைகளை ஸ்தாபிக்காமலி
ருந்தால், 1915-ம் வருடத்தில் இவரும் இவரது தமை
யனாரும் சிறைபடாமலிருந்திருந்தால் பாரதநாட்
டில் ஜனநாயக உணர்ச்சி இவ்வளவு முதிர்ந்திராது.
ஆகவே, அலி சகோதரர்களின் உழைப்பே ஜனநாயக
உணர்ச்சிக்கு அஸ்திவாரமாகும். பிறக, அலிகாரில்
உள்ள முகம்மதிய சர்வ கலாசாலைக்குச் சற்றேறக்கு
றைய 43 வருடங்களுக்கு முன்னர், இந்தியாவில் இரா
ஜப்பிரதிநிதியாயிருந்த லார்ட்லிட்டன் பிரபுவே அஸ்
திவாரக்கல் நாட்டினார். அஸ்திவாரக்கல் நாட்டின
தினத் தன்று அக்கலாசாலை ஸ்தாபகரான காலஞ்
சென்ற நீதிபதி மாமூத் என்பவர் 'இன்றே இனி
வரும் முகம்மதிய சர்வ கலாசாலைக்கு விதை விதைத்
தாய் விட்டது' என்று கூறினார். அஸ்திவாரக்கல்
நாட்டி 30 வருடங்களுக்குப் பிறகு அலிகாரில் முகம்
மதிய சர்வகலாசபையின் ஸ்தாபனத்தை முஸ்லீம்
கள் கண்டார்கள். என்றாலும் அதற்கு முன்னர் கீழ்
நாட்டு சம்பிரதாயமான கல்வியுடன்மேனாட்டுக் கல்வி
யையும் கூடவே அக்கலாசாலையில் மாணவர் பலர்
படித்து வந்தனர். முகம்மதியர்கள் தங்கள் மதத்தை
இவ்வழியாகச் சிறப்பிக்கப் பல பிரயாசை யெடுத்துக்



கொண்டனர். திருக்குர்ரானின் தத்துவத்தையும்
கோட்பாடுகளையும் போதிக்க ஈங்கு ஏற்பாடு செய்
யப்பட்டது. பாக்தாத், கீர்டோவா முதலிய இடங்
களைப் போலவே அலிகாரும் நல்ல முதல்தரமான
முகம்மதிய சம்பிரதாயமான சர்வ கலாசாலையாக
யிருக்கவேண்டுமென்பது பல முஸ்லீம்களின் நோக்
கமாகும். இராஜா மம்மதாபாத், கனம் ஆகாகான்,
முகம்மத் அலி முதலானோர்களால் இவ்வுணர்ச்சி
நாடெங்கும் பரவிற்று. கனம் ஆகாகானைப் பற்றி
இராஜீய கொள்கை விஷயமாக நாம் என்ன குறை
கூறின போதிலும் முகம்மதிய சர்வ கலாசாலை ஸ்தா
பனத்திற்காக அவர் உழைத்தது சாலவும் மெச்சத்
தக்கது. நாட்டின் பல பாகங்களில் அவர் சென்று
முகம்மதிய சர்வகலா சபையின் ஆவசியகத்தைத்
தெரிவித்துப் புதிய உணர்ச்சி ஊட்டினார். ஷவுகத்
அலி, முகம்மத் அலி அவர்களின் வேண்டுகோளுக்
கிணங்கி கனம் ஆகாகான் முஸ்லீம் சர்வ கலாசபை
ஸ்தாபனத்திற்காகப் பணம் திரட்ட நாடெங்கும்
சென்று திக்கு விஜயஞ் செய்தார். முகம்மத் அலி,
கனம் ஆகாகான் அவர்களுடன் முஸ்லீம் சர்வகலா
சாலைக்காகப் பாடுபட்டார். முகம்மதிய சம்பிரதா
யத்தை யொட்டி சர்வகலாசங்கமொன்று ஸ்தாபித்து
அதன் மூலமாக இந்தியா வெங்கும் முகம்மதியச் சிறு
வர்களுக்குக் கல்வி கற்பிக்கப் படவேண்டுமென்று
ஓர் அற்புதமான திட்டத்தை முகம்மத் அலி ஏற்படு
த்தினார். துர் அதிர்ஷ்ட வசத்தால் முகம்மத் அலி
சிறைபட்டதினால் முஸ்லீம் சர்வ கலாசாலையை முஸ்

லீம் உணர்ச்சிக்கு மாறுபாடாக ஆங்கில சம்பிரதாயத்தைப் பற்றி ஸ்தாபிக்கப்பட்டது. 1916-ம் வருடம் ஏப்ரல் மாதம் 10-ந் தேதி இராஜா மம்மதாபாத் அக்கிராசனத்தின்கீழ் முஸ்லீம் சர்வ கலாசாலையைப் பற்றிய நிர்வாகக் கூட்டமொன்று கூடிற்று. இந்த கூட்டத்திற்குப் பல் பாகங்களிலுமிருந்து முஸ்லீம்கள் வந்தனர். அங்கு அலி சகோதரர்களின் சிறையைப் பற்றியும் அவர்கள் அச்சமயத்தில் இல்லாமையைப் பற்றியும் ஒரு தீர்மானமும் செய்யப்பட்டது. இப்படியிருக்க, 1917-ம் வருடம் ஏப்ரல் மாதம் 8-ந் தேதி கல்கத்தாவில் ஸ்தாபக நிர்வாக கமிட்டி கூட்டம் ஒன்றுகூடி காசியில் இந்துக்களுக்கு எம்மாதிரி சர்வகலா சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டதோ, அது மாதிரி சர்க்கார் திட்டத்திற்குட்பட்டு ஒரு சர்வகலா சபையை ஸ்தாபிக்கச் சிலர் ஏற்பாடு செய்தனர். சிலர் முகம்மத் அலி சிறைபட்டிருப்பதால் அவருக்காகச் கொஞ்சநாள் தள்ளிவைக்க வேண்டுமென்று கூறியும் பலர் கேளாமல் அவசரப்பட்டுக் கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டனர். முஸ்லீம் சர்வகலா சபையானது ஜாதீய கலாசாலையின்றி அரசாங்க ஆதரவிலும் அவர்களிட்ட திட்டத்திலும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது.

## கான்பூர் மசூதி

1913-ம் வருடம் ஆகஸ்டுமாதம் 3-ந்தேதி வட இந்தியாவில் கான்பூர் நகரில் மசூதி விஷயமாக நடந்ததையாவரும் அறிந்ததே. ஜனங்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக அதிலும் முஸ்லீம் சமூகத்



தினர்க்கு விரோதமாக அதிகாரவர்க்கத்தினர் செய்த காரியம் கண்டிக்கத்தக்கதே. இந்தியாவில் அதிகார வர்க்கத்தினர் மதவிஷயங்களில் தலையிடக்கூடாதென்று காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் 1858-ம் வருடத்தில் பஹிரங்க விளம்பரமொன்றை சாஸனமாக அறிவித்தும் அவ்வறிக்கை ஆற்றிற் கரைத்த புளிபோலாய் விட்டதேயன்றி கௌரவிக்கத் தக்கதொரு சாசுவத சாஸனமாகக் காணப்படவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் முதன்முதல் இந்தியாவில் சிப்பாய்க்கலகத்திற்குப்பிறகு கம்பெனி ஆளுகையைவிட்டு மாற்றப்பட்டகாலத்தில் இந்தியாவிலுள்ள சுதேசமன்னர்களுக்கும் மகாஜனங்களுக்கும் உறுதியாகக்கொடுத்த வாக்குத்தத்தம் சரிவர நிறைவேற்றப்படவில்லை. இந்தியர்களின் மன அமைதியே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப்பலம்; இந்தியர்களின் திருப்தியும் சமாதான வாழ்க்கையுமே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அஸ்திவாரம்; இந்தியர்களின் ஒத்துழைப்பே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு வெற்றியென்று மகாராணியார் கூறினவார்த்தைகள் இப்பொழுது எவ்வளவு பிரயோசனமற்றவைகளாகக் காணப்படுகின்றனவென்பது உலகமறிந்த விஷயமாகும். மகாராணியார் கூறின உறுதிமொழிக்குப் பிறகும் பல இராஜப்பிரதிநிதிகள் அப்போதைக்கப்போது அவ்வார்த்தைகளை ஆதரித்துப்பேசியே வந்தார்கள். ஆனால், இராஜப்பிரதிநிதி கர்ஸன் பிரபுமட்டும் அவ்வுறுதிமொழிகள் வெறும் ஏட்டுச்சுரக்காய் என்றும் அம்மொழிகள் இந்தியா கவர்ன்மெண்டைக் கட்டுப்

படுத்தாதென்றும் தெளிவாகக்கூறினார். அவர் கூறினவார்த்தையை ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்த கவர்னர் லார்ட் மெஸ்டனும் கான்பூர் அதிகாரிகளும் மெய்ப்பித்தனர். ஜனங்களுடைய ஆத்திரத்தைக் கிளப்பிப்பலவழியிலும் துன்பத்தை விளைவித்துப் பிறகு பொதுஜனங்களின் கிளர்ச்சி பலப்பட்டால் ஜனங்களுக்குத்திருப்தியாக அரசாங்கத்தார் உறுதி மொழிகளைக் கூறுவதையே இயல்பாகக்கொண்டனர். ஜனங்களுடைய மனதை மாறுபடச் செய்யும் அதிகாரவர்க்கத்தினரைப்பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சரியானபடி விசாரிப்பதில்லை. இங்ஙனம் விசாரிக்காமல் இருப்பதினாலேயே அதிகாரவர்க்கத்தினர்களின் அட்டூழியம் இந்தியாவில் தலை தூக்கிவருகின்றது. நிற்க, கான்பூரில் மச்சலி கடைவழியாகப் புதிய ரஸ்தாவொன்று அமைக்கப்பலநாளாக அவ்வூர் முனிசிபாலிடியாரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் யோசித்துக்கொண்டிருந்தார்கள். புதிய ரஸ்தா அமைப்பதற்கு மசூதியின் ஒருபக்கம் சற்றுதடங்கலாயிருந்தது. புதிய ரஸ்தா அமைக்கவேண்டுமானால் மசூதியின் ஒருபாகத்தை இடிக்கவேண்டும். இடிப்பதற்குப் பயந்து பலநாள்வரை தாமதித்தார்கள். கடைசியாக, அதிகாரிகள் மசூதி தர்மகர்த்தாக்களைக்கண்டார்கள். தர்மகர்த்தாக்கள் (முதவாலி) அதிகாரிகளின் தயவுக்கு நச்சியிருக்குந்தன்மையுள்ளவர்கள். மதப்பற்று அதிகமாகயில்லாதவர்கள். அதிகாரிகளைக்காண்பதே பெரிய தர்மமெனவும் அதிகாரிகளின் சகவாசமே மோட்சசாதன



மெனவுங்கருதியிருக்கும் அத்தர்மகர்த்தாக்கள் மசூதியின் ஒருபாகத்தை ரஸ்தாவுக்காகக்கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டவுடனேயே சந்தோஷத்துடனே கொடுத்து விட்டார்கள். தர்மகர்த்தாக்கள் பொதுவாக சுயநலங்கருதுபவர்களாயிருந்ததினால் இஸ்லாமியர்களின் மனோபாவத்தை யறிய விரும்பாமல் தங்கள் இஷ்டப்படி செய்தார்கள். மசூதியின் ஒருபாகத்தை ரஸ்தாவுக்காகத் தர்மகர்த்தாக்கள் கொடுத்துவிட்டதாகக்கேள்வியுற்ற முஸ்லீம் சமூகத்தினர் கோபங்கொண்டனர். மௌல்விகள் இஸ்லாம் மதத்திற்கே தீங்குவந்து விட்டதென்று ஆத்திரங் கொண்டார்கள். மகாபரிசுத்தத்துடன் சிறந்த பேரியோர்களால் கட்டப்பட்ட மசூதியை இடிப்பதென்பது இஸ்லாம் மார்க்கத்தின் ஷரியத்துபடி ஆடாதகாரியமென மௌல்விகளும் இமாம்களும் கூட்டங்கூடி கிளர்ச்சி செய்யத்தலைப்பட்டனர். உடனே, பொதுஜனங்கள் பொதுக்கூட்டங்கூடி தர்மகர்த்தாக்களின் நடத்தையைப்பற்றிக் கண்டனஞ்செய்தார்கள். முனிசிபாலிடியாரையும் கலெக்டரையும் கண்டு மதவிஷயத்தில் தலையிடவேண்டாமென்றும் அவர்கள் மன்றாடினார்கள். அதிகாரிகள் ஜனங்களின் வார்த்தையைக் கேட்கவில்லை. தான் கொண்டதே கோலமென அதிகாரிகள் இருந்தார்கள். முஸ்லீம் தலைவர்கள் பலர் கிளர்ச்சி செய்ய வாரம்பித்தனர். இத்தகைய ஆரவாரத்தினிடையே மசூதியை ஒருநாள் போலீஸ் பந்தோபஸ்துடன் இடித்தார்கள். முஸ்லீம் சமூகத்தினர் பெரிதும் துக்கப்பட்டார்கள். விக்

டோரியா இராணியார் கொடுத்த சாஸனத்திற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் நடக்கிறார்களே யென்று மகாஜனங்கள் ஆவேசங்கொண்டார்கள். மீண்டும் அடுத்தடுத்து மகாநாடுகள் கூட்டப்பட்டன. அதிகாரிகளின் நடத்தையையும் ஆங்கு கண்டிக்கப்பட்டது. மௌல்விகளின் பிரசங்கங்களைக்கேட்டவர்களிற் சிலர்உடனே ஒன்றுசேர்ந்து இடித்த மசூதியைத்திரும்பக்கட்டி விடவேண்டுமென்ற ஆத்திரத்துடன் மசூதியிடத்திற்குவந்து இடிபட்டயிடத்தில் செங்கற்களை அடுக்கி வரிசை வரிசையாகக்கட்டவாரம்பித்தனர். இச்செய்தியை யறிந்த அதிகாரிகள் பலமான போலீஸ் படையைத்திரட்டிக்கொண்டு அவ்விடத்திற்கு வந்து ஜனங்களைத் துரத்தவாரம்பித்தனர். ஜனங்களுக்கும் போலீஸாருக்கும் கைகலந்தது. உடனே போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஜனங்களைச்சுடவாரம்பித்தனர். பலர் காயமடைந்தனர். சிலர் மாண்டனர். கான்பூர் எங்கும் கூக்குரல் உண்டாயிற்று. கனம் மஸர்உல்ஹக் கான்பூருக்கு விஜயமாகி ஜனங்களை சமாதானப்படுத்தினார். கலகம் விளைத்ததாகப்பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுவிக்கப்பல வக்கீல் மார்கள் கோர்ட்டில் வாதாட முன் வந்தனர். சிறைபட்டவர்களில் சிலர் சிறுபிள்ளைகளும் சிலர் வயோதிகர்களுமாக யிருந்தனர். மத்ரஸாஹி ஹிலாஹயத்தைச் சேர்ந்த மௌல்வி அஸத் சுபானியும் கைதிசெய்யப்பட்டார். முஸ்லீம் சமூகத்தினருக்கு உற்பாதம் உண்டாயிற்றெனப்பலர் நினைத்தார்கள். இவ்வளவு அமளிகுமளி



யில் முகம்மத்அலி சும்மாயிருக்கவில்லை. லெப்டினெண்ட் கவர்னர் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் ஜனங்களுக்கு நன்மைசெய்வாரென்று முகம்மத்அலி எண்ணினார். ஒன்றும் ஆகாததினால் முகம்மத்அலியும் இன்னுஞ்சில முகம்மதிய கனவான்களும் சேர்ந்து கவர்னரைப் போய்ப்பார்த்தார்கள். கவர்னர், வந்தவர்களுடைய ஆச்சரியத்திற்கேற்ப மசூதிவிஷயத்தில் ஒன்றுஞ் செய்யமுடியாதென நிர்தாட்சணியமாகக் கூறிவிட்டார். முகம்மத்அலி அவர்களுக்கு மித்திரராயும் மிக்க வேண்டுபவராயுமிருந்த ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் கூறின வார்த்தையைக்கேட்டு மனங்கசிந்து இனி இந்தியாவில் இது விஷயமாகக்கிளர்ச்சி செய்வதில் பிரயோசனமில்லை யென்றுகண்டு முகம்மத் அலியும் ஸையத்வஸீர் ஹாஸனும் சக்கரவர்த்தியின் மந்திரிகளிடமும், இங்கிலாந்து மகாஜனங்களிடமும் முறையிட்டுக்கொள்ள இந்தியாவைவிட்டு இங்கிலாந்துக்குப் பிரயாணமானார்கள். இந்தியாவில் மசூதி விஷயமாகக்கிளர்ச்சி செய்திருப்பாரானால் முகம்மத் அலி அன்றே சிறைபுகுந்திருப்பார் என்பதற்கு ஐயமேயில்லை. ஏனெனில், இந்தியாவில் நன்றாகக்கிளர்ச்சி செய்யக்கூடியவர்களைக்கண்டு அதிகாரவர்க்கத்தினர் சகித்திருக்கமாட்டார்கள். முகம்மத் அலியின் காம்ரேட் பத்திரிகையும் அப்பொழுதே இருந்தயிடந் தெரியாமற்போயிருக்கும். இவ்விதமான அரும் பெருங்காரியத்தை அதிகாரவர்க்கத்தினர் செய்திருப்பார்கள். முகம்மத் அலியும் அவருடைய நண்பரும் இங்கிலாந்து சென்று ஆங்காங்கு கூட்டங்கூடி முஸ்

லீம் மகாஜனங்களின் குறைகளைப்பற்றிப்பேசினார்
கள். தவிர, இந்தியா மந்திரியையும் ஐக்கியமாகா
ணத்து மாஜிகவர்னர் ஸர்ஜேம்ஸ் லாடச்சியவர்களை
யும் மற்றுமுள்ளவர் களையுங்கண்டு கான்பூர் மசூதி
விஷயமாகப்பரிகாரஞ் செய்யும்படி சகல ஏற்பாடு
களையும் இவர் செய்தார். ஆனால் முகம்மதிய கன
வான் கனம் அமீர்அலிமட்டும் முகம்மத் அலிக்கு
இங்கிலாந்தில் விரோதமாகவே யிருந்தார், இதன்
காரணம் சரிவர நன்கு ஒருவருக்கும் புலப்படவில்லை.
இந்தியாவில் பலமான கிளர்ச்சி யேற்பட்டது. கடை
சியாக, 1913-ம் வருடம் அக்டோபர் மாதம் 14-ந்
தேதியன்று இராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்சு
கான்பூர் நகருக்கு விஜயமானார். பல முஸ்லீம் கன
வான்கள் இராஜப்பிரதிநிதியைப் பேட்டி கண்டார்
கள். கான்பூர் மசூதிவிஷயமாகக் குறைகள் கூறப்
பட்டன. லார்ட் ஹார்டிஞ்சு அக்கனவான்களின்
குறைகளைக்கண்டு மெஸ்டன் பிரபுவுடன் கலந்து
இடித்த மசூதியைக்கட்டிக் கொடுத்துவிடும்படி உத்
திரவுசெய்தார். முஸ்லிம்களுக்கு உண்டான சந்
தோஷத்திற்கு எல்லையில்லை. கலகத்திற்காக சிறை
பட்டவர்கள் விடுதலையடைந்தனர். அதிகாரிகள் சில
ஜனங்கள்மீது நடவடிக்கை நடத்துவதை வாபீஸ்
செய்து கொண்டார்கள். கான்பூரில் சமாதானமும்
அமைதியும் உண்டாயிற்று. லார்ட் ஹார்டிஞ்சு சமா
தான மூர்த்தியானார். அவரை எல்லா முஸ்லீம்
களும் கொண்டாடினார்கள். லார்ட் ஹார்டிஞ்சு செய்த
காரியத்திற்குக்காரணம் முகம்மத் அலியே யாவர்.



இங்கிலாந்தில் இவர் செய்த பெருமுயற்சியால் அங்
குள்ள மந்திரிமார்கள் லார்ட் ஹார்டிஞ்சுக்குத் தெரி
வித்துசமாதானமுண்டாக்கும்படி செய்வித்தனர். பின்
னர், முகம்மத் அலியும் அவர் நண்பரும் இந்தியாவுக்
குத்திரும்பி வருவதற்கு முன்னர் மசூதிவிஷயம் அனு
கூலமாகமுடிந்ததைக்கண்டு ஆநந்தபரவசராய் உடனே
லார்ட் ஹார்டிஞ்சுக்குத் தந்தியனுப்பினார். அவரும்
அந்தரங்க காரியதரிசி மூலமாக மறுதந்தியடித்து சந்
தோஷிப்பித்தார். முகம்மத் அலியின் தேசாபிமா
னத்தையும் சாமர்த்தியத்தையும் விஷயங்களின் தீவிர
ஞானத்தையுங் கண்ணுற்ற பலர் இவர்மீது முன்னி
லும் பன்மடங்கு அதிகமாக நேசிக்கத்தொடங்கினர்.

### சமூக ஊழியம்.

பால்கன் யுத்தத்தில் துருக்கிக்கு உண்டான சங்க
டத்திற்கு எல்லையில்லை. துருக்கியைப் பலதிசையிலும்
எதிரிகள் தாக்கினர். துருக்கி விஷயமாக இந்தியாவில்
பெருத்த கவலையுண்டாயிற்று. துருக்கிப் படைகளுக்
கும்யுத்தத்தில் காயமடைந்த துருக்கியர்களுக்கும் சிகி
ச்சை செய்யவும் ஊழியஞ்செய்யவும் இந்தியாவில்ஒரு
வைத்திய சிகிச்சைப்படையொன்று முகம்மத் அலிய
வர்களாலும் டாக்டர் அன்சாரி அவர்களாலும் ஸ்தா
பிக்கப்பட்டது. காம்ரேட்பத்திரிகையில் துருக்கி சிகி
ச்சா நிவாரண விஷயமாகத் தலையங்கங்கள் வெளிவந்
தன. உடனே பற்பலமாகாணங்களினின்றும் திரவிய
சகாயம் ஏற்பட்டது. துருக்கி நிவாரண நிதிக்குப்பண
ம் விசேஷமாகத்திரட்டப்பட்டது. டாக்டர் அன்ஸா
ரி எட்டுவைத்தியர்களையும் எட்டுசிகிச்சா பரர்களையும்

பன்னிரண்டு ஊழியர்களையும் காயமடைந்தவர்களைத் தாங்கும் ஏவலாளர்களையும் கூட்டினார். இந்தியாவின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் வைத்தியர்கள் வந்தனர். கடைசியாக துருக்கிக்குப் பிரயாணமாகச் சிகிச்சைப்படை பம்பாயை விட்டுப் புறப்பட்டது. பம்பாயை விட்டுப்புறப்படுகையில் இராஜப் பிரதிநிதி அவ்வைத்தியர்களுக்கு நன்மொழிகூறி கைலாகு கொடுத்தனுப்பினார். அலிகார் கலாசாலையைச் சேர்ந்த பல பழையமாணவர்கள் பரோபகாரத் துறையில் இறங்கி அற்புதமான காரியங்களைச் செய்யமுன் வந்தது இஸ்லாம் சமூகத்தினருக்கே பெருங் கீர்த்தி விளையக் கூடியதென்று இராஜப்பிரதிநிதி ஹார்டிஞ்சு பிரபு அன்புடன் மொழிந்தார். தவிர, அவ்வைத்தியப்படைக்கு வேண்டிய உதவியையும் அளிப்பதாக வாக்குறுதி கொடுத்து எகிப்திலும் துருக்கியிலும் உள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களை உதவிபுரியும் வண்ணம் இந்தியா மந்திரிக்குத் தந்தி யனுப்புவதாகவும் ஹார்டிஞ்சு பிரபு கூறினார். வைத்தியப் படையானது 1912-ம் வருடம் டிசம்பர் மாதம் 15-ந்தேதி பம்பாய்த் துறைமுகத்தை விட்டது. அப்படை சென்ற கப்பலின் பெயர் ஸர்டிக்னா. 1913-ம்வருடம் ஜனவரி மாதம் முதல்தேதியன்று அக்கப்பல் துருக்கிக்குப் போய் சேர்ந்தது. துருக்கியில் அப்படைக்கு அபரிமிதமான வேலையிருந்தது. அப்படை நல்ல சமயத்தில் உதவிபுரியச் சென்றது. இந்தியாவிலுள்ள முகம்மதியர்களால் அனுப்பப்பட்ட அவ்வைத்தியப் படை விசேஷ சாமர்த்தியத்துடன் இரண வீரர்



களுக்கு சிகிச்சையும் மற்ற ஊழியமும் செய்தது. ஐரோப்பிய வைத்திய சிகிச்சாளர்களைக் காட்டிலும் இந்திய வைத்திய சிகிச்சாளர்கள் பலவிதத்திலும் சாமர்த்தியமுள்ளவர்களென உலகினரறியச் செய்தார்கள். அந்த வைத்தியப் படையானது சற்றேறக் குறைய ஆறுமாத காலமளவு துருக்கியிலேயே யிருந்தது. இந்தியாவிலிருந்து வைத்தியப் படையுடன் கொண்டுபோன பலசாமான்கள் துருக்கியிலுள்ள துருக்கி சிகப்புப்பிறை சங்கத்திற்கு அளிக்கப்பட்டன. மிகுதியை இந்தியாவிலுள்ள சிகப்புப் பிறை சங்கத்திற்கு அளிக்கப்பட்டது. சமீபத்தில் நடந்த இந்த ஐரோப்பிய யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு உதவியாகப்பல சாமான்கள் இந்தியா கவர்ன்மெண்டிடம் அளிக்கப்பட்டன. இங்ஙனம், முகம்மத் அலியின் பெருமுயற்சியால் முஸ்லீம் சமூகம் கடல் கடந்த கண்டங்களிலும் பெருமை பெற்றது. நிற்க, டில்லி மாநகரில் இந்திய கவர்ன்மெண்டின் இராஜதானி மாற்றப்பட்ட காலத்தில் இவர் உருது பாஷையில் ஹம்டர்ட் பத்திரிகையை நடத்த வந்தாரென நாம் முன்னமேயே கூறினோம். இவர் டில்லிமா நகருக்கு வந்த காலத்தில் டில்லியிலுள்ள இஸ்லாம் மதத்தினர்களுக்குள் சில்லரை மனஸ்தாபங்களும் விரோதங்களும் பலயிருந்தன. எடுத்ததிற்கெல்லாம் சண்டையும் தொட்டதிற்கெல்லாம் வழக்குமாக டில்லி நகர் முஸ்லீம்கள் இருந்தனர். முகம்மத் அலி அவர்களை அணைத்து ஒன்று சேர்க்கப் பலமுயற்சி செய்தும் முதலில் பிரயோசனப்படவில்லை. என்றாலும் சண்டை

சச்சரவுகள் முன்போல் அவ்வளவு இல்லை. இப்படியிருக்கையில் டில்லியில் கசாப்புக் கடைக்காரர்கள் வேலை நிறுத்தஞ் செய்தனர். டில்லிநகர் முனிசிபாலிடியார் அதிகமாக வரிச் சுமையையும் சில நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தினதினால் ஒரே கட்டுபாடு கொண்டு கசாப்புக்கடைக்காரர்கள் வேலை நிறுத்தஞ் செய்தார்கள். ஒருமாத காலமளவும் ஐரோப்பியர்களும் முஸ்லீம்களும் மற்ற மாமிசமுண்ணும் சாதியார்களும் வெகுகஷ்டப்பட்டனர். கசாப்புக் கடைக்காரர்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க முகம்மத் அலி அவர்களுக்காக உழைக்க முன்வந்தார். ஆங்காங்கு டில்லிமா நகரில் பல கூட்டங்கள் நடந்தன. உத்தியோகஸ்தர்களுக்கும் பெரிய அதிகாரிகளுக்கும் மகஜர்கள் தயாரித்து அனுப்பப்பட்டன. முகம்மத் அலி முனிசிபாலிடியர்களுடன் கலந்து கசாப்புக்கடைக்காரர்களின் துயரங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்திக்கச் சில திட்டங்களைத் தயார்செய்து கொடுத்தார். உத்தியோகஸ்தர்கள் பலரை நேராக இவர் கண்டார். இங்ஙனம் கிளர்ச்சி செய்ததினால் கடைசியாக கசாப்புக் கடைக்காரர்களுக்குப் போதுமான கஷ்ட நிவாரணம் ஏற்பட்டது. கசாப்புக் கடைக்காரர்களும் சந்தோஷத்துடன் வேலைத் தொடக்கஞ் செய்தனர். இவர் பல வருடகாலமாகவே இந்து முகம்மதிய ஒற்றுமைக்குக் கஷ்டப்பட்டு வந்தார். ஸ்ரீகாசியிலுள்ள செண்ட்ரல் ஹிந்து கலாசாலைக்கு இவர் விஜயமாகி ஆங்கு ஹிந்து பிள்ளைகள் மத தர்மத்தில் போதிக்கப்படும் விதத்தை யறிந்தார். அங்குள்ள மாணவர்



களின் வேண்டுகோளுக் கிணங்கி ஹிந்து முகம்மதிய சம்பந்தம் என்ற ஓர் உபந்யாசமும் இவர் செய்தார். ஹிந்துக்கள் உண்மையான ஹிந்துக்களாகவும் முஸ்லீம்கள் உண்மையான முஸ்லீம்களாகவும் இருந்தால் ஹிந்து முகம்மதீயர்களுக்குள் சண்டையென்பதேயிராது என்றும், தற்காலத்தை யொட்டி ஹிந்துக்களும் முகம்மதீயர்களும் சற்றே சமரஸ வழியையனுசரிக்கவேண்டு மென்றும் முகம்மத் அலி கூறினார். முகம்மத் அலி அன்று உழைத்த உழைப்பு வீண்போகாமல் இன்று நாடெங்கும் ஹிந்து முகம்மதீய ஒற்றுமை பிரகாசித்து வருகின்றது. இவர் சகோதரர் ஷவுகத் அலியும் பலவிதமாக முயற்சித்து வந்தார். ஷவுகத் அலிக்கு இஸ்லாம்மத தத்துவத்தில் நல்ல ஞானமுண்டு. சரித்திரத்திலும் சாஸ்திரத்திலும் முதிர்ந்த அறிவு இவருக்குண்டு. இவர் பீ. ஏ. பட்டம் பெற்றவர். கலால் இலாகாவிலும் சிலகாலம் வித்யா இலாகாவிலும் சர்க்கார் உத்தியோகம் புரிந்து வந்தார். சர்க்கார் உத்தியோகம் புரிந்த காலத்தில் அதிகாரிகளின் மதிப்பையும் கீழ்தர உத்தியோகஸ்தர்களின் மதிப்பையும் இவர் விசேஷமாகப் பெற்றிருந்தார். இங்ஙனம் அலிசகோதரர்கள் பலருடைய மனதைக் கவர்ந்தனர். முகம்மத் அலி இணையற்ற மேடைப்பிரசங்கி. அழுத்தமும் திருத்தமுமாகத்தான் இவர்பேசுவார். பார்லிமெண்ட்சபைக்குரிய வாதாடுஞ் சக்தியினை இவர் பெற்றிருக்கிறார். தன் மனத்திற்குப்படும் எண்ணங்களைத் தைரியமாய் வெளியிடும் தீரத்தன்மையைக் கொண்டவர் இவர். இவருடைய

உபந்யாசத்தைக் கேட்ட காலஞ்சென்ற கோகலே மிகவும் கொண்டாடி யுள்ளார். காலஞ்சென்ற லோகமான்ய திலகர் முகம்மத் அலியின் பிரசங்கம் பாமரனையும் புத்திசாலியாக்கும் என்றும் உணர்ச்சியே யில்லாத மந்தகுணத்தைக் கொண்டிருக்கும் ஒருவனைத் தீவிர உணர்ச்சியை யூட்டும் என்றும் கூறியுள்ளார். ஷவுகத் அலியின் உபந்யாசமோ வெறும் பச்சையானது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் குணம் அலி சகோதரர்களிடத்தில் உதிக்கவில்லை. இவர்களுடைய உபந்யாசங்களைக் கேட்கும் ஒவ்வொருவருக்கும் புதிய உணர்ச்சி யுண்டாகும். முகம்மத் அலி வாதாடுஞ் சாமர்த்தியத்தைப் பெற்றிருப்பது போல இந்தியாவில் இரண்டொருவரே தான் பெற்றிருக்கின்றனர். இவர்பேசும் நடை வெகு நன்றாக யிருக்கும். ஆங்கிலத்திலும் சரி, உருது பாஷையிலுஞ்சரி, நடை வெகு அழகாயும் நல்ல பதப் பிரயோகங்கள் கொண்டதாயும், அர்த்தபுஷ்டி யுள்ளதாயு மிருக்கும். ஆங்கிலர் பலர் இவருடைய உபந்யாசத்தைக் கொண்டாடி யிருக்கின்றனர். முகம்மத் அலி கவி செய்வதிலும் சாமர்த்திய முள்ளவர். இவருடைய கவிகள் அதிக உட்கருத்தைக் கொடுக்கக் கூடியவைகள். ஹாவிஸ், ஸாடி முதலிய பண்டை முஸ்லீம் கவிகளைப் போன்றவர் இவர். பலதுறையிலும் இவர் நல்ல சாமர்த்தியங் கொண்டவர். இங்ஙனம் முகம்மத் அலி கவியாலும் பிரஸங்கத்தாலும் விஷயதானங்களாலும் பரோபகாரத்தை முன்னிட்டு தேசத்திற்கும் மதத்திற்கும் ஸமூகத்திற்கும் உழைத்



துவந்தார். இந்தியாவிலுள்ள முஸ்லீம்களுக்கு மத ஸம்பிரதாயத்தை ஒட்டியும் சாஸ்திரத்தை ஒட்டியும் தேசியக்கல்வி ஏற்படுத்தவேண்டு மென்னும் அவா வெகு காலமாக முகம்மத் அலிக்கு இருந்தது. இதற்காகப் பலவியாஸங்கள் வெளியிட்டிருக்கின்றார். தேசியக்கல்வி விஷயமாகச் சிலதிட்டங்களைவெளியிட்டார். மதவுணர்ச்சி இல்லாத வெறும்படிப்பு பிரயோஜனமில்லை யென்பதே முகம்மத்அலியின் நோக்கம். தேசியக்கல்வி ஸ்தாபனத்திற்கு அரசாங்க உதவியின்றி முடியாது. ஆகவே தேசியக்கல்வி நாடெங்கும் பரவ வேண்டுமானால் அரசாங்கமும் தேசிய வழியில் இருக்க வேண்டு மென்பது முகம்மத் அலியின் நோக்கம். தேசியப் படிப்பினாலேயே பிள்ளைகளின் நடை உடை பாவனை முதலியவைகள் திருந்தும். தேசியப்படிப்பினாலேயே பிள்ளைகளுக்கு மதாபிமானமும் பாஷாபிமானமும் தேசாபிமானமும் ஒருங்கே அமையும். தேசியப்படிப்பினாலேயே பிள்ளைகள் நல்ல நகரத்தார்களாகிநாட்டின் விஷயங்களையும் நிலைமைகளையும் ஆராய்ச்சி செய்வர். படிப்பானது உத்தியோகத்திற்குமாத்திரம் பிரயோஜனப்படும் என்னும்குறுகிய எண்ணம் நீங்குவதற்கு தேசியப்படிப்பே இன்றி யமையாதது. தேசியக்கல்வி யானது சீதோஷ்ண ஸ்திதியை முன்னிட்டும் ஸம்பிரதாயத்தை முன்னிட்டும் ஏற்படுத்தல் நலம். தேசியக்கல்வி யானது வியாபாரத்திற்கும் கைத்தொழிலுற்கும் ஸாதகமாக இருக்க வேண்டும். ஸங்கீதமும் சித்திரமும் இருத்தல் நலம். தேசியக்கல்வி ஒன்றினாலேயே முஸ்லீம் ஸமூகமும்

பொதுவாக இந்திய ஸமூகமும் அபிவிருத்தி யடையும் என்பதே முகம்மத் அலியின் நோக்கமாகும். இந்தியாவை துருக்கி முதலிய முஸ்லீம் அரசாங்கத்திற்கு உட்படுத்தி உலகெங்கும் இஸ்லாம் உணர்ச்சியும் ஆதிக்கமும் உண்டவதற்கு முகம்மத் அலியும் ஷவுகத் அலியும் ஏற்பாடு செய்து வருகின்றார்கள் என்னும் எண்ணம் விசேஷமாக ஐரோப்பியர்களின் மனதிலும் சிறுபான்மை இந்தியர்களின் மனதிலும் குடிகொண்டிருக்கின்றது. 1913-ம் வருடத்தில் வட இந்தியாவிலுள்ள கான்பூர் மசூதி விஷயத்திற்குப் பிறகு டைம்ஸ் பத்திரிகை உலகத்தில் இஸ்லாம் மதத்தின் ஆதிக்கம் என்ற வியாஸமொன்றை வெளியிட்டது. அவ்வியாஸம் முஸ்லீம்களை வேண்டுமென்றே புண்படுத்துவதற்காக எழுதப்பட்டது போலும். உலகத்தில் இஸ்லாம் ஆதிக்கம் என்னும் பொருளைக் குறிக்கின்ற (Pan-Islamism) பான் இஸ்லாமிஸம் என்பது ஐரோப்பியர்களின் கற்பனை வார்த்தையேயல்லாது இந்திய வார்த்தையுமல்ல, முஸ்லீம் வார்த்தையுமல்ல. இஸ்லாம் மதவுணர்ச்சிக்கே பெருத்த துன்பத்தை விளைவிக்கக் கூடிய இப்பதப்பிரயோகம் முஸ்லீம்களால் ஆதரிக்கக் கூடியதல்ல. நிற்க, பாபு விபினசந்திர பாலரும் பான்இஸ்லாமிஸம்என்பதைப் பற்றி வெகு பயங்கரமான பீதியைக் கொண்டிருக்கின்றார். அலிகார் நகரில் ஸ்தாபிக்கப்பட்ட முஸ்லீம் ஸர்வ கலாஸலையும் மேற்கூறிய உணர்ச்சிக்கே ஸ்தாபிக்கப்பட்டதெனவும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்துவ அரசாங்கங்



களை வேருடன் பிடுங்கி இஸ்லாம் ஆட்சியை ஸ்தாபிப்பதற்காகவே சில முஸ்லீம் தலைவர்கள் இந்தியாவில் பாடுபட்டு வருகின்றனர் என்று பொய்யான வதந்தியை இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் யாரோ பரவச்செய்தனர். ஐரோப்பாவிலுள்ள பலதேசங்களுக்கு முகம்மதிய பிரசாரகர்களை அனுப்பி இஸ்லாம் ஆட்சியின் ஆரம்பத்தைக் கூறி கிறிஸ்துவ அரசாங்கங்களுக்கு விரோதமாகப் படை திரட்டி நல்ல முஸ்திப்புடன் போராடுவதற்காகவும் இந்தியாவில் சிலர் இத்துறையில் உழைத்து வருகின்றார்களென்றும் அபாண்டமாக சிலர் கூறுகின்றனர். பான் இஸ்லாமிஸம் என்னும் உணர்ச்சியானது கிறிஸ்துவ அரசாங்கங்கள் ஏற்பட்டதற்கு முன்னரே மகம்மத் நபி பிறந்த காலந் தொட்டே மத வழியில் ஒவ்வொரு இஸ்லாமுக்கும் ஏற்பட்டதாகும். 1300 வருடங்களுக்கு முன்னர் நபிகள் நாயகம் ஸல்லல்லா ஹேவஸல்லம் பின்வருமாறு கூறியுள்ளார். "இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த இஸ்லாம் ஒருவன் எந்த தேசத்தில் இருந்தபோதிலும் எந்த நகரத்தில் இருந்தபோதிலும் 'சகோதரர் எனக் கொள்ள வேண்டும். முஸ்லீம்களுக்குள் ஒத்துமையுணர்ச்சியும் ஸகோதர பாவமும் மிகவும் அவசியமானது." ஆகவே நபிகள் நாயகம் அவர்களின் வாக்கைக் கொண்டு உலகத்திலுள்ள முஸ்லீம்கள் ஒரு கட்டுபாடு கொண்டு இருக்கவேண்டும். சீன தேசத்தில் வசிக்கும் முஸ்லீம்களுக்கும் துருக்கியிலுள்ள முஸ்லீம்களுக்கும் இந்தியாவிலுள்ள முஸ்லீம்களுக்

கும் ஒரேவித நோக்கமும் ஒரேவித கட்டுபாடும் மத உணர்ச்சியால் ஏற்படுகின்றது. இது குர்ஆனுடைய ஷரியத்தாகும். ஆகவே முகம்மத் அலி மற்ற இஸ்லாமியர்களைப் போலவே பான் இஸ்லாமிஸத்தைச் சேர்ந்தவர். ஆனால் முகம்மத் அலி ஒரு காலத்தில் இஸ்லாம்மத உணர்ச்சியானது எல்லாமத உணர்ச்சியைக் காட்டிலும் பலத்துடனும் சிறப்புடனும் நடுநாயகமாய் விளங்கும் எனக் கூறியுள்ளார். இஸ்லாம் மதத்திலுள்ள கல்வியினால் அது நடு நாயகமாய் விளங்கப் போவதில்லை. தத்துவ சாஸ்திரங்களினால் விளங்கப் போவதில்லை. ஏனெனில் கல்வியும் தத்துவ சாஸ்திரமும் ஹிந்துமதத்திற்கு உண்டு. ஆனால் இஸ்லாம் மதமானது மற்ற மதங்களில் இல்லாத அரிய பெரிய உபாக்கியானங்களை உலகத்தாருக்கு அறிவிக்கும். இஸ்லாம் மதத்திலுள்ள சகோதர உணர்ச்சியும் ஸமத்துவ உணர்ச்சியும் எம்மதத்திற்கும் இல்லை. இஸ்லாம் மதத்தில் பர்தெளஸி, ஸாடி, ஹாவிஸ், உமர்காயம், அபுநவாஸ், முதாநபி, ஷாவலியுல்லா, ஸய்யத் அமத்கான் முதலிய தத்துவதரிசிகள் தோன்றி உலகத்திற்கு இஸ்லாம் மத உணர்ச்சியைப் புகட்டி இருக்கின்றனர். ஆகவே இக்காரணங்களினால் உலகத்திலுள்ள முஸ்லீம்களுக்குள் இயற்கையாகவே ஒருவித ஸகோதர உணர்ச்சியும் சமூகக் கட்டுபாடும் உண்டாயிருக்கின்றது. துருக்கியிலுள்ள முஸ்லீம்கள் துன்புறும்காலத்தில் இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் அவர்களுக்குத்துன்ப நிவாரண நிதி திரட்டுவது தர்மமேயாகும். ஆப்பிரிக்காவிலுள்ள



திரிபோலியில் உள்ள மூர்வம்சத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் கஷ்டப்படும் காலத்தில் அன்னவர்களுக்கு உதவிபுரிவதும் இந்திய முஸ்லீம்களின் தர்மமாகும். முஸ்தபா கமால் பாட்சா உலகத்திலுள்ள முஸ்லீம்களுக்காக உழைத்துப்போராடி வருவதற்கு இந்தியாவிலுள்ள முஸ்லீம்களும் அவருடைய உழைப்பில் சேர்ந்து உதவிபுரிவது மார்க்க தர்மமாகும். ஆகவே, இந்த தர்மத்தைத்தான் இந்தியாவில் அலி ஸகோதரர்கள் தங்கள் மார்க்கத்தையொட்டி செய்து வருகின்றார்கள். மார்க்கத்திற்காகப் பாடுபடுவது குற்றமா? மார்க்கமானது ஒவ்வொருவனுக்கும் இயற்கையில் உண்டானதன்றோ? மார்க்க விஷயத்தில் தீவிரமாக அலி சகோதரர்கள் உழைக்கின்றார்களென்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தில் இராஜ நிந்தனையாக அதிகாரவர்க்கத்தினர்களினால் கொள்ளப்படுகின்றது. அலி சகோதரர்கள் மட்டும் இந்தியாவில் பிறக்காமல் மற்ற யாதாமொரு நாட்டில் பிறந்திருந்தால் அவர்களைத் தெய்வமாகக் கொண்டாடுவார்கள். இந்தியாவில் மாறுபாடாகவே யாவும் நடக்கின்றன. முஸ்லீம் களுக்கும் இந்தியசமூகத்தினருக்கும் நற்காலம் விரைவில் வரும்படி அல்லாகுத்த ஆலா அனுக்கிரகிப்பாராக!

## அலிசகோதரர்களின் முதல் சிறைவாசம்.

துருக்கியினிடத்தில் முகம்மத் அலி அதிக அபிமானங்கொண்டிருந்தார் என்பது உண்மையே. இவர் துருக்கியினிடத்தில் அத்யந்த அபிமானங் கொண்டிருந்ததற்குக் காரணம் துருக்கி ஒன்றே முஸ்லீம்

ஆட்சிக்குள் பூர்ணசுதந்தரத்தைக் கொண்டது.
ஆனால் துருக்கியை அபிமானிக்கிறாரென்றால் பிரிட்டி
ஷாரிடத்தில் துவேஷமென்பது கிடையாது. பிரிட்
டிஷாரின் சில அருங்குணங்களை யறிந்து முகம்மத்
அலி புகழ்வதுபோல இந்தியாவில் வேறெவரும் புகழ
மாட்டார்கள். பிரிட்டிஷாருடைய தீக்குணங்களை
மட்டும் இந்தியர்களாகிய நாம் அறிந்தோமேயன்றி
அவர்களுடைய நற்குணங்களை இன்னும் நாம் அறிய
வில்லை யென்று முகம்மத் அலி அடிக்கடி கூறுவ
துண்டு. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தன்மையையும்
பிரிட்டிஷ் இராஜதந்திரிகளின் இயல்பையும் பிரிட்
டிஷ் சுதந்தரவாதிகளின் மனோ நிலைமையையும்
இவர் நன்கறிந்திருக்கிறார். உலகத்திலுள்ள முஸ்லீம்
களுக்குள் ஒருவித பரிச்சயம் உண்டாக வேண்டு
மென்பதே முகம்மத் அலியின் நோக்கம். பிரிட்டிஷ்
சாம்ராஜ்யத்தின் கீழ் சற்றேறக்குறைய 8½ கோடி
முஸ்லீம்கள் வாழ்கின்றனர். இந்தியாவில் மட்டும்
சற்றேறக்குறைய 7 கோடி முஸ்லீம்கள் இருக்கின்ற
னர். இஸ்லாம் மதமே இராஜமதமாக யிருக்கும்
துருக்கியில் 1½ கோடி முஸ்லீம்கள் தான் இருக்கின்ற
னர். இந்தியாவிலுள்ள 7 கோடி முஸ்லிம்கள் எப்
பொழுதும் மன்னர் பெருமானிடம் அத்யந்த விசு
வாசம் காட்டி வருகின்றனர். முஸ்லீம்கள் பொது
வாக இராஜ்யாதிகார முறையில் ஜார்ஜ் சக்கரவர்த்திக்
குக்காட்டிவரும் அன்புபோலவே மத அதிகாரமுறை
யில் துருக்கி சுல்தானுக்கு அத்யந்த பக்திகாட்டி
வருகின்றனர். துருக்கியானது ஐரோப்பா யுத்தத்



தில் இறங்குவதற்கு முன்னர் முகம்மத் அலி துருக்
கிக்கு உண்டாகப்போகும் அபாய நிலைமையைப்பற்றி
எழுதியுள்ளார். துருக்கியானது யுத்தத்தில் சேர்வ
தா இல்லையாவென்று தயங்கிக் கொண்டிருக்கையில்
டாக்டர் அன்ஸாரியும் முகம்மத் அலியும் இராஜப்
பிரதிநிதி மூலமாக துருக்கியிலுள்ள தாலத்பே அவர்
களுக்குப் பின் வருமாறு தந்தியனுப்பினார்கள்:
“துருக்கி இந்தயுத்தத்தில் மத்தியஸ்த நிலைமையில்
இராமற்போனால் துருக்கிக்கும் முஸ்லீம்களுக்கும்
மகத்தான ஆபத்து உண்டாகும். யுத்தத்திற்கு
இறங்கு முன் ஆயிரம் தடவை யோசிக்கும்படி பிரார்த்
திக்கிறோம். துருக்கிக்கும் இங்கிலாந்துக்கும் ஒரு
வேளை சண்டை யேற்படுமானால் எங்கள்பாடு மிகவும்
சங்கடமாகயிருக்கும். ஆகவே இதை தமத் என்வர்
பாட்சாவிடமும் முதன் மந்திரியான ஸர் தார்ஹி
அலீம் அவர்களிடமும் காட்டவேண்டும்.” இங்ஙனம்
மிக்க கவலையுடன் முகம்மத் அலி தந்தியடித்ததும்
ஐரோப்பிய யுத்தத்தில் துருக்கி இறங்கக் கூடா
தென்று பன்முறை கண்டித்ததும் பிரிட்டிஷ் அரசாங்
கத்தார் நன்கு அறிவார்கள். அறிந்தும் இந்தியாவி
லுள்ள அதிகாரவர்க்கத்தினர் முகம்மத் அலியின்
மனோபாவத்தை யறியாமல் அவரையும் அவருடைய
தமையனாரான ஷவுகத் அலியையும் சிறைபடுத்தினார்
கள். சிறைபடுத்தின விதமும் அதன் காரணமும்
உலகிற்கே ஓர் ஆச்சரியமாகயிருக்கின்றது. சிறை
படுத்தப்பட்டதின் காரணம் இன்னும் மூடுமந்திரமாக
வேயிருக்கிறது. முகம்மத் அலியைச் சிறைப்படுத்த

உத்திரவு பிறந்ததினத்திற்கு சற்றேறக்குறைய ஒரு வருடகாலத்திற்கு முன்னிருந்தே இவர் நீர் வியாதியால் பெரிதும் வருந்திவந்தார். 1914-ம் வருடம் ஆகஸ்டுமாதத்தில் ஐரோப்பியயுத்தம் ஆரம்பித்த சில நாட்களுக்குப் பிறகுவியாதி அதிகமாகிப் படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் முடியாமற் போய்விட்டது. பிறகு வியாதி கொஞ்சம் குணமானவுடன் அவர் மனைவியார் நோய்கொண்டு பெரிதும் துன்பப்பட்டார். மனைவியாருக்கு நோய்சற்று குணமானதும் அரசாங்கத்தாரால் இவருடைய பத்திரிகையின் ஜாமீன்தொகை பறிமுதல் செய்த விஷயமாக வழக்கு ஏற்பட்டு அவ்வழக்கில் ஓயாமல் இரவு பகலாய் அலைந்து கஷ்டப்பட்டதின்பேரில் மீண்டும் இவர் நோய் கொண்டார். சதா ஓய்வு இல்லாமல் வேலை புரிந்து வீந்ததினாலும்மனைவியாருக்கும் தனக்கும் ஏற்பட்ட நோயினாலும் முகம்மத் அலிக்குத் தேகஸ்திதி வெகு பலஹீனப்பட்டதென்று வைத்தியர்கள் கூறி இனி கொஞ்சகாலத்திற்கு ஒருவேலையும் கவலையுமின்றி விசிராந்திஎடுத்துக்கொள்ள வேண்டுமென்று வெகு கண்டிப்பாயச் சொன்னார்கள். வைத்தியர்களின் வார்த்தைக்கிணங்கி இவர் சம்ஸார சகிதம் டில்லியை விட்டுக் கொஞ்சகாலம் வேறிடத்தில் வசிப்பதாகத் தீர்மானித்தார். ஹம்டர்ட் பத்திரிகையையும் மற்றுமுள்ள காரியங்களையும் பார்த்துவரும்படி ஷவுகத் அலிக்குத் திட்டஞ் செய்துவிட்டு தன்னிடம் வெகு அன்புடன் பத்திரிகை நடத்திவந்த காலஞ்சென்ற இராஜா குலாம் ஹுஸேன் அவர்களுக்கும் மற்றவர்



களுக்கும் நல்வார்த்தைகூறி 1915-ம் வருடம் எப்ரல் மாதம் இடையில் ராம்பூருக்கு இவர் பிரயாணமானார். ராம்பூருக்குட்போனதே தவிர அவ்விடத்திலும் இவருக்குச் சரியானபடி விசிராந்தியேற்படவில்லை. ராம்பூர் நவாப் அவர்களும் இவருடைய தேகஸ்திதியைக் கண்டு மனவருத்தங்கொண்டு நல்லகாற்றும் நல்ல ஜலமும் உள்ள முஸோரிக்குப்போய் வசிக்கும்படி கூறினார். முகம்மத் அலியும் நவாப் வார்த்தைக்கிணங்கிப்புறப்பட்டார். ஆஜ்மீரில் இளங்கோவின் பட்டாபிஷேக மகோற்சவத்தைக்கண்டு விட்டுத்திரும்பிப் போகலாமென்று டில்லிக்கு வந்தார். டில்லிக்கு வந்ததும் இவர் நோய்கொண்டார். நோய்கொண்ட இரண்டாம் நாள் இவருக்கும் இவருடைய மூத்த சகோதரர் ஷவுகத் அலிக்கும் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறைபடுத்தும் உத்திரவு பிறந்தது. 1915-ம் வருடம் மே-மாதம் 15-ந்தேதி இவர்களுக்கு உத்திரவு உண்டாயிற்று. உத்திரவு பிறந்த தினம் வெள்ளிக்கிழமை யானதினால் இரு சகோதரர்களும் வழக்கம்போல் டில்லிமாநகரிலுள்ள ஜும்மா மசூதிக்குத் தொழுகைக்குச் சென்றார். ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் அன்று மசூதிக்குவந்தனர். இவ்விரு சகோதரர்களையும் ஆசீர்வதித்து அனுப்பவதற்கென்றே ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் வந்தனர். முதன்முதல் இவ்விரு சகோதீரர்களும் டில்லிக்குப் பதினொரு மைல் தூரத்திலுள்ள மஹ்ரவுலி என்னுமிடத்தில் தங்க மோட்டார் வண்டியிலேறிப் புறப்பட்டனர். மஹ்ரீவுலியில் கொஞ்சநாள் இவர்கள் சௌக்

இயமாகவே யிருந்துவந்தனர். சிநேகிதர்களும் உறவினர்களும் அடிக்கடி வந்து கொண்டே யிருந்தனர். இவ்விருவர்கள் சற்று சுகமாகவே யிருப்பதைச் சகிக்காத அதிகார வர்க்கத்தினர் திடீரென்று லாண்ட்ஸ்டவுன் என்னும் மிடத்திற்கு அழைத்துக்கொண்டு போயினர். லாண்ட்ஸ்டவுன் என்பது சற்று ஒதுக்குப்புறமான இடம். மீண்டும் இவ்விடத்தை விட்டுக் கடைசியாக நாகபுரிக்குச் சமீபத்தேயுள்ள சிந்துவாராவில் இவர்கள் சிறைவைக்கப்பட்டார்கள். இவ்விருவர்களுடைய தேகஸ்திதியைப்பற்றி அடிக்கடி பத்திரிகையில் சமாசாரங்கள் வெளிவந்தன. ஜனங்களும் தலைவர்களும் பலமான கிளர்ச்சிசெய்தும் அவ்விருவர்கள் சிறைமீட்சி யடையவில்லை. அலி சகோதரர்கள் சிறைவாசஞ் செய்கையில் அவர்கள் என்ன குற்றஞ் செய்தார்களென்றும் என்ன குற்றத்திற்காக அவர்கள் சிறைபட்டார்களென்றும் சரியாக நாளதுவரையில் அரசாங்கத்தார் கூறவில்லை. 1915-16-ம் வருடத்திய டில்லிமாகாண அரசாங்க ரிபோர்ட்டில் மட்டும் அலி சகோதரர்கள் விஷயமாகப் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாக முஸ்லீம் சமூகத்தினரிடம் முகம்மத் அலியும் ஷவுகத் அலியும் பிரசாரஞ் செய்து வந்ததின் பயனாக இவர்களை மே மாதத்தில் சிறைபடுத்துவது அவசியமாயிற்று." இந்த வார்த்தைகளையே எழுதி அவர்கள் இன்ன குற்றத்திற்காகச் சிறையில் வைக்கப்பட்டார் என்று ஜனங்கள் அறியும் பொருட்டு அதிகாரிகள் செய்த சூழ்ச்சி



யில இது முழுஉண்மையாகும். பிறகு, நாலைந்து மாதங்கள் கழிந்தபின்னர் இந்திய கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஹோம் மெம்பரும் மேற்படி டில்லி அரசாங்க அறிக்கையைப் பின்பற்றியே கூறினர். இராஜப்பிரதிநிதி சட்ட சபையில் இந்திய பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தும் விஷயமாக 1917-ம் வருடம் பிப்ரவரிமாதம் 21-ந்தேதியன்று பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதி கனம். தாதாபாயி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பிரேரேபித்ததும் அதற்கு சாதகமாகப் பலர்பேசினர். முக்கியமாக கனம் காமினி குமார சந்தா அவர்கள் அந்த ஆதித் தீர்மானத்திற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து பேசினர். அதை ஆமோதித்து முஸ்லீம் தலைவர் கனம் மஸ்ஹர் அல்-ஹக் பின்வருமாறு பேசினர். "ஐயா, என்னுடைய சமூகத்தினரே இது விஷயத்தில் அதிகமாகத் துன்பப் பட்டிருக்கின்றார்கள். ஜனங்களிடத்தில் அதிக கௌரவம் பெற்றவர்களும் எங்களுடைய சமூகத்தினர்களால் வெகு சிறப்பாக வணங்கப் பட்டவர்களும் மிக்க அறிவாளிகளுமான சிலர் சிறைப்பட்டனர். அவர்கள் என்ன குற்றத்திற்காக சிறையில் வைக்கப்பட்டார்களென்பதை எங்கள் சமூகத்தார் அறியக்கூடவில்லை. அவர்களுடைய குற்றங்களை யறிந்தும் அவர்களை நல்ல பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்களால் விசாரிக்கப் பட்டார்களென்றும் தெரியவந்தால் அப்பொழுது எங்கள் சமூகத்தினர் அவர்களுடைய சிறையைப் பற்றி ஆட்சேபிக்கமாட்டார்கள். நாங்கள் அந்நிலைமையில் விசனப்படுவோ

மேயல்லாது அரசாங்கத்தாரின் நடத்தையை ஆட்சேபிக்கமாட்டோம். உண்மையில் "அவர்களுடைய குற்றம் என்ன? என்னுடைய சுதாவான பொறுப்பை யறிந்தே இந்த கேள்வியை யான் கேட்கின்றேன். என்னுடைய சமூகத்தினரிற் பலர் இது விஷயம் அறிந்திருக்கமாட்டார்கள். என்னுடைய சமூகத்தைச் சேர்ந்த கௌரவ கனவான்களாகிய மூகம்மத் அலி, ஷவுகத் அலி, மௌலானா அபூல் கலாம் ஆஸாத் இவர்கள் அரசாங்கத்தார்களால் சிறைபட்டார்களென்பதை இச்சபையில் நான் கூறுகிறேன். இவர்கள் செய்த குற்றந்தான் என்னவென்று நான் அங்கத்தினர்களைக் கேட்கிறேன். அவர்கள் குற்றஞ் செய்திருந்தால் தாராளமாக சிறையிலிருக்கட்டும்; நாங்கள் அரசாங்கத்துடன் துணையாக அப்பொழுது இருக்கின்றோம். வாஸ்தவத்தில் கடவுள் சாட்சியாக அவர்களுடைய குற்றம் என்ன? எதற்காக அவர்கள் சிறைபட்டார்கள் என்று தெரியவேண்டும். விசாரணை பஞ்சாயத்தொன்று இருந்து அவர்களை தீர விசாரித்து இன்ன குற்றத்திற்காக அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டார்களென்று கூறுவார்களானால் முஸ்லீம் சமூகத்தார் திருப்தியடைந்து விடுவார்கள். சிறைபட்டவர்களின் மீது அரசாங்கத்திற்குப் பலமான மூகாந்தரம் ஏற்பட்டதென்று கொண்டு ஜனங்கள் ஆத்திரப் படாமல் சும்மாயிருப்பார்கள். அது தெரியும் வரை ஜனங்கள் சும்மா யிருக்கமாட்டார்கள்."

அரசாங்கத்தைச் சேர்ந்த ஹோம் மெம்பர், கனம் மஸ்ரல்ஹக் அவர்களுக்குப் பின்வருமாறு



பதிலளித்தார்,— சிறைபட்டவர்களை இருகட்சியினராகப் பிரிக்கப்படும். ஒரு வகுப்பார் பஹிரங்கமாகவும் வேண்டுமென்றே சக்ரவர்த்தியின் பிரஜைகளுக்குள்ளே துவேஷத்தையும் விரோதத்தையும் உண்டுபண்ணி ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டு அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் தடங்கல் உண்டுபண்ணி மன்னருடைய எதிரிகளுக்குச் சகாயஞ்செய்து வருகின்றனர். இம்மாதிரியான வழியில் நபர்கள் பஹிரங்கமாகப் பேசுவதும் பத்திரிகைகளால் எழுதுவதுமான காரியங்களைச் செய்துவருவதால் அவர்கள் பொதுஜன சாவதானத்திற்கும் பொது சனங்களின் சாந்தியான நிலைமைக்கும் அபாயகரமா யிருப்பவர்களல்லவா. அவர்களைத் தண்டிக்க நீதி பஞ்சாயத்து வேண்டுவதில்லை. அதிகாரப் பொறுப்பைக் கொண்ட அரசாங்கத்தார் தீர்மானிக்கவேண்டிய விஷயம். உத்தியோகஸ்தர்களிடமிருந்து வரும் சமாசாரங்களைக் கொண்டும், முன்பின் ஏற்பட்ட தஸ்தாவேஜுகளைக் கொண்டும் அதிகாரிகளின் தீர்மானமே முடிவானதாகும். பொறுப்பு அதிகாரிகளுக்கே யிருப்பதால் சம்பந்தமில்லாத மூன்றாம் மனிதர்களிடத்தில் விடமுடியாது. மற்றொரு வகுப்பார் இரகஸிய கலகக்காரர்கள். அவர்களிற் சிலருக்கு வெகு காலமாக கலகஞ்செய்து வருகின்றார்களென்ற பதிவும் உண்டு. அவர்களிற் சிலர் பேர்களை மாற்றிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று இராஜ நிந்தனை செய்து வருகின்றனர். கவர்ன்மெண்டின் விரோதிகளான ஜர்மெனியர் முதலானோருடன்

சம்பந்தங்கொண்டு பல சூழ்ச்சிகளும் உட்கலகங்களும் இவர்களால் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளையெல்லாம் வெளியே சொல்ல முடியாது. இது அரசாங்க இரகஸ்யம். ஆகவே ஒவ்வொரு நபர்களைப் பற்றியும் அந்தந்த மாகாண கவர்ன்மெண்டார் நன்கறிவார்கள்'' என்று கூறினர். இங்கும் முகம்மத் அலியைப் பற்றியும் ஷவுகத் அலியைப் பற்றியும் அவர்களின் குற்றங்களைப் பற்றியும் குறிப்பாகக் கூறப்பட்டன. என்னதான் அதிகார வர்க்கத்தினர் வார்த்தைகளை அடுக்கிக் கூறினபோதிலும் ஜனங்கள் திருப்தியடையவில்லை. நிற்க, சென்னையில் மிஸஸ் பெஸண்டும் அவருடைய சகாக்களும் சிறைபட்ட காலத்தில் அவர்களுக்காக ஏற்பட்ட கிளர்ச்சியில் அலி சகோதரர்களுக்காகவும் ஜனங்கள் கிளர்ச்சி செய்தனர். கடைசியாக மிஸஸ் பெஸண்டையும் அவருடைய சகாக்களையும் விடுதலை செய்தனர். அவர்கள் விடுதலையடைந்தவுடன் அலி சகோதரர்களும் விடுதலையடைவார்களென்றே எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். அப்பொழுது சட்டசபையில் அங்கத்தினராயிருந்த கனம் ஜின்னாவும் அலி சகோதரர்களின் விடுதலையைப் பற்றி கவர்ன்மெண்டைக் கேட்கவே, சர்க்கார் அதிகாரி அங்கத்தினர்,

''முகம்மத் அலி ஷவுகத் அலிகளின் விஷயமாக விசாரணை நடந்துவருகின்றது. கவர்ன்மெண்டார் யோசித்து வருகின்றார்கள்'' என்று கூறினர். 1917-ம் வருடம் செப்டம்பர் மாதம் 5-ந் தேதி முதல் 26-ந் தேதிவரையிலும் அலி சகோதரர்களின் சிறை



காலத்தில் மிக்க கவலையான நாளாகும்: அலி சகோதரர்களின் மீட்சியை தினம் ஜனங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். செப்டம்பர் மாதம் 7-ந் தேதியன்று போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்ட் மிஸ்டர் அப்துல் மஜித் ஸிம்லாவிலிருந்து சிந்த்வாராவுக்கு தூதாக அனுப்பப்பட்டார். ஸர் சார்லஸ் கிளீவ் லாந்தின் கையெழுத்திட்ட ஒரு நிபந்தனை பத்திரத்தைக் கொண்டு அவர் அலி சகோதரர்களுக்குக் சாண்பித்தார். நிபந்தனை பின்வருமாறு :—

''யுத்தத்தின் பகுதிகாலம் வரையில் செய்கையாலோ, எழுத்தாலோ அல்லது பிரசங்கத்தலோ அரசர் பெருமானுடைய எதிரிகளுக்கு உதவி செய்ய எண்ணவும் அல்லது உதவிசெய்வதாக முகாந்தரங்கள் ஏற்படும் நிலைமையிலும் நான் பிரவேசிப்பதில்லை. அரசர் பெருமானுடைய நேசர்களையோ அல்லது நேசதேசத்தவர்களையோ எதிர்க்கவும் நான் பிரவேசிக்க மாட்டேன். பொதுஜன சமாதானத்திற்கு விரோதமாயிருக்கும் எல்லா சட்டமில்லாத வழிகளிலும் நான் பிரவேசிப்பதில்லை''

அலி சகோதரர்கள் இதைக்கண்டதும் கவர்ன்மெண்டாரின் நிபந்தனையைத் தள்ளிவிட்டு அதற்குப் பதிலாகப் பின் வருமாறு எழுதியனுப்பினார்கள்.

பிஸ்மில்லா-ஹிர்-ரஹ்மான்-ஹிர் - ரஹீம்.

"நாங்கள் எப்பொழுதுமே தெய்வபக்தி வாய்ந்த முஸ்லீம் களாகவே யிருந்து வருகின்றோம். நபிகள் நாயகம் அவர்களின் ஆக்ஞையையும் கடவுளால் அனுக்கிரகிக்கப்பட்ட திருக் குர்ஹானின் கட்டளை

யையும் எல்லாவற்றிற்கும் மேலானதாகவே நாங்கள் கருதுகிறோம். எங்களுடைய மதத்திற்கு விரோதமின்றி நாங்கள் எப்பொழுதும் சட்டத்திற்குட்பட்டு தேசாபிமானங் கொண்டவர்களாகவே யிருக்கின்றோம். யுத்தகாலத்திலுஞ்சரி, யுத்தமில்லாத காலத்திலுஞ்சரி பலாத்காரமும் சட்ட விரோதமுமான வழிகளுக்கு உட்படாமல் விரோதமாகவே நடந்து வருகின்றோம். இம்மாதிரியே இன்னமும் எப்பொழுதும் இருக்கத்தயாராகவும் இருக்கிறோம். ஆகவே, எங்கள் இஸ்லாம் மதத்திற்கு விரோதமன்னியில் எந்த விதமான நிர்ப்பந்தனைக்கும் கட்டுப்பட்டிருக்கத் தயாராகவே யிருக்கிறோம். எங்கள் மதத்திற்கு நாங்கள் காட்டவேண்டிய பரம பக்திக்கு விரோத மன்னியில் மன்னர் பெருமானுடைய எதிரிகளுக்குச்செய்கையாலோ, எழுத்தலோ அல்லது பிரசங்கத்தாலோ உதவி செய்ய மாட்டோம். அரசருடைய நேசர்களையோ அல்லது நேச தேசர்களையோ எதிர்க்கவோ அல்லது விரோதமாகச் செய்யவோ, எழுதவோ முதலிய காரியங்களிலும் நாங்கள் பிரவேசிக்க மாட்டோம். தவிர சட்ட விரோதமும் பலாத்காரமுமான எல்லா வழிகளில் கிளர்ச்சி செய்யவும் மாட்டோம். என்றிவ்விதமான உறுதிமொழி அரசாங்கத்திற்குக் கொடுக்க நாங்கள் தயாராகவே யிருக்கிறோம். முஸல்மான்களுக்கு மதவிஷயத்தில் உள்ள சுதந்தரங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய வழியில் மேலே கூறப்பட்ட நிபந்தனை இருத்தல் கூடாது. தவிர, சட்டத்திற்குட்பட்ட இராஜீய வழியில் உழைக்கவும் அந்நிபந்தனை தடுக்கக்கூடி



யதாக யிருக்கக்கூடாது." அரசங்கத்திற்கு இங்ஙனம் பதிலளித்த இரண்டு நாளைக்குப் பிறகு கவர்ன்மெண்டின் வேண்டுகோளால் அலிசகோதரர்களின் சிறைமீட்சி விஷயமாகப் பேச சிந்துவாராவுக்கு இராஜ மம்மதாபாத் வந்தார். அலிச்சகோதரர்களுடன் பேசி அன்னவர்களின் நோக்கங்களையும் அறிந்து திருப்தியடைந்து திரும்பினார். ஆனால், இரகஸியப் போலீஸ் உத்தியோகஸ்தர் தனக்கு முன்வந்து போனதைப்பற்றி மட்டும் கேள்வியுற்று மனவருத்தங் கொண்டார். ஆகவே, இதையெல்லாம் கண்டு அலி சகோதரர்கள் கூடிய சீக்கிரத்தில் விடுதலையடைந்து விடுவார்களென்று ஜனங்கள் நம்பியிருந்தார்கள். ஆனால் செப்டம்பர் மாதம் 22-ந்தேதி யன்று ஸர் வுல்லியம் வின்ஸன்ட், கனம் ஜின்னாவுக்குப் பின்வருமாறு பதிலளித்தது ஆச்சரியகரமாக யிருந்தது.

"மகம்மத் அலி ஷவுகத் அலி மீது இந்திய பாதுகாப்புச் சட்டம் பிரயோகஞ் செய்தது இராஜீய விஷயத்தில் முரட்டுத்தனமான கிளர்ச்சி செய்து வந்ததற்கு மட்டுமில்லை. பின்னர் அவர்கள் மன்னரின் விரோதிகளுடன் வெகு சகஜமாய் உறவாடி பொது சனங்களின் சாவதானத்தை அபாயகரமான நிலைக்குக் கொண்டுவந்ததற்கே இந்திய கவர்ன்மெண்டார் அது விஷயமாகப் பலமாக விசாரித்து ஆராய்ச்சி செய்ததில் அலி சகோதரர்களுக்கு விரோதமாகப் பலமுகாந்தரங்களும் சாட்சியங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்திய கவர்ன்மெண்டார் இவர்கள் மீதுள்ள தளைகளை நீக்கத் தயாராக யில்லை." இந்த வசனங்க

ளிலிருந்து எத்தகைய சாட்சியங்களைப் புதிதாக இந்தியா கவர்ன்மெண்டார் கொண்டார்களோ தெரியவில்லை. ஆப்கனிஸ்தானத்தைச் சேர்ந்த அமீருக்கும் லக்நௌவிலுள்ள பரங்கி மஹாலின் இமாமுக்கும் எழுதிய கடிதங்களை அரசாங்கத்தார் வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். முகம்மத் அலியோ அக்கடிதங்கள் தன்னால் எழுதப்படவில்லையென்றும், கடிதங்களைக் காண்பித்தால் அவை தன்னுடைய கையெழுத்து தானா வென்று சொல்லமுடியு மென்றும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் அதிகாரிகளுக்கும் கடிதம் எழுதினர். தவிர, ஜின்னா, ஹக், மம்மதா பாத் ராஜா முதலானோர்க்கும் அக்கடிதம் தன்னால் எழுதப்படவில்லையென்றும் அக்கடிதத்தைப் பற்றித் தனக்கொன்றுமே தெரியாதென்றும் கர்ன்மெண்டார் கூறுவது வீண் அபாண்டம் என்றும் கூறியுள்ளார். அஞ்சுமானே-ஹூ-குதம்-ஹி-காபா என்னும்சங்கத்தைஸ்தாபித்தவர் ஷவுகத் அலி. அச்சங்கம் மதசம்பந்தமானதென்றும்இராஜீய விஷயத்திற்குச் சம்பந்தமே கிடையாதென்றும்இராஜப்பிரதிநிதியாயிருந்த லார்ட்ஹார்டிஞ்சு அச்சங்கத்தின் அத்யட்சகரான மௌலானா அப்துல் பாரி அவர்களுக்குக்கடிதம் எழுதியுள்ளார். அலி சகோதரர்கள் விஷயமாகப் பலமான கிளர்ச்சி செய்தும் அவர்கள் விடுதலை யடையவில்லை. கடைசியாக அதிகார வர்க்கத்துத் தெய்வங்களுக்கு மனம் இரங்கி 1919-ம் வருடத்து முடிவில் அலி சகோதரர்களையும் பாஞ்சால நாட்டில் அநியாயமாகச் சிறைபட்டவர்களையும் விடுதலை செய்யும்படி மன்னர் பெரு



மானுடைய ஸ்ரீமுகத்திற் கிணங்கி இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களை விடுதலை செய்தார்கள். பாஞ்சாலத்தில் டயர் முதலானவர்கள் செய்த படுவதையினால், ஜாலியன்வாலா திடலில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் கொல்லப்பட்டதினால் அக்காரியத்திற்குப் பரிகாரமாக அலி சகோதரர்களையும் மற்றுமுள்ள தலைவர்களையும் விடுதலைசெய்தார்கள். அமிர்தஸரஸில்நடந்த பாரத மகாசபையின் மூன்றாவதுநாள் கூட்டத்தில் அலிசகோதரர்கள் வந்தனர். இரண்டு ஆண் சிங்கங்கள் போல் அச்சபைநடுவே அவர்கள் வீற்றிருந்தனர். அமிர்தசரஸ் காங்கிரஸுக்குப்பிறகு அலிசகோதரர்கள் வடஇந்தியாவில் திக்கு விஜயஞ்செய்து ஆங்காங்கு கிலாபத் கமிட்டிகளையும் ஸ்தாபித்து அங்கோரா கஷ்டத்திற்குப் பணம் திரட்டியும் வந்தார்கள். மகாத்மா காந்தியடிகளுக்கு இவர்கள் இருபுஜங்களாக விளங்கி வந்தனர். 1920-ம் வருடத்தில் முகம்மத் அலி கிலாபத் தூதுக்குத் தலைவராக நின்று இங்கிலாந்து சென்று உபந்யாசங்களாலும் விஷயதானங்களாலும் கிலாபத்தின் நிலைமையையும் அதினால் இந்தியாவிலுள்ள முஸ்லீம் களுக்குற்ற துயரத்தின் வழியையும் அவர் எடுத்துரைத்தார். முதன் மந்திரியான லாயிட் ஜார்ஜ் அவர்களையும் முகம்மத் அலி கண்டு பேசி குறைகளைத் தெரிவித்தார்.

இங்கிலாந்திலிருந்து பிரான்ஸிலுள்ள பாரிஸ்மாநகருக்குச் சென்று ஆங்கு சிறந்த உபந்யாசங்களை இவர் செய்தார். அந்நகரைவிட்டு இதாலியா வந்து கிறிஸ்துவர்களுக்குச் சிறந்த மதகுருவான போ

அவர்களைக்கண்டு இவர்பேசினார். இங்ஙனம் இவர் ஐரோப்பா தேசத்தில் நேசதேசக் கட்சியினர்களைக் கண்டு முஸ்லீம் குறைகளை எடுத்துக்கூறி வந்தார். என்னகூறியும் என்? ஒன்றும் பிரயோசனப்படவில்லை. கடைசியாக இந்தியாவுக்குத்திரும்பி ஐரோப்பியர்களினால் பிரயோசனமில்லை யென்றும் ஆங்கிலேயர்களும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் கிலாபத் விஷயத்தில் பரிகாரஞ்சரிவர செய்யமாட்டார்களென்றுங் கூறி இந்தியர்கள் தங்களுக்குத்தாங்களேமுயற்சி செய்யவேண்டுமென்றுங் கூறினார். இவர் இந்தியாவுக்குத்திரும்பி வருவதற்குள்ளேயே கிலாபத் கமிட்டியாரும் முஸ்லீம் சங்கத்தாரும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்படுத்திச் சில திட்டங்களையும் அமைத்தனர். ஒத்துழையாமை இயக்கம் பலப்படவாரம்பித்தது. ஹிந்து தலைவர்களும் அங்கீகரித்தார்கள். கடைசியாக பாரதமகாசபையிலும் இந்ததிட்டம் கொண்டுவரப்பட்டது. காங்கிரஸும் அங்கீகரித்துத் தீர்மானித்தது. உடனே, முஸ்லீம்களும் இந்துக்களும் பலமாகவேலை புரிய முன்வந்தார்கள். பள்ளி பஹிஷ்காரத்தைப்பற்றி வெகுதீவிரமாக வேலை நடந்தது. அலிகார் நகரிலுள்ள முகம்மதீய கலாசாலையை ஜாதீய முறையில் மாற்றவேண்டு மென்று முகம்மத்அலியும் மற்றுஞ்சிலரும் அலிகார் கலாசாலை கட்டடத்தில் தங்கினர். அலிகார் கலாசாலை நிர்வாக பஞ்சாயத்தில் இவரும் சேர்ந்தவர். பல அங்கத்தினர்கள் முகம்மத்அலிக்கு விரோதமாகவும் கிளர்ச்சி செய்தார்கள் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் வகுப்



பைவிட்டு வெளிவந்தனர். நித்தம் குர்ராணைப்பற்றிய உபதேசங்களை முகம்மத்அலி அப்பிள்ளைகளுக்குக் கூறிவந்தார். பள்ளிக்கூடத்தில் வழக்கமாய் நடந்து வந்த பாடங்கள் நின்றன. பள்ளிக்குப்பிள்ளைகள் சரிவர போவது கிடையாது. கடைசியாக கலாசாலை மூடப்பட்டது. கலாசாலை நிர்வாக அங்கத்தினர்களிற் பலரும் அதிகாரிகளுக்குத் தெரிவித்து முகம்மத் அலியை கட்டிடத்தை விட்டுப் போகும்படி ஏவினர். அங்ஙனமே ஜில்லா மாஜிஸ்ரேட் முகம்மத் அலிக்கு நோட்டீஸ் கொடுத்து உடனே கலாசாலைக் கட்டிடத்தை விட்டுப் போகும்படி உத்திரவு பிறப்பித்தார். முகம்மத் அலி அங்குயிருப்பதினால் பொது ஜன சாவதானத்திற்குப் பாதகம் ஏற்படு மென்று உத்திரவு அளிக்கப்பட்டது. நிலைமை மிகவும் நெருக்கடியாக யிருந்தது. மகாத்மாகாந்தி யடிகளும் அங்கு வந்தார். கடைசியாக தனி கலாசாலை யொன்று தேசீய வழியில் ஸ்தாபிக்கப்பட்டது. முகம்மத் அலியை அலிகார் கலாசாலைக்கட்டடத்தி னின்றும் அப்புறப்படுத்தி கலாசாலை அதிகாரிகள் ஜில்லா மாஜிஸ்ரேட்டை வேண்டிகொள்ள அன்னார் அப்படியே முகம்மத் அலிக்கு கி.பி.கோ. 144-வது பிரிவுபடி உத்திரவு செய்தார். முகம்மத் அலியும் மாணவர்களும் மசூதியில் தொழுது வெளிக்கிளம்பினர். ஏற்கனவே அப்பிள்ளைகளின் வாசத்திற்குத் தனி இடம் ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஷவுகத் அலி கிலாபத் பிரசாரஞ்செய்துவிட்டு நவம்பர்மாதம் 1-ந்தேதி அலிகாருக்கு வந்ததும் அவருக்கும் ஜில்லா மாஜிஸ்ரேட்

டார் 1¼:வது பிரிவு ஒன்று கொடுத்தார். தேசிய கலாசாலை வெகு அழகாயும் ஒழுங்காயும் ஸ்தாபிக்கப்பட்டது. தவிர, முகம்மத் அலியும் ஷவுகத் அலியும் விடாமல் சட்டசபை பஹிஷ்காரம் இவைகளுக்கும் பெருத்த கிளர்ச்சி செய்து கொண்டே வந்தனர். இவர்களுக்குச் சகாயமாக டாக்டர் அன்ஸாரி அஜமல்கான், டாக்டர் கிச்சுலு முதலானோரும் உதவிபுரிந்து வந்தனர். மகாத்மா காந்தியும் அடிக்கடி நன்மொழிகளால் உபதேசித்து வந்தார்.

பிறகு, 1920-ம் வருடத்தின் முடிவில் நாகபுரியில் நடந்த மகா சபைக்குப் பிறகு அகில இந்தியாவெங்கும் அலி சகோதரர்கள் திக்கு விஜயஞ்செய்து வந்தார்கள். கல்கத்தாவில் மகாத்மா காந்தியடிகளுடன் சென்று பள்ளி பஹிஷ்காரத்துக்குப் பெரும்பாடுபட்டனர். பின்னர் பெஜ்வாடாவில் கூடிய அகில பாரத சபையின் பஞ்சாயத்து கூட்டத்திற்கு வந்து சென்னைக்கு விஜயமானார். அங்கிருந்து ஈரோட்டுக்குச் சென்றார். ஈரோட்டில் நடந்த மஜ்ஜிலிஸ் உலாமா கான்பரன்ஸில் இவர் பேசினார். இந்த இடத்திலும் சென்னையிலும் இவர்பேசினது இராஜ நிந்தனையுள்ளதென்று அரசாங்கத்தாரின் பிரதிநிதியாக விருக்கும் ஸர்வில்லியம் வின்ஸெண்டு கூறியுள்ளார். இது விஷயமாக அலி சகோதரர்களை சிறைபடுத்துவதென்னும் எண்ணம் பலமாக அதிகாரிகளுக்கு இருந்தது. ஸிம்லாவில் இராஜப் பிரதிநிதியுடன் பேசின மதனமோகன் மாளவியாவுக்குத் தெரிந்து, அலி சகோதரர்களின்மீது கொண்டுவரப் போகும் அடக்குமுறை



யைத் தடுக்க மகாத்மா காந்தியை ஸிம்லாவுக்கு மாளவியா வரவழைத்தார். மகாத்மா காந்திக்கும் இராஜப் பிரதிநிதி லார்ட் ரீடிங் அவர்களுக்கும் சம்பாஷணை நடந்தது. அலி சகோதரர்கள் விஷயம் வந்தது. கடைசியாக அலி சகோதரர்கள் பலாத்காரமான வசனங்களை மொழிந்ததற்கு அனுதாபங் காட்டுகிறார்களென்ற ஸ்வதோஷ ஸ்வீகரணமாக ஓர் அறிக்கையை விளம்பரம் செய்யும்படி செய்வதாக இராஜப் பிரதிநிதியிடம் மகாத்மா காந்தி உறுதிகூறிவந்தார். அலி சகோதரர்களைக் கண்டு நடந்த விஷயங்களைத் தெரிவித்தார். அவர்களும் மகாத்மாவுக்குக் கட்டுப்பட்டு ஸ்வதோஷ ஸ்வீகரணமாகப் பத்திரிகைகளில், தங்கள் [illegible]தர்களிற் பலர் பிரசங்கங்களில் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய வசனங்கள் இருப்பதாக அறிந்து மனத்தாங்கல் கொண்டிருப்பதினால், அன்பர்களுக்கு உறுதிமொழியாக பலாத்காரத்தைக்கனவிலும் கருதவில்லை என்றும், ஆனால் அங்ஙனம் மொழிகளில் [illegible]இலும் ஏற்பட்டிருந்தால் அதை ஸ்வதோஷத்தை ஸ்வீகரணஞ்செய்து கொண்டு இனி மொழிவதில்லை என்றும் எழுதி வெளிப்படுத்தினார்கள். இந்தவிஷயமாக நாட்டில் ஒரு சலனம் ஏற்பட்டது. என்றாலும் அலி சகோதரர்கள் விடாமற்படி வேலைசெய்து வந்தனர். அலிசகோதரர்கள் மீண்டும் சிறைப்பட்டனர். இவர்களுடைய விசாரணையும் நடந்து வருகிறது. ஜூலை மாதம், 8, 9, 10 தேதிகளில் கூடின அகில கிலாபத் மகாநாட்டில் செய்த பிரசங்கங்களுக்காக அலி சகோதரர்கள் சிறைபட்டனர்.

# அலிசகோதரர்களின் சிறை

# [illegible]

கராச்சியில் பிரசுரமாகும் "நியூ டைம்ஸ்" பத்திரிகை நீண்டதோர் தலையங்கத்தில் எழுதுவதாவது :—

அலி சகோதரர்கள் மீது லிந்தில் வழக்குத் தொடரப்படப் போவதாக சில தினங்களாக வதந்தி உலவி வருகிறது. கராச்சியில் செய்த பிரசங்கத்திற்காக மௌலானா முகம்மது அலிமீதும் நடிரோவ் பரோவில் செய்த பிரசங்கத்திற்காக மௌலானா ஷவ்கத் அலிமீதும் பிரியாது தொடரப் போவதாகச் சொல்லப்படுகிறது. இருவரும் ஆங்காங்கு நடந்த மகா நாடுகளில் தலைமை வகித்ததை நேயர்களறிவர். மற்ற இடங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து இவ்வதந்திக்கு ஆதாரமேற்படுகிறது. மகாத்மா காந்தி இந்த வாரத்திய யௌவன இந்தியாப் பத்திரிகையில் இதைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறார். சாதாரண சட்டங்கள் கொஞ்சமும் தயக்கமின்றி சிலர் மீது பிரயோகிக்கப்படுமென்று மாப்பிள்ளைமார் கலவரத்தைப் பற்றி விவாதம் நடக்கையில் வெளிபட்டதென்றும் அலி சகோதரர்களே முக்கியஸ்தர்களென்று வதந்தி உலவுகிறதென்றும், சில தினங்களில் அலி சகோதரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டு விடுமென்று நியூ இந்தியாப் பத்திரிகையின் ஸிம்லா நிருபர் அறிவித்திருக்கிறார். மாப்பிள்ளைமார் கலவரத்தையும் கராச்சி கிலாபத் மகா நாட்டுத் தீர்மானங்களையும் ஸர் வில்லியம் வின்ஸென்ட் சம்பந்தப்படுத்திப் பேசியதின் காரணம் இப்பொழுது தெரிகிறது. ஒரு தீர்மானமாவது பலாத்காரத்தில் இறங்கும்படி தூண்டுவதாக இருக்கவில்லை. கிலாபத் விஷயமாக முஸ்லீம்களுக்கு இருந்து வரும் உண்மையான உணர்ச்சியை அறைகுறையாகவே அலி சகோதரர்கள் வெளியிட்டு வருகின்றனர். இரண்டு சகோதரர்களும் மகாத்மாவிடம் உண்மை பக்தியுடன் அஹிம்ஸா தர்மத்தை அவலம்பித்து வருகிறார்கள். முஸ்லீம்கள் ஹத்து மீறிப் போய் விடாதபடி அவர்களை அஹிம்ஸா தர்மத்தில் அவர்கள் ஈடுபடச் செய்து வருகிறார்கள். ஆனால் இப்பொழுது இருந்து வரும் கவர்ன்மெண்டின் செய்கையை அழுத்தமாகக் கண்டிப்பதும் கூட ராஜாங்கத் துரோகம் தானாம். இதுவும் விந்தையே!



---

மகாத்மாகாந்தி, மௌலானா முகம்மத் அலி, அவரது மனைவியார், மௌலானா அஸத் ஸுபானி ஆகிய இவர்கள் கல்கத்தாவைவிட்டு சென்னைக்கு வரும் இடையில் வால்டேர் ஸ்டேஷனில் மௌலானா முகம்மத் அலிக்குப் பின்வரும் உத்திரவு கொடுக்கப் பட்டது.

## விசாகப்பட்டணம் ஜில்லா மாஜிஸ்திரேட்டின் உத்திரவு

சென்னை இரகசியப் போலீஸ் இலாகா டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் எப். இ. கன்னிங் காமுக்கு:—ஒரு வருஷகாலத்திற்கு சமாதானமாக வாவது அல்லது நன்னடக்கை யுடனாவது இருப்ப தாக ஜாமீன் கொடுக்கும்படி ஏன் கேட்கக்கூடா தென்பதற்குக் காரணம் காட்டும்படி கி. பு. கோ 107, 108-வது பிரிவுகளின்படி முகம்மது அலியைக் கேட்கப்போவதால், மேற்சொன்ன முகம்மது அலி யைக் கைதுசெய்து என் முன்பாக ஆஜர்ப்படுத்தும் படி இதன் மூலமாகத் தங்களுக்கு உத்தரவு செய்யப் படுகிறது. இதில் தவறக்கூடாது.

(ஒப்பம்) எச். ஆர். ஹக்கின்ஸ்,
ஜில்லா மாஜிஸ்டிரேட்,
விசாகப்பட்டணம்.

---

முகம்மத்அலி சிறைப்பட்டதும் மனைவியாருட னும் மகாத்மா காந்தியுடனும் மாஜிஸ்ரேட்டின் உத் திரவைத் தெரிவித்துப்புன்னகையுடன் சென்றார். பீகம் முகம்மது அலி தமது புருஷனைக் கண்ட தும், அவரைப் பாராட்டி விட்டு, "நான் அதைரியப் படவில்லை. ஆண்டவன் நமது லட்சியத்துக்கு நிச்ச யம் துணைபுரிவார். என்னால் கூடுமானவரையில் மகாத்மாவைப் பின்பற்றத் தயாராயிருக்கின்றேன். என் பொருட்டாவது குழந்தைகளுக்காவது தாங்கள்



கிஞ்சித்தும் கவலைப்படவேண்டாம். ஆண்டவன் இருக்கிறார். பார்த்துக்கொள்வார். நமது லட்சியம் மகா உத்கிருஷ்டமானது. அது வெற்றியடைந்தே தீரும் என்று சொன்னார்.

உடனே அவரை மோட்டார் வண்டியிலேற்றிக் கொண்டு சிறைக்கூடத்திற்குப் பலமான போலீஸ் பந்தோபஸ்துடன் அழைத்துச்சென்றனர். மறுநாள், வால்டேரைவிட்டு பம்பாய் கவர்ன்மெண்டார் பிறப் பித்த உத்திரவின்பேரில் முகம்மத் அலி தனி ரெயில் வண்டியில் ஏற்றிக்கொண்டு போகப்பட்டார். ஷவு கத் அலியும் சிறையிட்டார்.

---

## அலி சகோதரர்கள்மீது பம்பாய் கவர்ன் மெண்டின் நடவடிக்கை.

பம்பாய் கவர்ன்மெண்டறிக்கை யொன்று கூறு வதாவது:—இந்தியா கவர்ன்மெண்டின் ஸர்வ சம்மத த்தின் பேரில் சீமையோடு கூடிய பம்பாய் கவர்னர், ராம்பூர் வாசிகளாகிய மௌலானா முகம்மது அலி யையும் மௌலானா ஷவுகத் அலியையும் இ. பி. கோ 130 (பி) 131, 305 வது செக்ஷன்களின்படி செய்த குற்றத்திற்காக அன்னார்மீது கேஸ் நடத்தத் தீர்மானித்திருக்கிறார். அவர்களுடைய குற்றம் எத னால் ஏற்பட்டதென்றால், ஜுலை 8-ந்தேதி முதல் 10-ந்தேதி வரையில் கராச்சியில் நடந்த அகில இந் திய கிலாபத் மகாநாட்டில் பிரிட்டிஷ் சைன்யத்தில்

யாதொரு முஸல்மானும் இருக்கவாவது, சேரவாவது மற்றவர்களைச் சேரும்படி தூண்டவாவது, கூடாதென்றும், ஏற்கெனவே சைன்யத்திலுள்ள முஸல்மான்களுக்கு இது விஷயத்தை வற்புறுத்தவேண்டுமென்றும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அலி சகோதரர்களும் மற்றவரும் ஆதரவளித்தார்கள். எல்லா ராஜ விசுவாசியான பிரஜைகளும் ஒன்று சேர்ந்து இந்தியாவின் சமாதானத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய காரணமாயிருக்கும் சைனியத்தின் ராஜ விசுவாசத்தைக் கெடுக்க நடக்கும் பிரயத்தனங்களைக் கண்டித்து அடக்க முயற்சிப்பார்களென்று கவர்ன்மெண்டார் நம்புகின்றார்கள். சைன்யங்களின் கௌரவத்தையும் கடமைகளையும் கெடுத்துவிடக் கூடிய பிரயத்தனங்களைக் கண்டிக்கவேண்டியது அவசியம். மேலும் மேற்சொன்ன அலி சகோதரர்கள் அதே மகா நாட்டில் ராஜ அவிசுவாஸத்தையும் சட்டப்படி ஏற்பட்டுள்ள கவர்ன்மெண்டினிடம் வெறுப்பையும் பகைமையையும் உண்டுபண்ணி பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய பிரசங்கங்களைச் செய்ததற்காக இ. பி.கோ. 124, எ. 153 ஏ ஆகிய செக்ஷன்களின்படியும் மேற்படியார்மீது கேஸ் நடத்த சபையோடு கூடிய பம்பாய் கவர்னர் அனுமதி கொடுத்திருக்கிறார்.

இங்ஙனம் அலி சகோதரர்கள் பம்பாய் கவர்ன்மெண்டாரால் சிறைபட்டவுடன் சென்னை உத்திரவு ரத்து செய்யப்பட்டது. ஷவுகத் அலியை பம்பாயிலிருந்து கப்பல் மூலமாக கராச்சிக்கு அழைத்துச்சென்றார்கள். அவர்களுடைய விசாரணையும் வாக்குமூலங்களும் இப்புத்தகத்தின் 148-ம் பக்கத்தில் காண்க.



## மௌலானா முகமது அலியின் ஸ்ரீ முகம்

மௌலானா முகமது அலி கைது செய்யப்பட்டபோது இந்து முஸ்லீம் சகோதரர்களுக்கு அறிவிக்கும்படி கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டார்.

“என்னிடம் அன்பும் மதிப்பும் கொண்டவர்கள் நான் கைது செய்யப்பட்டதைக் கேட்டு மிக்க சாவதானமாவும் அமைதியாகவுமிருக்க வேண்டும். என்னிடம் அவர்கள் கொண்டுள்ள அன்பை இரண்டு வழிகளால் காட்டலாம். ஒன்று ஸ்மர்னா கஷ்ட நிவாரண நிதிக்கும் அங்கோரா யுத்த தளவாட நிதிக்கும் கூடியவரை பொருளுதவி செய்தல். மற்றொன்று அந்நிய நாட்டு ஆடைகளைப் பஹிஷ்கரித்துவிட்டு சுத்த சுதேசி உடையைத் தரித்தல். நான் கைது செய்யப்பட்டதால் எனது நண்பர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் அதிக தைரியம் உண்டாகி அடக்கு முறைக்கு அஞ்சாமல் பலாத்கார மற்ற ஒத்துழையாமையை முன்னிலும் அதிக முயற்சியுடன் நடத்தி வருவார்களென நம்பியிருக்கிறேன். உண்மையை அடிப்படையாகக் கொண்ட இவ்வியக்கத்திற்குக் கடவுளின் ஆசீர்வாதம் கிடைக்குமெனவே நம்புகின்றேன். நமக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம். வெற்றியும் நம்மை நெருங்கி வருகின்றது.

அலி சகோதரர்கள் இ. பி. கோ 117, 505. பிரிவுகளின்படி, குற்றஞ் செய்தார்களென தீர்மானிக்கப்பட்டு இரண்டு வருட கடுங்காவல் தண்டனை அவர்களுக்கு விதிக்கப்பட்டது.

---

## இந்தியன் பினல்கோட் சட்டம்.

117-வது பிரிவு:—பொது ஜனங்களோ அல்லது பத்து பெயர்களுக்கு மேற்பட்ட எத்தனை பெயர்களோ அல்லது ஒரு வகுப்பாரோ ஒரு குற்றம் செய்வதற்கு உடந்தையாக விருக்கிற எவரும் 3-வருஷம் வரையில் இருவகைக் காவலில் ஏதேனுமொன்று அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படலாம்.

505-வது பிரிவு:—ராஜ சக்கிரவர்த்தியின் சேனை அல்லது கடற்படை அல்லது இந்திய ராஜாங்க கப்பற் படை அல்லது ஏகாதிபத்திய ஊழியச்சேனை ஆகியவற்றில் வேலையிலிருக்கும் ஸோல்ஜர் அல்லது கப்பல் வேலைக்காரன் கலகஞ் செய்யும்படியோ அல்லது தனது கடமையில் வேறுவிதமாகத் தவறும்படியோ செயய வேண்டிய உத்தேசத்துடன் அல்லது செய்யக் கூடிய

(பி) அல்லது ஜன அமைதிக்கோ அல்லது ராஜாங்கத்திற்கோ கேடு செய்யும்படி ஒருவனை தூண்டிவிடக் கூடிய பயத்தைப் பொது ஜனங்களுக்கு உண்டு



பண்ணக் கூடிய அல்லது உண்டு பண்ண வேண்டிய உத்தேசத்துடன் அல்லது.

(ஸி) வேறு ஒரு வகுப்பு அல்லது சமூகத்திற்கு தீங்கு செய்யும்படி தூண்ட வேண்டிய உத்தேசத்துடன் அல்லது தூண்டக்கூடிய ஏதேனும் ஒரு வாக்கு மூலம் அல்லது பிரஸ்தாபம் சமாசாரத்தை சொல்லுகிற அல்லது பகிரங்கப்படுத்துகிற எவரும் இரண்டு வருஷம் காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படலாமென்று தண்டனை விதிக்கப்பட்டதும் முகம்மத் அலி நீதிபதியைப் பார்த்து பின்வருமாறு கூறினர்.

இரண்டு வருடத்திற்குள்ளாகவே ஸ்வராஜ்யம் வந்து விடுமாகையால் நீங்கள் குறிப்பிட்ட தண்டனை காலத்திற்கு முன்னதாகவே நாங்கள் விடுதலை யடைவோம்.

பின்னர், மந்தஹாசத்துடன் அலி சகோதரர்கள் சிறை புகுந்தனர். சிறை புகுந்ததும் இவர்களுக்குச் சாதாரண கைதிகளுக்குக் கொடுக்கப்படும் அரைச் சொக்காய், அரைக் கால் சராய் கொடுக்கப்பட்டன. அரைச் சொக்காய் என்பது முழங்கைக்கு மேல் சாதாரணமாக பனியன் போலிருக்கும். அரைக் கால் சராய், முழங்காலளவு தான் இருக்கும். இவர்களுக்கு சிறையில் கொடுக்கும் கரடுமுரடான படுக்கை தான் கொடுக்கப்பட்டது. உணவும் அப்படியே. இராஜீய கைதிகளுக்கு என்று தனிச் சட்டம் இருந்

தும் அது சரிவர அனுஷ்டிக்கப் படுவதில்லை. இந்த சட்டையுடன் அலி சகோதரர்களைத் தாயும் மனைவிமார்களும் கண்டார்கள். நான்கு மாதத்திற் கொருமுறை தான் கடிதம் எழுதவும் கடிதம் பெறவும் அனுமதியுண்டு; அப்படியே நான்கு மாதத்திற் கொருமுறை தான் உறவினர் அலி சகோதரர்களைக் கண்டு பேசவும் அனுமதியுண்டு. இந்த கோலத்துடன் முஸ்லீம் தலைவர்கள் சுதந்தரத்திற்காகப் போராடி தண்டிக்கப்பட்டு சிறையிலிருக்கின்றனர். இவர்கள்மீது இராஜ நிந்தனைக்குற்றத்திற்காக 124 ஏ. 153 ஏ. இ. பி. கோ. பிரிவுபடி நடத்தப்படவிருந்த நடவடிக்கையை கவர்ன்மெண்டார் நடவடிக்கை நடத்த இஷ்டப்படாமல் வாப்ஸ் வாங்கிக்கொண்டனர். இவ்விருவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் திட சரீரத்தையும், நோயற்ற வாழ்க்கையையும் தீவிர தேசாபிமானத்தையும் மேன்மேலும் அளிப்பாராக !

# மௌலானா முகம்மத் அலியின் உபந்நியாசங்கள்

## அல்லாவுக்குப் பயப்படவேண்டும்

[1919-ம் வருஷத்தில் அமிர்தசரஸில் நடந்த மகா சபையில் ஸர் மைகல் ஓட்வியர் சேனைக்கமிட்டியிலிருந்து நீங்கிவிடவேண்டும் என்ற தீர்மானத்தை மௌலானா முகம்மத் அலீ ஆதரித்துப் பின்வருமாறு பேசினார் :—]

பாரஸீக தேசத்தில், ஹாரோன் அல்ராஷித் என்பவர் ஆட்சிபுரிந்த காலத்தில் அபூநவாஸ் என்றவரைத் தமது புத்திரனுக்குப் பாடம் சொல்லி வைக்கும்படி சம்பளத்துக்கு நியமித்திருந்தார். ஒரு நாள் அவ்வுபாத்தியாயர் சிடனைப் பார்த்து. அவனெழுதிக்காட்டிய கவிகள் நன்றாயில்லையென்று சொன்னார். அமீன் என்றழைக்கப்பட்ட அந்த இராஜகுமாரன் தனது குருவை அக்கணமே சிறைக்கு அனுப்பிவிட்டான். இது விஷயம் இராஜாவுக்குத் தெரிந்ததும் தமது புத்திரனைக் கண்டித்து உபாத்தியாயரை விடுதலை செய்துவிட்டார். அபூநவாஸ் சுயேச்சை பெற்றதும், உபாத்தியாயர் வேலையை மீண்டும் ஒப்புக்கொண்டு அமீனுக்குப் பாடம் சொல்லி வைத்தார். அவ்வேலை முடிந்தபின், அமீன் முந்திய தினத்தைப்போல் மற்றோர் கவி எழுதி உபாத்தியாயரின் அபிப்பிராயங் கேட்டான். அது

வும் நன்றாயில்லையென்று வெளிப்படையாகச் சொல்
லாமல், அபூநவாஸ் தமது காலில் ஜோட்டை மாட்டிக்
கொண்டு வெளியே போகப் புறப்பட்டார். ஏன்
என்று இளங்கோ உபாத்தியாயரைக் கேட்க, அவர்,
'முன்னைப்போல் இதுவும் நன்றாக யில்லையென்று
நான் சொன்னால் உனக்குக் கோபம்வந்து என்னை
மீண்டும் சிறைக்கு அனுப்பிவிடுவாய் என்று எனக்குத்
தெரியும். நீ அனுப்புவதற்கு முன்னமேயே சிறைக்
குப்போகும் பொருட்டு நான் புறப்பட்டேன்' என்று
பதில் சொன்னார். அதுபோல், நான் இப்பொழுது
தான் சிறையினின்றும் மீட்சி பெற்றுவந்தேன்.
ஆனால் கவர்ன்மெண்டின் காரியங்களைக் கண்டிக்கத்
தான் செய்வேன். அவசியமானால் மீண்டும் சிறைக்
குப்போகத் தயாராயிருக்கிறேன். ஜாலியன் வாலா
பாக்கில் ஜனரல் டயர் சுட்டதானது இந்தியாவின்
நற்காலத்திற்கென்றே நான் சொல்லுவேன். முப்பத்
தொன்றரைக்கோடி இந்தியரின் மனத்தையும் ஜென
ரல் டயர் சுட்டுவிட்டார். நமது ஆத்மா பரிசுத்த
மடையவும், நமது நாடு நல்ல கதியடையவும் அவ
ருடைய துப்பாக்கிப் பிரயோகம் அனுகூலமாகவே
வந்து சேர்ந்தது. இன்று நான்காணும் காட்சியை
என்றைக்கும் நான் கண்டதில்லை. இவ்வளவு மகா
ஜனங்கள் இங்கு குழுமியிருப்பதைக் காணக்காண
என்மனம் பூரிக்கின்றது. ஜெனரல் டயர் என்ற
அந்த வீரரல்லவோ இத்தனை பேர்களையும் இங்கு
கூடச்செய்தார். 'சுட்டேன் சுட்டேன் ரவைகள்
ஆகும் வரையிலுஞ் சுட்டேன்' என்று டயர்
பெருமை பேசுகிறார். புண்ணில் கோலை விடுவது
போல் அவர் நமது இருதயத்தில் அம்பு எய்து



விட்டார். அதன் பலனாக ஒரு புதிய உணர்ச்சி
தோன்றி இந்துக்களும் முகம்மதியர்களும் ஒற்றுமை
பட்டுவிட்டனர்? ஒருபுதிய ஜாதிக்கு, ஒரு பலமான
ஜாதிக்கு, ஜெனரல் டயர் அஸ்திவாரம் போட்டு
விட்டனர். ஹிந்து முகம்மதியர் என்ற அந்த ஜாதி
யார், இனி ஆண்டவனாகிய அல்லாகுத்த ஆலாவுக்கு
மட்டும் பயப்படுவார்களேயன்றி மனித வர்க்கத்தைச்
சேர்ந்த எந்த ஆண்மகனுக்கும் பயப்படப்போவ
தில்லை. அவ்வாறு பயப்படாமலிருக்க ஆண்டவன்
அனுக்கிரஹிப்பாராக! நான் ஆத்திரப்பட்டுப் பேசுவ
தாக நீங்கள் நினைக்கக்கூடாது. நாம் ஆத்திரப்படுங்
காலம் போய்விட்டது, இனி ஆத்திரப்படுவதிலும்
பயனில்லை. தேசத்திற்காக உழைப்போர் ஆத்திரப்
படலாகாது. சாந்தமனதும் தீவிரமான காரியமும்
நமக்கு இன்றியமையாதது. இம்மகா சபையில்
வழக்கம்போல் தீர்மானங்கள் செய்வதோடு நாம்
நின்றுவிடக்கூடாது. தீர்மானங்களை நிறைவேற்று
வதன் அர்த்தம் என்ன? அதன்படி காரியத்திலும்
நடப்போம் என்பதுதான் அதன்கருத்து. வெறுங்
காகிதத்தோடு நின்றுவிடுவதினால் பயன்விளையாது.
கவர்ன்மெண்டாரைப்போல நாம் நோட்டுச் செலா
வணி செய்துகொண்டிருக்கக் கூடாது. ஒரு தீர்
மானத்தை நிறைவேற்றினால் அதன்படி நடக்க
நமக்குச் சக்தியிருக்கவேண்டும். அதன்படி நடக்க
வும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். பந்தலைவிட்டுப்
போனபின் அதை மறந்துவிடக்கூடாது. ஜெனரல்
டயரையும் ஓட்வியரையும் நாம் இப்பொழுது கண்
டிப்பதன் கருத்தென்ன? கொடுமைகாட்டி நம்மை
ஹிம்ஸிப்பதை நாம் சகித்திருக்க மாட்டோம் என்று

விளக்கிச் சொல்லவே நாம் இத்தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். கொடுமை காட்டுபவர்களை இனி நாம் சும்மா விடமாட்டோம். நான் ஒரு பெரிய வீரனல்ல. நான் கேவலம் ஒரு சாதாரணமான மனிதன். உங்களைவிட அதிகமாய் என்னிடத்தில் பிழைகளிருக்கின்றன. பந்தோபஸ்தில் வைக்கப் பட்டு நான் சிறிதுகாலம் கஷ்டப்பட்டேன். சிறைவாசத்தின் கொடுமையையும் அநுபவித்திருக்கிறேன். ஆனால், நான் மாவு அரைக்கவில்லை. நானும் எனது சகோதரரும் பல ஹிந்து முஸல்மான்களும் விடுதலையடைந்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். எந்தக் கிளர்ச்சியாலும் செல்வாக்கினாலும் நீங்கள் சிறையிலிருந்தவர்களை விடுவித்தீர்களோ, எந்த கடப்பாறை கொண்டு சிறைக்கதவுகளை நீங்கள் உடைத்துத் தள்ளினீர்களோ, அதே ஆயுதங்களைக் கைப்பற்றி உங்கள் தேசத்தின் விடுதலையையும் தேடிக்கொள்ளுங்கள். அந்த ஆயுதங்களை எறிந்துவிட்டு உங்களுக்கு நீங்களே விலங்கு போட்டுக்கொள்ளாதீர்கள். சில தனிப்பட்டவர்களின் சுதந்தரத்தைவிட தேசத்தின் சுதந்தரமே முக்கியமானது. ஸ்ரீமான் கோகலே தமது வாழ்நாள் பூராவும் ஒரு காரியத்துக்காக வருத்தப்பட்டுக்கொண்டே யிருந்தார். எட்டு ஜனத் தலைவர்களை அவர் விடுவிக்கவேண்டி, அச்சுச் சட்டத்தால் நமக்கு விலங்கு போட்டுவிட்டார். 8 தேசாபிமானிகளின் விடுதலை பெரிதா; அச்சுச்சட்டத்தின் கொடுமை பெரிதா என்பதை அவர் கவனித்திருந்தால் அந்த அச்சுச்சட்டத்திற்கு அவர் சம்பந்தப்பட்டே யிருக்கமாட்டார். அந்த அச்சுச்சட்டத்தின்



கொடுமை எனக்குப் பிரத்யட்சத்தில் தெரியும். சிறைவாசத்தின் கொடுமையையும் நான் நேரில் நன்கறிவேன். ஆனால், அச்சுச்சட்டத்தைப் பார்க்கிலும் சிறைவாசமே உத்தமம் என்று எனக்கு இப்பொழுது புலப்படுகிறது. நாம் எல்லோரும் சிறைக்குப்போவோம். சிறைவாசஞ் செய்ய எங்களுக்கு அனுமதி கொடுங்கள். டாக்டர் கிச்சுலு சிறைக்குப் போகட்டும். பண்டித ராம்பஜ்தத் சௌத்திரியும் சிறைக்குப் போகட்டும். நமது தேசத்தைப் பாதுகாக்க நாம் பின் வாங்கக்கூடாது. இத் தேசத்தில் வாழும் கோடிக்கணக்கான ஜனங்களுஞ் சரி, நமது அசட்டுத்தனத்தின் பலனைக் கஷ்ட மனுபவிக்கக் கூடாது. நாம் சிறைக்குப் போவோம். நமது தேசம் க்ஷேமமா யிருக்கட்டும். நமது நாடு சங்கிலியால் கட்டுண்டு ஒரு டயரும் ஓட்வியரும் நமது சுயேச்சையைக் கெடுக்கும்படி நாம் இனி விட்டுவிடக்கூடாது. மரியாதைத்தவறாய் நான் பேசுவதாக நீங்கள் நினைக்க வேண்டாம். ஜனநாயக தத்துவத்தில் எனக்கும் நம்பிக்கை யுண்டு. ஆண்டவனே என்னுடைய முதல் நாயகன். இரண்டாவதாகத் தான் அரசர். ஜார்ஜ் சக்கரவர்த்திக்குள்ள சுயேச்சை எனக்கும் உண்டு. ஆண்டவன் முன்னே எல்லோரும் ஒன்று. அரசருடைய சேவகர்கள், இந்திய ஸ்திரீகளையும் குழந்தைகளையும் இந்நாட்டுமக்களையும் விளையாட்டுப் பொருள்களாய் நினைத்து இஷ்டப்படி பந்தாடவேண்டாம். போலீஸார் நமது ஸ்திரீகளை இஷ்டம்போல் இழுத்துச் செல்வதை நாம் சகித்திருக்கவேண்டாம். தூக்குமரங்களை நாம் நாடியே செல்வோம். சிறைக்கூடங்களுக்கு நாம் முகமலர்ச்சியுடன் செல்வோம். நமது

சுதந்தரத்தைமட்டும் நாம் விட்டுக் கொடுக்கவேண்டாம். தனிப்பட்ட சிலரின் சுயேச்சையை விட தேசத்தின் சுயேச்சையே முக்கியமானது. திலகரை இன்னொரு தடவை ஜெயிலுக்கனுப்பட்டும். மறுமுறை என்னையும் பந்தோபஸ்திில் வைக்கட்டும். எப்படியாவது இந்தியாவின் பந்தம் ஒழிந்து சுயேச்சை வரட்டும். அது ஒன்றே நாம் கோருவது. நமக்கு ஆண்டவன் துணை நிற்பாராக!

---

## கிலாபத்

### I

[1920-ம் வருடம் ஜனவரி மாதம் 12-ந் தேதி லாகூரில் பிராட்லா ஹாலில் லாலா துனிசந்தரின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு மகாநாடு கூடிற்று. அவ்வமயம் அலி சகோதரர்கள் பின்வருமாறு பேசினார்கள்].

### ஷௌகத் அலி

நண்பர்களே! இன்று எனக்கு உரக்கப் பேசச் சக்தியில்லை. அதன்பொருட்டு என்னை மன்னிக்க வேண்டும். நானும் என் தம்பி முகம்மதும் 14-தினங்களாகப் பிரயாணஞ் செய்த வண்ணமாகவே யிருக்கின்றோம். உபந்நியாசஞ் செய்வதுதான் மிக்க அவசியமென்று எண்ணக்கூடாது. இக் கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருப்பவர்களில் யாராவது உபந்யாசத்தைக் கேட்கவேண்டுமென்ற ஒரு எண்ணத்துடன் மாத்திரம் வந்திருந்தால் அவர்கள் வீட்டிலேயே இருந்திருந்தால் நலமாயிருக்கும். பல வருடங்களாகத் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு இப்போது



தான் நாங்கள் விடுதலை யடைந்திருப்பதால் கொஞ்ச காலம் வீட்டிலேயே சுகமாய் உட்கார்ந்திருப்பது நலமெனச் சிலர் எங்களுக்குச் சொன்னார்கள். சத்தியமே வெற்றிபெறும் பொருட்டு நாங்கள் கஷ்டப்பட்டு இப்பொழுது ஒருவேலையுஞ் செய்யாமல் வீட்டில் உட்கார்ந்து விட்டால் நாங்கள் பட்ட கஷ்டமெல்லாம் பயனற்றதாய் விடுமென அவர்களுக்குப் பதிலளித்தோம். 5-வருடங்களுக்குப் பிறகு பஞ்சாபுக்கு வந்ததில், இங்கு எங்கும் இந்து முகம்மதிய ஒற்றுமை நிலவி யிருப்பதைக் கண்டு களித்தோம். கிலாபத் விஷயத்தில் ஹிந்துக்கள் முஸ்லீம்களோடு ஒத்துழைப்பதால் முஸ்லீம்களாகிய நாங்கள் யாவரும் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். முஸ்லீம்களின் கோரிக்கை நியாயமானதே என்று ஹிந்துக்கள் கண்டுகொண்டபடியால் அவர்களுக்கு இருக்கும் குறைகளைத் தங்கள் குறைகளாகக் கருதி நம்மோடு ஒத்துழைக்க முன்வந்தனர். அமிர்தசரஸில் அவர்கள் எங்களுக்குச் செய்த உபசாரத்தை நாங்கள் என்றும் மறவோம். பஞ்சாபிலுள்ள ஸ்திரீகளும் எங்கள் க்ஷேமத்தில் கருத்துக் கொண்டிருந்தனர். நிற்க, ஜே-ஜே, என்று கத்திவிட்டு அதோடு நின்றுவிடுவதில் பிரயோசனமில்லையென்பதை இப்பொழுது உங்களுக்கு வற்புறுத்திச் சொல்கின்றேன். இப்பொழுது தான் நம்முடைய வேலை ஆரம்பமாகின்றது. ஒரு விஷயத்தில் அதிகமாக உற்சாகம் காட்டி, வெட்கும், வெட்கம் என்று கூவிவிட்டால் மாத்திரம் நம்முடைய காரியம் பலிதமாகாது. நிலைமையைச் சரியானபடி உணர்ந்துகொண்டால் தான் நம் நாட்டையும் நம் மதத்தையும்

நேசித்தவர்களாவோம். பணம் வைத்திருக்கும் யாவரும் நம் வேலை இனிது முடிய பணம் கொடுத்து உதவி செய்யவேண்டும். நமது கோரிக்கைகளைத் தெரிவிக்க இங்கிலாந்துக்குச் சிலரைத் தூதாக அனுப்பவேண்டும். தாய்நாட்டுத் திருத்தொண்டு செய்ய விரும்புவோரும் மதப்பற்றுள்ளவர்களும் துருக்கியைத் துண்டுபடுத்துவதைத் தடுக்க விரும்பினால் இப்பொழுது முன் வந்து உதவி செய்யவேண்டும்.

---

## மௌலானா முகமத் அலி

சகோதரர்களே! நீங்கள் யாவரும் எங்களைப் பாராட்ட வேண்டுமென்றும், ஊர்வலஞ் செய்து எங்களைச் சிறப்பிக்க வேண்டுமென்றும் எண்ணி நாங்கள் இங்கு வரவில்லை. பஞ்சநதிகள் பாய்வதால் இம்மாகாணம் பஞ்சாப் எனப் பெயரிடப்பட்டது. இந்த நதிகளில் அதிகமாக வெள்ளம் வந்துவிட்டால் எல்லாவற்றிற்கும் கேடு உண்டாகும். இந்த நதிகளிலுள்ள ஜலத்தைச் சரியானபடி உபயோகப்படுத்தினால் தான் நம் யாவருடைய வயல்களிலும் நீர் நிறைந்திருக்கும். ஆகவே, நமக்கும் பாஞ்சால நாட்டிற்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கின்றது. திருக்குர்ரானில் சொல்லியபடி நம் ஜாதி முன்னேற்றமடையாவிடில் அதற்கு நாம் தான் பொறுப்பாளிகள். ஒட்டகமோட்டிகள் ஒட்டகத்தைப் பாலைவனத்தில் செலுத்துவதைப் போல் தலைவர்களும் ஜனங்களைச் சரியானவழியில் நடத்தவேண்டும். தலைவர்கள் சரியானபடி நடந்து கொள்ளாவிடில் ஜனங்களே தலைவர்களாக ஆகிவிடுவதிற் சந்தேகமில்லை. யுத்தகளத்தில் ஒரு படையினின்று படைத்தலைவன் ஓடிவிட்டால் அந்தப்படையி



லுள்ள வீரர்களே அப்படையைச் செலுத்துகின்றனர். தலைவர் உயிரோடிருந்தும் நடைபிணங்களாகயிருந்தால் ஜனங்களே தலைவர்களாய் விடுகின்றனர் என்று அராபிபாஷையில் ஒருசிறந்தவாக்கியம் உண்டு. ஜனங்கள் தங்கள் கடமையைச் செய்யாமலிருந்துவிட்டால் கடைசியில் கடவுள் முன் 'எங்கள் தலைவர்கள் எங்களைச் சரியானபடி நடத்தவில்லையாகையால் நாங்கள் செய்யவேண்டிய கடமையைச்செய்யவில்லை' யெனச் சொல்லுவார்கள். ஒரு சகோதரர் தமது கடமையைச் செய்யாவிடில் மற்றொருவராவது அதைச் செய்யவேண்டும். செய்வதோடு நிற்காமல் பிறருக்கும் உதவிசெய்யவேண்டும். இப்பொழுது நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது கிலாபத் விஷயமே. கிலாபத் விஷயம் மிகச் சிறந்த தொண்டாதலால் அதை ஒருவரும் மறுக்கவில்லை. நாம் இதுவரை சுறுசுறுப்புடன் வேலை செய்யாததே காரியத்தைக் கெடுத்துவிட்டது. நம் ஜனங்கள் யாவருக்கும் உற்சாகம் அதிகமாகவே யிருக்கின்றது. இதுவரை அவர்கள் பல பிரசங்கங்களையும் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இன்னும் அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை. நாங்கள் இப்பொழுதுதான் விடுதலையடைந்தபடியால் கொஞ்சகாலம் ஒன்றுஞ் செய்யாமல் களைப்பாறவேண்டுமெனச் சிலர் எங்களுக்குச் சொன்னார்கள். ஆனால், அதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. நான் பிறரைப்போலவே என் தாயாரையும் மனைவியையும் புத்திரர்களையும் அதிகமாக நேசித்தாலும் தாய்நாட்டையும் மதத்தையும் நேசித்து அதன் விஷயங்களில் ஈடுபடாமலிருக்க என்னால் முடியாது. முகம்மத நபி பிறந்த விடத்தில்

சமாதானமில்லை. புண்ணிய க்ஷேத்திரங்களுக்குக் கஷ்டம் விளைந்திருக்கின்றது என்று மனச் சாட்சி சொல்லும்பொழுது நான் எங்ஙனம் சும்மா உட்கார்ந்திருக்கமுடியும்? நீங்கள் செய்த உபசாரங்களை யெல்லாம் பெற்றுக்கொண்டு எங்கள் மனச் சாட்சிக்கு விரோதமாக நாங்கள் வீட்டில் கைக்கட்டி வாய் பொத்தி உட்கார்ந்திருந்துவிட்டால் அது சரியாகுமா? நான் விடுதலையடைந்தவுடன் என் வீட்டிற்குச் சென்றேன். அங்கே, என் மனைவி சந்தோஷமில்லாதிருப்பதைக் கண்டேன். காரணமென்னவெனக்கேட்க, அவள், 'நீங்கள் மறுபடியும் இங்கிலாந்துக்குப் போகப் பிரயத்தனப் படுவதாகக் கேள்வியுற்றேன்' என்று பதிலளித்தாள். 'எனக்கென்னமோ இங்கேயே யிருக்கப் பிரியந்தான், ஆனால் நாட்டின் நன்மையை நாடி நான் இங்கிலாந்துக்குச் செல்லவேண்டிய அவசியமிருக்கின்றது. அத்தகைய அவசியம் இருக்கும்பொழுது நான் உன்பக்கத்திலிருந்துவிட்டால் அது உனக்குச் சம்மதந்தானா?' என்று நான் கேட்டேன். உடனே அவளும் சந்தோஷத்துடன் "தாங்கள் அவசியம் போகவேண்டியதே" என்று கூறினாள். எனக்கு என்ன அவமரியாதை யுண்டானாலும் பாதகமில்லை. ஆனால், துருக்கியின் ஒரு சிறு பாகமும் முஸ்லீம் அல்லாத ஒருவர் வசமிருப்பதைப் பார்க்கச் சகியேன். துருக்கியைத் துண்டுபடுத்தாமலிருக்க வழிதேடுவதற்கு எனக்குச் சொந்தமானதும் அருமையானதுமான எல்லாவற்றையும் தியாகஞ்செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். திருமக்காவை இப்படி நேசிக்கும் போது ஹிந்து முகம்மதிய ஒற்றுமையும் அதே சம



யத்தில் நான் எங்ஙனம் விரும்பக்கூடுமெனச் சிலர் கேட்கலாம். நான் மெக்காவை விரும்பாவிடில் நான் இந்தியனாகயிருப்பதற்கும் தகுதியற்றவன். முஸ்லீம் எனச் சொல்லிக்கொள்வதற்கும் அருகனல்லன். நான் கடவுளுக்குக் கீழ்ப்படியாவிடில் மகாத்மா காந்திக்காவது லாலா தூனிசந்தருக்காவது எங்ஙனம் கீழ்ப்படிய முடியும்? கவர்ன்மெண்டில் ஒரு பெரிய உத்தியோகம் காலியாகி, அவ்வுத்தியோகத்தைப் பெற ஹிந்து ஒருவன் யோக்கியதையுள்ளவனாகயிருக்க முஸ்லீம்கள் அதைப்பெற முயற்சிப்பது வெட்கத்தையுண்டுபண்ணக் கூடிய காரியமே. எது சரியான வழியோ அதையே நாம் பின்பற்றி நடக்கவேண்டும். ஸர்மைகல் ஓட்வியரும் ஜெனரல் டையரும் கூட சரியான வழியில் நடந்துகொண்டால் நாம் அவர்களைப் பின்பற்றுவது அவசியம். 1300 வருடமாய் அனுஷ்டிக்கப்பட்டுவந்த நமது மத சம்பந்தமான சட்டங்கள் எப்பொழுதும் மாற்றப்படமாட்டா. மத சம்பந்தமான விஷயங்களில் சுதந்தரம் வேண்டுமென்றும் இஸ்லாமைச் சேர்ந்த புண்ணிய க்ஷேத்திரங்களை முஸ்லீம் அல்லாதார் வசம் விடக்கூடாதென்றும் நன்றாக எடுத்துச் சொல்வதற்காகவே இப்பொழுது சில பிரதிநிதிகள் இங்கிலாந்துக்கு அனுப்பப்படப்போகின்றனர். ஈது விஷயத்தில் மாத்திரம் முஸ்லீம்கள் கொஞ்சமேனும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். கிலாபத் விஷயம் ஒரு திருப்திகரமான முடிவுக்கு வரும் வரையில் முஸ்லீம்கள் திருப்தியடைய மாட்டார்கள்.

## முகமது அலியின் கடிதங்கள்

1920-ம் வருடம், கிலாபத் தூதர்களில் ஒருவராய் ஐரோப்பாவுக்குப் போயிருக்கும் மௌலானா முகமது அலி கீழ்க்கண்டவாறு தமது சகோதரரான மௌலானா ஷவுகத்அலிக்கு எழுதியிருக்கிறார்:—

I

பாரிஸ், மே 27—

எனதருமை சகோதரருக்கு,

முன்னைவிட நிலைமை இப்போது சாதகமாயிருக்கிறது. துருக்கியைப் பலவந்தப்படுத்தி, உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளும்படி செய்ய பிரெஞ்சுக்காரருக்கு இஷ்டமில்லையென்று தெரிகிறது. இங்கிலாந்திலும் தொழிற் கட்சியாருக்கு அதே மனப்பான்மை தான் இருந்து வருகிறது. இஸ்லாத்துக்கு விரோதமாய்ப் போராட இத்தாலிக்கும் இஷ்டமில்லையென்று சொல்லப் படுகிறது.

மிஸ்டர் லவட் பிரேஸர் என்றவர் டெயிலி மெயில் பத்திரிகைக்கு எழுதியிருக்கும் வியாசத்தில், மெஸபொடேமியாவையும் பாலஸ்தீனையும் பலாத்காரமாய் நடத்தப் பார்த்தால் இந்தியா இங்கிலாந்துக்கு நிலைத்திராதென்று கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறார். நமது வாதமும் இதுதான். ஹிஜாத் அல்லது ஜிஹாத்தை அனுஷ்டிக்கும்படி கவர்ன்மெண்டார் நம்மை விட்டுவிடமாட்டார்களென்று நம்புகிறேன். இங்குள்ள பல பிரமுகர்களை அடிக்கடி கண்டுப்பேசியும் வருகிறேன்.

மாஜி பிரெஞ்சு மந்திரியான மூஷேர் ஸெல்லிஸ் துருக்கி உடன்படிக்கையைக் கொஞ்சமும் ஒப்புக்



கொள்ளவில்லை. பிரஞ்சு ஸெனெட் சபையின் முன்பாக கிலாபத் தூதரின் கட்சியை நான் எடுத்துப் பேசக்கூட அவர் ஏற்பாடு செய்து தருவார்போல் காணப்படுகிறது. பல பிரெஞ்சு கலாசாலை ஆசிரியர்களுக்கும் கிலாபத்து விஷயத்தில் சிரத்தையிருந்து வருவது சந்தோஷிக்கத் தக்கது. 24-ந் தேதி இரண்டு பாரஸீக கனவான்களோடு நானும் அப்துல் காஸிமும் மௌலானாவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். ஒற்றுமையாயிருக்கும்படி அவர்களுக்கு வற்புறுத்தினோம். எச்சரிக்கையும் செய்தோம். இங்கிருந்து அனுப்பப்படும் ராய்ட்டர் தந்திகள் எப்போதுமே உண்மையை அறிவிப்பதாக நீங்கள் யாரும் தவறாய் நினைத்துக்கொண்டுவிடவேண்டாம்.

இஸ்லாத்தின் நண்பர்கள் இங்கு ஒரு சங்கம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். விருந்துக் கச்சேரிகளிலும் இதர விஷயங்களிலுங் கூட கிலாபத்து சம்பந்தமாய் பிரஸ்தாபம் நிகழ்ந்து வருகிறது. நமது பிரசார வேலை இன்னும் பலமாயிருக்க வேண்டும். அதிகப்பணத்துக்கு நான் தந்தியடித்தால் நீங்கள் திடுக்கிட்டுப் போகக்கூடாது. சில தினங்களுக்கு முன் கிடைத்த மூவாயிரம் பவுனை இன்று தான் செலவழிக்க ஆரம்பித்தேனாயினும் பெருந்தொகைகளுக்கு அடிக்கடி தந்தியடிக்கும்படியாகத்தானிருக்கும். மிஸ்டர் யாகுப் ஹாஸன் லார்டு வில்லிங்டனுக்கு எழுதியுள்ள மறுப்பு எனக்குத் தந்தி மூலமாய்க் கிடைத்தது. அதை பிரெஞ்சுப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப் போகிறேன். லண்டனிலும் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்.

அன்புள்ள (ஒப்பம்) முகம்மது.

II

லண்டன், ஜூன் 3—

அன்புள்ள ஷவுகத்துக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. 29-ந் தேதியே பாரீஸ் நகரிலிருந்து திரும்பி வந்துவிட்டோம். 30-ந் தேதி காலை ஆக்ஸ்போர்டில் இஸ்லாத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தேன். பலரும் ருசிகரமாய் கேட்டார்கள். மறுநாள் மஜ்லீஸ் பிள்ளைகளால் எங்களுக்கு விருந்து நடத்தப்பட்டது. அல்பேனியத் தூதர்களின் தலைவரை நேற்றுக்கண்டு பேசினேன். மிஸ்டர் இ. டி. மோரல் என்ற பத்திராசிரியர் கிளாஸ்கோவில் எங்களுக்காக ஒரு பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்து தருவதாய்ச் சொல்லி யிருக்கிறார். மற்றும் சில விடங்களில் கூட கூட்டங்கள் நடைபெறலாம். 7, 9-ந் தேதிகளில் பாரீஸ் நகருக்கு நானும் சையது ஹூஸேனும் போகும்படியா யிருக்கும். ரோமாபுரிக்குப் போக சமீபமாய்ச் சந்தர்ப்பமில்லை. பொறுமையுடன் இருந்து வரும்படி இந்தியா கவர்ன்மெண்டும் இந்தியா மந்திரியும் இந்திய முஸ்லீம்களுக்கு புத்திசொல்லி யிருப்பதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. நமது வேலை இந்தியாவில்தான் இருக்கிறது. நான் இங்கு சுலபமாய்க் காலங்கழித்து வருகிறேன். நீங்களோ அங்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். எனது சுகத்துக்குத் தகுந்த பிரயோஜனம் இங்கு இல்லை. பெரிய மனிதர்களைக் காணுவதும், நல்ல சாப்பாடு சாப்பிடுவதுமாய் இருந்துவருகிறேன். அங்கு எல்லோரும் என்ன செய்கிறீர்களோ வென்று கவலையா யிருக்கிறது. கிலாபத்துக்காக நான் இங்கே வந்தேனாயினும், இந்தி



யாவை நான் மறக்க முடியாது. பஞ்சாப் சம்பவங்களைப் பற்றிய கண்டனக்கூட்டத்திற்கு இன்று நான் அவசியம் போவேன். "தட்டினால் திறக்கும்" என்ற பழமொழிக்கேற்ப, ஏதோ என்னாலான சொற்ப வேலையை தைரியமாய்ச் செய்து வருகிறேன்.

(ஒப்பம்) முகம்மது.

---

## கிலாபத்

1920-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் சென்னையில் கூடிய கிலாபத் மகாநாட்டில் மௌலானா ஷவ்கட் அலி அக்கிராசனம் வகித்து, உருதுபாஷையில் பேசியதன் மொழிபெயர்ப்பு பின்வருமாறு :—

இஸ்லாத்திற்கு நெருக்கடியாகவுள்ள சமயத்தில் இந்த மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்கும்படி என்னைத் தெரிந்தெடுத்ததற்கு உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். என்னுடைய பிரசங்கத்தில் ஒரு குறை இருக்குமென்பதை முன்னாடியே உங்களுக்குத் தெரியப்படுத்தி விடுகிறேன். அழகாகத் தொடுக்கப்பட்ட வார்த்தைக் கோர்வைகள் அதில் இருக்கமாட்டா. வெகுவாக ஆழ்ந்து யோசனை செய்த பிறகு, நான் சில அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறேன். அவைகளை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். என்னுடைய கருத்தென்னவென்ற சந்தேகம் உங்களுக்கேற்படாமல் தெளிவாகச் சொல்லுவேன். ஆனால் என்னுடைய பாஷையின் நடை சிறிது மோட்டாவாகத்தா னிருக்கும்.

முஸ்லிம்களின் கட்சியைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். வெகுகாலமாக இஸ்லாத்தின் கலிபாவிடத்

தில் சிநேகப்பான்மையாயிருந்த இங்கிலாந்து தன்னுடைய காரியத்தை உத்தேசித்து தனது பழைய தோரணையை மாற்றிக்கொண்டது என்பது நமது கட்சி. அப்படிச் செய்வதால் உலகிலுள்ள முஸ்லிம்களின் அபிமானத்தையும் இந்தியாவிலுள்ள முஸ்லிம் பிரஜைகளின் அபிமானத்தையும் இங்கிலாந்து இழந்துவிடும்படி ஏற்படலாமென்று முஸ்லிம் பத்திரிகைகளும் பிரசங்கிகளும் எச்சரிக்கை செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். சென்ற சில வருஷங்களில் இங்கிலாந்தானது ஐரோப்பாவில் ஜெர்மனியைத் தனியாக்கிவிடவேண்டி மற்ற தேசங்களுக்குத் திருப்திகரமாக நடந்து வந்திருக்கிறது; ஆனால் அதற்காக பலஹீனமான முஸ்லிம் நாடுகள் கைவிடப்பட்டன. மொராக்கோவில் பிரான்ஸ் தனதிஷ்டப்படி நடக்கும்படி விடப்பட்டது. இடாலி த்ரிபொலியைப் பிடித்துக்கொண்டது. பாரஸீகம் ருஷ்யாவிற்கு வழங்கப்பட்டது. ஈஜிப்டை இங்கிலாந்து தனக்கு எடுத்துக்கொண்டது. இந்த மாறுதல்களையெல்லாம் துருக்கியும் முஸ்லிம் உலகமும் கவனித்து ஆச்சர்யமடைந்தன. ஆகையால் இங்கிலாந்துக்குத் தங்களிடத்தில் அபிமானமிருப்பதாக முஸ்லிம் உலகம் நம்பமுடியாமற் போய்விட்டது. கடைசியாக நடந்த பால்கன் யுத்த முடிவில் இந்த விஷயம் தெளிவாகிவிட்டது. மகாயுத்தம் உண்டானவுடன், எந்தக் கட்சியில் சேருகிறதென்று துருக்கி தீர்மானம் செய்யவேண்டியிருந்தது. பரம்பரையாக துருக்கிக்குச் சத்துருவாகவிருந்து வந்திருக்கிற ருஷ்யா எந்தக் கட்சியில் சேர்ந்துகொண்டதோ அந்தக் கட்சியில் துருக்கி சேரமுடியாதென்பது நிச்சயம். ஜெர்



மனியோ துருக்கியின் சிநேகத்தையும் உதவியையும் நாடிற்று. பிரிட்டிஷ் அன்னிய மந்திரியாக விருந்த லார்டு க்ரே அனுசரித்த ராஜதந்திரத்தின் பலனாக, ஜெர்மனியை ஒதுக்கித்தள்ள துருக்கியால் கூடவில்லை. ஜெர்மனியின் கையில் துருக்கி அகப்பட்டுக் கொள்ளும்படி செய்தது இங்கிலாந்து. கான்ஸ்டாண்டிநோபிளைப் பிடுங்கி ருஷ்யாவுக்குக் கொடுக்க துருக்கி எப்படி சம்மதப்பட முடியும்? ஆகையால் ஜெர்மனியுடன் துருக்கி சேர்ந்துகொண்டது.

யுத்தம் நாலு வருஷ காலம் நடைபெற்றது. ஜெர்மானியரே வெற்றி பெற்று வந்தனர். துருக்கியர் வெகு பராக்கிரமத்துடன் ஜெர்மானியரின் கட்சியிலிருந்துகொண்டு சண்டை செய்துகொண்டு வந்தார்கள். ஐரோப்பாவிலுள்ள முதலாளிகள் தங்களைச் சுற்றிப் பின்னிவிட்ட தளைகளை அறுத்துவிட அவர்கள் விரும்பி, கூடியவரையில் சண்டை செய்தார்கள். அவர்கள் வெகு பராக்கிரமசாலிகள் என்றும் தருமமாகவே யுத்தம் செய்கிறவர்கள் என்றும் யுத்த காலத்தில் அவர்களைப்பற்றி வெகுவாகப் புகழப்பட்டது. ஆயினும் வெற்றியும் தோல்வியும் விதிப்படி ஏற்படும். நல்லது துருக்கி தோற்றுப்போய் விட்டது, ஆகையால் அதற்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று இப்பொழுது எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் நமது அபிப்பிராயத்தை இங்கு தெளிவாகச் சொல்லவேண்டும். அதாவது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து இங்கிலாந்துக்கு உதவி செய்திராவிடில் இங்கிலாந்து வெற்றி அடைந்திராது துருக்கி தோற்றுப்போயிராது. இங்கிலாந்துக்குச் சங்கடம் நேரிட்டதும், நம்மை உதவி செய்யும்படி

வேண்டிக்கொண்டது. நாம் தாராளமாகப் பணம் கொடுத்தும், பட்டாளத்துக்கு ஜனங்கள் கொடுத்தும் உதவி செய்தோம். பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும், ஆசியாவிலும் இந்தியாவின் உதவியால் இங்கிலாந்து என்ன பலன் அடைந்ததென்பது உலகிற்குத் தெரியும். இந்தியா பலமாக உதவி செய்திராவிடில், ஜெர்மனிக்காரன் இங்கிலாந்தைக் காலின் கீழ் வைத்துத் தேய்த்திருப்பான். நம்முடைய உதவியை இங்கிலாந்து நாடியபொழுது நமக்குப் புதிதாகச் சில உறுதிகள் கூறிற்று. உறுதி மொழிகளை எவ்வளவு தூரம் இங்கிலாந்து நிறைவேற்றுமென்று நமக்கு ஏற்கெனவே அனுபோகத்தினால் தெரியுமாயினும் அந்த உறுதி மொழிகளை நாம் நம்பினோம். ஆகையால் இந்தியாவின் பிற்கால கதியை பாதிக்கக்கூடிய முடிவுக்கு வருமுன், மற்றவர்களை யோசனை கேட்பதைவிடத் தன்னுடைய யோசனையையே கேட்கவேண்டுமென்று இந்தியா சொல்லுகிறது. ஆசியாவில் இங்கிலாந்து வெற்றியடைந்ததற்குக் காரணம் ஹிந்துமுஸ்லீம் துருப்புகளே. ஆகையால் நேசதேசங்கள் துருக்கியுடன் சமாதானம் என்ன நிபந்தனைகளின்மேல் செய்துகொள்ள வேண்டுமென்பதை நம்முடன் யோசனை செய்ய வேண்டுமென்று நாம் நமது பாத்தியத்தை முன்னிட்டுக் கேட்கிறோம். "இஸ்லாத்தின் புண்ணியக்ஷேத்திரங்கள் தாக்கப்படமாட்டா" என்று லார்டு ஹார்டிஞ்சு உறுதி கூறினார். அப்பொழுது ஜெட்டா என்ற துறைமுகத்தை அவர் குறிப்பிட்டுச் சொன்னார். ஆயினும் பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஜெட்டாவைத் தகர்த்தது நமக்குத் தெரியும். பலஸ்தின் நாடு



முஸ்லீம் துருப்புகளின் உதவியைக் கொண்டு தாக்கப்பட்டது. இன்றளவும் பிரிட்டிஷாருடைய சுவாதீனத்தில் அது இருந்து வருகிறது.

மெஸபொடோமியாவும் ஜஸீரத்துல் ஆரப்பின் சில பகுதிகளும் பிரிட்டிஷாரின் நேரான ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன. கர்பாலா நஜாப், அஸ்ராப், ஸம்மேரு பக்தாத் முதலிய க்ஷேத்திரங்களுக்கு எவ்வித ஆபத்தும் வராதென்று லார்டு ஹார்டிஞ்சு உறுதி கூறியிருந்தும் மேற்படி ஸ்தலங்களுக்கு ஆபத்து நேரக்கூடியவாறு நிலைமை இப்போது மாறியிருக்கிறது. அவை இப்போது பிரிட்டிஷாரின் வசத்தில் இருக்கின்றன. இன்னும் என்னென்ன காரியங்கள் இங்கிலாந்து செய்திருக்கின்றதோ நான் அறியேன். எல்லாம் ஒருநாள் வெளியாகத்தான் போகிறது. இந்திய முஸல்மான்கள் கிலாபத்தைப் பற்றிய உண்மையை வாய்திறந்து பேசக்கூடாதென்று கட்டளையிடப்படுகிறார்கள். மற்றும் பல விதங்களில் ஜனங்களுக்கு வாய்ப் பூட்டுப் போடப்படுகிறது. முஸ்லிம் பத்திரிகைகள் விசேஷக் கஷ்டத்துக்கு உள்ளாகி வருகின்றன. மதிப்பு வாய்ந்த ஜனத்தலைவர்கள் கைதி செய்யப்படுகிறார்கள். பிரிட்டிஷாருக்குக் சாதகமாகப் பேசுவோருக்குமட்டும் ஆதரவு கிடைத்து வருகிறது. தியோலி வாசியாகிய மௌலானாமுகமது ஹாஸனுக்கு நேர்ந்த கதியை நீங்கள் அறிவீர்கள். அவருக்கு வயது 75. கலிபாவுக்கு விரோதமாய் ஒரு பட்வா வெளியிடும்படி அவருக்கு மெக்கா ஷெரீப் (இங்கிலாந்தின் பொம்மை) ஆக்ஞை பிறப்பித்தார். அவ்வாறு செய்ய முடியாதென்று மௌலானா ஹாஸன் தெரிவித்தார். உடனே அவ

ரையும் அவரது நண்பர்களையும் கைது செய்து, ஈஜிப்டுக்குக் கொண்டுபோய், யுத்தச்சிறையாளராக வைத்திருந்தார்கள். ஷெரிப்பைக் கேட்டால் இங்கிலாந்துதான் அவரைக் கைதியாக வைத்திருப்பதாகச் சொன்னார். அது ஷெரீப்பின் வேலைதான் என்று ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டார் பதில் சொன்னார்கள். மௌலானா ஹஸனை அவமானப்படுத்தியவர் யாராயிருந்தபோதிலும் சரி, மௌலானா சாகிப்பை இங்கு காணோம்.

ஸிரியாவில் செய்யப்பட்டு வரும் அக்கிரமங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நாகரீகம் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு கான்ஸ்டாண்டிநோபிலிலும் மெஸபொடோமியாவிலும் அக்கிரமங்கள் செய்து வருகிறார்கள். என் மனம் பதைக்கின்றது. இங்கிலாந்துக்கு நாம் இன்று சில முடிவான யோசனைகள் சொல்வோம். இன்னொரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போம். துருக்கி விஷயத்தை முஸல்மான்களே பைசல் செய்து கொள்ளும்படி நேச தேசத்தார் விட்டு விடவேண்டும். பிரான்ஸும் இத்தாலியும் துருக்கி விஷயத்தில் கடுமையான நிபந்தனைகளை விதிக்க இஷ்டப்படவில்லை. கௌரவமான சமாதானம் செய்து கொள்ளவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். இங்கிலாந்து வற்புறுத்தும் பட்சத்தில் பிரான்ஸ் ஸிரியாவை விரும்பாது. துருக்கியில் வெற்றியடைந்தது பிரிட்டிஷாரேயாதலால் பிரிட்டிஷாருக்குத்தான் துருக்கி விஷயத்தைப் பைசல் செய்ய அதிகபாத்தியமுண்டு. இங்கிலாந்துக் கிஷ்டமிருந்தால் எதுவும் செய்யலாம். பிரிட்டிஷார் நம்மைக் கலந்து யோசிக்கட்டும்.



கிலாபத்து கான்பரன்ஸும் காங்கிரஸ் மகா சபையும் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பட்டும். அவர்களோடு பிரிட்டிஷ் பிரதிநிதிகள் பேசிய பின் ஒழுங்கான முடிவுக்கு வரமுடியாமற் போகாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கும் இஸ்லாத்துக்கும் சாசுவதமான உறவு ஏற்படும்படி செய்வது அசாத்தியமான காரியமல்ல. இன்னும் எத்தனையோ யுத்தங்களில் இங்கிலாந்து சம்பந்தப்பட வேண்டியிருக்கும். தன்னுடைய சொந்த நலத்தையும் க்ஷேமத்தையும் உத்தேசித்தாவது கிரேட் பிரிட்டன் இஸ்லாத்தோடு சிநேகமாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறது. கிலாபத் விஷயம் திருப்திகரமாய்ப் பைசலாகாவிட்டால் இஸ்லாம் உலகத்தில் அமைதி நிலைத்திராது. இங்கிலாந்து தனது நல்லெண்ணத்தை இந்த விஷயத்தில் காட்டிவிட நாம் சந்தர்ப்பம் கொடுக்கிறோம். ஒரு அங்குலம் முஸ்லிம் பிரதேசத்துக்குக் கூட பிரிட்டிஷார் ஆசைப்படக்கூடாது. கிரேட் பிரிட்டனுக்கு இந்தியா ஒன்றே போதாதா? இந்தியர் திருப்தியாய் வாழ்ந்தால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குக் குறைவே கிடையாது.

நாம் கேட்பதென்ன? யுத்தத்துக்கு முன் துருக்கிக்குச் சொந்தமாயிருந்த ராஜ்யம் இனிமேலும் துருக்கியினிடத்திலேயே யிருக்கவேண்டும். ஆனால் அந்த ராஜ்யத்திலடங்கியுள்ள பிறபல ஜாதியாரும் சுயேச்சையாய் வாழ துருக்கி சுல்தான் வசதிகள் செய்து கொடுப்பதாய் உறுதி வேண்டுமென்று பிரிட்டிஷார் கேட்டால் அவ்வாறு உறுதி கூறுவதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை. துருக்கியரையும் அராபியரையும் ஒன்றுபடுத்திவிடவேண்டும். சகோதரர்

களுக்குள் சச்சரவு ஏற்பட்டால் அதைச் சமாஸப் படுத்திவைக்கும்படி குர்-ஆன் ஆக்ஞாபிக்கின்றது. ஆகையால் அரேபியருக்கும் துருக்கியருக்கும் மனஸ் தாபம் ஒழிந்து போய்விடவேண்டும். ராஜதந்திரிகள் இஷ்டம்போல் விஷமஞ் செய்வதை இனி நிறுத்திவிடவேண்டும். மகாயுத்தம் எத்தேசத்திலும் ஒரு புதிய உணர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது. ஐரோப்பாவில் மட்டுமல்ல. வேண்டுமென்று பிரிட்டிஷார் இஸ்லாத்துக்கு அவமானம் விளைவிப்பார்களாகில், இந்தியாவின் நல்ல காலத்துக்கு அது அறிகுறியல்ல. மண் ஆசை என்ற பேய்பிடித்த ஏகாதிபத்திய முதலாளிக்கூட்டத்தாருக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன். எந்த விதத்திலும் சரி, ஸர்வதேச சங்கத்தின் அதிகார பத்திரத்தைப் பெற்றாலும் சரி, பெறாமற்போனாலும் சரி, முஸ்லிம் பிரதேசங்களைப் பிரிட்டிஷார் ஆட்சி செய்ய எத்தனிக்கக்கூடாது. இல்லாவிடில் இந்தியாவுக்கு ஆபத்து வந்துவிடும். இந்தியத் துருப்புகள் குருடிஸ்தானத்திலும் வேறிடங்களிலும் சண்டை போடுவதனால், குருடு ஜாதியாருக்கும் மற்றவர்களுக்கும் இந்தியரிடத்தில் மனஸ்தாபம் இருந்து கொண்டேயிருக்கும். பின்னிட்டு சமயம்வரும்போது பழிக்குப்பழி வாங்கப் பார்ப்பார்கள். அரேபியாவிலும் மெஸபொடேமியாவிலும் இந்தியருக்குச் சிந்தை கிடையாது. சொந்த சுதந்தரங்கள் அங்கு நமக்குக் கிடையாது. பூரா சுய ஆட்சி வேண்டுமென்பதே நமது கோரிக்கை. நாம் சமாதானமாய் வாழ விரும்புகிறோம். ஆப்கானியர், அராபியர், பாரஸீகர், சீனக்கார்கள் ஆகிய எல்லோருடனும் நாம் நேசமாய் வாழ விரும்புகிறோம். பிறருடைய சொத்து நமக்கு வேண்



டாம். பிறரும் நமது நாட்டை எதிர்க்கும்படி நாம் விட்டுவிடமாட்டோம். இச்சந்தர்ப்பத்தில் இந்தியத் துருப்புகளை மற்ற நாடுகளுக்கனுப்பி அங்கு சண்டை போடச் சொல்லுவதனால் பின்னிட்டு இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படலாம். எல்லோரும் ஒன்று சேர்ந்து நம்மைத் தாக்குவார்கள். எவரையும் எதிர்த்துச் சண்டையிட நம்மால் ஆகாதென்பது கிடையாது. ஆனால் அதற்குத் தகுந்த பயிற்சியும் ஆயுதங்களும் நமக்கு இருக்கின்றனவா ? கிடையாது. நாம் திக்கற்றுக் கிடக்கிறோம். இஸ்லாத்துக்காகச் சண்டை போடுவோரை இந்திய முஸல்மான்கள் எப்படி எதிர்த்து நிற்பது ? எதிர்க்க மனம் வராது. சாத்தியமானால் அவர்களுக்குத் துணை நிற்போமேயன்றி வேறல்ல. இஸ்லாத்தின் தர்மம் இதுதான்.

நானும் எனது சகோதரரும் சிறையிலிருந்த போது எங்கள் மீது வீண் வதந்திகள் கட்டி விடப்பட்டன. ஆப்கன் அமீரையும் துருக்கி சுல்தானையும் இந்தியாவின் மீது படையெடுக்கும்படி நாங்கள் தூண்டியதாக எங்கள் மீது புகார் சொல்லப்பட்டது. அக்கதை சுத்தப் பொய் என்று இங்கு பஹிரங்கமாய்ச் சொல்வேன். இந்தியாவை ஜெயிக்க அல்லது அடக்கியாள வேண்டுமென்ற எண்ணத்துடன் யார் இந்தியாவைப் படையெடுத்தபோதிலும், அவர் அமீராயிருந்த போதிலும், துருக்கி சுல்தானாகவேயிருந்த போதிலும், நாங்கள் அப்பேர்ப்பட்ட அரசர்களை எதிர்த்து நிற்போம் என்று இன்னொரு தடவை சொல்லுகிறேன். தாய் நாட்டுக்காக எங்கள் இரத்தத்தைச் சிந்த நாம் பின் வாங்கமாட்டோம்.

கலிபாவை ஒரு 'போப்' மகாசாரியாரை

போல் செய்துவிடப் பார்க்கிறார்கள். இஸ்லாத்தை இவ்வாறு அவமதிக்கிறார்கள். துருக்கி சுல்தானுக்கு கான்ஸ்டாண்டிநோபிலில் காவல்போடப் போகிறார்களாம். ஜஸீரத்துல் அரப்பையும் மெதுவாய்க் கைப்பற்றிக்கொள்ளப் பார்ப்பார்கள். இப்பேர்ப்பட்ட அவமானத்தை நாம் சகித்திருக்க முடியாது. சாந்த நிலைமைக்குத் தீங்கிழைப்போரை நாம் சும்மா விட்டு வைக்கக் கூடாது.

---

## நமது இராஜீய நிலைமை

[1920-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் சென்னையில் ஸ்ரீமான், சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் அக்கிராசனத்தின் கீழ் மௌலானா ஷௌகத் அலி செய்த பிரசங்கத்தின் முக்கிய சாராம்சம்].

பலமான பூர்வ பீடிகை போடுவதில் காலத்தைக் கழிக்க எனக்கு இஷ்டமில்லை. முற்போக்கான அபிப்பிராயங்கொண்ட தேசியவாதிகளில் நானொருவன். அதற்காக அமிதவாதி யென்றாவது, தேசியவாதி யென்றாவது, கலகப்புரட்சிக்கார னென்றாவது என்னை நீங்கள் அழைத்தாலும் அதற்காக நான் அவமானப்படவில்லை. என்னுடைய தேசக்ஷேமத்தில் நான் கவலை பாராட்டுவதைவிட உத்கிருஷ்டமான காரியம் வேறெதுவுமில்லை.

நானும் எனது சகோதரரும் பாதுகாப்பிலிருந்து வெளிவந்ததும், நமது தேசத்தில் ஏற்பட்டிருக்கும் விசேஷ மாறுதல்களைக் கண்டு கொண்டோம். ஆயினும் துரதிர்ஷ்டவசத்தால் நமது தேசத்தில் ஏற்பட்டிருக்கும் சில்லரைப் போராட்டங்களில் நாங்கள்



தலையிடுவதில்லையென்று தீர்மானம் செய்துகொண்டோம். அதற்கு முக்கிய காரணமாகவுள்ள அரசியல் சட்டத்தைப்பற்றி நான் அதிகம் சொல்லப்போவதில்லை. அதைச் சிருஷ்டி செய்தவர்கள் சொல்லுகிறபடி அது புகழ்ச்சிக்குரியதென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுதும் அது நமது சகோதரர்களைப் பிரித்து விடுவதாக இருக்கையில் அது தேவையில்லை என்றே நான் சொல்வேன். நமது தேசத்தில் எவ்வித வேற்றுமையுமில்லாமல் அனைவரும் ஒத்து சமாதானமாக இருந்துவரவேண்டுமென்பதே என்னுடைய கருத்து. நாமோ அபூர்வமான நிலைமையிலிருக்கிறோம். கவலைக்கிடமான நிலைமை நம்முன் நிற்கிறது. உலகில் தடபுடலாக மாறுதல்கள் ஏற்பட்டு வருகையில் நமது தேசமானது வாய் மூடி மௌனியாகி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் பாரதமாதாவின் உண்மைப் புதல்வர்கள், மிதவாதிகளாயினும் சரி, தேசியவாதிகளாயினும் சரி, ஒன்று கூடி யோசித்து, உலகில் இந்தியா உன்னத ஸ்தானம் பெறுவதற்கான உபாயத்தைத் தேடாவிடில் அதைவிடத் துர்ப்பாக்கியமான காரியம் வேறெதுவுமில்லையென்றே நான் கூசாமற் சொல்வேன். அவ்வித உத்கிருஷ்டமான லட்சியத்தை அடைவதில் விசேஷ கஷ்டங்களுண்டாயினும், ஏன் அதில் நான் விசேஷ அக்கறை காட்டுகிறேனென்பதற்குக் காரணத்தைச் சொல்லிவிடுகிறேன். சுயகாரிய வாதியென்று அதற்காக என்னை நீங்கள் நிந்தித்துவிட வேண்டாம். நானும் எனது சகோதரரும் பாதுகாப்பிலிருந்தபோது, எல்லா வகுப்பின

ரும் எங்களுக்கு உதவிசெய்து எங்களுக்கு ஆறுதல் சொல்லி வந்திருக்கிறார்கள். அப்பொழுதும் எங்களுக்கிருந்த அபிப்பிராயம் என்னவென்பதைச் சொல்லி விடுகிறேன். எனது சகோதரர் நீர் ரோக உபாதையினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது உங்களுக்குத் தெரிந்த விஷயம். எங்களுடைய நண்பரில் ஒருவர் எனது சகோதரருக்கு தேகஸ்திதி எவ்விதமிருக்கிறதென்று எழுதிக் கேட்டிருந்த பொழுது அதற்கு அவர் அளித்த பதிலென்னவெனில்—

“என்னுடைய தேக ஸ்திதியைப்பற்றி நீங்கள் விசாரணை செய்யவேண்டாம். அல்லாவின் கிருபையினால் நான் நீர் ரோகத்தினால் மவுத்தாகமாட்டேன். நீங்கள் கொஞ்சமும் பயமின்றி உண்மையாய் உங்களுடைய வேலைகளைச்செய்து வருவீர்களேயானால் என்னுடைய தேக ஸ்திதி சரியாக இருக்கிறதென்று நினைத்துக் கொள்ளலாம். அப்படிக் கில்லாது பயம் பிடித்து, உங்களுடைய பிரசங்கங்களிலோ, காரியங்களிலோ நீங்கள் தயங்கும் பட்சத்தில் என்னுடைய தேக ஸ்திதி மிகவும் கெடுதலாகுமென்று நினைத்துக்கொள்ளுங்கள்” என்று எழுதியிருந்தார். நாங்கள் பாதுகாப்பிலிருந்த 5-வருஷ காலமும் இந்த உணர்ச்சியே கொண்டு நீங்கள் சொல்லி வந்த தைரிய வார்த்தைகளில் தேறுதலுற்றிருந்து வந்திருக்கிறோம். அவ்வித உதவி நீங்கள் செய்திருப்பதால், உங்களுக்குள் ஒற்றுமையை உண்டுபண்ணி அனைவரும் ஒத்து தேச க்ஷேமத்துக்கு உழைக்கும்படி செய்ய வேண்டியது எங்களுடைய கடமை.

நானே தேசீய வாதிகளில் தேசீய வாதி.



சென்னை தேசீய வாதிகளில் நானொருவன். நான் மதுபானப் பழக்கம் என்றுமில்லாதவனாயினும், சென்னை தேசீயவாதிகளில் உற்சாகமும் ஊக்கமும் நிறைந்த இளைஞர்களோடு நான் கலந்துறவாடியது எனக்கு அளவற்ற உற்சாகத்தை உண்டுபண்ணியது. எனக்கும் என்னை யறியாது புதிய சக்தியும் தைரியமும் உண்டாயிற்று. ஆகவே தேசீய வாதியாக நானிருப்பதை ஒரு பெருமையாகவே கருதுகிறேன். அந்தக் கட்சியே சென்னையில் வலுத்திருக்கிறது. அந்தக் கட்சியில் சுய நன்மையைக் கருதாது தேச க்ஷேமமே பெரிதென நினைக்கும் உண்மை பக்தர்கள் பலருளர். மிஸ்டர் எஸ். கஸ்தூரி ரங்கய்யங்கார் என்ன, சேலம் மிஸ்டர் ஸி. விஜராகவாச்சாரியார் என்ன இவர்களைப்போன்ற பல மகான்கள் அந்தக் கட்சியிலுளர். இந்தக் கூட்டத்தில் தலைமை வகிப்பவரும் ஒருவர். மிஸ்டர் சத்தியமூர்த்தியைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவரைப் பார்த்தவுடனேயே ஹிந்துக்கள் மூஸ்லிம்கள் இருவருக்கும் தலைவராக விளங்கக் கூடியவர் ஒருவரிருக்கிறாரென்பதை நான் கண்டு கொண்டேன். தன்னலம் கருதாது தேச க்ஷேமத்திற்காக அவர் பாடுபடுபவர். இன்னும் பலரும் இருக்கிறார்கள். இந்தியாவின் மற்ற பாகங்களை விட உங்கள் மாகாணத்தில் தேசீயக் கட்சி வலுவாக இருக்கிறது, நான் தேசமெங்கும் சுற்றி வந்திருக்கிறேன். எல்லா மாகாணங்களையும் விட உங்களுடைய மாகாணத்திலேயே இந்தக்கட்சி வெகு பலமாக இருக்கிறதென்று சொல்லுவேன். நம்முடைய அபிவிருத்தியானது பொறுப்புள்ள பெரியோரையும் ஊக்கமும் உற்சாகமுள்ள இளைஞரை

பும் பொறுத்திருக்கிறது. உங்களிடம் சக்தியிருக்கிறது. அந்த சக்தியைக் கொண்டு நீர்களாகக் காரியங்களைச் செய்து வருவீர்களாக.

உங்களுடைய முஸ்லீம் சகோதரர்கள் வெகு காலமாக உங்களுடன் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்று அதிகாரிகளின் தயவையே பிரதிஷ்டித்திருந்துவிட்டார்கள். அவர்கள் முன்னுக்கு வரவும் மனமில்லாம லிருந்து வந்தார்கள். அந்த நிலைமை அடியுடன் இப்பொழுது மாறிவிட்டது. உங்களுடைய நிகழ்ச்சிக்கு இப்பொழுது புதிய சக்தி உண்டாகிவிட்டது. அவர்கள் உங்களுடன் கலந்துகொண்டு விட்டார்கள். முஸ்லிம்கள் அனைவரும் தேசியவாதிகளல்லாது வேறெந்தக் கட்சியினராகவும் இருக்கமுடியாது. எனது நண்பர் கனம் யாகுப் ஹாசன் மிதவாதிகள் சங்கத்தைச் சேர்ந்தவராயினும் முஸ்லிம்கள் அமிதவாதிக ளல்லாது வேறெவ்விதமுமிருக்க முடியாதென்று நான் இங்கு வந்தது முதல் இடைவிடாது என்னிடம் சொல்லி வந்திருக்கிறார். ஆனால் அவர்கள் இதுகாறும் ஒதுங்கியிருந்ததற்கு ஒரு காரணம் சொல்லலாம். ஹிந்துக்கள் முஸ்லீம்கள் இரு வகுப்பினரும் இந்தியாவையே தாய்நாடாகக் கொண்டவர்கள் தான். ஆனால் ஹிந்துக்களை ஜீவன் முக்தர்களாகச் செய்வதற்கு காசி, ராமேசுவரம் போன்ற புண்ய க்ஷேத்திரங்கள் இந்தியாவிலேயே இருக்கின்றன. ஆகவே இந்துக்கள் எவரேனும் காலகதி யடைந்தாலும் அவர்களுடைய சாம்பலை கங்காநதியில் கரைத்துவிட்டால் அவர்களுடைய ஆத்மா திருப்தி யடைந்துவிடுகிறது. முஸல்மான்களோ அப்படியல்ல. அவர்கள் இந்தியாவைத்



தாய் நாடாகத்தான் கொண்டாடுகிறார்கள். அவர்கள் ஜீவன் முக்தர்களாகக் கூடிய புண்ய க்ஷேத்திரங்கள் இந்தியாவுக்கு வெளியிலிருக்கின்றன. அவர்கள் தங்களுடைய பிராணன் மெக்கா முதலிய புண்ய க்ஷேத்திரங்களில் இருக்கிறதென்று நினைக்கிறார்கள். மதப்பற்று அவர்களுக்கு அதிகமானதினால் அவர்களுடைய திருஷ்டி இந்தியாவுக்கு அப்பால் போய் விடுகிறது. அவ்வித நிலைமையை மாற்றி இந்துக்களுடன் கூட அவர்கள் கலந்து கொண்டு விடவேண்டிய நெருக்கடியான நிலைமையை உண்டுபண்ணியதற்கு நாம் கடவுளைத் துதிக்கவேண்டும். காங்கிரஸ் ஆகட்டும், தேசியக் கட்சி ஆகட்டும், சுய ஆட்சிக் கட்சியாகட்டும், இவைகளுடன் முஸ்லீம்கள் கலந்துழைப்பார்களென்று நிச்சயமாக நம்பியிருக்கலாம்.

மனிதர்களுடைய சுயேச்சையை எவரும பாதிக்கமுடியாமல் ஜனங்களுக்காவது நியாயஸ்தலத்துக்காவது அப்பீல்செய்துகொள்ள இடங்கொடாத சட்டம் பிரயோஜனமில்லை. தவிரவும் பண சுதந்தரத்தை நமக்குக் கொடுக்காத சட்டமும் நமக்குப் பிரயோஜனமில்லை. பணசுதந்தர மில்லாவிடில் நம்முடைய தேசத்தில் கேவலமான நிலைமையை எவ்விதம் போக்க முடியும். அன்னியநாட்டு விஷயங்களில் தலையிடாமல் காங்கிரஸ் மகாசபையும் முஸ்லீம் லீகும் ஒதுங்கிக்கொண்டது தப்பென்பதே என்னுடைய அபிப்பிராயம். இனி நமது தேசத்தின் எதிர்கால நிலையானது இனிச் செய்யவேண்டி யிருக்கக்கூடிய போர்களை பொறுத்திருக்கிறது. அதற்கு இரத்தத்தையும் பொருளையும் கொடுத்துதவவேண்டியிருக்கலாம். அவ்விதம் செய்யவேண்டிய அவசியமா

வென்பதுபோன்ற விஷயங்களை நிர்ணயிக்க நாம் அதிகாரமும் சுதந்தரமும் வைத்துக்கொள்ளவேண்டும். அரசியல் சட்டத்தை அதிகாரிகள் புகழ்கிறார்கள். நாமும் அதைப் புகழவேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் லிடன் ஹாம் கோஷ்டியினரும் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும் அதிகாரிகள் அதிகத் திருத்தங்களைக் கொடுத்து தேசத்தை நாசப்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். மிதவாதிகளும் சீர்திருத்தத்தை சிலாகிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய பேரைக் காப்பாற்றிக்கொள்ளவும் தேச க்ஷேமத்தை உத்தேசித்தும் பொது வாழ்விலிருந்து ஒதுங்கிக்கொண்டு விடுவது நலமென்று நான் சொல்வேன். வயதானவர்கள் அவர்களுக்கு விட்டுக் கொடுத்து விடவேண்டும் என்று சொல்லி, சிவாஜி மகாராஜா காலத்தில் அவர் படித்தவராக இல்லாமலிருந்தாலும் அவர் தீர்க்க தரிசனம் கொண்டு செய்திருக்கும் காரியங்களைக் குறிப்பிட்டு மேலே பேசியதாவது:—

பிரிட்டிஷாருடன் நமக்கு சம்பந்தம் இருந்து வரவேண்டுமென்றே நான் விரும்புகிறேன். ஆனால் அந்த சம்பந்தத்தினால் நமது தேசத்திற்கும் என்னுடைய மதத்திற்கும் நன்மை ஏற்படுவதாக இருக்க வேண்டும். அப்படிக்கின்றி அந்த சம்பந்தமானது எனக்குத் தீங்கு விளைப்பதாகவும் எனக்கு அருமையாக உள்ளதைப் பறித்துக்கொண்டு போய் விடுவதாகவும் இருக்கும் பட்சத்தில் அதை நான் ஒரு நாள் கூட வைத்திருக்க விரும்பமாட்டேன். முஸ்லீம்கள் விவாக விஷயமாக ஏற்படும் ஒப்பந்தம்போலவே பிரிட்டிஷ் சம்பந்தத்தையும் நான் கருதுவேன்.



பிரிட்டிஷ் சம்பந்தத்தினால் நமக்கு விசேஷ நன்மை விளைந்திருக்கிறதென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் அதனால் நான் மிகவும் நேசிக்கும் விஷயங்களை பறி கொடுப்பதாக இருந்தால் அதை நான் விரும்பேன். நமது தேசமானது அத்தகைய நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறதென்றே நினைக்கிறேன். முஸல்மான்களுக்குள் அவ்வித உணர்ச்சியே இப்பொழுது இருந்து வருகிறது. சிப்பாய் கலகத்திற்குப் பிறகு 30 வருஷம் வரையில் அவர்கள் ஒன்றிலும் சம்பந்தப்படாமல் ஒதுங்கி யிருந்துவிட்டார்கள். முற்போக்குக்கு வழி தேடாமலும் அவர்கள் இருந்துவிட்டார்கள்.

அந்த சமயத்தில் ஹிந்துக்கள் கல்வி வியாபாரம் முதலிய துறைகளில் அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறார்கள். ஆயினும் முஸல்மான்களிடம். ஹிந்துக்கள் சகோதர உணர்ச்சியே காட்டிவந்திருக்கிறார்கள். மூத்த சகோதரர்கள் போலவே ஹிந்துக்கள் நடந்து வந்திருக்கிறார்கள்.

கல்வி செல்வம் எல்லாவற்றிலும் நீங்கள் முற்போக்கடைந்தவர்களாக இருப்பதால் முஸல்மான்களிடம் எவ்விதக் குறைகளிருந்தாலும் அவைகளைப் பொருட்படுத்தாது அவர்களுக்கு உதவி செய்யும்படி நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் ஹிந்துக்களுடன் முஸ்லீம்கள் சேராமல் அவர்களுடைய முயற்சிகளுக்கு எல்லாம் விக்கினங்களே செய்து வந்திருப்பதை உத்தேசித்து முஸல்மான்களுடைய கஷ்ட காலத்தில் அவர்களுக்கு உதவிசெய்ய முடியாதென்று சொல்வது கிரமமேயாயினும் அவ்விதம் சொல்லாமல் மனப்பூர்த்தியாக ஹிந்துக்கள் உதவி

செய்து வருவதற்கு முஸல்மான்கள் வந்தனம் செலுத்துவது அசாத்தியம். முஸல்மான்கள் தங்களுடைய நன்றியை வாய் வார்த்தைகளால் தெரிவித்துக் கொண்டுவிட முடியாது. ஹிந்துக்கள் செய்த உபகாரத்திற்கு முஸல்மான்கள் பாத்திரர்களென்பதைக் கிரியாம்சையில் காட்டிக்கொள்ள கடவுள் அனுக்கிரகிப்பாராக. இப்பொழுது முஸல்மான்கள் விழித்துக் கொண்டு விட்டதால் இனி ஆயிரக்கணக்காக தேசத்தின் அபிவிருத்திக்குற்ற நிகழ்ச்சிகளில் ஹிந்துக்களுடன் அவர்கள் சேர்ந்து கொள்வார்களென்று திடமாக நம்பியிருக்கலாம்.

ஹிந்துக்கள் செய்த உதவிக்குப் பிரதியாக பசுவதை செய்வதை முஸல்மான்கள் நிறுத்தவேண்டுமென்று நினைக்கக்கூடாது. எதற்கும் பிரதி உபகாரம் என்று நினைத்தாலே அதன் கௌரவம் போய்விடும். முஸல்மான்கள் தாங்களாகவே மனப்பூர்த்தியாக பசுவதையை நிறுத்திவிட முன் வந்திருக்கிறார்கள். முஸ்லீம் மார்க்கத் தர்மதப்படி உத்கிருஷ்டமான உணவுகளையே புசிக்கவேண்டும். ஆகவே பசுமாமிசத்தை அவர்கள் சாப்பிடக்கூடியவர்களை சாப்பிடக் கூடாதென்று நான் சொல்லமுடியாது. ஆனால் நாங்கள் பாதுக்காப்பிலிருந்து அமிர்த சரஸ் நகரத்திற்கு வந்ததும் அங்கு ஹிந்து சகோதரர்களும் சகோதரிகளும் எங்களிடம் காட்டிய விசுவாசத்தையும் அன்பையும் கண்டு இனி பசுமாமிசத்தை நாங்கள் இருக்கிற இடத்தில்கூட கொண்டுவர விடுவதில்லையென்று பிரதிக்ஞை செய்துகொண்டோம். இந்த விஷயத்தை முஸல்மான்களை நாளடைவில் நிறுத்திவிட, விட்டு விட்டு அவர்களை நம்பியிருக்கும்படி ஹிந்துக்களை நான்



கேட்டுக்கொள்ளுகிறேன். இது விஷயமாக தீவிர சிரத்தை காட்டப்பட்டுவருகிறது. இத்தனை காலம் பொறுத்திருந்த ஹிந்துக்கள் இன்னம் கொஞ்சகாலம் பொறுத்திருந்தால் இவ்விஷயம் ஒழிந்துவிடும் என்று சொல்லி, நமக்குச் சென்னைவாசிகள் காட்டிய அன்பிற்கும் ஆதரவிற்கும் வந்தனமளித்து அனைவரும் காங்கிரஸில் சேர வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

---

## துருக்கி சமாதானம்

[தொழிலாளர் மகாநாட்டில் மௌலானா முகம்மத் அலி 1920-ம் வருடம் ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் பேசியதின் சாராம்ஸம் பின்வருமாறு].

31½ கோடி ஜனங்களின் கட்சியை உங்கள் முன் எடுத்துச் சொல்லுவதற்காக 7-ஆயிரம் மைல் நான் கப்பற்பிரயாணமாய் இங்கு வந்திருக்கிறேன். உலகத்தில் சமாதானம் வேண்டாதவர் கிடையாது. ஆனால் நியாயமான சமாதானத்துக்கே போராடுகிறார்கள். துருக்கி உடன்படிக்கையைப் போன்ற பத்திரத்தை நான் இதுவரையில் பார்த்ததேயில்லை. அத்தகைய பத்திரத்தில் துருக்கியின் கையெழுத்தை வாங்கியென்ன? வாங்காவிட்டால் தான் என்ன? சமாதானம் நிலைத்திருக்குமா? யுத்தமென்றால் உலகத்தார் இப்போது நடுங்குகிறார்கள். யுத்தத்தினால் பலரும் சளைத்துப்போயிருக்கிறார்கள். சண்டையை யாரும் விரும்பவில்லை. ஆனால் இரண்டொருவர்மட்டும் சண்டையை வேண்டுமென்று தூண்டி வருகிறார்கள். அடுத்த யுத்தம் மிகக் கொடியதாயிருக்கும். அதற்

குச் சிலர் கூடி விதை போடுகிறார்கள். அதைத் தடுக்கவேண்டியது தொழிலாளரின் கடமை. உங்கள் கடமையை நீங்கள் செய்வீர்களா? யுத்தத்தைத் தடுக்க உங்களிடத்தில் சக்தியிருக்கிறது. ஆகையால் சமாதானத்துக் குழைக்க உங்களால் முடியும். நிரந்தரமான சமாதானம் ஏற்படவேண்டும். அது தர்மமாயு மிருக்கவேண்டும். துருக்கியின் நிலைமையைச் சொல்லி முடியாது. பட்டினியால் எண்ணிறந்த குழந்தைகள் கஷ்டப்படுகின்றன. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் உதவிசெய்யா விட்டாலும், உதவிக்குப் போகக் காத்திருக்கிற இந்தியரையாவது அங்கனுப்ப அனுமதி கொடுப்பார்களா? துருக்கியின் கஷ்டத்தை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. ஜெர்மன் குழந்தைகளுக்கும் துருக்கியக் குழந்தைகளுக்கும் பட்டினியைச் சகித்துக்கொள்ளும் சக்தியில் ஏதேனும் வித்தியாசமுண்டா? அப்படியிருக்க, துருக்கியைப்பற்றி ஏன் யாரும் கவலைப்படவில்லை? துருக்கியர் உங்களைப்போல் கனவான்களல்லவா? இதற்குப் பதில் சொல்லுங்கள். ஐயா, துருக்கியரை கனவான்களாகக் கருதவேண்டாம். சாதாரண மனிதராகவாவது கருதுங்கள். பட்டினி கிடப்போரைக் காப்பாற்றுங்கள். தொழிலாளராகிய உங்களுக்குத்தான் அக்கஷ்டத்தை நன்குணர முடியும். துருக்கியர் அயோக்கியர்களென்று சொல்லுவோர் அதை நிரூபிக்கத் தயாரா யிருக்கவேண்டும். கமிஷன் நியமியுங்களென்றால் யாரும் காதில் போட்டுக்கொள்வதில்லை. துருக்கியரின் கட்சியை இங்கு அதிகம்பேர் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. தொழிலாளராகிய உங்கள் கட்சியைத்தான் இங்கு ஆதரிக்கிறார்களா?



(கரகோஷம்). துருக்கியரின்மீது அபாண்டமான பழிகள் வெகுகாலமாகச் சுமத்தப்பட்டு வருகின்றன. கொலைபாதகரென்றும், மகா பொல்லாதவர்களென்றும் துருக்கியர் கருதப்பட்டு வருகிறார்கள். ஓர் இந்திய முஸல்மான் என்ற முறையில் நான் உங்களுக்குச் சிலவார்த்தைகள் இன்று சொல்லுகிறேன். துருக்கி உடன்படிக்கையைப்பார்த்து இந்திய முஸ்லீம்கள் ஒவ்வொருவரும் மனக்கொதிப்படைந்திருக்கிறார்கள். தர்மம், ஸத்தியம், ஜீவகாருண்யம் என்ற எல்லாவற்றையும் கட்டி வைத்துவிட்டு, நேசக்கட்சியார் நடந்துகொண்டிருக்கின்றனர். துருக்கிக்குக் கொடுத்த உறுதிமொழிகள் கொஞ்சமும் நிறைவேற்றப்படவில்லை. சுய நிர்ணயம் என்பது வெறும் பேச்சாய்ப் போயிற்று. இந்திய முஸல்மான்களுக்குச் சில மதக்கடமைகள் இருக்கின்றன. அதை அவர்கள் நிறைவேற்றாமல் முடியாது. துருக்கி போய்விட்டால் அதை நிறைவேற்ற முடியாது. மதத்தில் உங்களுக்கு நம்பிக்கை யிருந்தால் எங்களுக்கும் அந்த உரிமை இருக்கும்படி செய்வீர்கள். மதத்தில் உங்களுக்கு நம்பிக்கை யில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் எனக்கதில் நம்பிக்கை யில்லை. (கரகோஷம்) இஸ்லாம் மகாபரிசுத்தமானது; அதைக் காக்கவேண்டியது இஸ்லாமானவர்களின் கடமை! இந்திய முஸல்மான்களும்சரி, எந்த முஹம்மதியனும் சரி இஸ்லாத்துக்காக உயிரைவிடத் தயாராகவே யிருப்பான். முஸல்மான்களுக்குத் தங்கள் தேசத்தைவிட இஸ்லாமே எல்லாவற்றிலும் மேலானது; எல்லாவற்றிலும் பரிசுத்தமானது. முஸ்லிம்களுக்கு மதமில்லாமல் முடியாது. அஃதில்லாமல் பொழுதே

போகாது. நித்திய வாழ்க்கையும் நடவாது. ஏழைகளாயிருப்பது இஸ்லாமியருக்குப் பெருமை. ஆகையால் ஏழைத்தொழிலாளரிடத்தில் முஸ்லிம்களுக்கு எப்போதுமே ஒரு நம்பிக்கையுண்டு.

மதமில்லாவிடில் ராஜீயமென்ன? மதமில்லாவிடில் ஒன்றுமேயில்லை. (கரகோஷம்) மசூதிக்குள் மட்டும் மதமென்பதில்லை. பேச்சிலும் நடத்தையிலும் மதம் கட்டாயமுண்டு. அஃதில்லாதவிடம் கிடையாது. ஆகையால் இந்திய முஸ்லிம்கள் ஒரு ராஜீய விஷயத்தில் மதத்தைப் புகவிடுதல் முற்றிலும் நியாயமேயாகும். இதற்குமாறாக யார் சொன்னபோதிலும் அதை ஒப்புக்கொள்ள முடியாது. துருக்கிக்கு விதிக்கப்பட்டிருக்கும் சமாதான நிபந்தனைகள் எங்கள் மார்க்கத்துக்கு நேர் விரோதமாயிருக்கின்றன. துருக்கி சுல்தானுக்கு ராஜ்யமில்லாவிட்டால் கிலாபத்துக்கு அந்தஸ்து எங்கிருந்து வரும்? துருக்கியைத் துண்டாக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். "துருக்கியரை நாங்கள் அடித்துப் போட்டோம், ஆகையால் அவர்களைத் தண்டிப்போம்" என்று முதன் மந்திரி மார்தட்டுவதாகத் தெரிகிறது. யுத்தகளத்தில் துருக்கியரை யடித்தவர் இந்திய வீரர்களென்பதை முதன் மந்திரி ஞாபகத்தில் இருத்தட்டும். துருக்கியரைத் தோற்கடிக்க இந்தியர் வேண்டியிருந்தது. சமாதானம் பேசமட்டும் இந்தியருக்குரிமை கிடையாது. (கரகோஷம்). இதுதான் தர்மம் போலும்! இதைக்கண்டு இந்தியர் ஏமாந்து போகமாட்டார்கள். இந்தத் தந்திரங்கள் எங்களிடம் பலிக்கமாட்டா. இந்தியரை எப்போதும் ஏமாற்றிவிட முடியாது. ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை



இப்போது ஏற்பட்டுவிட்டது. ஜாதியில் ஹிந்துவும், அநுஷ்டானத்தில் மகா தர்மிஷ்டருமான மிஸ்டர் காந்தி என்றவர் கிலாபத்து கிளர்ச்சியில் இப்போது இறங்கி விட்டார். அவர் சத்தியவந்தர். கிலாபத்து கிளர்ச்சி நியாயமானதாகையால்தான் அதில் அவர் சம்பந்தப்பட்டார். கிறிஸ்தவ தர்மத்தை மறந்துவிட்டு உங்கள் தேசத்தாரில் பலர் தங்களைக் கிறிஸ்தவரென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அநுஷ்டானத்தில் உண்மைக்கிறிஸ்தவர் மிஸ்டர் காந்தியேயாவர்.

உங்கள் பெயரால், உங்கள் மந்திரிகள் உறுதிமொழிகள் கொடுத்துவிட்டு, அவற்றைப் பிறகொரு காலத்தில்மீறி நடப்பதன் அர்த்தமென்ன? அதைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை என்பதை நான் பன்முறையும் வற்புறுத்துவேன். எங்கள் மதக் கடமைகளில் தலையிடுவதில்லையென்று விக்டோரியா மகாராணியார் வாக்குறுதி கொடுத்தார். இப்போது தலையிடுவதின் கருத்தென்ன? வாக்குறுதி கடவாமல் நடந்து வரும் வரையில் தான் நாங்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். எத்தனையோ கஷ்டங்களை நாங்கள் சகித்து வந்துவிட்டோம். வாக்குறுதிகளையும் நீங்கள் மீறி நடப்பீர்களானால் எங்களிஷ்டப்படியே நாங்கள் நடப்போம். துருக்கியைத் துண்டாக்க மாட்டோமென்று 1914-ல் சொல்லிவிட்டு மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அதை 1920-ல் மீறி நடக்கப்பார்க்கிறார். நாங்கள் சும்மா விடமாட்டோம். நீங்களும் சும்மாயிருக்கக்கூடாது. வெகு நெருக்கடியான நிலைமை இந்தியாவில் ஏற்பட்டிருக்கிறது. பலர் தேசத்தைவிட்டு முஹாஜிர்களாக ஆப்கானிஸ்தானத்

துக்கு ஏற்கெனவே புறப்பட்டு விட்டார்கள். பலர் புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அமீரும் வாருங்கள் என்கிறார். மெஸபொடோமியாவிலும் பாரசீகத்திலும் இந்தியத் துருப்புகள் உங்களுக்காக இனிச் சண்டைபோடமாட்டா. ஆகையால் நிலைமையின் நெருக்கடியை உணர்ந்து நியர்யம் செய்யுங்கள் என்று உருக்கமாய்ப் பேசினார்.

---

## பலமான அஸ்திரம்

[1921-ம் வருடம் ஏப்ரல் மீதம் 3-ந் தேதி சென்னை கடற்கரையில் கூடின ஒரு பெரிய மகாநாட்டில் மௌலானா முகமத் அலி பின் வருமாறு பேசினார்].

நண்பர்களே, இந்நாட்டு பாஷையல்லாத ஒரு அன்னிய பாஷையில் நான் பேசவேண்டியிருக்கிறதேயென்று வருத்தப்படுகிறேன். இந்தியா வெங்கும் ஒரே பாஷையில் பேசவும் காரியங்கள் நடத்தவும் வேண்டுமென்ற அவ்வளவு விசால திருஷ்டியும் தேசிய உணர்ச்சியும் இப்போது ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் அதி சீக்கிரத்தில் அம்மாதிரியான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுமென்று நான் பூரணமாய் நம்புகிறேன். எந்த அன்னிய பாஷையில் இன்று நான் பேசுகிறேனோ, அந்த பாஷை நமது அடிமைத்தனத்துக்கு ஒரு பொதுவான பட்டயமாகும். இந்த ஆங்கிலக் கலைஞானத்தை விரும்பி நிற்போர் இன்னும் வெட்கப்படவில்லை. இவர்கள் வெட்கத்தால் தலை குனியவேண்டும். நமது பொதுவான சுயேச்சைக்கு பட்டயமாய் இருக்கக்கூடிய தேசியக் கல்வியையே



நாம் நாடி நிற்கவேண்டும். கடவுள் அருளால் அது அதி சீக்கிரம் கிடைத்துவிடும். மகாத்மா காந்தியை நீங்கள் பின்பற்றுவீர்களானால் சுயராஜ்யம் கிடைக்க வெகு காலமாகாது. சென்னை மாணவர்கள் கலாசாலைப் படிப்பை இன்னும் விட்டு நீங்கவில்லை. (வெட்கம், வெட்கம்). ஐரோப்பியரின் ஆதரவில் கல்வி கற்பதையே நீங்கள் பெருமையாய் நினைக்கிறீர்கள். நம் நாட்டில் ஒன்றுமே நடக்கவில்லைபோல் சென்னைச் சிறுவர்கள் உல்லாசமாய்ப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். இம்மஹத்தான (இரத்தம் சிந்தும் சுபாவமில்லாத) புரட்சியைப்பற்றிய சரித்திரம் பிறகொருகாலத்தில் எழுதப்படும்போது, இந்தியாவிலுள்ள மற்றப் பிரதேசத்தார் உடல் பொருள் ஆவி மூன்றையும் சுயராஜ்யத்துக்கு அர்ப்பணம் செய்தார்களென்றும், சென்னைச் சிறுவர்கள் மட்டும் ஷேக்ஸ்பியர் மில்டன் போன்ற ஆங்கில காவியங்களை படித்துக் கொண்டிருந்ததாகவும் அதில் குறிப்பிட உங்களுக்குச் சம்மதந்தானா? இந்தியாவின் விடுதலைக்குப் போர்நடந்த காலத்தில், ஒவ்வொருவரும் தங்களாலான தியாகத்தைச் செய்துகொண்டிருந்த காலத்தில், சென்னை மாணவர்கள் மட்டும் பரிக்ஷைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள் என்ற அவ பெயருக்கு ஆளாக நீங்கள் உண்மையில் விரும்புகிறீர்களா? (இல்லை இல்லை.) தேச விடுதலையைப் பார்க்கிலும் பட்டங்களை, நீங்கள் பெரிதாகக் கருதுவது பெரும் பிழையாகும். நிற்க, படித்த வகுப்பினர்தான் சுயேச்சைக்கு உழைத்தாகவேண்டுமென்ற நியதி இல்லை. படித்தவர்கள் இல்லாவிட்டால் தேசவிடுதலைக்கான முயற்சிகள் பிரயோஜனப்

படாவென்று நினைப்பதும் தவறு. ஒத்துழையாமை இயக்கம் சர்வஜன இயக்கமாகும். குறிப்பாய் ஒரு வகுப்பினரையே அவ்வியக்கம் நம்பி யிருக்கவில்லை. ஆங்கிலம் படித்தவன் என்று சொல்லிக் கொள்ளக் கூட எனக்கு வெட்கமா யிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தேசத்துக்காகச் செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டு. அவரவருடைய பாப புண்ணியங்களுக்கு ஒரு காந்தியோ தாஸரோ ஜவாப்தாரியாக மாட்டார்கள். கடவுளுக்குப் பதில் சொல்லவேண்டிய காலம் வரும்போது, அவரவர் தம் கடமையைச் செய்து முடித்ததாக நிரூபிக்க வேண்டியிருக்கும். இந்த நிலைமையில் சென்னைச் சிறுவர்களின் அசிரத்தையைப் பார்க்க என் மனம் புண்ணுறுகின்றது. உங்களை ஒரு ராக்ஷஸப் பாம்பு சுற்றிக்கொண்டிருக்கிறது. அதினின்றும் விடுபட்டு வெளிவர நீங்கள் பிரயத்தனப்பட வேண்டும். மேனாட்டுக் கல்வியாகிய பாம்பின் வாயில் நீங்கள் அகப்பட்டு தத்தளிப்பதைப் பார்க்க என் மனம் சகிக்கவில்லை. அக்கல்வியாகிய விஷத்தை உண்ணச் செய்து உங்களை நசுக்கப் பார்க்கிறார்கள். சென்னை முஸ்லீம்களுக்கு மத உணர்ச்சி யில்லையா? இருந்தால் அதை யேன் அநுஷ்டானத்தில் காட்டக்கூடாது? கனம் பரஞ்சபே போன்ற புதிய மந்திரிகளுக்கும் வயதான பெரியவர்களுக்கும் பள்ளி பகிஷ்காரம் கட்டோடு பிடிக்கவில்லை. குடும்ப வாழ்வை அது கெடுத்துவிடுமென்று அவர்கள் அஞ்சுகிறார்கள். நமது பண்டைக்காலக் கல்விமுறையை அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த ஆங்கிலக் கல்வியில்தான் அவர்களுக்கு நம்பிக்கை யிருந்துவருகிறது. நம்பிக்கை யிருந்தால் கூட அதை வெளியில் சொல்ல



தைரியம் கிடையாது. நம்மில் பலர் உள்ளும் புறமும் ஒத்திருப்பதில்லை. தேசாபிமான முடையோர் ஒரு ராக்ஷஸனால் நசுக்கப்பட சம்மதிக்க மாட்டார்கள். பெற்றோர்களுக்கு ஒரு கொள்கையில் நம்பிக்கை யில்லாமல் இருக்கலாம். பிள்ளைகள் அதற்காக கஷ்டப்படுவதுண்டா? பிரஹ்லாதன் தன் தகப்பனை மீறி நடக்கவில்லையா? அப்ராஹாம் தனது மூத்தோர்களை மீறி நடந்ததில்லையா? தியாகபுத்தி வேண்டும். பண்டைக் கால பெருமையில் நமக்கு நம்பிக்கை வேண்டும். பரிக்ஷைக்குப் பணம் கட்டவும், பட்டங்கள் பெறவும் ஆசைப்படாதீர்கள். உள்ளும் புறமும் ஒத்துவாழுங்கள். ஜனத்திரள்களிடத்தில் இன்னும் ஸத்தியம் அழிந்துவிடவில்லை; எவ்வித தியாகத்துக்கும் தயாரா யிருக்கிறார்கள். தேசத்துக்காக உயிரையும் கொடுப்பார்கள். படித்த வகுப்பினர் குறுக்கே விழுந்து மறித்தாலும் தேசத்தின் முற்போக்கைத் தடுக்க முடியாது. புதிய ராஜப்பிரதிநிதி இந்தியாவுக்கு வந்துவிட்டார். ஏதோ சிறிதுகாலம் அவர் ஆளப்போகிறார். அதுவும் சொற்பகாலந்தான். (கரகோஷம்). சீக்கிரம் சுய ராஜ்யம் வந்துவிடும் எல்லோரையும் கூட்டிவைத்து அவர் பேசப் போவதாகக்கேள்வி. அவர் நல்லவரா யிருக்கலாம். எங்களைச் சிறையிலிடுவதா யிருந்தாலும் நாங்கள் தயாரா யிருக்கிறோம். (கரகோஷம்). மிஸ்டர் யாகுப் ஹஸனைப் போல் நாங்களும் சிறைக்குப் போவோம். நாங்கள் சிறைக்குப் போவதனால் இந்நாடு சுயேச்சையடைந்தால் அதைக்கொண்டு நாங்கள் திருப்தியடைவோம். நாங்கள் தூக்குப் போடப்பட்டு மாண்டால் அந்த க்ஷணமே இந்த நாட்டுக்கு உயிர்

உண்டாய்விடும். சாகத் தயாராயிருந்தால்தான்
பிழைப்பதற்கு வழி பிறக்கும். மிஸஸ் பெஸண்டு
கூட இதைச் சொல்லியிருக்கிறார். நாங்கள் மாண்
டால் அன்றைக்கே இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்
க்ஷீணிக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உதிக்க
வேண்டும். அவ்வாறு உதிக்கச் செய்வீர்களா? அவ்
வளவு தைரியம் உங்களுக்கு இருந்தால் சிவில் ஸர்விஸ்
வர்க்கத்தார் இஷ்டப்படி பேசுவார்களா? எனது
சகோதரர் ஷவுக்கத்துடன் சேர்ந்து வாசித்த கனம்
டாக்டர் ஸாப்ரூ இப்போது பெரிய பதவி வகிக்
கிறார். அவரும் எனது சகோதரரும் சில வருஷங்
களுக்கு முன் பரஸ்பரம் ஏதோ பேசிக்கொண்ட
தாகவும், அதை இப்போது ஸாப்ரூ கவர்ன்மெண்
டுக்கு வெளியிடுவதாகவும் பயமுறுத்தப்படுகிறது.
எந்த கவர்ன்மெண்டை டாக்டர் ஸாப்ரூ இப்போது
ஆதரிக்கிறாரோ அதே கவர்ன்மெண்டை அவர்
தூற்றிப் பேசியதுண்டு. எங்களைப்பற்றிய ரகஸ்
யத்தை அவர் வெளியிடட்டும் பார்ப்போம். நாங்கள்
எழுதிய கடிதம் சிறைச்சாலையிலிருந்து கவர்ன்மெண்
டுக்குப் போய்ச் சேர்ந்து, அங்கிருந்து இந்தியா
மந்திரியை அடைந்து, அவரால்தான் விடுதலை அடைந்
தோம். அதற்கு முன் சிறைக்குள்ளேயே யிருந்
தோம். ஆப்கானிஸ்தான் அமீரோடு எங்களுக்கு
ரகஸ்யம் எதுவும் கிடையாது. இன்றைக்கும் அமீரோ
ஜெர்மானியரோ, துருக்கியரோ இந்தியாவை ஜயித்து
நம்மை ஆளலாம் என்ற உத்தேசத்துடன் இந்தி
யாவின் மேல் படையெடுப்பார்களாகில், அவர்களை
நாங்கள் எதிர்த்து வாள்கொண்டு போர் புரிவோம்.
(கரகோஷம்). ஒரு தடவை நாம் அடிமையாகப்



பட்டுவிட்டோம். இனிமேல் அடிமைகளா யிருக்க
மாட்டோம். இந்தியாவை ஜெயிக்கவேண்டுமென்ற
எண்ணம் அமீருக்கு உண்மையில் கிடையாது. எதற்
காக நசுக்கவேண்டும்? ஆனால், நமது இஸ்லாத்தை
நசுக்கவும், ஆப்கானிஸ்தானத்தைப் பிடிக்கவும், கிலா
பத்தை ஒழிக்கவும் முயலுவோரிடத்தில், ஆப்கன்
அமீருக்கு வெறுப்புண்டாகிப் போர் தொடங்குவா
ரானால், நாம் ஒத்துழையாமையைக் கைக்கொள்ளுவ
தோடு நிற்கமாட்டோம். மதத்துக்காக உயிரை
விடவும் தயாராயிருப்போம். (அல்லாஹோ அக்பர்
என்ற கூக்குரல்). இந்தியா கவர்ன்மெண்டுக்கு நாங்
கள் சிறையிலிருந்த போதும் இதைத்தான் சொன்
னோம், இப்பொழுதும் அவ்வாறே சொல்லுகிறோம்.
கவர்ன்மெண்டுக்குப் பயித்தியம் பிடித்தாலொழிய
எங்களைச் சிறையிலிட நியாயமில்லை. கவர்மெண்டைச்
சேர்ந்த அங்கத்தினர்கள் பிழை செய்தால் மட்டும்
அவர்களுக்குச் சிறை கிடையாதா? அவர்களை
அடைத்து வைக்க பைத்திய ஆஸ்பத்திரி இல்லையா?
ஆனால் கவர்ன்மெண்டார் எது வேண்டுமானாலும்
இந்நாட்டில் செய்யலாம். ஆகையால் ஒரு நிமிஷங்
கூட வீணாக்காதீர்கள். காலத்தை வியர்த்தமாக்க
இது சமயமன்று. புதிய ராஜப்பிரதிநிதி என்ன செய்
வாரோ என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். அவர்
தம்மாலானதை இஷ்டமானால் செய்யட்டும். எனக்கு
அவர் விரோதியல்ல. எனது தேசத்தாரிடத்தில் எனக்
குள்ள வாஞ்சையை நான் தெரிவிக்காமல் முடியாது.
நமக்குள்ள ஒரே லக்ஷியத்திலேயே இனி ஈடுபட்டுக்
கிடக்க வேண்டும். நம்முன் 3 மாதந்தான் பாக்கி
யிருக்கிறது. காந்திக்கு வெற்றி வாங்கித்தரவேண்டும்.

மகா யுத்தத்தின்போது ஆளும் பணமும் வேண்டிய அளவு கொடுத்து கவர்ன்மெண்டுக்கு உதவினீர்கள். காந்திக்கும் அவ்வாறே ஏன் உதவக்கூடாது? உங்களுடைய உதவியால் கவர்ன்மெண்டார் வெற்றிக் கொடி நாட்டிய பின் ரௌலட் சட்டத்தை உங்களுக்கு இனாமளித்தார்கள். மகாத்மா காந்திக்கு நீங்கள் வெற்றி கிடைக்கச்செய்தால் சுயராஜ்ய சாதனத்தை அவர் உங்களுக்கு அளிப்பார். அடிமைச் சங்கிலியை நாம் அறுத்துத் தள்ளவேண்டும். ஜூன் மாதக் கோடிக்குள் ஒரு கோடி ரூபாய் வேண்டும். காங்கிரஸ் சபையிலும் ஒரு கோடிப்பேர் சேரவேண்டும். உங்களுக்குச் சேர இஷ்டமா? (ஆம் ஆம் என்ற கூக்குரல்). தலைக்குக் கால் ரூபாய் சந்தா கொடுத்தால் போதும். நம்மிடத்தில் ஆயுதமில்லை. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைப் போல் நமக்குப் பீரங்கிகள் இல்லை. பலாத்கார மற்ற ஒத்துழையாமையும் சுதேசிய விரதமுந் தான் நமது ஆயுதங்களாகும். ஆனால் பீரங்கி இரண்டொருமைல் தூரந் தான் போகும். நமது ஆயுதங்களோ 6 ஆயிரம் மைல் தூரம் சென்று அங்கிருப் போர்களை வீழ்த்தி விடும் வல்லமையுடையன. லார்ட் ஆம்தில் என்ற பழைய சென்னை கவர்னர் இங்கிலாந்திலிருந்து கொண்டு நமது ஒத்துழையாமையைப் பார்த்து கொட்டாவி விடுகிறார். 70 கோடிப் பவுன் வியாபாரத்தில் நஷ்டமேற்பட்டு விடுமே யென்று அவர் மனம் கலங்குகின்றார். ஆகையால் சுயராஜ்யம் நமது கையிலே தான் இருக்கிறது. சுயராஜ்யம் வரும் வரையில் ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் அதே லட்சியமாய் வேறு கவலை யின்றி சலியாமல் உழைக்க



வேண்டும். தற்சமயம் இந்நாடு பிறர் கையிலிருக்கிறது. பாரதமாதா விதந்துவாய்ப்போய் விட்டாள். உங்களுக்கு நகை எதற்கு? ஆபரணங்கள் எதற்கு? எதற்காகக் காப்புகள் அணிய வேண்டும்? காங்கிரஸ் கஜானாவை நிரப்பப் பாருங்கள். அன்னிய உடைகளை எரித்துப் போடுங்கள். உக்கிரமான தேசாபிமானத்துடன் நீங்கள் ஒவ்வொருவரும் வாழுங்கள். ஆறுமாத காலத்தில் சுயராஜ்யம் வந்து விடும். இது ஸத்தியம். திரௌபதையைப் பாண்டவர்களின் விரோதிகள் துயிலுரித்தது போல் நம் பாரத மாதாவின் ஆடையை மாஞ்செஸ்டர் வியாபாரிகள் உரித்துக் கொண்டிருக்கிறார்கள். பாரத மாதாவின் மானத்தைக் காக்கவேண்டிய பொறுப்பு நம்முடையதேயாகும். ஸத்தியம், புத்தியென்பது உங்களுக்கு இருக்குமானால், தேசாபிமானம் உங்களுக்கு வாஸ்தவத்தில் உண்டானால், அடிமைத்தனத்தை நீங்கள் ஒழிக்க விரும்பினால், சுயேச்சையை அடைய உங்களுக்கு ஆசை இருக்குமானால், இந்த அடிமைக் கல்வியையும் அன்னிய வஸ்திரங்களையும் கட்டியெறிந்து விட்டு கைராட்டினங்களை நீங்கள் உபயோகிக்க வேண்டும். இராட்டினவேலை ஸ்திரீகளுடையதன்றோ வென்று நீங்கள் கேட்கலாம். உங்களுக்கும் ஸ்திரீகளுக்கும் என்ன வித்தியாஸம்? ஸ்திரீகளைவிடக் கேவலமாய் நீங்கள் இருக்கும் நிலைமையில், ஸ்திரீகளின் வேலையை நீங்கள் ஏன் செய்யக்கூடாது? ஸ்திரீகளின்பேரில் வீண் பழி சுமத்தாதீர்கள். ஆண்மையையும் புத்தியையும் நீங்கள் இழந்து, அடிமைகளாயும் பேடிகளாயும் கிடக்கிறீர்கள். ஆகையால் இராட்டினங்களை வாங்குங்கள். ஆண்டவன்

முன்பாக நீங்கள் உங்களுடைய காரியங்களுக்கு ஜவாபு சொல்ல வேண்டிய ஒரு காலம் வருமென்பதை நினைத்துப் பாருங்கள்; நமது இஸ்லாத்தின் பீடத்தை நசுக்கிச் சின்னாபின்னப்படுத்தி விட்டார்கள்: உங்களாலானதைச் செய்யத்தவறக்கூடாது. உங்களுக்கு ஆதரவளிக்கும் ஹிந்துக்களுக்கு நீங்களும் ஆதரவாயிருங்கள். எந்த இந்தியத் துருப்புகள் மெஸபொடேமியாவையும் மற்று மிடங்களையும் பிரிட்டிஷாருக்கு ஜெயித்துக் கொடுத்தனவோ, அதே துருப்புகளைக் கொண்டு பிறநாட்டு ஜனங்களையும் அடிமைப்படுத்தப் பார்க்கிறார்கள். பின்னிட்டுப் பழிக்குப்பழி வாங்கவே இது இடங் கொடுத்து விடக்கூடும். முஸ்லீம் புண்ணிய க்ஷேத்திரங்களை முஸ்லீம்களல்லாதவர்களின் கையில் நாம் விட்டுவைக்கவே கூடாது. ஈச்வர ஆக்ஞையை நாம் மீறி நடக்கலாகாது.''

---

## கிலாபத்

[1920-ம் வருடம் பிப்ரவரிமாதத்தில் கல்கத்தாவுக்கு மௌலானா ஷவுகட் அலி போயிருந்தபோது 'அமிருத பஜார்' பத்திரிகையின் பிரதிநிதியொருவர் அவரைப் பேட்டிகண்டு வெகுநேரம் பேசினார்.]

கேள்வி:—கான்ஸ்டாண்டிநோபில் நகரைத் துருக்கியரிடம் விட்டுவிடுவதாய் சமாதானக் கான்பரன்ஸில் தீர்மானமாயிருப்பதால், இந்திய முஸல்மான்கள் இனி அது விஷயமாய்ப் புனராலோசனை செய்யத் தயாராயிருக்கிறார்களா?

பதில்:—கிலாபத்து விஷயம் கேவலம் கான்ஸ்டான்டிநோபில் நகரைப்பற்றி மாத்திரமன்று. இஸ்



லாத்துக்குச் சத்துருவாயிருப்போரின் கையிலிருந்து இஸ்லாத்தின் தருமத்தைக் காத்து அதை நிலை நிறுத்த கலிபாவுக்கு ஒரு பதவியும், அந்தஸ்தும், ஆளப் பிரதேசங்களும் நிரம்ப பிரஜைகளும் இன்றியமையாதனவாகும். யுத்தத்துக்கு முன்னிருந்த நிலைமையிலாவது கலிபா இனிமேலும் இருக்கவேண்டும். அதுவே போதும் போதாததாயிருந்தது. இரண்டாவது மெக்கா, மெதீனா, ஜெருஸலேம் முதலிய எல்லா முஸ்லிம் புண்யக்ஷேத்திரங்களும் முஸல்மான்களின் ஆதிக்கத்திலேயே இருந்துவரவேண்டும். முஸ்லிம்களல்லாத எந்த சமூகத்தினரிடத்திலும் புண்ய க்ஷேத்திரங்களின் பாதுகாப்பு விடப்படக்கூடாதென்று குர்-ஆன் ஆக்ஞாபிக்கின்றது, அதை மீறி நடக்கவேகூடாது. அரேபியா முஸ்லிம்களிடத்திலேயே இருக்கவேண்டும். இது நபிகள் நாயகத்தின் ஆக்ஞை. பொறுப்பு வாய்ந்த பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் யுத்த ஆரம்பத்தின்போது முஸ்லிம்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை அவர்கள் இப்போது மீறி நடக்கக் காரணமே கிடையாது. எங்களுடைய புண்ய க்ஷேத்திரங்களின் விஷயத்தில் யாரும் தலையிடக்கூடாது. ஆகவே கலிபாவுக்கும் பொதுவாய் முஸ்லீம்களுக்கும் சுமார் 1300-வருஷங்களாக இருந்து வரும் மஹத்தான சுதந்திரங்களைப் பிடுங்கிவிட யாருக்கும் அதிகாரம் கிடையாது. இதற்கு மாறான யோசனைகளையோ ஏற்பாடுகளையோ நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

கேள்வி:—துருக்கியின் கீழ் இருக்க அரேபியா தேசத்தார் இஷ்டப்படவில்லையென்றும், ஸர்வதேச சங்கத்தினிடமிருந்து அதிகாரப் பத்திரம்பெற்று

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆட்சி நடத்துவதற்கு அரேபியா கஷ்டப் படுகிறதென்றும் சொல்லப்படுகிறதே, அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

பதில்:—ஒரு தலைப் பட்சமான பேச்சை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. முஸ்லீம்லீக் மகாசபை சில தூதர்களைத் தேர்ந்தெடுத்து அரேபியாவுக் கனுப்பட்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் ஒரு பிரதிநிதியை அனுப்பட்டும். அரேபியா வாசிகளை நேரில் போய்க்கேட்போம். வாஸ்தவத்தில் துருக்கி ஆதிபத்தியத்தின் கிழ் அவர்கள் வசிக்கக் கஷ்டப்படுகிறார்களா என்பது அப்போது தெரிந்து போய் விடும்.

கேள்வி:—அராபிக்காரரைத் துருக்கி மிகக் கடுமையாய் நடத்திவருவதாகச் சொல்லப்படுகிறதே அதென்ன?

பதில்:—அவ்வாறு சொல்வதற்குச் சிறிதும் ஆதாரங்கிடையாது.

கேள்வி:—கிலாபத்து நிதிக்கு வசூலாகும் பணத்தை எப்படிச் செலவிடுவதாக உத்தேசம்?

பதில்:—கிலாபத்து நிதிக்கு 30-லட்சம் ரூபாயாவது சேரவேண்டும். இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா ஆகிய இடங்களுக்குச்சென்று நமது கட்சியை அங்கு எடுத்துச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. மெஸபொடேமியா, ஸிரியா, பாலஸ்தீன், ஹெஜாஸ், நாஜி ஆகிய இடங்களுக்கும் நாம் தூதனுப்ப வேண்டும். இந்தியாவில் தீவிரமான பிரசார வேலை நடத்தவேண்டும். இல்லாவிடில் இந்தியா கவர்ன்மெண்டின் ஆதரவு நமக்கு சுலபமாய்க் கிடைக்காது. கிலாபத்து தூதர்களின் முதலாவது



கோஷ்டி இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, கான்ஸ்டாண்டி நோபிள் ஆகிய நான்கிடங்களுக்கும் போய் விட்டுத் திரும்பும். அவர்கள் இதற்குள் இங்கிலாந்து போய்ச் சேர்ந்திருப்பார்கள். மற்றும் சில தூதர்கள் சிக்கிரத்தில் புறப்பட்டு விடுவார்கள். கிலாபத்து விஷயத்தைப்பற்றி உண்மையைப் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லப்படும். கிலாபத்து பிரச்னையைத் திருப்திகரமாய்ப் பைசல் செய்யாமற் போனால் அதன் மூலமாய் ஏற்படக்கூடிய ஆபத்தை அவர்களுக்கு ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கவே நமது தூதர்கள் அங்குபோயிருக்கிறார்கள். நேச தேசத்தார் துருக்கி விஷயத்தில் இனிமேலும் பிடிவாதமாயிருப்பார்களாகில் என்ன நேருமோ யாருக்குத்தெரியும்? யார் சொல்ல முடியும்?

கேள்வி:—இந்திய முஸல்மான்களிடத்தில் துருக்கியருக்கு அபிமான மில்லையென்று ஹரிதயால் சொல்லுகிறாரே அது உண்மைதானா?

பதில்:—எனது சகோதராகிய முகமது அலி 1913-ம் வருஷத்தில் பால்கன் யுத்தத்தின் போது டாக்டர் அன்ஸாரியையும் வேறு சில ரணவைத்தியர்களையும் அழைத்துக் கொண்டு துருக்கிக்குப் போனார். துருக்கி சுல்தான் முதற் கொண்டு எல்லோரும் அவர்களுடைய பேருதவியைப் பாராட்டி, விசேஷ அன்புகாட்டி நடந்துகொண்டார்கள். இந்தியரிடத்தில் அவர்களுக்குப் பூரண அபிமானம் இருந்து தான் வருகிறது. அதை அனுஷ்டானத்தில் ஏன் காட்டவில்லையென்றால், இந்திய முஸல்மான்களுக்கு எவ்விதக்கஷ்டமுமில்லையென்று அவர்கள் நினைத்துவருவதால் தான். பிரிட்டிஷ் ஆட்சியின்

கீழ் இந்திய முஸல்மான்கள் சுகமாய் வாழ்ந்து வருவதாக துருக்கியர் நினைத்து விட்டார்கள். ஹரிதயால் என்பவர் அரைப் பைத்திய மென்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு சமயம் பெரிய புரட்சிக்காரராயிருந்துவிட்டு நீடரென்று இப்போது அவர் அந்தரடிப்பதற்குக் காரணந் தெரியவில்லை. துருக்கியருக்கு எங்களிடத்தில் விசுவாச மிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவர்களிடத்தில் இந்திய முஸல்மான்களுக்கு விசேஷ அபிமானம் இராமலில்லை.

கேள்வி :—கிலாபத்து விஷயமாய் இன்னும் ஏதாவது சொல்ல விருக்கிறதா ?

பதில் :—இன்னும் சில கூறுகிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மையையும் இந்தியாவின் க்ஷேமத்தையும் உத்தேசித்து நான் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு ஒரு வார்த்தை சொல்வேன். அதாவது, ஏகாதிபத்தியப் பேய்பிடித்துச் சில ராஜதந்திரிகள் நாடு பிடிக்கும் வேலையில் தீவிரமாய் இறங்கி யுழைப்பதனு லேற்படக்கூடிய ஆபத்து சாமான்யமானதல்ல. அந்தப் பாராளும் ஆசை அவர்களை விட்டொழியவேண்டும். தங்கள் விஷயத்தில் வந்து குறுக்கிடுவோரை முஸல்மான்கள் சும்மா விடமாட்டார்கள் ; சமாதானம் நிலைத்திராது. குர்ஆனுடைய அக்ஞையை யாரும் மீறி நடக்காதபடி பார்த்துக் கொள்வது இந்திய முஸல்மான்களின் கடமைகளிலொன்று. அக்கடமையை நிறைவேற்றுவதில் எனது ஹிந்து சகோதரர்கள் எங்களோடு மனப் பூர்வமாய் ஒத்துழைப்பதற்கு ஆண்டவன் கட்டாயம் வெகுமதி யளிப்பார்.



கேள்வி :—அரசியல் திருத்தத்தைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயமென்ன ?

பதில் :—சுமார் 10, 15-வருஷங்களுக்கு முன் இத்திருத்தங்களைச் செய்திருந்தால் அதை எல்லோரும் பாராட்டியிருப்பார்கள். ஆனால் மகா யுத்தத்துக்குப்பின் இப்பேர்ப்பட்ட திருத்தங்களை ஒருவர் செய்து கொடுத்தால் அதை யார்தான் விரும்புவார்கள்? சீர்திருத்தம் செய்து கொடுத்தவர்களைத் தவிர வேறு யாரும் சந்தோஷப்படமாட்டார்கள். விசாரணை யில்லாமலும் நியாயமானகாரண மில்லாமலும் உத்தம தேசாபிமானிகளைப் பந்தோபஸ்தில் வைக்கவோ அவர்களை உபத்திரவப்படுத்தவோ அதிகாரி வர்க்கத்தினருக்கு இத்திருத்தத்தினுல் அதிகாரம் போய்விடவில்லை. கவர்ன்மெண்டார் இங்கிளிஷ்டப்படி பிறநாடுகளோடு சண்டைபோடுவதில் நமது நாட்டுப் பணத்தைவாரிச் செலவிடுவது இச்சீர்திருத்தத்தினுல் நின்று போய்விடாது. பிறநாடுகளோடு சண்டை சச்சரவுசெய்யும் போது நம்மைக் கலந்துகொண்டு கவர்ன்மெண்டார் காரியம் செய்வார்களோ வென்றால், அதுவுங் கிடையாது. இச்சுதந்தரங்களில் ஒன்றாவது நமக்குக் கிடைக்காதிருக்கையில், அதைக் கண்டு நாம் எப்படி உற்சாகப்பட முடியும் ?

கேள்வி :—எதற்காக நீங்கள் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டீர்கள்? அதிகாரிகள் உங்களை மரியாதையாய் நடத்தினார்களா? சத்துருக்களோடு நீங்கள் கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொண்டிருந்ததுண்டோ ?

பதில்:—சகிக்க முடியாத நிர்ப்பந்தங்கள் எத்

தனையோ எங்கள் மீது விதிக்கப்பட்டிருந்தன. அந்நிர்ப்பந்தங்களை மீறி நாங்கள் நடந்ததில்லை. இரண்டொரு உத்தியோகஸ்தர்களைத்தவிர மற்றயாரும் எங்களை மரியாதையாகவே சிறைவாசத்தின்போது நடத்தினார்கள். எங்களை எதற்காக பந்தோபஸ்தில் வைத்திருந்தார்களென்று நான் சொல்லமுடியாது. எங்கள் முன்பாக எவ்விதமான குற்றப்பத்திரமும் வாசிக்கப்படவில்லை. ஏதோ பொதுஜன சாவதானத்துக்கு எங்களால் அபாயம் ஏற்பட்டுவிடுமென்ற ஹேஷ்யத்தால் அவர்கள் கைதி செய்ததாகத் தெரிகிறது. சத்துருக்களோடு நாங்கள் கடிதப் போக்குவரத்து செய்திருந்தால் அதை எங்களுக்கு அதிகாரிகள் காட்டியிருக்கலாம். ஆனால் காட்டவில்லை. அப்படிப்பட்ட கடிதங்களொன்றுவும் கிடையாது. இஸ்லாத்தில் எங்களுக்கு விசேஷப்பற்று இருப்பதை ஒரு காரணமாகக் கொண்டே அவர்கள் பந்தோபஸ்தில் வைத்திருந்தார்களென்று தெரிகிறது. சத்துருக்களோடு நாங்கள் ஏதேனும் கடிதப் போக்குவரத்து செய்திருந்தால் கவர்ன்மெண்டார் அவற்றைப் பகிரங்கமாகப் பிரசுரிக்கட்டும். நாங்கள் நிரபராதிகள் என்பதை மீண்டும் வற்புறுத்துகிறோம்.

---

## துருக்கி உடன்படிக்கை

துருக்கி உடன்படிக்கையைப் பற்றி கீழே கையொப்பமிட்ட இந்திய கிலாபத் தூதர்கள் மிஸ்டர் லாயிட் ஜார்ஜுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தின் ஸாரம் என்னவென்றால்:—



பாரிஸ், ஜூலை 10—

மகா கனந்தங்கிய டேவிட் லாயிட் ஜார்ஜுக்கு,

ஐயா,

சென்ற மார்ச்சுமாதம் 19-ந்தேதி கிலாபத் தூதர்களாகிய நாங்கள் தங்களை பேட்டிகண்டு கிலாபத்து விஷயமாய் எங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்துக்கொண்டோம். கலிபாவின் ராஜ்யாதிகாரத்துக்காவது முஸ்லீம்களின் புண்ய க்ஷேத்திரங்களுக்காவது எவ்வித குறைவும் ஏற்படக் கூடாதென்று அப்பொழுதே நாங்கள் அறிவித்திருந்தோம். ஆனால் எங்களிடத்தில் விசேஷ அனுதாபங்காட்டித் தாங்கள் பதில் சொல்லவில்லையென்பது பிரத்தியட்சம். மேலும், தாங்கள் சொல்லிய சில தகவல்கள் ஆதாரமற்றவையென்று நிரூபிக்க எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. உங்களுடைய அந்தரங்க காரியதரிசியைக் கேட்டும் பயனில்லை.

துருக்கிக்கு விதிக்கப்பட்டிருக்கும் சமாதான நிபந்தனைகளைப்பற்றி தமாத் பரீத்பாக்ஷா முதலியவர்கள் ஏதோ அபிப்பிராயம் எழுதிக்கொடுத்திருப்பதால், எங்கள் அபிப்பிராயத்தையும் நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். கிலாபத்தும் ஜஸீரத்துல்-ஆரப்பும் என்ன கதியடைந்தால் என்னவென்று இந்திய முஸ்லீம்கள் அசிரத்தையாயிருக்க முடியாது. துருக்கியர் இவ்வுடன் படிக்கையை ஒப்புக்கொண்டால் கூட உண்மையான முஸ்லீம்கள் யாரும் அதை ஒப்புக் கொள்ளப் போகிறதில்லையென்று ராஜப்பிரதிநிதிக்கு நாங்கள் கண்டிப்பாய் சென்ற ஜனவரி மாதம் 19-ந் தேதி அறிவித்ததை இங்கெடுத்துக் காட்ட விரும்புகிறோம். மனச் சாட்

சியை மதித்து நடக்கும் எந்த உண்மையான முஸல்மானும் துருக்கி உடன்படிக்கையை ஒப்புக்கொள்ள முடியாது. இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் அதை ஒப்புக் கொள்ளவில்லை. மகா கடுமையான நிபந்தனைகள் துருக்கிக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. 10-கோடி முஸ்லீம்களின் விருப்பத்தைக் கொஞ்சமும் மதிக்காமல் காரியங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. துருக்கியர் இவ்வுடன்படிக்கையில் கையெழுத்துப்போட்டால் கூட, இந்திய முஸல்மான்கள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை யென்பதைமட்டும் நாங்கள் கண்டிப்பாய்த் தெரிவித்து விடுகிறோம். கலீபாவின் அந்தஸ்தையும் ஆதிக்கத்தையும் குறைக்கக்கூடிய எந்த நிபந்தனையையும் நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. இஸ்லாத்தின் மதக் கோட்பாடுகளில் அனுவசியமாய்க் குறுக்கிட்டால் அது ஆபத்திலேயே வந்துமுடியும். கிலாபத்து பிரச்னை முஸ்லீம்களாலேயே பைசல் செய்யப்பட வேண்டும். மற்றவர்கள் அதில் தலையிடக்கூடாது. 1300 வருஷங்களாய் எந்த அன்னிய நாட்டாரும் துருக்கி ராஜ்யத்திலாவது, மெஸபடோமியா, அரேபியா, பாலஸ்தீன், ஸிரியா முதலிய விடங்களிலாவது ஆதிக்கம் செலுத்தியதில்லை. ஆகையால் அதிகாரப் பத்திரம் பெற்று இனி ஆதிக்கம் செலுத்துவதென்பது முடியாத காரியம். அதை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம். அப்படி யாராவது அதிகாரப் பத்திரம் பெற்றால் அவர்கள் முஸ்லிம்களாகவே யிருக்கவேண்டும். சுய நிர்ணயம் என்ற சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ள தாங்கள், இவ்வாறெல்லாம் முஸ்லிம்களின் விருப்பத்துக்கு விரோதமாக நடக்க நேர்ந்த காரண



மென்ன? அரேபியர் துருக்கி சுல்தானுடைய ஆதிக்கத்தை விரும்பவில்லை யென்றால், பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை விரும்பினார்களென்று அர்த்தமில்லை. பிறருடைய ஆதிக்கத்தை அவர்கள் விரும்பாமல் சுயேச்சையா யிருக்கவே ஆசைப்படுகிறார்கள். ஆகையால் சுய நிர்ணய சித்தாந்தத்தை யனுசரித்தும், இஸ்லாத்தின் கட்டளைப்படியும் காரியங்கள் செய்வதுதான் உசிதமாயிருக்குமென்று எங்களுக்குப் படுகிறது. புண்ய க்ஷேத்திரங்களின் சேவகரும் ரட்சகருமாகிய கலீபாவுக்கு எவ்விதமான அந்தஸ்துக் குறைவும் ஏற்படாதிருக்கும்படி தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கலீபாவுக்கு ராஜ்யாதிகாரம் போதியவளவு இல்லாமல் முடியாதென்பதைக் குறித்து முஸ்லீம்களில் எந்த ஜாதியாருக்கும் அபிப்பிராயபேதம் கிடையாது. யுத்தத்துக்கு முந்தி கலீபாவுக்கிருந்த சுதந்தரங்களிலோ அதிகாரத்திலோ அணுவளவுகூட இப்போது குறையக்கூடாது. முஸ்லீம்களல்லாத ஜாதியார் துருக்கி ராஜ்ஜியத்துக்குள் சுயேச்சையா யிருக்கவிரும்பினால், சுல்தானுடைய அந்தஸ்துக்குப் பாதகம் ஏற்படாவண்ணம் அவர்களுக்கு ராஜ்யத்துக்குள்ளேயே சுய ஆட்சி உரிமைகள் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. மேற்கண்டவாறு நேசக்கட்சியார் நடக்கத் தவறினால், அது முஸ்லிம்களின் மத உணர்ச்சியைக் கொஞ்சமும் மதித்ததாகாது; பொறுப்புற்ற ராஜதந்திரிகளின் உறுதிமொழிகளைக் காப்பாற்றியது மாகாது. முஸ்லிம்களின் ஆதரவும் உதவியும் வேண்டியிருந்த சமயத்தில் அத்தகைய உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டன

வாகையால், அந்த சந்தர்ப்பத்தையும் மதித்து துருக்கிக்கு நியாயம் வழங்கப்படவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துவோம்.

எல்லாச் சத்துரு தேசங்களையும்விட துருக்கியைப் படுமோசமாய் ஏன் நடத்த வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். கான்ஸ்டாண்டி நோபில் கூட துருக்கிக்கு வாஸ்தவத்தில் பாக்கி வைக்கப் படவில்லை. பீரங்கி வாயிலில் ஸதாகாலமும் இருந்து கொண்டு 700 பேரை மெய்க்காவலாளர்களாகக் கொண்டு துருக்கி சுல்தான் ராஜ்யாதிகாரம் செலுத்துவதென்றால் அது கேலிக்கிடமாகவே இருக்கிறது. முஸ்லீம்களின் விருப்பத்தை மதித்துத் தள்ளுவதாயிருக்கிறது. பொறுப்புற்றவர்களின் வாக்குறுதிகளை மீறி நடப்பதாயும் இருக்கிறது. பிரிட்டிஷாரின் வார்த்தையில் கீழ் நாட்டார் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று 1918-ம் வருஷம் ஜனவரி 5-ந் தேதியன்று தாங்கள் பார்லிமெண்டில் பகிரங்கமாய்ப் பேசியதை இங்கு நினைப்பூட்ட விரும்புகிறோம். பிரிட்டிஷாரின் வார்த்தையும் கீர்த்தியும் உண்மையில் காப்பாற்றப் படவேண்டுமென்றிருந்தால், அதைக் காப்பாற்ற இன்னமும் இடமிருக்கிறது. ஏகாதிபத்தியத்துக்கு 1918-ல் நேர்ந்த ஆபத்து முற்றிலும் நீங்கிவிட்டதென்று தாங்கள் நினைத்துவிடக் கூடாது.

உடன்படிக்கையின் ஷரத்துகளில் அபத்தமான அம்சங்கள், எத்தனையோ கிடக்கின்றன. நேசதேசத்தினரின் ஆதி நகரத்தைத் துருக்கி விரும்பவில்லை. உடன்படிக்கையை மாற்றி யமைக்க இடமும் காலமும் இல்லாமற் போகவில்லை. பலாத்காரமாய் உடன்படிக்கையில் கையெழுத்து வாங்குவதனால் இந்திய



முஸல்மான்களும் அவர்களுடைய ஹிந்து சகோதரர்களும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடமிருந்து விலகி நிற்க வேண்டியதைத் தவிர வேறு வழியிராது. ஒற்றுழையாமை நிகழ்ச்சி ஏற்கெனவே ஆரம்பித்து விட்டது. தேசத்தைவிட்டும் பலர் வெளிப்புறப்பட ஆரம்பித்துவிட்டார்கள். ஆகையால் உண்மையான சமாதானம் உலகத்தில் நிலைத்திருக்க வேண்டினால் முஸ்லீம்களின் ஆதரவைப் பெறப் பார்ப்பதே ஒப்பற்ற வழியாகும்.

(ஒப்பம்) முகம்மது அலீ, சையது ஹஸேன், சையது ஸுலைமன் நத்வி, அப்துல்காஸிம்.

---

## ஹிந்து முகம்மதிய ஒற்றுமை உணர்ச்சி

[பம்பாயிலுள்ள சுயராஜ்ய சங்கங்களாலும் பிற சங்கங்களாலும் அலி சகோதரர்களுக்குச் சில தினங்களுக்கு முன் நடந்த உபசாரக் கூட்டத்தில், லோகமான்ய திலகர் அக்கிராசனம் வகித்திருக்க, ஹிந்து முகம்மதிய ஒற்றுமையைப்பற்றியும் துருக்கி கிலாபத் விஷயத்தைப் பற்றியும் ஜனாப் முகம்மது அலி செய்த அரிய பிரசங்கத்தின் முக்கிய ஸாரம் பின் வருமாறு.]

பம்பாய் வாசிகளாகிய நீங்கள் அனைவரும் என்னிடமும் என் சகோதரரிடமும் பரிவுகூர்ந்து, பல விதமாக உபசாரஞ்செய்தீர்கள். எங்களிடம் கௌரவமும் மதிப்பும் காட்டினீர்கள். இதை நினைக்கையில் எங்கள் இருவருக்கும் மனக்களிப்பு உண்டாகாமல், துயரம் உதிக்கிறது. ஏனெனில், தேசத்தின் நலத்தைப் பெருக்கவும், நம் தேசத்தினரைக் கைதூக்கிவிடவும், நாங்கள் செய்திருக்கும் ஊழியம் மிகவும்

அற்பமென்றே எண்ணுகிறோம். இவ்வளவு உபசாரத்திற்கு நாங்கள் இருவரும் இன்னும் மிகுந்த தேச சேவை செய்திருக்கவேண்டுமன்றோ? ஆனது பற்றியே எங்களுக்குத் துயரம் உண்டாகிறது.

நாங்கள் இருவரும் தேசத்திற்காக மிகவும் பாடுபட்டிருக்கிறோமென்றும், தேச க்ஷேமார்த்தம் தண்டிக்கப்பட்டோமென்றும், இம்மகா நாட்டின் அக்கிராசனரான லோகமான்ய பால கங்காதர திலகர் கூறியிருக்கிறார். எங்களது குருவாகிய அப்பெருமான் செய்திருக்கும் தேச சேவையுடன் எங்கள் தேசசேவையை ஒப்பிட்டுப்பார்க்குமளவில், எங்கள் தேச சேவை எந்த மூலை? இந்திய மகா ஜனங்கள் அனைவரும் அம்மகானைப் பூஜிக்கின்றனர். இங்ஙனமிருக்க அப்பெரியாரது வழியைப் பின்பற்றி நடத்தல் எங்களுக்கு எளிதேயாம். நாங்கள் இருவரும் ஏதேனும் தேச சேவை செய்து உங்களுடைய அன்புக்குப் பாத்திரமாயிருப்பின், அப்பெரியாரைப் பின்பற்றி நடந்ததின் பலனேயாகும். எங்களுக்குத் தோன்றியபடி, எது உண்மையோ அதையே நாங்கள் பேசிவந்திருக்கிறோம்.

பாரிஸ்டர் ஜோஸப் பாப்டிஸ்டா மிஸ்டர் ஜம்னுதாஸ் துவாரகதாஸ் தர்ம்ஸே முதலிய பலரும் எங்களுடைய பலவாறான ஊழியத்தை மெச்சிப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய விஷயங்களில் ஹிந்து முகம்மதிய ஒற்றுமை யொன்றைப்பற்றியே நான் பேச விரும்புகிறேன். ஹிந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் ஒற்றுமை யுண்டாகும் வண்ணம் ஆதியில் நான் முகம்மதியருக்குப் போதித்தேனென்று மிஸ்டர் முன்ஷி என்ற பெரியவர் சந்தேகப்



பட்டுப் பேசியது உண்மையே. ஆனால், காம்ரேட் என்ற பத்திரிகையை நான் பிரசுரிக்கத் தொடங்கிய பொழுது, ஹிந்து முகம்மதிய ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டே அப்பத்திரிகைக்கு "காம்ரேட்" (அதாவது நண்பன்) என்று பெயரிட்டேன். இனி, என் தமையனார் சொல்வதுபோல், யாரையும் நடத்திக்கொண்டு ஜனத்தலைவனாய் இருக்க நான் விரும்பியதில்லை. ஜனத்தலைவர்களின் புத்திமதியைப் பின்பற்றி நடக்குமவர்களில் ஒருவனாக இருக்கவே நான் விரும்பினேன். இனி, நமது ராஜீய குருமார்களாகிய லோகமான்ய திலகமகாராஜ், மகாத்மா காந்தி யடிகள், பண்டித மதன மோகன மாளவியாஜீ, பண்டித மதிலால் நேரு ஆகிய இவர்களைப் போன்ற பலரும் ஹிந்து முகம்மதிய ஒற்றுமைக்காக மிகவும் பாடுபட்டிருக்கின்றனர். ஆதலின் அவர்களைப் போற்றுங்கள். அவர்களிடம் அன்பும் அபிமானமும் மதிப்பும் கொள்ளுங்கள். இதனாலேயே நாங்கள் திருப்தியடைவோம். ஸத்தியத்தை நிலைநாட்டவும், தர்மத்தைக் காக்கவும், தேசத்தைக் கைதூக்கி விடவும் அப்பெரியார்கள் நடத்தும் போராட்டத்தில் நாங்கள் இருவரும் கலந்துகொள்ளவே விரும்பியவர்கள்.

இனி, ஹிந்து முகம்மதிய ஒற்றுமை அவசியமென்றுதான் ஆதியிலும் நான் விரும்பியவன். ஆனால், அச்சமயம் முகம்மதிய சமூகத்தினரோ செல்வத்திலும் சரி, படிப்பிலும் சரி, எண்ணிக்கையிலும் சரி, ஹிந்துக்களுக்குச் சரிசமமான நிலையில் இருக்கவில்லை. இல்லாததனால் ஹிந்து சகோதரர்களைக் கண்டு அசூயை கொண்டு அலட்சியமாய் இருந்து வந்தனர். ஆனால், முகம்மதியராகிய நாமும்

நம் சகோதர ஹிந்துக்களைப்போல் முன்னேற்றமடையாதிருக்கிறோமே யென்று தங்களைத் தாங்களே நொந்து கொள்ளாமல் இருந்தனர். ஆதலின், முகம்மதியருக்குள் சுய மதிப்பை யுண்டு பண்ணினால் தான், நலமாயிருக்குமென்று அப்பொழுது கருதினேன். அக்கருத்து சரி யென்று அப்பால் நன்கு புலனாகிவிட்டது. தவிர, ஹிந்துக்களையோ ஆங்கிலேயரையோ நம்பியிருந்துவிடாமல், தன் கையே தனக்கு உதவியென்று முகம்மதியர் கருதி அதற்கேற்ற வன்மையை அடையவேண்டுமென்றும் அப்பொழுது யான் நம்பி யிருந்தேன். அப்பொழுது தான், உண்மையில் ஹிந்து முகம்மதிய ஒற்றுமை ஓங்குமென்றும் நம்பியிருந்தேன். அப்பால் முகம்மதியர் வரவரத் தம் கையே தமக்கு உதவி யென்று கருதி, வன்மைபெற முயலலானார்கள்.

இப்படியிருக்க, தேசத்திற்கே துன்பமும் துயரமும் பாடும் நேர்ந்த காலையில், ஹிந்து சகோதரர்களின் உதவியின்றி தேசம் முன்னேறமாட்டாதென்று முகம்மதியர் கண்டு கொண்டனர்; ஹிந்துக்களும் முகம்மதியரின்றிக் காரியம் நடவாதென்று கண்டு கொள்ளலானார்கள். ஆதியிலே இந்த ஒற்றுமை யுணர்ச்சி அகக்கண் அல்லது ஞானக் கண்ணுக்குப் புலப்பட்டதேயன்றி வெளிப்படையாகப் புலப்படவில்லை. எனினும், ஒற்றுமை யென்னும் வித்தோ முளைக்கத் தலைப்பட்டு வளர்ந்து கொண்டு வந்தது. நாங்கள் பந்தோபஸ்தில் இருந்தபொழுதும், இந்த உண்மையைக் கண்டு கொண்டோம். பம்பாயிலே காங்கிரஸ் மகா சபையும் முஸ்லிம் லீக் மகா சபையும் கூடியபொழுது, இருசபைகளும் ஒத்



துழைக்க வேண்டுமென்று கட்டளை பிறந்தது. இக்கட்டளையோ இலட்சுமணபுரியில் இன்னும் வலுத்தது. எப்படியென்றால், இரு மகா சபைகளும் சேர்ந்து சீர்திருத்த திட்டமொன்றை வரைந்தன. முடிவிலே ஜலியின் வாலாபாக் என்னும் தோட்டத்தில் இருவகுப்பினரின் ரத்தமும் சிந்தப்பட்டு ஒன்றாய்க் கலக்கப்பட்டபொழுது ஒற்றுமை வளர்ந்தோங்கத் தலைப்பட்டுவிட்டது. உண்மையில் இந்த ஒற்றுமை அமோகமாய் வளர்ந்தோங்கி வருவதைக் காண எங்களுக்குப் பாக்கியம் இருக்குமென நாங்கள் இருவரும் கருதியிருக்கவில்லை. எனினும், ஒற்றுமை வளர்ச்சியைக் கண்ணாரக்கண்டு விட்டோம். இனிமேல் நம் லட்சியம் கைகூடிவிடும். நம் லட்சியமென்ன? பல நூற்றாண்டுகளாக பாரத தேச புத்திரர்கள் ஸத்தியத்தை நம்பி நடப்பவர்களென்ற லட்சியமேயாகும்.

கிலாபத் விஷயமாய் முகம்மதியரின் உணர்ச்சி எத்தன்மையதென்று எங்களுக்கு நன்கு தெரியும். என் தமையனாரும் சொல்லியிருக்கிறார். நாங்கள் இருவரும் கிலாபத் கமிட்டியின் தூதர்களாக இங்கிலாந்துக்குப் போகிறோம். எங்கள் ஜனப் ஸையத் ஹூசேனும் வருகிறார். இச்சமயம் முகம்மதியர் சும்மா இருப்பார்களாயின், தலைமேலிருக்கும் ஆபத்தைத் தவிர்க்க முடியாது. சமரஸங்காட்டி விட்டுக் கொடுத்துக் காரியத்தை முடித்து வர நாங்கள் போகவில்லை. இராஜ்ஜிய விஷயமாய் நாங்கள் போகவில்லை. மத சம்பந்தமாகவே போகிறோம். ஆதலின் மத விஷயத்தில் நாங்கள் எதையும் விட்டுக் கொடுப்பதற்கில்லை. விட்டுக் கொடுக்கவும் மாட்டோம்.

முகம்மதிய மகா ஜனங்களின் ஆக்ஞையின் மேலல்லாமல் கடவுளின் ஆக்ஞையையும் தலைமேல் சுமந்து செல்கிறோம். ஆண்டவனுடைய ஆக்ஞையை இதுவரையில் நாங்கள் மீறி நடந்தவர்களல்லர். முகம்மதியரின் மதக் கோட்பாட்டையும் லட்சியத்தையும் மதித்தே துருக்கி விஷயத்தைப் பைசல் செய்ய வேண்டுமென்று நேசக்கட்சியினரை நாங்கள், கண்டிப்பாயும் மரியாதையாயும் கேட்கப் போகிறோம். எங்களுடைய கண்டிப்பான கோரிக்கைகளுக்குப் பக்க பலமாக லட்சோப லட்சக் கணக்கான முகம்மதியர் இருக்கின்றனரென்பதை உணர வேண்டுமென்றும் கிரேட் பிரிட்டனுக்குக் கூறுவோம்.

கிலாபத் விஷயமாய் முகம்மதியருக்கு உணர்ச்சி தோன்றியிருத்தல் சாமானிய மல்ல. மகத்தானதாகும். இதற்கு ஆதாரம் வேண்டுமாயின், கிலாபத் விஷயம் சரிவரப் பைசலாக வேண்டுமென்று பிரமாண்டமான பல மகா நாடுகளில் தீர்மானம் ஏற்பட்டிருக்கவில்லையா? அவ்வேலைக்காக அபரிமிதமான பணம் வந்து குவியவில்லையா? இதுவரையில் வெளியில் தலை காட்டாதவர்களிடமிருந்தும் பணம் வந்திருக்கிறது. நாங்கள் சென்ற விடங்களிலெல்லாம், எங்களுக்கு ஆங்காங்குள்ளோர் விசேஷமான உபசாரம் புரிந்த காரணமென்ன? அந்த உபசாரம் எங்களுக்காகவல்ல. ஆனால், கிலாபத்துக்கே. என்னுடைய கருத்து யாதெனில், மதம் ஒன்றேயாகும். அதன் அங்கங்கள் இரண்டு. ஒன்று தர்மம். மற்றொன்று அதர்மம். ஒரு மனிதன் ஹிந்துவாயினும் சரி, முகம்மதியனாயினும் சரி, பார்ஸிக்காரனாயினும் சரி, கிறிஸ்தவனாயினும் சரி, தர்மத்தையே பின்பற்றி



யிருப்பான். நானும் அப்படியே. தர்மத்தை நிலைநாட்டுவதற்காகப் பாடுபடவேண்டும். அவசியமானால் உயிரையும் விடவேண்டும். இதுவே என் உறுதி. தன் நம்பிக்கையின்படி நடக்கத் துணியாதவனே அதர்ம அங்கத்தைச் சேர்ந்தவன். இப்பொழுதோ முகம்மதியரின் நிலையான மத அம்சம் கெட்டுப் போகும் போலிருக்கிறது. இப்படியிருக்க, முகம்மதியருக்குத் தீமையுண்டாகும்படி ஹிந்துக்களும் பிறரும் சும்மா இருந்துவிடின், எல்லோரும் சமரஸமாய் இருப்பதென்பது எங்கே? இன்றைய தினம் முகம்மதியருக்கு ஆபத்து நேர்ந்திருக்கிறது. நாளைய தினமோ ஹிந்துக்களுக்கு ஆபத்து நேரும். ஆதலால், ஹிந்துக்களும் சரி, முகம்மதியரும் சரி, தர்மம் என்பதை நிலைநாட்ட முயலவேண்டும். தர்மத்தை நிலைநாட்டித் தீருவதென்றே ஹிந்துக்களும் முகம்மதியரும் சங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து இந்திய புத்திரர் மாறுவரோ? மாறார்.

நண்பர்களே! எங்கள் இருவருக்கும் தாங்கள் செய்த கௌரவத்தையும் உபசாரத்தையும் கண்டு நாங்கள் மனமார வந்தனமளிக்கிறோம்; அதோடு நான் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் வந்தனமளிக்கிறேன். ஏனெனில் நாங்கள் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் போய், கிரேட்பிரிட்டனின் முன்பும் சமாதான கான்பரன்ஸின் முன்பும் எங்கள் கட்சியை எடுத்துக் கூறச் சாதகமாய்ப் பிரயாண அனுமதிச் சீட்டு எங்களுக்குக் கிடைத்துளது. பம்பாய் கவர்ன்மெண்டோ எங்களுக்காக ஒரு கப்பல் கம்பெனியுடன் பேசி, எங்களுக்குக் கப்பலில் இடமும் தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

எனினும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைக் கண்டு பேசி காரியத்தைச் சாதிப்பது தான் முக்கியமான வேலை. அங்கே அரசர் பெருமானை நேரில் கண்டு, சீர்திருத்த விஷயமாய் இந்தியருக்குத் திருப்தி ஏற்படாதது ஒரு புறமிருக்க, கிலாபத் விஷயமாய் முகம்மதியருக்கு மன அமைதி ஏற்படாமற் போகும் பொழுது நிலைமை மிகவும் கஷ்டமாகுமென்று எடுத்துச் சொல்ல உத்தேசித்திருக்கிறோம். சீர்திருத்த விஷயமாய் இந்தியருக்கும் திருப்தி ஏற்பட்டு, முகம்மதியரின் மனமும் சாந்தமடையும்படி காரியம் நடக்குமேயானால், கிரேட் பிரிட்டனும் இதரநேச தேசங்களும் உலக மனைத்தையுமே நிரமாய் எதிர்த்து நிற்கலாமென்றும், இந்தியர் அனைவரும் பக்கபலமாய் நிற்பரென்றும், மன்னர் பெருமானுக்குக் கூறுவேன். இப்படிக் காரியம் நடவாமற்போனால், உலகிலே சமாதானம் என்பது இராது.

---

## தேசீயக் கல்வி

பொதுவாகக் கல்வியைப்பற்றி நாம் ஒரு ஏற்பாட்டுக்கு வருமுன் தற்போது முஸ்லீம்கள் என்ற இந்தியாவில் இருந்துவரும் பிரதி முஸ்லீமும் எவ்விதமான கெடுதல்கள் கல்விச்சங்கத்தில் இருக்கின்றன என்றும், அதை சீர்படுத்த என்ன ஏற்பாடுகள் யோசிக்கவேண்டும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அதன் பிறகே தகுந்தபடி சீர்திருத்த யோசனை செய்யவேண்டும். யோசனை செய்வதற்குக் காலம் போக்குவதைக் காட்டிலும் இப்பொழுது குறிப்பாக பின் வருவதை வைத்துக்கொண்டு மேல்



நாளடைவில் பயிற்சிசெய்து கொள்வது நலமெனத் தோன்றுகிறது.

நமது கல்விச்சாலைகள் தற்காலத்தின் நிலைமைக்குத் தகுந்தாற்போல நவீனக் கல்வி இனி வாழ்க்கைக்கு இனியதாய் நடத்தப்படவேண்டும். முஸ்லீம் என்று சொல்லிக் கொள்வதற்கு மீதப் படிப்பு பூரணமாய் கற்றுக்கொடுக்கப்பட்டு தகுந்தபடி பிரதி நபரும் இஸ்லாமத சேனையில் ஒருவனாய் நிற்க வேண்டும். இதற்காக திரு குரானில் பூரண ஞானம் பெறும்படி கற்றுக்கொடுக்க வேண்டியது அத்யாவசியம். ஆகையால் பிரதி வகுப்பிலும் ஆண்டவனுடைய கூற்றுக்களை அரபிபாஷையில் நன்கு அறியவேண்டியதுடன் அந்தந்த பகுதிகளின் சுதேச பாஷைகளிலும் கற்க வேண்டும். ஆரம்பத்திலேயே அரபிபாஷையில் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். இது, பிறகு அந்த பாஷையில் பாண்டித்தியம் பெற மேல் வகுப்புகளில் பிரயோஜனப்படும். தற்போது போதிக்கப்படுவது போல பாலியர்களின் புத்தியைக் குழம்பச் செய்யாது இலக்கணம் கற்பிக்கப்படவேண்டும். தவிர, சாதாரண சுய நடையிலும் பழக்கத்தில் உபயோகிக்கக் கூடிய வண்ணம் அரபி போதிக்கப்படல் வேண்டும்.

அரபி, உருது எழுத்துக்கள் தெரிந்த ஒரு குழந்தைக்கு குரானின் சில கடைசி அத்தியாயங்களை அரபிலும் தாய் பாஷையிலும் போதிக்கப் படுவதோடு 7 வயது குழந்தை முதல் தான் சொல்லும் தியானம் இன்னதென விளங்காது குருட்டு தியானம் செய்யாது விளங்கும்படியாய் நமாஜ் போதிக்கப் படவேண்டும். ஆகையால், சுமார் 12 அல்லது 13 வய

தில் கீழ் வகுப்புகளை முடிக்கும் குழந்தை அரபியில் குர்ரானி ஷெரிப் முடிக்கும் குழந்தை மத்தியில் நடைபெற வேண்டிய தாய் பாஷை தர்ஜமாவையும் உருது தர்ஜமாக்களையும் முடித்து விடவேண்டும். இதனால் இந்த வயதில் குரானின் நஜீராவையும் முடிப்பதோடும் குர்ரான் தர்ஜமாக்களையும் முடித்து விடுவார்கள்.

கீழ் வகுப்புகளின் பின் மூன்று வருஷங்களில் ஆங்கிலம் கற்பது போல ஒரு பையன் அரபியைப் படிக்கவேண்டும். ஆனால், குழந்தை ஒருவன் அந்நிய பாஷையைப் பின் மூன்று வருஷங்களுக்குள் கற்பது கஷ்டமாயினும் ஆரம்ப 5 வருஷங்களில் ஆரம்பமாக அரபி பாஷைகற்பதும் தனது மதப் புஸ்தகங்கள் படிப்பதும் தனக்குத்தானே ஒருவித ஊக்கத்தைப் பெறுவான். ஆகையால் இவ்வித உணர்ச்சி உண்டாக்க வேண்டுவது முக்கியமாகையால் இந்த முறையே நலமெனப் படுகிறது. தற்போது உள்ள 9, 10, வகுப்புகளில் தொடர்ந்து படிக்கும் பிள்ளைகள்மேல் குறிப்பிட்டுள்ள காரணங்களைப் பலப்படுத்த அரபி படித்தே ஆகவேண்டும். ஆகையால், பின் 5 வருஷம் அதாவது 17 வயதிற்குள் அரபியில் குர்ரானி ஷெரிப் முடித்து ஹதிஸின் சிலதை முடித்து ஆங்கிலம் மேல் வகுப்பில் எழுதப் பேசத் தெரிவது போல் அரபி எழுதப்பேச நன்றாய்த் தெரியவேண்டும். இந்த சமயத்தில் தான் ஆரம்ப இலக்கணம் கற்றுக் கொடுக்க வேண்டும். இலக்கணமானது வார்த்தைகளை ஒழுங்காக உபயோகிப்பதற்கும் பிறகு சரியான வாக்கியங்கள் உபயோகிப்பதற்கும் தகுந்தவாறு சுலபமானபடி பிள்ளைகள் இலக்கண விதிகளை



மறவாது மனப்பாடம் செய்து கொள்ளக்கூடிய படி போதிக்க வேண்டும். இந்த நிலையில் பாஷையில் தேர்ச்சியடையவும் குர்ரானையும் குர்ரானி ஷெரிப்பையும் நன்கு அறியவும் சில வசன நடைப் புத்தகங்களை அரபியில் ஆரம்பிக்கவேண்டும். அரிய காவ்யங்களை அறியுமாறு சில பாடங்களும் போதிக்கப்படவேண்டும். இப்படி ஒருவனுக்கு போதிக்கப் படின் உண்மை மகம்மதியனாக நிச்சயமாய் நிற்பான் என்பதில் சந்தேகமில்லை. இதனால் மற்ற முஸ்லீம் வேத சாஸ்திரங்களை கற்றுக்கொடுக்கக் கூடாதென்பதல்ல.

ஆரம்பப் படிப்புகாலத்தில் உபாத்தியாயர்கள் பழக்கத்தில் உள்ள மதகிரியைகளை வாய்ப்பாடமாய்ப் போதிக்கவேண்டும். இரண்டாவதாக பாடபுத்தகங்கள் மூலமாக இஸ்லாம் மதத்தின் கட்டளைகளையும் அதிகமான அபிமானம் உண்டாக்க, சகஜமான இஸ்லாம் மதசரித்திரங்களையும் போதிக்கவேண்டும். குழந்தைகளுக்கு வெறுப்புண்டாகக் கூடிய கடின வழியில் இப்பொழுது போதிக்கப் படுகிறது. ஆகையால், இவ்வழிகளில் ஏற்படும் பாடபுத்தகங்கள் எளிய நடையில் ஒரு முஸ்லிம் குழந்தையைத் தன் மதக் கொள்கைகளில் பற்று அதிகமாகும்படியும் அதை முக்கியமாய் அனுசரிக்க வேண்டி அது உண்டானதற்குச் சிறிய கதைகள் மூலமாயும் போதிக்க வேண்டும். பூர்வம் பழக்கத்திற்கும், வாழ்விற்கும் சுலபமான வழியில் அறியக்கூடியபடியும் இஸ்லாம் இருப்பதால்தான் மதப்பெரியோர்கள் ஜெயத்தோடு ஐக்கியத்தை வளர்த்து வந்திருக்கிறார்களென்றும், ஆனதால் முழுதும் மதக் கட்டளைகளை அனுசரிக்க வேண்டியதற்கு வழியேற்படும் வண்ணம், திர்க்க

தரிசி நபிகள் நாயகத்தினுடையவும், பின் வந்தவர்களினுடையவும் சிரத்தின் சில விஷயங்களும் போதிக்கவேண்டும். இதனால் தீர்க்கதரிசி போன்றும், அவர் பின் வந்தவர்களைப் போன்றும், அநுசரித்தவரின் நாம் இழந்துள்ள கீர்த்தியையும், மேன்மையையும் அடையலாம் என்றஎண்ணம் உதிக்கும்.

கலாசாலை வகுப்புகளில், பாடப்புத்தகங்கள் என்பது முழுதும் விடப்பட்டு பிரசங்க மூலமாகவே போதிக்கப் படல்வேண்டும். பாடப் புத்தகங்கள் அனைத்தும் உபாத்தியாயர்களே கற்று விரிவான அர்த்த புஷ்டி யுடனே போதிக்கவேண்டும். அப்போதுதான் பிள்ளைகளுக்கு யோசனா சக்தி வளரும். ஆனால், தற்காலத்தில் உள்ளது போன்று மதப் பற்றை அழிக்காது மதப்பற்றை அதிகரிக்கச்செய்து போதிக்கப் படவேண்டியது தேசீயப் படிப்பின் முக்கிய கருத்து என்பதைக் கொள்ளவேண்டும்.

## கராச்சியில் அலி சகோதரர்களின் விசாரணை.

அலி சகோதரர்களின் விசாரணை தொடங்கிற்று. மௌலானா அப்துல் பாரியும் மௌலானா அபூல்கலாம் ஆஸாத் அவர்களும் விசாரணை தினத்துக்கு முந்தின தினத்தன்று கூடிய மகா நாட்டில் ஒத்துழையாமைக்காரர்கள் விசாரணை நடக்கும் இடத்திற்குப் போகக் கூடாதென தீர்மானித்தபடியால் நீதி மன்றத்தில் அதிகமாகக் கூட்டம் வரவில்லை. நீதி மன்றத்தைச் சுற்றிலும் 150 போலீஸார்கள் காலையிலிருந்தே காவல் காத்துக்கொண் டிருந்தனர். நீதி ஸ்தலக் கட்டிடத்தைச் சுற்றிலும் முள் கம்பி கட்டி வைக்கப்பட்டது. நீதிஸ்தலத்தைச் சேர்ந்தாற்போலுள்ள பந்தர் வீதியைப் பலமான போலீஸ் படைகள் முற்றுகை யிட்டன. சரியாகப் பத்து மணிக்கு விசாரணையன்று சற்றேறக்குறைய 250 இராணுவ வீரர்கள் அடங்கிய ஆங்கில படையும் இந்தியப்படையும் ஆயுத முஸ்திப்புடன் நீதிஸ்தலத்தின் பின்னே வரிசையாக நிறுத்தப்பட்டன. நீதி மன்றத்தில் உயர்ந்த மேடையின் மீது நியாயாதிபதி உட்கார்ந்தார். அவர்கீழ் சர்க்கார் சுறுக்கெழுத்து எழுதுவோர்களும், குமாஸ்தாக்களும் உட்கார்ந்தனர். மேடையின் ஒரு பக்கத்தில் ஷரிஸ்ததார் உட்கார்ந்திருந்தார்; மற்றொருபக்கத்தில் சற்றே தாழ்ந்த இடத்தில் குற்றவாளிகளென விசாரணைக்கு வந்த அலி சகோதரர்களும் மற்ற சகாக்களும் தனித்தனியே ஒரு பெரிய கூட்டில் உட்கார்ந்திருந்தனர். நீதிபதிக்குச் சற்று கீழே போலீஸ் சூப்பிரண்டெண்டும் சர்க்கார் வக்கீலும் உட்கார்ந்திருந்தனர். தவிர,

பொது ஜனங்களிற் சிலரும் வக்கீல்மார்களுமாக அந்த நீதிஸ்தலத்தில் உட்கார்ந்தனர். சரியாக 11-மணி அடித்ததும் பெரிய மோட்டார் வண்டியில் அலிசகோதரர்களும் அவர்களின் சகாக்களும் சிறையிலிருந்து வந்திறங்கினர். அவர்களுடைய வண்டிக்குப் பின்னால் மற்றொரு மோட்டார் வண்டி போலீஸ் படையை யேற்றிக்கொண்டு வந்தது. அலிசகோதரர்கள் வந்திறங்கி நீதிஸ்தலத்தின் உள்ளே புகுந்ததும் ஆங்கு குழுமியிருந்த பொது ஜனங்களும் மற்ற சிலரும் அவர்களுக்கு மரியாதை காண்பிக்கும் வண்ணம் நின்று கொண்டு அலிசகோதரர்கள் உட்கார்ந்ததும் மற்றவர்கள் உட்கார்ந்தனர். நீதிபதி சரியாக 11-மணி அடித்து 5-நிமிடத்திற் கெல்லாம் வந்து ஆசனத்தில் அமர்ந்தார்.

மாஜிஸ்ரேட் :— உங்கள் பெயரென்ன ?

குற்றவாளிகள் ஒருவரும் பதில் கூறவில்லை.

மாஜி :—தகப்பனார் பெயர் ? மீண்டும் அவர்கள் பதிலளிக்கவில்லை.

சர்க்கார் தரப்பு முதல்சாட்சி ஜமன்ஷா அழைக்கப்பட்டார்.

மாஜி :— பெயர்.

1. சா :—ஜமன்ஷா மாபூப்ஷா வயது 48. நான் போலீஸ் சூப்பிரண்டெண்டு.

சர்க்கார் வக்கீல் :—நீங்கள் தானே பிராதுகார்.

1. சா :—ஆம்.

சா. வ :—கவர்ன்மெண்ட் உத்திரவு பெற்றீரா ?

1. சா :—ஆம்.

மாஜி .— கவர்ன்மெண்ட் உத்திரவு பேரிலும்



காராச்சி ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்ட் பிராது பேரிலும் நான் தாக்கல் செய்கிறேன்.

சர். வ :— ஜூலைமாதம் 7-ந் தேதி காராச்சி ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போயிருந்தீரா ? என்ன விசேஷம் ?

1. சா:—ஆம், குற்றவாளிகளான முகமத் அலி, ஷவுகத் அலி, சங்காராசாரி ஆகிய இம் மூவரும் வண்டியி லிறங்குகையில் பார்த்தேன்.

சர். வ :— அவர்கள் இறங்கின பிறகு என்ன வாயிற்று.

1. சா :— குற்றவாளிகள் ஊர்வலம் போனார்கள்.

சர். வ :— அலிசகோதரர்கள் எங்கு சென்றார்கள்.

1. சா :—ஷவுகத்அலி முஸபர்கானுவுக்குச் சமீபத்தேயுள்ள கன்யா பாடசாலையில் தங்கினார்.

சர். வ :— மகாநாடு கூட்டப்பட்ட பந்தலில் ஜனங்கள் நிறைந்திருந்தார்களா ?

1. சா.—ஆம்.

சர். வ.—காராச்சியில் கிலாபத் மகாநாடு எந்த தேதியில் கூடிற்று.

1. சா.—ஜூலைமாதம் 8, 9, 10-தேதிகளில்.

சர். வ.—நீங்கள் எல்லா தினங்களுக்கும் மகாநாடு நடந்தபொழுது அங்கு இருந்தீரா ?

1. சா.—ஆம்.

சர். வ.—குற்றவாளிகளில் யாரேனும் அந்த மகாநாடு நடவடிக்கைகளில் கலந்ததுண்டா ?

1. சா.—ஆம். முகம்மத்அலி அக்கிராசனம் வகித்து பிரசங்கம் செய்தார்.

சர். வ.—பிரசங்கம் முடிந்ததும் அவர் என்ன சொன்னார்.

1. சா.—விஷய ஆலோசனை பஞ்சாயத்து கூடும் என்று.

சர். வ.—மத்திய கிலாபத் கமிட்டிக்கும் ஷவுகத் அலிக்கும் ஏதாகிலுஞ் சம்பந்த முண்டா?

1. சா.—ஆம். அவர் கௌரவ காரியதரிசி.

சர். வ.—கன்யா பாடசாலையில் அவர்களை வேவுபார்க்க நீர் யாரையேனும் அனுப்பினதுண்டா?

1. சா.—ஆம். நால்வர் வேவு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சர். வ.—ஜூலைமாதம் 9-ந் தேதி மகாநாட்டில் 6-வது தீர்மானத்தைத் தீர்மானிக்கப்பட்ட காலத்தில் நீர் அங்கு இருந்ததுண்டா?

1. சா.—ஆம். நான் அங்குதான் இருந்தேன்.

கோர்ட்டார்.—இதோ தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தஸ்தாவேஜுதான் அந்த தீர்மானத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

முகம்மத் அலி.—அந்த மொழிபெயர்ப்பை யான் பார்க்கலாமா?

கோர்.—ஆகா! (காண்பித்தல்)

சர். வ.—இந்த தீர்மானத்தை யார் பிரேரேபித்தது.

1. சா.—இரண்டாவது குற்றவாளி ஹுஸேன் ஆமத்.

சர். வ.—அவருடைய பிரசங்கத்தைச் சுருக்கெழுத்து எடுக்கப்பட்டதா?

1. சா.—ஆம்.

சர். வ.—அவருக்குப் பிறகு யார் பேசினது.



1. சா.—டாக்டர் கிச்சுலு.

சர். வ.—பிறகுயார் பேசினது.

1. சா.—சங்கராசாரியர்.

சர். வ.—ஷவுகத் அலி அங்கு பிரசன்னமாயிருந்தாரா.

1. சா.—ஆம்.

சர். வ.—கூட்டத்தில் இருந்தவர்களின் வகுப்பு என்ன.

1. சா.—முகம்மதியர்கள், ஹிந்துக்கள், பட்டாணிகள், ஸீக்கியர்கள்.

சர். வ.—நீர் மதவிகா பத்வாவைப் பார்த்ததுண்டா?

1. சா.—ஆம்.

சர். வ.—உம்மிடத்தில் ஏதாகிலும் பிரதி இருக்கிறதா.

1. சா.—ஆம்.

முகம்மத் அலி.—பத்வா ஏற்கனவே தடுக்கப்பட்டிருந்தபோதிலும், பார்வைக்கு இங்கு எனக்கு ஒரு பிரதிவேண்டும்.

கோர்.—ஆம். அதுவே. (குற்றவாளிகளைப் பார்த்து) நீங்கள் ஏதாகிலும் கேள்விகள் கேட்க வேண்டுமா?

முகம்மத் அலி.—இல்லை.

சர்க்கார் தரப்பில் இரண்டாவதுசாட்சி ஜனாப் முகம்மத் பக்ஸ் விசாரிக்கப்பட்டார். பின்னர், போலீஸ்சேவகன் கேசவலாலும் ஹெட்கான்ஸ்டபில் படேபகதூரும் இரகஸியபோலீஸ் உஸ்மான் கனியும் விசாரிக்கப்பட்டார்கள். பிறகு அப்துல் கபூர்

லக்கத் ஹுஸேன், ஷான்பகதூர்கான், மிஸ்டர். பர்ன்ஸ் ஆகிய இவர்களும் விசாரிக்கப்பட்டார்கள்.

முகம்மத்அலி (கோர்ட்டாரைப்பார்த்து) நாங்கள் எல்லோரும் ஒரேயிடத்தில் இருக்கும்படிசெய்ய வேண்டும். ஏனெனில் நாங்கள் ஒருவரை யொருவர் யோசித்து வாக்குமூலங் கொடுக்க சௌகரியமாயிருக்கும். என்னென்ன செய்தபோதிலும் அது பஹிரங்கமாகவே யிருக்க வேண்டும். இராணுவ பந்தோபஸ்து இப்பொழுதைக் காட்டிலும் இரட்டிப்பாகவோ அல்லது மூன்றுமடங் கதிகமாகவோ யிருக்கலாம். தவிர, மௌலானா ஆப்துல் பாரியையும் ஆஸாத் அவர்களையும் நாங்கள் யோசனை கேட்க வேண்டும்.

மாஜி.—அது என்வேலையல்ல; ஜெயில் சூப்பிரண்டின் வேலை. நான் இதில் பிரவேசிக்கமுடியாது. தினம் 2-மணிகாலம் நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து யோசிக்கும்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா?

முகம்மத்அலி.—ஆம். அதுபோதாது.

மாஜி.—அப்படியானால், அது விஷயமாக ஜெயில் சூப்பிரண்டண்டுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

முகம்மத்அலி.—நாங்கள் சூப்பிரண்டண்டு மூலமாக ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரிவிக்காமலேயே எங்கள் மனுவை ரத்து செய்துவிட்டால் நாங்கள் செய்வதென்ன?

மாஜி.—நான் பிரவேசிக்க முடியாது.

முகம்மத்அலி.—சரிதான். போலீஸ்சார்களால்



ஏற்கனவே எடுத்துக்கொண்டு போகாத காகிதங்களிற் சிலவை எனக்கு வேண்டும்.

மாஜி.—உங்களுக்குச் சொந்தமாயுள்ள காகிதங்களிற் சிலவற்றைப் போலீஸார் எடுத்துக்கொண்டவைகள் கோர்ட்டில் தாக்கலா யிருக்கின்றன. காகிதங்களிற் 36-பேகம் முகம்மத்அலிக்கு அனுப்பட்டிருக்கின்றன. 6 கோர்ட்டில் இருக்கின்றன. 17-கவர்ன்மெண்டு பார்வைக்காக ஸிம்லாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

முகம்மத்அலி.—கோர்ட்டில் தாக்கலாகியிருப்பவைகள் என்ன என்பதை யான் அறியலாமா?

மாஜி.—(அவைகளைப் படிக்கிறார்).

முகம்மத்அலி.—நான் வேண்டியவைகளே அவை.

கோர்ட்டு கடைசியாக அன்றுமாலை $3\frac{3}{4}$-மணிக்குக் கலைந்தது. அலிசகோதரர்கள் மோட்டார் வண்டியிலேறி சிறைக்குப் போனார்கள்.

---

## இரண்டாம் நாள் நடவடிக்கை

செப்டம்பர்மாதம் 27-ந்தேதி கலிக்தீனு கட்டடத்தில் மீண்டும் இரண்டாநாள் விசாரணை தொடங்கிற்று. முந்தினதினம் போலவே அலி சகோதரர்களும் அவர்களுடைய சகாக்களும் வண்டிவிட்டு இறங்கினர். அல்லா-ஹு அக்பர் ஒலி எண்டிசையும் குமுறிற்று. கர்னல் கயர் சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டார். இவர் இராணுவ சம்பந்தமாகப் பல கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

சர். வ.—ஐயா, உங்கள் பட்டாளத்திலுள்ள வீரர்களுக்கு சைன்னியத்தில் சேரக்கூடாதென்னும்

விஷயமாக ஏதாகிலும் துண்டு பத்திரிகைகள் வந்ததுண்டா ?

கயர்.—ஆம்.

சர். வ.—அதைக் கொண்டுவாருங்கள்.

கயர்.—ஏற்கனவே கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. பிறகு சுபேதார் அஜிஸுடன் விசாரிக்கப்பட்டார். அவரும் அப்படியே கூறினர். சுபேதார் முகம்மத் ஹாஸிம் அவர்களும் மேற்கூறிய இரண்டு சாட்சிகளைப் போலவே கூறினர். ஜஸ்வானி அவர்கள் விசாரிக்கப்பட்டார். பம்பாய் போலீஸ் டிப்டி கமிஷனர் மிஸ்டர். பி. ஏ. கெல்னி விசாரிக்கப்பட்டார்.

சர். வ.—மத்திய கிலாபத் கமிட்டியின் ஆபிஸைப் பரிசோதிக்க உமக்கு உத்தரவு பிறந்ததா ?

கல்னி:—ஆம்.

சர். வ.—எப்பொழுது ஆபிஸுக்குப் போனீர்?

கல்னி.—செப்டம்பர் மாதம் 20-ந்தேதி மாலை 2 மணிக்கு.

சர். வ.—அங்கு யார் இருந்தது.

கல்னி.—கிலாபத் ஆபீஸ் சூப்பிரின்டெண்ட் அப்துல்கனி.

சர். வ.—பரிசோதனையில் பத்வா ஏதாகிலும் இருக்கிறதா வென்று நீர் கேட்டதுண்டா ?

கல்னி.—ஆம். ஒன்றுமில்லை இப்பொழுது என்றார்.

சர். வ.—அந்த பத்வா அடங்கிய துண்டு பிரசுரம் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதென நீர் அறிவீரா.

கல்னி.—ஆம்.

சர். வ.—எப்பொழுது பிரசுரிக்கப் பட்டது.



கல்னி.—ஜுலையிலோ ஆகஸ்டுமாதத்திலோ.

சர். வ.—நீர் எவ்வளவு பிரதிகள் வழங்கப்பட்டிருக்குமென்பதையும் அப்துல் கனியைக் கேட்டீர்.

கல்னி.—ஆம்.

முகம்மத் அலி.—சாட்சியைச் சற்று உரக்கப் பேசச் சொல்லவேண்டும்.

சர். வ.—மத்திய கிலாபத் கமிட்டிக்கு ஷவுகத் அலி காரியதரிசிதானு வென்று அப்துல் கனியைக் கேட்டீரா.

கெல்னி.—ஆம். பஞ்சாயத்து பதிவு செய்யும் புத்தகத்தையும் கொடுக்கும்படி கேட்டேன். அவர் கொடுக்கவில்லை. மூஸாம் அலி டில்லிக்குக் கொண்டு போனார் என்று சொன்னார்.

சர். வ.—நீர் ஷவுகத் அலியைச் சிறைப்படுத்தினீரா.

கெல்னி.—ஆம்.

சர். வ.—எப்பொழுது.

கெல்னி.—செப்டம்பர் மாதம் 16-ந்தேதி காலையில்.

சர். வ.—எங்கே.

கெல்னி.—கிலாபத் ஆபீஸில்.

சர். வ.—சரி.

பிறகு தேக்சந்த் ஹெமன்தாஸ், மகம்மத்ஷா இன்ஸ்பெக்டர் நாராயணன் ஜோஷி, சப் இன்ஸ்பெக்டர் மார்வாரி, முஸம்தார், மோட்வானி இவர்கள் விசாரிக்கப்பட்டார்கள். புனவில் அலி சகோதரர்கள் ஜுன்மாதத்தில் பேசிய விஷயமாகவும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். கடைசியாக நடவடிக்கைகளின் பிரதிகள் எங்களுக்குக் கொடுக்கவேண்டு

மென்று முகம்மத் அலி மாஜிஸ்ரேட்டைக் கேட்க, அவர் பணம் கொடுத்தால் கொடுக்கப்படுமென்றார். பிறகு அப்துல் பாரியையும் ஆஸரீத் அவர்களையும் பார்க்கமுடியாதபடி செய்வது கண்டிக்கத்தக்கதென முகம்மத் அலி கூறினார். அன்று விசாரணை முடிந்ததும் வழக்கப்படி அலி சகோதரர்களும் மற்றவர்களும் வண்டியேறிச் சிறைக்குச் சென்றனர்.

---

## மூன்றும் நாள் விசாரணை.

செப்டம்பர் மாதம் 28-ந்தேதி புதன்கிழமை விசாரணை தொடங்கிற்று. பல ஹிந்து கலாசாலை மாணவர்கள் வந்தனர். ஜில்லா கலெக்டரும் வந்திருந்தார். இன்ஸ்பெக்டர் அப்துல்கரீம் முதன்முதல் விசாரிக்கப்பட்டார்.

சர். வ.—நீர் யார் ?

சாக்ஷி.—நான் சென்னை இரகசியப் போலீஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சையத் அப்துல்கரீம்.

சர். வ.—முகம்மத் அலி கைதி செய்யப்பட்ட பொழுது சென்னை போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களுடன் நீர் இருந்தீரா ?

சா.—ஆம்.

சர். வ.—எங்கே.

சா.—வால்டேர் ஸ்டேஷனுக்குவெளியே முகம்மத் அலி பிரசங்கம் செய்யப்போகும் தருவாயில்.

சர். வ.—எப்பொழுது.

சா.—இந்தமாதம் (செப்டம்பர்) 14-ந்தேதி.

சர். வ.—முகம்மத் அலி கைதி செய்யப்பட்டதும் என்ன நடந்தது.



சா.—முகம்மத் அலி ஜில்லா மாஜிஸ்டிரேட்டினிடம் கொண்டுபோகப்பட்டார். அங்கிருந்து அவர் அலியை சிறைக்கனுப்பினார்.

சர். வ.—பிறகு என்ன நடந்தது.

சா.—அவர் சிறைக்குப் போகுமுன் வேலைக்காரனைக் கூப்பிட்டு கைப்பையைச் சிறைக்கு எடுத்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார்.

சர். வ—முகம்மத் அலியின் வேலைக்காரன் எங்கிருந்தான்.

சா—ரெயில்வே கம்பார்ட்மெண்டில்

சர். வ—அவருடைய தோல்பை

சா—முகம்மத் அலியினிடத்திலேயேயிருந்தது.

சர். வ—எந்த ரெயில்வண்டி அது.

சா—முகம்மத் அலி, மகாத்மா காந்தி, மௌலானா அஸத் ஆகிய இவர்கள் வந்த மெயில் வண்டி.

சர். வ—தோல்பையை யாராகிலும் எடுத்துக் கொண்டார்களா ?

சா—ஆம். வேலைக்காரன் கொண்டுவந்தான். அங்கே ஜில்லா மாஜிஸ்ரேட்டும் டிப்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனராலும் நானும் இருந்தோம்.

சர். வ—எங்கே அது.

சா—ரெயில்வே போலீஸ் ஸ்டேஷனில்.

சர். வ—மாஜிஸ்ரேட் முன்னிலையில் முகம்மத் அலியின் கடிதங்கள் எல்லாம் காண்பிக்கப்பட்டனவா.

சா—ஆம். காண்பிக்கப்பட்டன. பெல்காமில் தீர்மானிக்கப்பட்டிருந்த தீர்மானங்களின் நகல்களுமிருந்தன. கடைசியாக அவைகளை யெல்லாம் குறித்

துக்கொண்டு தோற்பையுடன் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டன.

சர். வ—கடிதங்களின் ஜாப்தாவொன்றை எடுக்கும்படி ஜெயில் சூப்பிரண்டெண்டுக்கு உத்திரவுண்டா?

சா—ஆம். முகம்மத் அலியை வைத்துக்கொண்டே கடிதங்கள் ஜாப்தா எடுக்கப்பட்டன.

சர். வ—அக் கடிதங்களை எங்கேயாகிலும் அனுப்ப உத்திரவு உண்டா?

சா—ஆம். காரச்சி ஜில்லா மாஜிஸ்ரேட்டுக்கு அனுப்ப உத்திரவு பிறந்தது.

பிறகு ஜில்லா மாஜிஸ்ரேட், ஸ்மார்ட்டும், மற்றவரும் விசாரிக்கப்பட்டார்கள்.

முகம்மத் அலி கடைசியாக தன் தாயாருக்கு அனுப்பின உருது கடிதத்தைப்பார்க்க வேண்டுமென்று கோர்ட்டாரைக் கேட்க, அது கொடுக்கப்பட்டது. அந்த கடிதம் தாயாருக்கு அனுப்பப்பட்டதாவென்றுங் கேட்டார். தாக்கல் செய்யப்பட்டவைகளின் பிரதிகள் வேண்டுமென்றுங் கேட்டார்.

மாஜிஸ்ரேட்—இன்னும் ஏதாவது கேட்க வேண்டுமா.

முகம்மத் அலி—ஒன்றுமில்லை.

கடைசியாக முகம்மத் அலி மாஜிஸ்ரேட் கேட்டுக்கொண்டதற் கிணங்க பின்வரும் வாக்குமூலம் ஒன்றைக் கொடுத்தார்.

---

## மௌலானா முகம்மது அலியின் வாக்குமூலம்.

நான் ஒத்துழையாமைக் காரனாதலால் கோர்ட்டின் நடவடிக்கைகளொன்றிலும் கலந்து கொள்ளவில்லை. விசாரணையின் விவரத்தையறிந்துகொள்ளவும் முயற்சிக்கவில்லை. எவ்வித சாக்ஷியத்தையும் நான் தடை செய்யவில்லை. சாக்ஷிகளைக் குறுக்கு விசாரணை செய்து நடவடிக்கைகளில் தலையிடவில்லை. சர்க்கார் வக்கீல் (கிரௌன் பிராஸிக்யூடர்)க்குத் திருப்தியாக, சாக்ஷியங் கிடைக்காத போது குறுக்கு விசாரணை செய்து கொள்ளவும் அவருக்கு அனுமதி கொடுத்து விட்டேன். ஒத்துழையாமைக் காரர்களாகிய நாங்கள் எந்த வழக்கிலாவது கோர்ட்டு முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டால் ஒன்று மாத்திரம் செய்ய முடிவு செய்திருக்கின்றோம். அதாவது வாக்குமூலம் கொடுப்பதே அதுவும் எங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கன்று. சில விஷயங்களைச் சரிவர உணராதவர்களுக்கு அவ்விஷயத்தைச் சரிவர உணர்த்துவதற்கேயாகும். இந்த விசாரணை சம்பந்தப்பட்ட வரையில் இவையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நான் என் சகோதரரோடும் மற்றவர்களோடும் கராச்சிக்கு வந்தேன். கன்யாசாலையில் நான், மற்றும் 20 பேரோடு தங்கியிருந்தது உண்மையே. நான் அங்கிருந்தபோது பகற் காலங்களிலும் சில சமயங்களில் இரவிலும் கூட ஆயிரக்கணக்கான பேர் அங்கு வந்துபோய்க் கொண்டிருந்தனர்.

அதனால் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் அசௌகரியமேற்பட்டது. மகாநாடு நடப்பதற்கான ஏற்பாடுகள் நடக்கும் போது இத்தகைய அசௌகரி

யங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியந்தான். நானிருந்த விடம் சிறைச்சாலையல்ல வாதையால், நான் அவ்விடத்தை விட்டுச் சில சமயங்களில் என் சகோதரரோடும் மற்ற சமயங்களில் என் நண்பர் டாக்டர் கிச்சிலுவுடனும் வெளிச் சென்று திரும்புவதுண்டு. டாக்டர் கிச்சிலு தம்மாகாண விஷயங்கள் சிலவற்றைத் தீர்த்து ராஜி செய்யும் விஷயமாக வேலை செய்துகொண்டிருந்தார்.

ஒரு சாக்ஷி சொன்னபடி, நான் இராத்திரி 1-30 மணிக்குத் திரும்பி வரவில்லை. பாவம். அந்த சாக்ஷி ராத்திரி 12-மணிக்கு வேலையை ஒப்புக்கொண்டார் போலும். அந்த நிச்சயமான சமயத்திலும் ஏதாவது நடந்ததாக அவர் அறிவிக்கவேண்டி யிருந்தது. ஆகையால் அப்படி சொல்லிவிட்டார். அந்த சமயத்தில் என் சகோதரர் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தார். நானும் அந்த சமயத்தில் அதே காரியம் தான் செய்திருக்கவேண்டும். இந்தியன் பீனல் சட்டத்தின் 120-B. பிரிவுபடி சதியாலோசனை அக்காலத்தில் செய்ததாகத் தெரியவில்லை. நாங்கள் எந்த சதியாலோசனையி லிறங்கி யிருந்தாலும் அது பட்டப் பகலிலேயே நடந்திருக்கவேண்டும். கராச்சியில் நடைபெற்ற சென்ற கிலாபத் மகாநாட்டில் அக்கிராஸனமு வகித்ததாக நான் ஒப்புக்கொள்ளுகிறேன். பெல்காம் ஜில்லாவில் கோகக் மகாநாட்டில் செய்ததுபோல் அங்கோரா கவர்ன்மெண்டோடு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் விரோத பான்மை காட்டுகிறார்களென்ற சம்பந்தமான தீர்மானத்தை இங்கும் நான்தான் தயாரித்தேன். நான் தீர்மானத்தைப் படித்துக் காண்பித்தது உண்மை



தான். இந்த பிரேரணையை என்னுடைய தலைவரும் என்னுடன் ஆனந்தமாய் சிறைவாசஞ் செய்து கொண்டு என்பக்கத்தி லிருப்பவரும் ஆண்டவன் கைங்கரியத்திற்காகச் சகலத்தையும் துறந்தவருமான மௌலானா ஹூஸேன் ஆமத் ஸாகெப் மகஜிர் மதினி என்பவரின் யோசனையின் மீதே கொண்டு வந்தேன். நான் நடவடிக்கைகளை முடிக்குமுன், இத்தீர்மான சம்பந்தமாகச் சில வார்த்தைகள் கூறினேன். இத்தீர்மானம் உண்மையில் ஒரு உறுதியைக் காட்டுகின்றமையால், இதை ஆதரிப்பவர்களை எழுந்து நிற்கும்படிச் சொன்னேன். ஆனால், இந்த தீர்மானத்தை நிறைவேற்றும்போது மாத்திரம் தான் எழுந்து நிற்கும்படி கூறினதாக ஒவ்வொரு சாக்ஷியும் பொய் சொன்னார்கள். மற்றுமிரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டபோதும், சபையினரை எழுந்து நிற்கும்படிச் சொல்லப்பட்டது. இவ்விவரம் அன்றைய சமாச்சார பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றது. கவர்ன்மெண்டு தரப்பில் கொண்டுவரப்படும் குற்றங்கள் எப்பொழுதும் சரியானவை என்ற மனித சம்பிரதாயத்தை நிலைநாட்டவேயன்றி வேறெந்த காரணத்தை முன்னிட்டும் இத்தகைய பொய்யுரைகள் சொல்லப்படவில்லையென நினைக்கிறேன்.

இந்த, தீர்மானத்தின் கருத்தையும், கோகக்கில் தீர்மானித்த இதே தீர்மானத்தையும் வேண்டுமென்று அர்த்தத்தைப் பேதப்படுத்தி கவர்ன்மெண்டுக்கு அறிவித்திருப்பதாகவும் சேனை விஷயமாக, தீர்மானத்தில் கண்டிருக்கும் பாகத்தைத் தவறாக கவர்ன்மெண்டுக்கு வற்புறுத்தி யிருப்பதாகவும்

இராஜப் பிரதிநிதி எங்கள்மீது நடவடிக்கையைப் பற்றிய விஷயத்தில் வாக்களித்ததை முறிக்கவேண்டுமென்பதற்காகவும், செய்யப்பட்டதென எனக்குத் தோன்றுகின்றது. ஆனால் அது அவர்கள் வேலை. நான் அதில் தலையிட வேண்டியதில்லை. ஆனால் அது விஷயம் பஹிரங்கமாக வெளிவந்து விட்டதைப்பற்றி என் நன்றியைத் தெரிவிக்கிறேன். இஸ்லாத்தைக் காப்பாற்றுவதற்காக இந்தியர் தங்களாலானதைச் செய்யும்படி கவர்ன்மெண்டே தூண்டிவிட்டது போல் இது இருக்கின்றது. கிலாபத் விஷயத்திலும் கலீபா அவர்களின் விஷயத்திலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மூன்றாம் நபரை ஏவிவிட்டு அழிக்கும்படியும் செய்த காரியத்தைப் பற்றியே கோகக்கிலும் கார்ச்சியிலும் உள்ள நிலைமையை இந்திய முஸ்லீம்களறிய தீர்மானங்கள் செய்யப்பட்டன. கிலாபத்தைக் கூடுமானவரை நாசப்படுத்த பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்களாலானதைப் பல வழிகளிலும் செய்துவிட்டார்கள். முஸ்லீம் சமூகத்தினர் பல தடவை இக்கவர்ன்மெண்டுக்கு எச்சரிக்கை செய்தும் கவர்ன்மெண்டார் கவனிக்கவில்லையாதலால் இந்திய முஸ்லீம்கள் தங்கள் பொறுமையை இழந்து வருகின்றனர். இஸ்லாத்தைச் சேர்ந்த தீவிர மதப் பற்றுள்ளவர்களால் மூர்க்கத்தனமாகவும் விகாரமாகவும் கிலாபத்தைக் காப்பாற்ற அரசாங்கத்துடன் பலாத்கார வழிகளில் வீண் முயற்சி செய்ய முற்படின் இந்தியாவின் அமைதி எங்கு பாதிக்கப்பட்டு விடுமோ வெனவும் நாங்கள் பயந்தோம்.

கிலாபத்தைக் காப்பாற்றும்படியும், முஸ்லிம்



களின் மதக் கடமைகளைப்பற்றியும், கவர்ன்மெண்டுக்கு எடுத்துச் சொல்லி முறையிட்டோம். மானிட வர்க்கத்திற்கும் ஆண்டவனுக்கும் கடமை செலுத்தும் பொறுப்பை நாங்கள் பெற்றிருக்கிறோமென்று அறிந்ததே மத வெறி கொண்டிருந்த எங்கள் மதத்தினர்களிற் பலரை சாத்வீக வழியில் திருப்பினோம். சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை என்ற தர்மத்தை காங்கிரஸ் தலைவர்களின் அனுசரணையைக்கொண்டு நாங்கள் ஆரம்பித்து விடுவோமென்றும், அடுத்த காங்கிரஸில் இந்தியாவை அன்னிய அரசாங்கத்தின் சம்பந்தமற்ற பூர்ணசுதந்தரமுள்ள குடியரசு நாடாகச் செய்து கொடி போட்டு விடுவோமென்றும் கவர்ன்மெண்டுக்கு எச்சரிக்கை செய்தோம். ஏதோ கொஞ்சம் தத்தளித்துக் கொண்டிருக்கும் இஸ்லாத்தின் குருபீடத்தின் மீது பிரிட்டிஷார் மீண்டும் அந்தரங்கமாகவோ அல்லது பஹிரங்கமாகவோ நேராகவோ, அல்லது கிரேக்கர் மூலமாகவோ, போர் தொடங்கினால்தான் மேற்கண்ட தீர்மானங்கள் கையிருப்பாக வைத்திருக்கிறோமென்றும் தெரிவித்துக் கொண்டோம். இந்தியக் குடியரசு ஸ்தாபிப்பதைப்பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் பிரஸ்தாபிக்கப் பட்டதாயினும், சைன்ய விஷயமாய் யாரும் பகிரங்கமாய் பிரஸ்தாபிக்கவில்லை. பல மாதங்களுக்கு முன்னமே இந்திய முஸல்மான்களால் மிகவும் கொண்டாடப்படும் ஐந்நூறு உலாமாக்களால் சைன்யத்திலிருந்து விலகுவதுள்பட ஒத்துழையாமையின் ஸகல அம்சங்களான சட்டசபை பஹிஷ்காரம், வக்கீல் தொழில் விலக்கம், சர்க்கார் பள்ளிக்கூடம் சர்க்காரால் உதவிபெறும் பள்ளிக்கூடம் இவைகளின்

விலக்கம், பட்டங்கள் கௌரவ அதிகாரங்கள் இவைகளிடத்தில் உதாஸீனம், சர்க்கார் கீழ் இராணுவ உத்தியோகம், ஸிவில் உத்தியோகம் இவைகளின் பஹிஷ்காரம் ஆகிய இவையாவையும் ஆதரித்து ஒரு பஹிரங்க அறிக்கை விடுவிக்கப்பட்டதென்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். கேவலம் ஜாதீய மரியாதையைக் கவனியாது சர்க்கார் உதவியையே சதா நச்சிக்கொண்டு தங்கள் கௌரவத்தை விற்றுப் பட்டம் வாங்கிக் கொண்டவர்களைத் தாக்குவதற்காக கராச்சி கோரக்கு மகாநாட்டை நாங்கள் கூட்டியிருப்போமானால், நாங்கள் ஏதோ சதியாலோசனை செய்ததாக நீங்கள் கண்டுபிடிக்கப் பார்க்கிறீர்களே, அந்த வேலையைவிட அது கேவலமானதாயிருக்கும். ஆகையால் பட்டதாரிகளைத் தாக்க நாங்கள் உத்தேசிக்கவில்லை. ஆனால் சேனையிலுள்ள விசுவாசமான வீரர்களிடத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. கவர்ன்மெண்டார் அன்னாரைக் கொண்டாடி, அவமானப்படுத்துகிறார்கள். மதநெறி கடந்த ஒரு கவர்ன்மெண்டாரால் மதப்பற்றுள்ள ஜனங்கள் எந்த அளவுக்குக் கெடுக்கப்படுகிறார்களென்பதற்கு என்மீது பிறப்பித்துள்ள உத்தரவில் சைன்யங்களை சிலாக்கித்திருப்பதே ஒரு திருஷ்டாந்தமாகும். இதெல்லாம் நாங்கள் செய்த கர்மாவின் பயனென்றே கருதுகிறோம். சைன்யத்திலுள்ள எமது ஏழை சகோதரர்களை இதுகாறும் அசட்டை செய்து வந்து விட்டதனாலல்லவோ இப்பொழுது கஷ்டப்பட வேண்டியிருக்கிறது? ஒரு சோதனை காலத்தில் நம்மைத் திண்டாடவிட்டதும் அதுவேயல்லவோ? இனியாவது பட்டினியால் வாடும் நமது சகோதர மக்களை நாங்கள்



அலட்சியஞ் செய்யாமலிருக்கவேண்டும்; செய்யவும் முடியாது. சேனையிலுள்ள முஸல்மான்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்ட விஷயம் எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் உலாமாக்களின் உத்தேசம் எப்படியோ நிறைவேறி விட்டதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். ஜமேதுல் உலமாவும் துண்டு பிரசுரங்களை வழங்கும் வேலையைச் செய்யவில்லை. உலமாக்களின் சங்கத்தார் அதை இனிச் செய்யத் நிர்மானிப்பதற்கும் நான் சந்தோஷப்படுகிறேன்.

“1858-ல் இத்தேசத்தில் கலகம் நடந்தது. அப்பொழுது இந்திய சேனையில் அதிகமான கலகம் மத வழியைப்பற்றியே யுண்டாயிற்று. ஜனங்களை சமாதானப்படுத்த விக்டோரியா மஹாராணியார் ஒரு விளம்பரம் விடுத்தார்கள். பொதுவாக பிரிட்டிஷ் ராஜாக்களுக்கு “மதப் பாதுகாவலர்” என்ற அடைமொழியை உபயோகப்படுத்துவது வழக்கமாகையால் மேற்சொன்ன விளம்பரத்தில் அப்பதங்களைச் சேர்த்தால் இந்திய மக்கள் அன்னவர்களை இந்திய மதங்களை இரட்சிப்பவர் என்று அர்த்தங்கொண்டு சந்தோஷப்படுவாரென நம்பி அப்போதிருந்த முதன் மந்திரி (இப்போதிருப்பவர்களைப் போல் அவ்வளவு தைரியசாலியென்றே சொல்லலாம்) விளம்பரத்தில் இவ்வாசகத்தைச் சேர்க்க நினைத்தார். ஆனால் பக்கத்திலிருந்த ஒரு துவிபாஷி அப்பதங்களுக்கு “கிறிஸ்தவ மதத்தின் காவலர்” என்று இந்திய பாஷைகளில் பொருள் படுமென்று சொல்லவே, அப்பதங்களை முக்கிய மந்திரி எடுத்து விட்டார். பிறகு ராணியாரிடம் நேரே போய் லார்ட்

டார்லி மகாராணியாரின் இஷ்டத்திற்கு முதலில் சம்மதிக்கவில்லை. இராணியார் சம்மதப்படி தெரிவித்து அவர் கீழ்க்கண்டவாறு விளம்பரத்தில் எழுதினார் :—

"ஸர்வ வல்லமையுள்ள கடவுளின் ஆசீர்வாதத்தால்; நாங்கள் நன்றியுடனும் மனச் சாட்சிப்படியும் நமது மதக் கடமைகளை நிறைவேற்றி வைப்போம். கிறிஸ்தவமதத்தின் உண்மையை ஆதாரமாகக்கொண்டும், மதத்தினால் ஒருவருக்கேற்படும் ஆறுதலை யறிந்தும், நமது மதக் கொள்கைகளை எந்தப்பிரஜையின் மீதும் சுமத்த நமக்குரிமையில்லை. (அப்படியிருந்தும் இந்த இரண்டு தினங்களாக சர்க்கார் தரப்பு வக்கீல் மதக்கொள்கையை வற்புறுத்தப் பார்க்கிறார்.) தவிர நாம் இஷ்டப்படவுமில்லை. யாருக்கும் பட்சபாதம் காண்பிக்க மாட்டோம். யாரையும் உபத்திரவப் படுத்தமாட்டோம். மதத்துக்காக யாரையும் கஷ்டப் படுத்தமாட்டோம், ஸகலரும் சட்டப்படி பட்சபாதமில்லாமல் நடத்தப்படுவார்கள். நமது உத்தியோகஸ்தர்களும் நமது ஆக்ஞைக்கிணங்கி மதக்கொள்கை முதலிய விஷயங்களில் தலையிடவே கூடாதென்று ஆக்ஞாபிக்கின்றோம்."

அதன்படி பட்சபாதமில்லாமலே சட்டப்படி நியாயம் வழங்கப்படுமென்று நம்புகிறேன். விக்டோரியா மகாராணியின் விளம்பரத்தில் கண்டபடி இந்தியாவின் நிர்வாகத்துக்கு முக்கிய பாத்திரமான கவர்னர் ஜெனரல் சம்மதித்தே எங்களை உபத்திரவப் படுத்தி, எங்கள் மதக் கொள்கைகளுக்காக எங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது போலும். விக்டோரியா மஹாராணியார் தமது விளம்பரத்தின் கடைசி



பாகத்தில், "அவர்கள் க்ஷேமமே எங்கள் பலம், அவர்கள் திருப்தியே எங்களுக்கு ஜாமீன், அவர்கள் நன்றியே எங்களுக்கு வெகுமதி" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மாத்திரமல்ல. அதற்குப் பின் 50 வருஷங்கள் கழித்து, மகாராணியாரின் புதல்வரும் பட்டத்திற் குரியவருமான எட்வர்ட் அரசர் இன்னொரு விளம்பரம் விடுத்து, ஒரு மஹத்தான புதிய ஸகாப்தம் அத்துடன் ஆரம்பித்து விட்டதாகவும் பறைசாற்றச் செய்தார்.

மேலே பிரஸ்தாபித்திருக்கும் இரண்டு ஸ்ரீமுகங்களுக்கும் இடையே 50 வருஷங்கள் கழிந்திருப்பதை அவர் குறிப்பிட்டு "சென்ற 50 வருஷங்களாக நாம் செய்து வந்திருக்கும் வேலைகளில் அவமானப்பட இடமில்லை" என்று சொல்லி, கூறுவதாவது:—

"நமது பிரஜைகள் ஏம்மதத்தினராயினும் அதற்காக அவர்களிடம் நாம் தயவாகவாவது, அல்லது அவர்களுக்குத் தொந்திரவுண்டாகும்படியாகவாவது, அல்லது அவர்களுக்கு அருவெறுப்பு ஏற்படும்படியாகவாவது நாம் நடந்து கொண்டதில்லை. எல்லாப் பிரஜைகளும் சட்டங்களால் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். உங்களுடைய நாகரீகத்தில் நிறைந்திருக்கும் ஜாதி மத வேற்றுமைகள் அல்லது பழக்க வழக்க வித்தியாசங்களைப் பாராட்டாமல் நீதி பரிபாலனம் நடந்துவந்திருக்கிறது". என்று சொல்லியிருக்கிறார். இப்பொழுது ஆட்சி புரிந்து வரும் ஜார்ஜ் மன்னர் பட்டாபிஷேகம் செய்துகொண்ட பிறகு, 1910௵ மேமாதம் 24-ந்தேதி இந்தியாவிலுள்ள சமஸ்தானாதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் விடுத்த ஸ்ரீமுகத்தில் நான் மேலே பிரஸ்தா

பித்திருக்கும் இரண்டு ஸ்ரீ முகங்களையும் குறிப்பிட்டு, "இவை நமது ஏகாதிபத்திய ஆட்சியின் மேன்மையான குணத்தை நிரூபணம் செய்யும் சில சாஸனங்களாகும். அவற்றில் கண்ட தத்துவங்களுக்கிணங்க நமது ஆயுள்கால முழுவதும் நாம் நடந்து வருவோம்" என்று சொல்லியிருக்கிறார். ஆனால் எங்கள்மீது வழக்குத் தொடர்ந்திருப்பதே நாங்கள் அனுபவிக்கும் சட்ட பூர்வமான பாதுகாப்பாக இருந்தால் எந்த அரசரும் வெட்கமடையாமலிருப்பதற்கில்லை. இந்த இரண்டு மகா சாஸனங்களும் உண்மையான மத பக்தியுள்ளவர்களை நாஸ்திகத்தை நம்பும்படி செய்து கடவுள் இருக்கிறாரென்கிற எண்ணத்தைப் பிரஜைகள் நித்திய வாழ்வில் நினையாமலிருக்கச் செய்வதாகும்.

இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லீம்களுமாகிய எங்களுக்கு அளித்தருளிய இவ்விரண்டு மகா சாஸனங்களின் கருத்தென்ன? முஸல்மானாகிய நான் நெறிதவறி நடப்பதாக நினைத்தால், எங்களுடைய வேத புத்தகமாகிய குரானிலிருந்தாவது, கடைசியாக இருந்த நபிகள் நாயகத்தின் கர்ண பரம்பரையில் வந்திருக்கும் ஆதாரமான தர்ம நெறிகளிலிருந்தாவது, மேலே சொன்ன இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு முற்காலத்திலோ அல்லது இப்பொழுதோ மார்க்க குருமார்கள் இட்டிருக்கும் மதக் கட்டளைகளிலிருந்தாவது ஆதாரங்களை எடுத்துக்காட்டி நான் செய்தது பிசகென்பதை நிரூபணம் செய்யவேண்டும். நான் செய்தது பிசகல்லவென்பதை நான் வற்புறுத்துகிறேன். இப்பொழுதிருக்கும் நிலைமையில் நான் எந்த காரியத்தைச் செய்ததாக ராக்ஷஸத்



தன்மையினதென அழைக்கப்பட விரும்பாத கவர்ன்மெண்டானது எங்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதோ அதே காரியத்தைச் செய்யும்படி எங்களுடைய மத வாக்கியங்கள் கூறுகின்றன. நான் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறுவது பெரும் பாவமாகயிருக்கையில், அதை நான் அலட்சியம் செய்து விடாமல் நிறைவேற்றி வைப்பது குற்றமாகி விடும் பட்சத்தில், இந்த தேசத்தில் நான் க்ஷேமமாக எவ்விதம் வாழ்ந்து வர முடியும்? நான் பாவியாகவாவது அல்லது குற்றவாளியாகவாவது தான் இருக்க முடியும். கீழ் நாட்டில் பிறந்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஒருவரும், இப்பொழுது இந்தியா மந்திரியாகவும், ராஜப் பிரதிநிதியாகவும் இருந்து வருபவர்களும் தேவ கோஷ்டியில் சேர்ந்தவர்களாக நினைத்துக்கொண்டிருப்பதுபோல நானும் மிகுந்த அடக்கத்துடன் அந்த கோஷ்டியில் ஒருவராக விளங்கவே விரும்புகிறேன். இஸ்லாத்திற்குத் தலைவர் கடவுளொருவரே. அவருக்கு மேலான தொன்றில்லை; அதில் யாதொரு நிபந்தனைக்கு மிடமில்லை; அந்த ஆண்டவனுடைய அதிகாரம் பிரிவுபடத்தக்கதன்று. எங்களுடைய வேத புத்தகத்தின் 12-வது அத்தியாயத்தில் காணப்படும் ஈசூப் நபிக்கும் அவருடன் சிறையிலிருந்த மற்றவர்களுக்கும் நடந்த சம்பாஷணையிலிருந்து இதன் உண்மை புலப்படும். அவர் சொல்லுகிறார். "எனது சகோதரக் கைதிகளே! சில்லரை தேவதைகள் உயர்த்தியா? அல்லது எல்லாருக்கு முயர்ந்த சர்வாதிகாரமுள்ள கடவுள் உயர்ந்தவரா? நீங்களும் உங்களுடைய பிதாக்களும் ஏற்றித் துதித்து வந்த ஆண்டவனையன்றி

வேறொருவரில்லை. கடவுள் எவ்வித அதிகாரத்தையும் ஒருவருக்கும் கொடுக்கவில்லை. கடவுளைத் தவிர வேறு கவர்ன்மெண்டில்லை. தம்மைத் தவிர வேறொருவரையும் நீங்கள் பணியலாகாதென்று அவர் கட்டளையிட்டிருக்கிறார்." இது தான் இஸ்லாம் மார்க்க தர்மம். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இந்த தர்மத்தை அறியவில்லை. தமது முதற் கடமையையும் தம்மை சிருஷ்டித்த ஆண்டவனிடம் தமக்குள்ள கடமையையும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று குரானிலிருந்தும், நபிகளுடைய கர்ண பரம்பரையிலிருந்துவரும் சரித்திரங்களிலிருந்தும் ஆதாரங்களை எடுத்து அனுப்பினதும் சுபேதார் மேஜர்களாக வுள்ளவர்கள் மனக் கலக்கத்துடன் இராணுவ தளகர்த்தரிடம் யோசனை கேட்க ஓடுவதிலிருந்து அவர்கள் மார்க்க தர்மத்தைச் சரியாக அறியவில்லையென்பது தெளிவாக விளங்குகிறது. கடவுளுடைய ஆக்ஞையானது அவரால் அப்போதைக்கப்போது அனுப்பப்பட்டு வந்த நபிகளால் நிறைவேற்றி வைக்கப்பட்டு வந்தது. கடவுளுடைய கட்டளையை ஜனங்களுக்கு உபதேசிக்கக் கடைசியாக உதித்த முகம்மது நபி அவர்கள் அந்தக் கடமையை நிறைவேற்றி இவ்வுலகவாழ்வை நீத்ததும், அவருக்குப் பிறகு கலீபாக்கள் வந்தார்கள். அவர்கள் ஒருவர் பின்னொருவராக நாளது வரையிலிருந்து வந்திருக்கிறார்கள். எங்களுடைய மார்க்கப்படி இப்பொழுது துருக்கி சுல்தானாக இருந்து வருபவரே எங்களுடைய கலீபாக ஆவார். முஸ்லீம்களுடைய ஆட்சியிலோ, முஸ்லீம்களல்லாதவர்களுடைய ஆட்சியிலோ சாமான்ய பிரஜையாகவோ, படைவீர



ராகவோ இருந்து வரும் முஸ்லீம்கள் குரான் பிரகாரம் கடவுளிடத்திலும், நபிகளைத் தொடர்ந்து வந்திருக்கும் கலீபாக்களிடத்திலுமே விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனால் ஆண்டவனிடத்திலும் நபிகளிடத்திலும் முஸ்லீம்களுக்கு இருந்து வரவேண்டிய விசுவாசத்திற்கும் கலீபாவிடம் காட்டி வரவேண்டிய விசுவாசத்திற்கும் வித்தியாசமுண்டு. கலீபாவிடம் விசுவாசம் காட்டிவருவதில் சில நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றன. குரானில் "நிசா" என்ற தலைப்பின் கீழுள்ள 4-வது அத்தியாயத்தில் இவ்விஷயம் விவகரிக்கப்பட்டிருக்கிறது.

"பக்தர்களே! ஆண்டவனைப் பணியுங்கள்: நபியையும் உங்களுக்குள் அதிகாரப் பதவியை வகிப்பவரையும் பணியுங்கள். அவருடைய நடவடிக்கையில் உங்களுக்கு ஆட்சேபனை இருந்தால் ஆண்டவனிடத்தும் நபிகளிடத்தும் கேட்டுத் தெளிந்து கொள்ளுங்கள். கடவுளை நம்புங்கள்; அதுவே முக்திக்கு மார்க்கம்", என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, நபிஸ்தானத்திலிருந்து வரும் கலீபாவானவர் யாதாமொரு முஸ்லீம் செய்ய விரும்பாத காரியத்தைச் செய்யும்படி கட்டளையிடுவாராகில், அவ்விதம் அவர் செய்யாமலிருப்பதுடன் தமக்கும் கலீபாவுக்குமுள்ள தகராரை குரானையும் நபிகளுடைய கர்ண பரம்பரையை ஒட்டி வந்திருக்கும் சரித்திரங்களையும் ஆதாரமாகக் கொண்டு தீர்த்துவைக்கும்படி கேட்கலாம்.

இதுதான் இஸ்லாத்தின் முக்கிய தர்மம். "லா இலாஹ இல்லல்லா முகம்மது ரஸூலல்லா" என்னும் பெயர் போன கல்மாவில் இது தெளிவாகச்

சொல்லப்பட்டிருக்கிறது. கடவுளைத் தவிர வேறு கடவுளில்லை. முகம்மதே அவருடைய நபி. இந்த சித்தாந்தமானது கணக்கா சாரத்தினால் வியவகாரிகளின் உபயோகத்திற்காக வியவகாரிகளால் சொல்லப்பட்டதன்று. முஸ்லீம்களில் படித்தவர்களும் படியாதவர்களும் இதையே நித்திய வாழ்வில் முக்கிய கோட்பாடாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கை வாஸ்தவத்திலிருக்கிறதா வென்று பரிசோதிப்பதற்காகவே ஹஸ்ரத் உமர் அவர்கள் ஒரு தினம் பள்ளியில், கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து, நாயகத்தைத் தொடர்ந்துவரும் கலீபாக்கள் ஆண்டவனுடைய ஆக்ஞைக்கும் கர்ண பரம்பரையாக நாயகத்தைப் பற்றிய சரித்திரங்களுக்கும் விரோதமான காரியத்தைச் செய்யும்படி கட்டளையிடுவாராகில் என்ன செய்வீர்களென்று கேட்டார். அவ்விதம் ஆண்டவன் ஆக்ஞைக்கு மாறாக அக் கலீபாவே கட்டளையிட்டால் அவருடைய சிரசைக் கொய்து விடுவேனென்று ஹஸரத் உமருக்குப்பிறகு கலீபாவாக நியமிக்கப்பட்ட ஹசரத் அலி பதிலளித்தார். எந்த முஸ்லீமும் இந்த பதிலைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. இந்த ஹசரத் அலி என்பவரே அப்பால் கலீபா ஸ்தானமும்பெற்றார். பிரிட்டிஷ் அரசாட்சியில் இங்கிலாந்திலேயே அரசர்கள் தெய்வீகப் பிறப்புள்ளவர்களென்று பாத்தியங் கொண்டாடிய ஒருவருடைய சிரசை ஆடம்பரத்தை வெறுத்த வைராக்கிய புருஷர்களாகிய ப்யூரிடன் சாதியார்கள் கொய்தபொழுதும் இவ்வித நிலைமை ஏற்பட்டது. இதற்கு முன்னதாகவும், வேறு இடங்களிலும் முஸல்மான்கள் தங்க



ளுடைய இனத்தவரல்லாதவர்களுடைய ஆட்சிக்கே அடங்கியிருக்க நேர்ந்திருக்கிறது. ஆனால், ஆண்டவனுடைய கட்டளைக்கு விரோதமில்லாமல் தங்களுடைய அரசர்கள் இடுங் கட்டளைகளையே அவர்கள் நிறைவேற்றி வந்தனர். குர்ரான் பிரகாரம் கடவுளே எல்லாவற்றிற்கும் முதன்மையானவர். இவ்விதம் அவருக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டுமென்கிற கடுமையான நிபந்தனையானது முஸ்லீம் களல்லாதவர்களுடைய ஆட்சி நடந்துவரும் பிரதேசங்களில் விட்டுக் கொடுத்து விடப்படவில்லை. உலகெங்குமே இந்த தர்மம் தான் நிலைத்திருக்கவேண்டும். அதைப் பிரிவு படுத்தவாவது, குறைக்கவாவது முடியாது. என்சொந்த அரசன் ராம்பூர் நவாப்பாவது, மேன்மை தங்கிய ஐதராபாத் நிஜாம் அரசராவது, இஸ்லாம் மண்டலத்திற்கு சார்வபௌமனாயிருக்கும் துருக்கி சுல்தானாவது இஸ்லாம் மார்க்க தர்மத்திற்கு விரோதமாக நடக்கும்படி எந்த முஸ்லீமையும் கட்டளையிட முடியாது.

இந்தத் தத்துவமானது நபிகள் நாயகத்தின் மற்றொரு கட்டளையில் தெளிவாக விவகரிக்கப்பட்டிருக்கிறது. "கடவுளுடைய ஆக்ஞைக்கு மீறி நடக்காத எந்தக் காரியத்தைச் செய்யும்படி முஸ்லீம்கள் கட்டளையிடப்பட்டபோதிலும், அவர்களுக்கு அதில் இஷ்டமிருந்தாலும் இல்லாவிடினும், செய்தே தீரவேண்டும். கடவுளுடைய ஆக்ஞைக்கு விரோதமான கட்டளையை எவரேனும் இடுவாராகில் அதைக் காதாலும் கேட்கலாகாது; அதற்குக் கீழ்ப்படிந்தும் நடக்கலாகாது. ஆண்டவனுடைய ஆக்ஞைக்கு விரோதமான காரியங்களையே செய்யலாகாது. சரியான

கட்டளைகளையே நிறைவேற்றி வைக்கலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவரால் இடப்படும் கட்டளையானது கடவுளுடைய ஆக்ஞைக்கே மீறியதாக இருக்கும் பட்சத்தில் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கலாகாது" என்று மற்றொரு கட்டளையில் சொல்லப்பட்டிருக்கிறது.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜைத் தலைமையாகக் கொண்ட பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கலீபாவுக்கும் இஸ்லாத்திற்கும் விரோதமான முறையை அனுஷ்டித்து வருவதினால் இந்திய முஸ்லீம்களுக்குள் எத்தகைய உணர்ச்சி ஏற்படுமென்பதை கிலாபத் தூதின் தலைவராக நான் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபொழுது அங்கும், இங்கு இந்தியாவிலும் நாங்கள் எச்சரிக்கை செய்திருக்கிறோம். மேலே கண்ட சித்தாந்தங்களைப் பன்முறை நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம். 1920-ம் வருஷம் மார்ச்சுமாதம் 19-ந் தேதி பிரதம மந்திரியை நாங்கள் டவுனிங் வீதியில் பேட்டி கண்டபொழுதும் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். எனவே இந்திய முஸ்லீம்கள் பொதுவாகவாவது, நாங்கள் குறிப்பாகவாவது செய்யும் எக்காரியத்தையும் கண்டு கவர்ன்மெண்டார் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடவுளிடத்திலும், ஏகாதிபத்தியத்திடத்திலும் எங்களுக்குப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஏகாதிபத்திய கவர்ன்மெண்டின் நோக்கமானது இஸ்லாம் மார்க்க தர்மத்துக்கும் ஆண்டவனுடைய ஆக்ஞா சக்கரத்திற்கும் விரோதமாகிவிட்டதால் நாங்கள் ஆண்டவனுக்குக் கீழ்ப்படிந்தே எங்களுடைய சத்தியானுசாரம் நடக்கவும் நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.



ஆண்டவனுடைய பிரீதியையும் அப்பிரீதியையும் அனுசரித்து முஸ்லீம்களின் பிரீதியும் அப்பிரீதியும் இருக்க முடியும். நபிகள் நாயகம் சொல்லியபடி விருப்பும் வெறுப்பும் கடவுளிடமே. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆண்டவனிடத்தும் இஸ்லாத்தினிடத்தும் சத்துரு பாவம் காட்டி வருகிறார்களென்கிற நம்பிக்கை முஸ்லீம்களுக்கு ஏற்படும் வரையில் அவர்கள் ராஜ பக்தியுடன் மற்ற சமூகத்தினர்களைவிட அதிகமாகவே இருந்து வந்திருக்கிறார்கள். பிற சமூகத்தினருடைய நகைப்புக்குப் பாத்திரமாகும்படி ராஜவிசுவாசம் அவ்வளவு அதிகமாகவும் அவர்களுக்கு இருந்ததுண்டு. இஸ்லாம் மதவிஷயத்திலும் முக்கியமாக கலீபா விஷயத்திலும் சென்ற 10-வருஷங்களாக கவர்ன்மெண்டார் அனுஷ்டித்து வந்திருக்கும் முறையினால் கவர்ன்மெண்டார் தங்களுடைய மதத்திற்கும் தேசத்திற்கும் விரோதமாக இருக்கிறார்களென்கிற நம்பிக்கை முஸ்லீம்களுக்கு ஏற்பட்டு விட்டது.

சமீபத்தில் நடந்த யுத்தமானது கலீபா சம்பந்தப்பட்ட வரையில் இன்னும் முடிந்தபாடில்லை. முஸ்லீம் மத விஷயங்களில் தலையிடுவதில்லையென்று சொல்லி முஸ்லீம்களை ராஜ பக்தியுடையவர்களாகச் செய்ததை எவ்விதம் மீறி நடந்தாகிவிட்டதோ, அவ்விதமே இஸ்லாம் புண்ய க்ஷேத்திரங்களுக்கு எவ்வித அபாயமும் விளைவிக்கப்படமாட்டாதென்றும், கான்ஸ்டாண்டிநோபிளும், திரேஸ், ஸ்மர்ணா பிரதேசங்களும் கலீபாவிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்படமாட்டாவென்றும் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜு கொடுத்த வாக்குறுதியும் நிறைவேற்றி வைக்கப்படாமற்போய்

விட்டது. கலீபாவின் முஸ்லீம் துருப்புகளின் மீதே போர்புரியும்படி இந்திய முஸல்மான்களைக் கட்டாயப்படுத்தினார்கள். முஸ்லீம்கள் பலர் இந்ததேசத்தைவிட்டே போய்விடுவதென்று தீர்மானித்த பிறகும் இது நடந்துவந்தது. பீதியினாலும் பசியினாலும் பிடிக்கப்பட்டிருந்த துருப்புகளை, பிரதம மந்திரியும், மிஸ்டர் சர்ச்சிலும் சொன்னபிரகாரம் துருக்கியரை ஒழித்துவிடுவதற்காக அழைத்துக்கொண்டு போனார்கள். அந்த வேலை இன்னமும் நடந்து வருகிறது. துருக்கியருடன் யுத்தம் ஆரம்பிக்காத கிரேக்கர்களான கிறிஸ்துவர்களை ராணுவத்தில் சேர்த்து கவர்ன்மெண்டார் துருக்கியரைத் தாய்நாட்டிலிருந்து துரத்தி வருகின்றனர். யுத்தம் நிறுத்த உடன்பாட்டுக்கு விரோதமாக கிரேக்கர், துருக்கியின் மீது படையெடுப்பதற்கு ஜவாப்தாரியாக இருந்தவர்களும், அவர்களுக்கு பஹிரங்கமாகவும் ரகசியமாகவும் பல வழிகளில் உதவிபுரிந்து வந்தவர்களுமான கவர்ன்மெண்டார், நேசதேசக் கமிஷனர்களே ஒப்புக்கொண்டிருக்கும் கிரேக்கருடைய பல கொடுமைகளுக்கும் ஜவாப்தாரிகளாவார்கள். கவர்ன்மெண்டாரை வழிக்குக்கொண்டுவர முஸ்லீம்களிடம் போதிய சைன்யங்களிருந்திருந்தால், இஸ்லாமிய மார்க்கப்படி அவர்கள் முஸ்லீம்களாகில் இந்த கவர்ன்மெண்டுடன் மதயுத்தம் தொடங்கியிருந்திருக்க வேண்டும். எங்களுடைய தகாரறும், இந்தக்கோர்ட்டில்லாமல் வேறிடத்தில் தீர்மானத்திற்கு வந்திருக்கும். அத்தகைய சக்தி இல்லாததினால் சாத்தியப்பட்ட முஸ்லீம்கள் பப்ளிக் பிராஸிக்யூடர்களால் கஷ்டமும் தொந்திரவும் நேரிடாதபடி வேறுஇடங்களுக்குச்சென்று, தங்களு



டைய தெய்வப் பிரார்த்தனைக்கு சௌகரியமான நிலைமை நாட்டில் ஏற்பட்டபிறகு திரும்பியும் வந்திருக்கக்கூடும்.

ஆனால், 1919-ம் வருடம் ஜூன் மாதம் 19-ந்தேதி மத்திய கிலாபத் கமிட்டியார் இஸ்லாம் மார்க்க தர்மத்தை யனுசரித்தும் சிறந்த மௌல்விகளையும் உலாமாக்களையும் கலந்துகொண்டும், இஸ்லாம்மார்க்கத்தின் சமாதான வழிக்கும் கிலாபத் துன்பத்திற்குப் பரிகாரமாக அரசாங்கத்துடன் பஹிரங்கமாக மதப்போர் செய்யாமலும் நாட்டை விட்டு வெளியேறாமலும் இருக்கும் வழியான இந்த ஒத்துழையாமை தர்மத்தைத் தீர்மானித்தார்கள்.

---

## நான்காம் நாள் நடவடிக்கை

### மௌலானா ஷவுகத் அலி விசாரிக்கப்பட்டார்

மாஜி—அகில இந்திய கிலாபத் மகாநாட்டில் நீர் பிரசன்னமாயிருந்ததுண்டா?

ஷவு—நான் பிரசன்னமாகாமல் இந்தியாவில் நடைபெற்ற கிலாபத் கான்பரன்ஸே கிடையாது.

மாஜி—அந்த கான்பரன்ஸில் இங்கு தாக்கல் செய்யப்பட்ட தீர்மான நகலே அங்கு தீர்மானிக்கப்பட்டதல்லவா?

ஷவு—கிலாபத்தைப்பற்றி நாடெங்கும் பேசின பாக்கியம் ஒருவாறு பெற்றிருந்தும் காச்சியில் நடந்த மகாநாட்டில் இத் தீர்மான விஷயமாக நான் பேசாமலிருந்ததுபற்றி பெரிதும் வருந்துகிறேன். ஆனால் அத்தீர்மானத்தை என் முழுமனதுடன் அங்கீகரிக்கிறேன்.

மாஜி—நீங்கள் ஏதாகிலும் சொல்லவேண்டுமா?

ஷவு—இங்கிலீஷ் கோர்ட்டுகளில் எனக்கு நம்பிக்கையில்லையென்பதை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஏனென்றால், இந்த கோர்ட்டுகளைக் காட்டிலும் நாடகங்கள் சற்று ஒழுங்காகவே யிருக்கும். ஹிந்துக்கள், முஸ்லீம்கள், பார்ஸீகளாகிய நமக்கு இந்த கவர்ன்மெண்டுடன் உறவுகொண்டிருப்பது துர்ப்பாக்கியமே. இரண்டுவித நிபந்தனைக்குட்பட்டே நாங்கள் இராஜபக்தியுடன் இருக்க முடியும்.

மாஜி—உங்களுடைய பிரசங்கத்தைக் கேட்க நான் இங்கு இல்லை.

ஷவு—நீங்கள் வேண்டுமானால் என்னை தூக்கி விடுங்கள். நான் ஆயிரக்கணக்காகப் பிரசங்கங்கள் செய்திருக்கிறேன். உங்களுக்குச் சொல்ல நான் தயாராக இல்லை. எங்கள் சகோதரர்களுடைய இரத்தக்குழாய்களில் அடிமைத்தன இரத்தம் ஓடும் இந்த நாட்டில் வசிக்கும்படியான விதி ஏற்பட்டதென்பதே துர்ப்பாக்கியமானது. வைஸிராய் அவர்களுக்குப் பல தூது அனுப்பினோம். முகம்மத் அலியை இங்கிலாந்துக்கு அனுப்பினோம். சோடானியையும் அனுப்பினோம்; அவரும் இப்பொழுது திரும்பிவிட்டார். இப்பொழுதும் எங்களுடைய மதத்தை மரியாதையுடன் போற்றவேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு நாங்கள் சொல்லுகிறோம்.

மாஜி—நீங்கள் கவர்ன்மெண்டைத் தூஷிக்கிறீர்களே.

ஷவு—நீங்கள் எங்களைத் தூஷித்துக்கொண்டே



யிருக்கிறீர்கள். சர்க்கார் வக்கீல் எங்களைத் தூஷித்துக்கொண்டே யிருக்கிறார்.

முகம்மத் அலி—ஐயா மாஜிஸ்ரேட்டாரே! உங்களுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கையில்லையா? நீங்கள் கடவுளை நம்பவில்லையா? தர்மத்தில் உங்களுக்கு நம்பிக்கை யில்லையா?

இங்கு ஜில்லா மாஜிஸ்ரேட்டான மிஸ்டர். ஸ்மார்ட் ஓர் இரணவீரனைக் கூப்பிட்டு முகம்மத் அலியை உட்காரும்படி சொல்லச் சொன்னார். பலாத்காரமாக நீங்கள் உட்காரவைத்தாலன்றி நான் உட்காரமாட்டேன் என்று முகம்மத் அலி கூறினார்.

ஷவு—ஐயா மாஜிஸ்ரேட்டே! உங்களுடைய உத்திரவினாலேயா அல்லது வேறொருவருடைய உத்திரவினாலேயா என் தம்பியை உட்காரும்படி அந்த இராணுவ வீரன் கூறினது.

மாஜி—ஆம். என் உத்திரவினாலேயே. உங்களுடைய இராஜீய பிரசங்கத்தை எழுதிக்கொள்ள நான் பிரியப்படவில்லை.

ஷவு—முஸ்லீம்களாகிய எங்களை இந்த கவர்ன்மெண்டார் உங்கள் முன்பாக நிறுத்திவைத்து ஒரு நியாயமும் வழங்காமல் அதற்குப் பதிலாக எங்களை இங்கு உங்கள் முன் உட்காரவைக்க நீங்கள் பார்க்கிறீர்கள்.

மாஜி—நீங்கள் நிதானமாய்க் கூறினால் நான் கேட்கிறேன்.

ஷவு—ஒரு உண்மை முஸல்மானைப்போல் வாஸ்தவமாகவே சுதந்தரங்கொண்டு நான் வாழ்ந்தால் இந்த கவர்ன்மெண்டாருக்கு சில நிபந்தனைகளுடனேயே நான் பக்தி காட்டமுடியும். இஸ்லாம் ஷரி

யத்து என்னவென்பதை இந்த கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பதில் சகல மனித பிரயத்தனங்களையெல்லாம் செய்து பார்த்தோம். அமிர்தசரஸில் முதல் கிலாபத் மகாநாட்டிற்கு நான் அக்கிராசனம் வகித்தேன். வைஸிராய்க்குத் தூது அனுப்பினோம். இஸ்லாமிய ஷரியத்தைத் தெரியப்படுத்தினோம். இராஜப்பிரதிநிதி அழகாகப் பேசி கிலாபத் விஷயத்தில் எனக்கும் அன்பு உண்டு என்று கூறினார். அவர் எங்களுக்கு வேண்டிய உதவிகளையுஞ் செய்தார்; இங்கிலாந்துக்கு ஒரு தூது அனுப்பினோம். முதன் மந்திரியைக் கண்டு முஸ்லீம்களின் துயரமும் இஸ்லாமின் கட்டளையும் அங்கு கூறப்பட்டது. ஆனால் அவர் சரியாகச் செவிகொடுத்துக் கேட்கவில்லை. அகஸ்மாத்தாய் இங்கிலாந்துக்கு வந்த ஜெயத்தைக் கொண்டு அந்த ஆநந்தத்தில் தலை தெரியாமல் மதி மயங்கிக் கொண்டிருப்பதினால் அவரும் மற்றவர்களும் கிலாபத் தூதர்களின் வார்த்தைகளைக் கவனிக்கவில்லை. தூதர்கள் திரும்பினர். மத்திய கிலாபத் கமிட்டியார் ஒத்துழையாமை இயக்கத்தை வாரம்பித்தனர். அநேக இந்துக்களும் அங்கீகரித்தனர். கிலாபத் விஷயத்தில் முஸ்லீம்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி தக்க பரிகாரஞ் செய்யாமற் போனால், முஸ்லீம்களுடைய புண்ணிய ஸ்தலங்களைச் சரிவர காப்பாற்றாமற்போனால் இந்த கவர்ன்மெண்டுக்கு யாதொரு உதவியையுஞ் செய்வதில்லையென்று கமிட்டியார் தீர்மானித்தார்கள். இந்துக்கள், முகம்மதியர்கள், பார்ஸீகர்கள், கிறிஸ்துவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்தார்கள். அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்ப



மாயிற்று. அன்று முதல் நான் சுதந்தரமுள்ளவனானேன். நான் இப்பொழுது அடிமையல்ல. எனக்கு இராணுவப் படையைப்பற்றியாகிலும் கப்பற் படையைப்பற்றியாகிலும் அவசியமில்லை. இன்று கவர்ன்மெண்டார் எங்களைக் கைதிசெய்தது, சுதந்தர இந்தியாவின் அஸ்திவாரக்கல் நன்றாக நாட்டியாய்விட்டது. அல்லாகுத்த ஆலாவின் கட்டளையைச் சிரமேற்றாங்கி ஒழுகுவதுடன் அக்கட்டளையை எல்லா முஸ்லீம்களுக்குந் தெரிவிப்பதே முஸ்லீமாகிய என்னுடைய கடமையாகும். ஐயா! கோகக்கைப்பற்றி என்னைக் கேட்பதைக்காட்டிலும் இஸ்லாமிய ஷரியத்தைப்பற்றி நீங்கள் கேளுங்கள். என்னை செஷன்ஸ் கோர்ட்டுக்கு அனுப்பிவிடலாம். விக்டோரியா மகாராணியாரும் எட்வர்ட் மன்னரும் மற்றவர்களும் இராஜ சாஸனப்படி ஒவ்வொரு முஸ்லீமும் சுதந்தரமுள்ளவனே என்றனர். ஆனால் இப்பொழுதோ நீங்கள் எங்களைத் தண்டிக்கின்றீர்கள். கடவுள் வழியில் நான் ஈடுபட்டிருப்பதினால் என்னை நீங்கள் தூக்கிலிடவுஞ் செய்யலாம். நீங்கள் என்ன வேண்டுமானாலுஞ் செய்யுங்கள். தூக்கிலிட்டாலுஞ் சரியே.

மாஜி—இம்மாதிரியான ஆவேசத்துடன் கூற நான் ஒப்பமாட்டேன்.

ஷவு—ஆவேசம் என்ன? தாங்கள் பேசக்கூடாதபடி தடுத்து எங்கள் ஈமானுக்குத் தீங்கு விளைக்கின்றீர்கள். நீங்கள் வெறும் கிராமபோன் தானே; (வாத்தியக் கருவிபோல்) நானோ என் விசாரணை விஷயமாகப் பேசுகிறேன். இந்த கவர்ன்மெண்டானது சைதான்கொண்டது. இந்த கவர்ன்மெண்டு அழிவுக்குரியது. இந்த நீதிஸ்தலம் அநீதியானது. இந்த பாவனையெல்லாம் அழியுந்தன்மையிது.

## ஷவுகத் அலி அவர்களின் வாக்கு மூலம்.

கடந்த 21 மாதங்களாக இந்தியாவில் கிலாபத் பிரசாரமாக ஆயிரக்கணக்கான பிரசங்கங்களைச் செய்துகொண்டே ஆயிரக்கணக்கான மைல்தூரம் சென்று இலட்சக்கணக்கான ரூபாயையும் திரட்டிக் கொண்டு நான் வந்திருக்கிறேன். கிலாபத்திற்காக நான் செய்யும் ஊழியமெல்லாம் என்னைச் சிருஷ்டித்த கடவுளுக்கு நமாஸ் செய்வதாகும். என்னுடைய பிரசங்கங்களில் ஒரே பல்லவியைத்தான் பாடிக் கொண்டே வந்திருக்கிறேன். புண்ணிய ஸ்தலங்களை விட்டு விடுங்கள். ஜஸீயட்துல் ஆரப் என்ற எல்லையை விட்டு அப்புறஞ் செல்லுங்கள். கிலாபத் பதவிக்குரிய இராஜ்யாதிகாரத்தையும் மத அதிகாரத்தையும் காப்பாற்றுங்கள் என்று நான் இந்த அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்திவந்தேன். இந்த அரசாங்கத்தில் வசிக்கும் 8 கோடி முஸ்லீம்களின் சமாதான வாழ்க்கையை உண்மையில் கருதாமலிருந்தால், கிலாபத் விஷயத்தில் தக்க பரிகாரஞ் செய்யாமலிருந்தால், பஞ்சாப் துயரத்திற்குத் தக்க சமாதானஞ் சொல்லாமலிருந்தால், இந்தியாவுக்கு சுயராஜ்யம் அளிக்காமலிருந்தால், இந்திய முஸ்லீமாகிய எனக்கு இந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அடியுடன் பிடுங்கி அழிப்பது கடமை எனக்கொண்டு நான் பாடுபடுவேன். ஏனெனில், முஸல்மானாயிருக்கும் எனக்கு வேறு வழிகிடையாது; இதுவே நான் முடிவுக்கு வந்த தீர்மானமாகும். நான் ஏற்கனவே சொல்லியபடி இந்த கவர்ன்மெண்டுக்குப் பக்திகாட்டுவதானால் அது ஒப்பந்தத்தின்மேல் தான் நான் காட்டமுடியும். எனக்கு மத விஷயத்தில் தாராளமான சுதந்தரமும் மனோவிருத்திக்குத் தாராளமான சுதந்தர உணர்ச்சியும் இருந்தால்தான் அரசர் பெருமானுக்கு நான் பக்தி காட்டமுடியும். எந்த நிமிஷத்தில் கவர்ன்மெண்டானது என்னுடைய மத சம்பிரதாயத்தில் தலையிடுகின்றதோ அதே நிமிஷத்தில் எனக்கிருந்த அரச பக்தியும் அரசாங்க நேசமும் நீங்கிவிடும். என்னுடைய காலத்தையேனும் உங்களுடைய காலத்தையேனும் வீணாக நான் இஷ்டப்படவில்லை. கவர்ன்மெண்டாவது கிலாபத் விஷயத்திலாகிலும், பஞ்சாப் விஷயத்திலாகிலும் ஸ்வாராஜ்ய ஸ்தாபன விஷயத்திலாகிலும் ஒன்றுஞ் செய்யாமற் போனால், அரசாங்கம் ஒருவழியிலும் நாங்கள் ஒரு வழியிலும் போக நேரிடும் என்பதை நான் எச்சரிக்கை செய்கிறேன். ஆனால், அரசாங்கமும் குடிகளும் ஒத்துமைப்பட வழியுண்டு. அவ்வழியில் அவர்கள் இறங்கவேண்டும். ஜனங்களின் முறையீடுகளான கிலாபத் விஷயத்திலும் பஞ்சாப் விஷயத்திலும் ஜன சம்மதப்படி ஒரு ஏற்பாடு அரசாங்கத்தார் செய்வார்களானால் கடவுள் சம்மதப்படி ஒருக்கால் நாட்டில் சமாதானம் ஏற்படும். இல்லாமற்போனால் இந்தியாவிலுள்ள 33 கோடி ஜனங்களாகிலும் மாண்டுபோக வேண்டும் அல்லது ஒரு இலட்சம் ஆங்கிலேயர்களாகிலும் இந்தியாவைவிட்டுத் துரத்தப்படவேண்டும். இது தீர்மானமாகாதவரை இந்தியாவில் சதாயுத்தம் தொடங்கிக்கொண்டேயிருக்கும். திருக் குர்ஆனைப் பாராயணம் செய்த பிறகு இமாம்களை அடிபணிந்து ஆலோசித்த பிறகு, முஸல்மானாகிய எனக்கு இத் தீர்மானத்தைவிட வேறுவழியில்லை.

இந்த அரசாங்கத்துக்கு பயபக்தியுடனும் விஸ்வாஸத்துடனும் நான் 17 வருடங்கள் உழைத்து வந்தேன். பல ஆங்கில கனவான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் அன்பார்ந்த ஸ்நேகிதனாக வெகுகாலமளவும் நான் வாழ்ந்துவந்தேன். இந்தியா கவர்ன்மெண்டின் அபின் இலாகாவில் உத்தியோகம் செய்து பல அதிகாரிகளின் மதிப்பையும் நான் பெற்றேன். நான் உதைபந்து ஆட்டம், எறிபந்து ஆட்டம் முதலிய கேளிக்கைகளில் தீவிரமான உற்சாகங்காட்டி வந்ததினால் அநேகருக்கு நான் வேண்டியவனாக இருந்தேன். ஆனால் கடவுள் இப்பொழுது இந்த வழியில் என்னை விட்டார். கடவுளுடைய சந்நிதானத்தின் முன்பாக இந்த கவர்ன்மெண்டார் இதுகாறுஞ் செய்த பிழைகளையெல்லாம் ஒத்துக்கொண்டு கிலாபத் பஞ்சாப் விஷயங்களில் பரிகாரஞ்செய்தால் கட்டாயம் இந்த அரசாங்கத்துடன் நான் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன். நான் என் தலைவரான மகாத்மா காந்தியடிகளின் சிஷ்ய குழாங்களில் ஒருவனாய் அவருடன் சகாவாயிருந்து மத்திய கிலாபத் கமிட்டியாரும், ஜமயதுல் உலாமா, காங்கிரஸ் முதலிய மகா சபையாரும் மகாத்மா காந்தியும் சொல்லிய திட்டப்படி உழைத்து வருகிறேன். அரசாங்கத்துடன் பலாத்காரமற்ற ஒத்துழையாமையை அனுஷ்டித்துக்கொண்டும் உபதேசஞ் செய்து கொண்டும் நான் வருகிறேன்.

பிறருடைய உயிரை வாங்காமல் தன்னுயிரை சந்தோஷத்துடன் 'கொடுப்பதாக மகாத்மா காந்தி கூறுகிறார். முஸ்லீமாகிய எனக்கோ திருக்குர்ஆனின் ஷரியத்தின்படியும் நபிகள் நாயகம் அவர்க



ளின் கட்டளைப்படியும் சத்தியத்திற்காகவும் தர்மத்திற்காகவும் கடவுளுடைய கைங்கர்யத்திற்காகவும் ஒருவனைக் கொல்வதும் ஒருவனாற் கொல்லப்படுவதும் புண்ணியகாரியமென ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மகாத்மாவின் மதக் கோட்பாட்டிற்கும் என்னுடைய மதக் கோட்பாட்டிற்கும் வித்தியாசமுண்டு. அப்படியிருந்தும் மகாத்மா காந்தியடிகளின் திட்டத்திற்குட்பட்டு நாங்கள் எங்களுடைய மகம்மத் நபி திருமக்காவில் 13 வருடகாலம் முதன் முதல் அனுஷ்டித்து வந்த பலாத்காரமற்ற இந்த ஒத்துழையாமை இயக்கத்தையே அவலம்பிக்கத் தீர்மானித்தோம். ஆகவே, இப்பொழுதும் கவர்ன்மெண்டார் வேண்டுமானால் மூன்று நிபந்தனைகளுக்குட்பட்டு எங்களுடன் சமாதானஞ் செய்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய வாக்குமூலத்தைக் கொடுத்த பிறகு அலிசகோதரர்கள் இராஜ நிந்தனை குற்றம் சாற்றப்பட்டு இரண்டாவது விசாரணைக்கு செஷன்ஸுக்கு மாற்றப்பட்டது.

## செஷன்ஸ் விசாரணை

கடைசியாக அக்டோபர் மாதம் 24-ந் தேதி செஷன்ஸ் விசாரணை தொடங்கிற்று. மிஸ்டர். கென்னடி (I. C. S.) விசாரணை ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். அலகாபாத் உயர்தர நீதிமன்றத்தில் வாதாடும் பாரிஸ்டர் மிஸ்டர் ராஸ் அல்ஸ்டன் அவர்களை ஸிந்து கவர்ன்மெண்ட் வக்கீல் மிஸ்டர் எலிபன்ஸ்டனுக்கு ஆலோசனை சொல்ல தினம் 2000 ரூபாய் வீதம் நியமிக்கப்பட்டார். மிஸ்டர் எலிபன்ஸ்டனுக்கு தினம் 1000 ரூபாய். விசாரணை தொடங்கி சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். கவர்ன்மெண்ட் வக்கீல் ஜூரிகளுக்கு நீண்ட பிரசங்கஞ் செய்தார். ஜூரிகளில் முகம்மதியர் ஒருவராகிலுங் கிடையாது. மூன்று கிறிஸ்துவர்களும் இரண்டு ஹிந்துக்களுமாக நியமிக்கப்பட்டனர். சர்க்கார் வக்கீல் முடித்த பிறகு மௌலானா முகம்மத் அலி ஜூரிகளைப்பார்த்து பின்வருமாறு பேசினார் :—

"ஜூரர் கனவான்களே! எனக்கு இந்த விசாரணையில் விதிக்கப்படப்போகும் தீவாந்தர சிட்சையினின்றும் காப்பாற்றிக் கொள்வதற்காக நான் முதலிலிருந்தே வாதித்து வந்திருந்தால் உங்களுடைய காலத்தை நான் எடுத்துக்கொண்டிருக்க மாட்டேன். இப்பொழுது விசாரணையில் இருப்பது நானல்ல; நியாயாதிபதிக்கும், பொது ஜனங்களுக்கும், அரசாங்கத்திற்குமே இப்பொழுது விசாரணை நடந்து வருகின்றது. பொது ஜனங்களின் முன்பாக இந்த விசாரணையைக் கவர்ன்மெண்டார் கொண்டு வந்ததைப் பற்றி நான் சந்தோஷப் படுகின்றேன்.



கடவுளுடைய ஆக்ஞைக்கும் மனித ஆக்ஞைக்கும் ஏற்படும் சச்சரவைத் தீர்க்கவே நான் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். மன்னர் பெருமான் எவ்வளவுதான் மாட்சிமை பெற்றிருந்தாலும் அவர் கடவுளைக் காட்டிலும் மாட்சிமை பெற்றவராவரா? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மத விஷயத்தில் எப்பொழுதும் சமரஸ பாவத்தைக் கொண்டவர்களாகவே யிருந்திருக்கிறார்கள். சமரஸ பாவமென்பது உண்மையாகவே நான் அறிந்தமட்டில் 'உனக்கும் எனக்கும் அபிப்பிராய பேதமிருக்கலாம், அல்லது நீ கூறும் வார்த்தை ஒவ்வொன்றிலும் நான் வித்தியாசப்படுவேன்; ஆனால் உன்னுடைய சுதந்தரத்தை யழிக்க மட்டும் நான் இடங்கொடுக்காமல் என் தேகத்தின் இரத்தத்தைச் சிந்தியாகிலும் காப்பாற்றுவேன், என்பதாம். பதினாயிரம் பேர் கூடியிருந்த ஒரு பெரிய மகா நாட்டில் நாங்கள் பேசினோம். ஆகவே, இந்த விசாரணையானது உலகத்தினருக்கேயாம். கவர்ன்மெண்டார் தாங்கள் செய்த பிழையை யொத்துக்கொண்டு மத விஷயத்தில் பூர்ண சுதந்தர மளிப்பார்களானால், உண்மையிலேயே அவர்கள் நல்வழிப் பட்டார்களென்று நாங்கள் கருதுவோம். நானும் என் சிநேகிதர்களும் இந்த விசாரணையில் தப்பித்துக் கொள்வதற்காக வாதாடவில்லை; உலகத்திலுள்ளோர்களின் நிலைமையைப்பற்றியே கருதி வாதாடுகின்றோம். முகம்மத் அலிக்காக இந்த விசாரணையல்ல, இந்த விசாரணையானது கடவுளுக்கும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கும் ஆகும். கடவுளுடைய ஆக்ஞை பிரதிஷ்டிக்கப்படுமா அல்லது மனிதனுடைய ஆக்ஞை கடவுளுடைய ஆக்ஞையையும் மீறி பிரதிஷ்டிக்கப்படுமா என்பதே இந்த விசாரணையின் நோக்கமாகும். கோர்ட்டில் நாங்கள் விசாரணை காலத்தில் நீதிபதிக்கு முன் நிற்காமல் இருந்ததற்குக் காரணம் உண்டு. இது கோர்ட்டுக்கும் எனக்கும் ஏற்பட்ட

கேள்வியல்ல. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டு மனித வர்க்கத்தைச் சேர்ந்ததாகையால் அதற்கு அவ்வளவு மரியாதை கொடுப்பது சரியல்லவென்பது என் அபிப்பிராயம். கவர்ன்மெண்டுக்கு மரியாதை காண்பிப்பதை நான் ஒப்பமாட்டேன். இந்தியன் பீனல் சட்டத்தின் பல பிரிவுகளில் எங்களைக் குற்றஞ் சாற்றப்பட்டிருக்கின்றது. அதற்காக எங்கள் ஜீவியகாலம் முழுவதும் தண்டனைக்குட்பட்டு அதற்குப் பின்னரும் எவ்வளவு காலம் வரை தண்டனைக்குட்படுவோமோ தெரியாது.

எங்களைச் சிருஷ்டித்த கடவுள் இருக்கிறார். அவருக்கு ஊழியஞ்செய்ய அவர் எங்களுக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார். கடவுளுக்கு வணங்குவதைத் தவிர்த்து மனிதனெவனுக்கும் வணங்குவதென்பது முடியாத காரியமாகும். ஜட்ஜி, குர்பானியைப்பற்றிக் கூறினார். கடவுள் மனிதரைக் குர்பானி செய்ய ஆக்ஞாபித்திருந்தால், உடனே, நான் என் சகோதரர், தாயார், மனைவிமக்கள் உள்பட சகலரையும் குர்பானி செய்திருப்பேன். மனிதனுடைய உணர்ச்சியைக் காப்பாற்றவே சட்டம் ஏற்பட்டது. இந்த நீதிமன்றத்தில் விசாரணையை நடத்தும் நியாயாதிபதி மன்னர் பெருமானுடைய ஆக்ஞையால் சட்டத்தைக் கையாளுவதானால், இராஜ விளம்பரத்தைக் கட்டாயம் அங்கீகரித்தே தீரவேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தை நீங்கள் கவனிக்கவேண்டாம். எங்கள் திருக் குர்ரானைக் கவனியுங்கள். அதுவே எங்கள் மதத்தின் மூலாதாரப் பொருள். அதினின்றுமே எல்லா சட்டங்களும் உண்டாயின. திருக்குர்ரானை அவமதிக்கும் முகம்மதியன் உலகத்திலேயே கிடையாது. எங்கள் முகம்மத் நபி ஒருவேளை திருக்குர்ரானுக்கு விரோதமாக ஏதாகிலும் கூறியிருந்தால், அதை நாங்கள் உடனே நிராகரித்துவிடுவோம். பசுவைக் கொல்லும்படியாக ஒரு சேனாதிபதி ஒரு இந்து தளகர்த்தனுக்கு உத்திரவிட்டால்



அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கூடாதென்று ஒருவன் உபதேசிப்பானால் அவனை நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்துமத சம்பிரதாயமானது அவ்வுத்திரவுக்கு இடங்கொடுக்கவில்லை. மத சம்பிரதாயத்தில் அரசாங்கத்தார் தலையிடுவதானால் இராஜ விளம்பரத்தை வாபசு வாங்கிக்கொள்ள வேண்டும். நான் என் மதத்தைப் பின்பற்றி நடக்கும் வரை இ. பி. கோ. சட்டங்கள் என்னைத் தொடமுடியாது. ஏனெனில், மகா ராணியாரின் சாஸனம் இன்னும் அனுஷ்டானத்தில் இருந்தால் நீதிபதி என்னைத் தண்டிக்க முடியாது. இல்லாவிட்டால் அதெல்லாம் பித்தலாட்டமாகும். நாங்கள் சதியாலோசனை செய்ததாக கவர்ன்மெண்டு வக்கீல் உங்களுக்கு வாதித்தார். எங்களுக்குள் எவ்வித உடன்பாடும் இல்லாததால் நாங்கள் சதியாலோசனை செய்ததாகாது. நாங்கள் உடன்பாடு செய்துகொண்டதாக சாட்சியம் கூறவில்லை. எல்லாம் ஹேஷ்யம்தான். இந்த ஹேஷ்யங்களைக் கொண்டு எனக்கு தீவாந்தர சிட்சை விதித்து என்னுடைய மனைவி, குழந்தைகள், வயதுசென்ற தாய், ஜன்ம தேசம் இவைகளிடமிருந்து என்னைப் பிரித்துவிடப் பார்க்கிறார்கள். நான் முஸல்மான் என்று அழைக்கப்பட்ட காலத்திலிருந்தே குர்ரானுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதென்று உடன்பாடு செய்துகொண்டு அதன்படி நான் நடந்துவருகிறேன். ஒரு முஸ்லீம் சகோதரரை மற்றொரு முஸ்லீம் சகோதரர் அடிக்கக்கூடாதென்று விதிக்கப்பட்டிருக்கும் குர்ரானின் அந்த பாகத்தை எனது நண்பர் மௌலானா ஹுஸேன் ஆமத் மசூதியிலிருந்து கொண்டு உரத்த சத்தத்துடன் ஓதுவதை அவ் வழியாகப் போய்க்கொண்டிருக்கும் இராணுவ வீரன் கேட்டால், ஓதும் இமாம் அவர்களை இ. பி. கோ. 505-வது பிரிவுபடி குற்றஞ் சாற்றுவீர்களா? மசூதியில் ஆண்டவனுடைய ஆக்ஞையை ஓதிக்கொண்டிருந்தார். அதே ஓதுவார் மெஸபோடேமியாவுக்குச் செல்லும் முஸ்

வீம்பட்டாளத்தை நோக்கிக் குர்ரானின் கட்டளையை கூறுவாரானாலும், பகிரங்கமாக எல்லோர் அறியும்படிச் சொல்வாரானாலும் அது குற்றமாகமாட்டாது. மனிதனுடைய முதற் கடமையானது கடவுளைத் தொழுவதும் அவர் கட்டளைப்படி நடப்பதுமேயாம். அக்கடவுளின் ஆக்ஞைப்படி நடப்பதுடன் அவர் ஆக்ஞையைக் உலகமறிய கூறுவதும் மனிதர் கடமையாம். இந்த கவர்ன்மெண்டார் கடவுளுடைய ஆக்ஞையைத் திரஸ்கரித்து மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்திற்குக் கீழ்ப்படியும்படி சொல்கின்றனர். இவ்வுலகம் கடவுளுடையது. ஜார்ஜ் சக்கரவர்த்திக்காகிலும் மற்ற எந்த மன்னருக்காகிலும் இவ்வுலகம் சொந்தமல்ல. ஆத்மா நற்கதியை யடையும்படியாகக் கவனிக்க வேண்டும். கடவுள் நியாயத் தீர்ப்பு செய்யுங்காலத்தில் லாயிட் ஜார்ஜ் என்ன சொன்னார், நீதிபதி என்ன சொன்னார், சர்க்கார் வக்கீல் என்ன சொன்னார் என்பதைக் கேட்கமாட்டார். கடவுளின் ஆக்ஞையை அனுசரிக்கும் விஷயத்தில் ஒருவரையும் விட்டுக் கொடுக்கக்கூடாது" என்று கூறி முடித்தார்.

ஷவுகத் அலியும் அப்படியே ஜூரிகளுக்கு ஒரு பிரசங்கஞ் செய்தார்.

பின்னர், ஜட்ஜி ஜூரிகளுக்குப் பிரசங்கஞ் செய்தார். ஜூரிகள் சிறைப்பட்டவர்கள் குற்றவாளிகளெனக் கூறவும் நீதிபதியும் ஆமோதித்து அலி சகோதரர்களைக் கலகத்திற்காகக் குற்றஞ் சாற்றப்பட்டதை மட்டும் ஒழித்து இ. பி. கோ. 505-வது பிரிவுபடி குற்றஞ்செய்தார்களென்று முகம்மத் அலிக்கும் ஷவுகத் அலிக்கும் இரண்டு வருட தண்டனை விதித்தார்.

---

77405

Forms 6-12, printed by P. R. Rama Iyar & Co., Madras.